# மெமோறியல்

## மலர் 6 2001

ABUNDANT LIFE

MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL

# MEMORIAL

## VOL VI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெமோறியல்

## மலர் 6

## 165வது ஆண்டு நிறைவு

## யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி
## மானிப்பாய்

12 – 06 – 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக்கீதம்

**இராகம் : மத்தியமாவதி** **தாளம் : ஏகம்**

**பல்லவி**

வாழ்க மெமோறியல் வாழிய வாழிய
வாழிய வேயென வாழ்த்திடுவோம்.

**அனுபல்லவி**

பாவலராய் நாவலராய்
பாரினிலே மேலவராய்
பண்பும் கலையமுதும் என்றும் எமக்களிக்கும்.
இன்பத்தாயின் பாதமே என்றும் மனத்துள் வைத்து
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்.

**சரணங்கள்**

அன்பாய் இலக்கணமும் இன்பமாய் இலக்கியமும்
பைம்பொன் தமிழ்மொழியும் எண்கண் கணிதமுடன்
முத்தமிழும் சித்திரமும்
கைத்தொழிலும் ஆங்கிலமும்
பூதப்பௌதீகமும் விஞ்ஞானம் பிறமொழியும்
பொங்குங் கலைக் கோயிலென் றெங்கும் முரசொலிக்க
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்

எழுத்தாரறிவிப்பாரோ அவரே யிறைவனென்று
மனம் வாக்குக் காயத்தாலே தினமே துதித்திடுவோம்
மான மொடு வீரமுடன்
தேசமதைக் காத்திடவே
மக்கள் சுதந்திரத்தைப் பேணும் கல்வியறிவைத்
தந்தே தயைபுரியும் எம்தாய் பாதம் பணிந்து
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்

கலையே தவத்தாயென்று தினமே கணமாகிலும்
அலையா மனத்திருத்தி அவள் பாதமே நினைந்து
தேமதுர தேன் பொழியும்
பாக்களினால் பாடியே நாம்
சித்தம் சுத்தமுடன் மெய்ப்பக்தி பணிவொடு நம்
அன்னை பெருமைக் கொரு பின்னம் வராமல் காத்து
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்

இயற்றி மெட்டமைத்தவர்: ஸ்ரீ ஏ. ஐயாக்கண்ணுதேசிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் பிரார்த்தனைக் கூடங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மலர்

## 1996 – 2000

### காப்பாளர்

திரு. அ. மு. அருணாசலம் – அதிபர்
இ.அ.சே. தரம் I

### மலர் ஆசிரியர்

திரு. சி. சிவராஜன்

### மலர்க்குழு

திரு. சி. சண்முகநாதன் [உபஅதிபர்] – தலைவர்
திரு. து. சிவஞானம் - செயலாளர்
திரு. சி. இராஜரட்ணம் - பொருளாளர்
திரு. க. சிவநேசன்
திரு. நா. பாலகிருஷ்ணன்
திரு. கி. நிறஞ்சன்
திருமதி. வி. ஜெ. பை. மூர்த்தி
திருமதி. சு. அருள்வதனன்
திருமதி. ஜெ. வரதராஜன்
திருமதி. ப. உதயகுமார்
செல்வி. சி. சிற்றம்பலம்
செல்வி. ந. மங்களேஸ்வரி

### ஆலோசகர் குழு

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்
கல்விச் சிந்தனையாளர்கள்
புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
# மானிப்பாய்

## 165வது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு

# பரிசளிப்பு விழா

| | | |
|---|---|---|
| **இடம்** | : | பாடசாலை திறந்த வெளியரங்கு |
| **காலம்** | : | 05-07-2001 |
| **நேரம்** | : | பி.ப. 2.00 மணி |
| **தலைவர்** | : | திரு. அ. மு. அருணாசலம் – அதிபர் |
| **விசேட விருந்தினர்** | : | மாண்புமிகு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் அவர்கள் |
| **கௌரவ விருந்தினர்** | : | கௌரவ மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் திரு. அன்ரன் வெலிச்சோர் யோண்சன் அவர்கள் |
| ***பரிசளிப்பு வைபவம்*** | | |
| **முதன்மை விருந்தினர்** | : | பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை துணைவேந்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் |
| **பரிசு வழங்கல்** | : | திருமதி இராஜலக்ஷ்மி பாலசுந்தரம்பிள்ளை ஆசிரியர் (யா/ மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்) |
| ***மலர் வெளியீடு*** | | |
| **முதன்மை விருந்தினர்** | : | கலாநிதி ச. ந. தணிகாசலம்பிள்ளை மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் |
| **வெளியீட்டுரை** | : | திரு. கோ. சி. வேலாயுதம் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர், |
| **மலர் ஆய்வுரை** | : | திருமதி கோகிலா மகேந்திரன் உதவிக் கல்விப்பணிப்பாளர் – வலிகாமம் கல்வி வலயம் |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,
பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள்
யா / மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PRINCIPAL



**MR. A. M. ARUNASALAM** SLPS.I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மானிப்பாய் மெமோறியல்
அன்னைக்கு முப்பது ஆண்டுகளுக்கு
மேலாக 'தமிழ்' மலர் கொண்டு
புகழாரம் புனைந்த, நற்றமிழ்
ஆசான், பாரெல்லாம் பரந்து
வாழும், மெமோறியலாளரின்
பண்பாளர்களை தமிழ் ஊட்டி
வளர்த்த பெருமகனார்'சிவபதி'
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையைச்
சேர்ந்த பண்டிதர்
அமரர் மு. கதிரவேற்பிள்ளை
ஐயாவுக்கு இன்றலர்ந்த
"மெமோறியல் மலர் 6" நன்மலர்
சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெமோறியல் அன்னையின் இதய அஞ்சலிகள்

1. 1995ம் வருடம், சிவபதமடைந்த எமது முன்னாள், இணையுப அதிபரும் கல்வீமானும் ஆகிய திரு. ஆ. கல்யாணசுந்தரேசன்.

2. 1996ம் ஆண்டு அமரத்துவடைந்த எமது பழைய மாணவர் சங்க காப்பாளரும், பிரபல சட்டத்தரணியும், மானிப்பாயின் மூத்த பிரஜையு மாகிய அமரர் சிவா – இராஜேந்திரன்

3. 1997ம் வருடம் அமரத்துவமடைந்த எமது முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அமரர் பொ. வரதராஜா

4. 1997ல் இறைபதமடைந்த தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் அமரர் பேரருள் திரு. டி கே. அம்பலவாணர்.

5. 1998ல் அமரத்துவமடைந்த முன்னாள் மருதனார்மடம் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், யாழ். வலயம் உன் கல்விப் பணிப்பாளருமாகிய கல்விக்கோர் கலங்கரை விளக்கு அமரர். சு. இரத்தினராசா

6. 1999ம் வருடம் சிவபதமடைந்த எமது முன்னாள் ஆசிரியரும் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு. ஆ. கமலநாதன்.

7. 2000ம் வருடம் அமரத்துவமடைந்த எமது முன்னாள் கனிஷ்ட பிரிவுத் தலைவரும், மெமோறியல் கடேட்ஸ் சார்ஜனும், சிரேஷ்ட உதவியாளருமான திரு. என். செபமாலை.

8. 2000ம் ஆண்டில் அகாலமரணமடைந்த எமது முன்னாள் கனிஷ்டபிரிவு அதிபர் அமரர் ஏ. ஜி. பெர்னாண்டோ

9. 2000ம் வருடம் அமரத்துவமான, காங்கேசன்துறை மாவட்டச் சாரண உதவி மாவட்ட ஆணையாளர் திரு. எஸ். தர்மேசன் (திட்டமிடல் உதவியாளர் தெல்லிப்பழைக் கோட்டம்)

10. பாடசாலையின் முன்னாள் சித்திரப்பாட ஆசிரியர் திரு. மா. கணேச மூர்த்தி

11. முன்னாள் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் திரு. எஸ். பூலோகராசா

**ஆகியோருக்கு எமது இதய பூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்கின்ற இதழில் சொட்டும் தேன்துளிகள்


ஆசிச்செய்திகள் (i)

மலர் ஆசிரியர் உள்ளத்தில் இருந்தவை பேனா முனையில் (xxvii)

அதிபர்கள் பட்டியல் (xxviii)

அதிபர் அறிக்கை (xxxi)

கல்லூரி ஆசிரியர்கள் (lxiii)

நினைவுகூறி வாழ்த்துகின்றோம் (lxvi)

வீழ்ப்பு மாற்ற நிலை தூக்கம் 01

நாடகத்தின் தோற்றம் 03

இலங்கையின் காட்டு வளமும் அதனை அழிப்பதால் ஏற்படும் தீமைகளும் காடழிப்பினைத் தடுக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் 05

தேசிய வருமானக் கணிப்பீட்டில் இரட்டை எண்ணல் பிரச்சனை 07

நாடகத்தில் வேடப் புனைவும் ஒப்பனையும் 09

நாட்டிய நாடகம் 10

அடிப்படை நில அளவையும் சங்கிலி நாடா அளவீடும் 14

சமயமும் வாழ்வும் 17

மெமோறியல் (மாணவ) அதிபர் 18

Stages of Human life 19

யாழ்ப்பாண மாணவர்களும் சப்ரகமுவ பல்கலைக்கழகமும் 20

புவிநடுக்கம் பற்றிய ஓர் அறிமுகம் 22

அன்னையின் தவிப்பு 26

பூமிக்கு வந்த புனிதத்தாய் 27

ஏற்றம் அளித்தாய் எழிலே என் தாய் 29

நாடகமும் அரங்கியல் பாடம் மனிதனை ஆளுமை உடைய மனிதனாக்கும் 30

இயற்கைச் சூழல் மாசுறுதலும் அதன் தாக்கங்களும் 31

இலங்கையின் நாணயமாற்று வீகிதம் 33

பைதகரசின் தேற்றத்தை நிறுவுதல் 36

இலங்கையின் கூட்டுறவு வரலாறு 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவப் பிள்ளைகட்கு பெற்றோரின் நெருக்கமான உறவு 40
இலங்கையின் நவீன சித்திரக் கலையும் கலைஞர்களும் 42
இலக்கியச் சுவையும் அழகியல் உணர்வும் 44
சித்திரக் கலையில் சித்திபெற 47
போதை தவிர்ப்போம் 50
உதைப்பந்தாட்டம் ஒரு நோக்கு 54
இலங்கையில் யாழ் ஜெயப்பூரின் ஆரம்பமும் விருத்தியும் 56
தியாக அன்புடன் கிறிஸ்துவின் பணியில் பனிமூடியபாதையில் ஒரு பயணம் 58
கவிதை உலகில் பாரதி பற்றிய ஒரு கண்ணோட்டம் 59
நூலகங்களின் வரலாறும் விரிவாக்கமும் 61
இலங்கைக் கணக்கீட்டு நியமம் நிதிக்கூற்றுக்களை சமூகப்படுத்தல் 63
சைவத்திருக் கோயிலில் இசைக்கலை 65
பிறப்புரிமைப் பொறியியலும் அதன் பிரயோகங்களும் 67
மாற்றமுறும் கல்வியின் நோக்கங்கள் ஒரு கல்வியியல் கண்ணோட்டம் 69
English Literature and its importance 71
சரியான பிறப்பு நிறையே சுகவாழ்விற்கு வழி 74
நாவலரும் சைவமும் 78
மெமோறியல் அன்னைக்கு 80
வீட்டு முற்றத்திலுள்ள வேப்ப மரத்தின் சுயசரிதை 81
கணக்குப் பதிவியலும் கணக்கியலும் 82
Provention of Diseases 83
கற்றறிந்தேன் நற்சாரணியம் 83
மனிதத் தேவைகள் 84
How I spent my last term holidays 85
பழந்துணியின் சுயசரிதை 86
பாரம்பரியக் கூட்டுக்குடும்ப வாழ்வு முதியோர் வாழ்வைச் சிறப்பிக்கும் 88
விவசாயத்தில் பூச்சிகளின் பாகுபாடும் பயிர்களில் ஏற்படும் சேதமும் 90
பெண்கள் நாட்டின் விண்மீன்கள் 93
Father of Scouting 94
இயற்கையின் நினைவில் சில நிமிடங்கள் 95
விஞ்ஞான உலகம் 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் 97
பூந்தோட்டம் 98
கடமையும் கட்டுப்பாடும் 99
பிச்சை புகினும் கற்கை நன்றே 100
Sports are necessary in school life 101
A Parrot's story 101
இசையின் சிறப்பு 102
தாய்மையைப் போற்றுவோம் 103
Our food 104
கனிஷ்ட அதிபரின் உள்ளத்திலிருந்து 105
எங்கள் அம்மா 106
தந்தைகள் 106
My pet 107
User of Tree 107
நான் கண்ட கனவு 108
எனது பூந்தோட்டம் 108
எனது குடை 109
பூனைக்குட்டி 109
காலைக்காட்சி 110
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் 110
தோசை 110
My Self 111
My Pet 111
ஒரு குடையின் சுயசரிதை 112
துள்ளி எழுந்திடு தம்பி 112
சுளகளவு வெற்றிலை 113
விகடத் துணுக்குகள் 113
நாங்கள் சிறுவர் நாடகம் நடித்தால் 114
பொன் அள்ளிய பொன்னப்பன் 114
நல்ல பழக்கங்கள் 115


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My Mother 115

Occupation 115

நாய் 116

செல்லப்பிராணி 116

நான் யார் 116

எனது அம்மா 117

My Ambition 117

எனது பாடசாலை 117

பூ 118

எனது பாடசாலை 118

மாம்பழம் 118

எண்கள் 118

மன்ற அறிக்கைகள் 119

பரிசு பெறுவோர் 142

நன்றி 160

விளம்பரம் 161




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமையும் பெருமையும் வாய்ந்த கல்விக்கூடம்



# அருளாசிச்செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 165 ஆவது ஆண்டு நிறைவில் மெமோறியல் எனும் நூல் வெளிவருவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். பழமையும் பெருமையும் வாய்ந்த இப்பாடசாலை 165 ஆண்டுகள் இந்நாட்டில் கல்விக்காக அயராத பணி செய்தமை எல்லோரது மனதிலும் சிந்தனையை தூண்டியுள்ளது. மனித வாழ்வில் கல்வி இன்றியமை யாதது அறியாமையை போக்கி மனிதனை சிந்திக்கவும் செயற்படவும் தூண்டுவதே கல்வி. இக்கல்வியினுடைய பணிக்காக அர்ப்பணித்து சேவை யாற்றும் ஆசிரியப் பெருமக்கள் என்றும் போற்றுதற்குரியவர்கள். கட்டடம் நிமிர்ந்து நிற்பதற்கு அத்திவாரம் உறுதியாக அமைவது போல் மனிதவாழ்வின் அத்திவாரம் கல்வியாகும். இக்கல்வியை உறுதியாக அமைத்து கொடுப்பவை பாடசாலைகள். இக்கல்லூரியின் 165 ஆவது ஆண்டுக்காக பணிசெய்த அதிபர் ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம். இக்கல்லூரி கல்வியிலும் ஏனைய துறை களிலும் வளர்ச்சியடைந்து மாணவர்கள் பண்புள்ளவர்களாகவும் அறிவு சார்ந்தவர் களாகவும் நாட்டுக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்ற இறைவனை வேண்டு கின்றோம். இந்நிகழ்வை நிதர்சனமாக்க வெளிவரும் மலர் மக்கள் எல்லோருக் கும் பயனள்ளதாக அமையவும் இதழ் ஆசிரியர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை இறைவன் ஆசீர்வதிக்க இறைவனை வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்*
**2வது குருமஹா சந்நிதானம்**
**2001-03-03**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Memorial English School has a very long and rich history*

# Message



I am happy that Manipay Memorial English School will soon be publishing the sixth volume of their magazine.

It is important to put down in writing what had happened in this College during the past five years. The most delible ink is better than the most retentive memory, "is a Chinese proverb".

Manipay Memorial English School has a very long and rich history. In 1899 the American Mission vernacular School and the school run by Mr. Page were brought together by the Rev. T.H. Scott. Mr. A. M. Nathaniel was appointed as the first Head Master. During the past 100 years much has happened in this institution and in our homeland. New names were given to old schools. But Manipay Memorial English School continues to have the name given by its founders, and continuing the good work started by the missionaries.

I wish the present principal Mr. A. M. Arunasalam and his band of teachers all success.

May the Memorial English School continue to be a place where the students obtain the necessary traits for abundant life.

*Rt. Rev. Dr. S. Jebanesan*
Bishop in Jaffna
Vaddukoddai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மாணவர்களுக்கு அறிவொளி தரும் விருட்சம்

# யாழ் ஆயரின் ஆசிச்செய்தி



"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பதற்கு இணங்க வளரும் இளம் உள்ளங்களின் அறிவுக் கண்களுக்கு ஒளியூட்டும் பாடசாலைக்கள் தான் எமது எதிர்கால சமூகத்தின் எழுச்சிக்கு அடித்தளமிடும். எமது மக்களின் வளர்ச்சிக்கு மெமோறியல் கலைக்கோயிலின் பணி போற்றத்தக்கதே.

கல்விச் சீர்திருத்தங்கள் வரவேற்கப்பட வேண்டியவையே. காலத்தின் தேவைக்கேற்ப வளர்ச்சி காண சீர்திருத்தங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் கபட நோக்கமும், இனவாத சிந்தனையும் சீர்திருத்தங்களின் உள் நோக்கமாக இருக்கக் கூடாது என்பதே என் வலியுறுத்தலாகும்.

கல்வி அடித்தளத்தை சிதைத்துவிட்டால் ஒரு சமூகத்தின் எழுச்சியையும் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தலாம் என்பது வரலாறு தரும் சான்று. கல்வி பெறல் அடிப்படை மனித உரிமையாகும். மனிதனின் வளர்ச்சியின் உச்சக் கட்டம் என்று வரையறை செய்யப்படும் இக்கால கட்டத்திலும் இந்த மனித உரிமை மறுக்கப்படுவது கவலை தரும் நிகழ்வாகும். யாழ் மண்ணில் மறை பரப்புப் பணியாளர்களால் தூவப்பட்ட கடுகு மணிக்கு ஒப்பான விதைகள் பாரிய கல்லூரிகளாக வளர்ந்து பல மாணவர்க்கு அறிவொளி தரும் விருடம்சங்களாக வளர்ந்துள்ளமை எமது மண்ணின் பெருமையே. எமது சமூகத்தின் அடித்தள மான கல்வியை பல இக்கட்டான வேளைகளில் காத்திட உழைக்கும் அனைத்து இதயங்களும் போற்றப்பட வேண்டியவை.

இப்பின்னணியில் தலைநிமிர்ந்து நிற்கும் யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்தி உங்கள் அனைவரின் நலனுக்கும் இறையாசீரை வேண்டுகிறேன்.

இறைபணியில் இணையும் உங்கள் ஆயர்
*பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம்*
யாழ் ஆயர்

2000-05-03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த மாணவச் சமுதாயத்தையும் அறிவியல் உச்சத்தையும் உருவாக்கும் பொறுப்பு உண்டு

# வழங்கிய ஆசிச்செய்தி

யாழ் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் கல்லூரிச் சஞ்சிகை வெளியீடான 'மெமோறியல் மலர் 6' என்னும் சிறப்பிதழுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் முதற்கண் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் கல்வி என்பது மிகவும் இன்றியமை யாத ஒன்று. அதிலும் கல்வி செல்வமாகின்றது. இக்காரணத்தினால் தான் சிறந்த மாணவச் சமுதாயத்தையும் அறிவியல் உலகத்தையும் உருவாக்கும் பொறுப்பு பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஆசிரியப் பெருந்தகையிலும் தங்கியிருக் கின்றது. ஒரு பாடசாலை சார்ந்த மாணவன் பல்வேறு துறைகளிலும் எழுச்சி பெற்று வரும்போது, அவன் படித்த பாடசாலை அன்னையும், ஆசிரிய சமுதாய மும், மாணவ சமுதாயமும் பெருமையடைகின்றது. இவையெல்லாவற்றையும் ஒருங்கே

நன்கு பெற்று சிறப்பாக கல்வி நடைபோடும் பாடசாலை வரிசைகளில் யாழ் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும் முக்கியமான ஒன்றாகும். இப்பாடசாலை அதிபர் அவர்களின் முயற்சியினாலும் ஆசிரியர்களின் வழி காட்டல்களினாலும், மாணவர்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளினா லும் 'மொமோறியல் மலர் 6' என்னும் கல்லூரிச் சஞ்சிகை வெளிவருகின்றது. இச்சஞ்சிகை மலர்க்குழுவும் நல்ல முறையில் அமைக்கப்பட்டு செயற்படுகின்றது என்பதை எமக்கு அனுப்பிய கடிதமூலம் அறிய முடிகின்றது.

இப்பாடசாலை அதிபர் அவர்களினதும், ஆசிரியர்களினதும், மாணவர்களி னதும் இப்படிப்பட்ட ஆக்க பூர்வமான கல்வி முயற்சிகளை கல்வியுலகம் மகிழ்வுடன் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. இம் மாணவர்களின் இது போன்ற நல்ல கல்விப் பணிகள் மேன்மேலும் சிறந்து விளங்கவும் "மெமோறியல் மலர் 6" கல்லூரிச் சஞ்சிகை சிறந்து விளங்கி, மிக விரைவில் எல்லோரினது கைகளிலும் மலர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசிச் செய்திகள் பல கூறி அமைகின்றேன்.

*சிவஸ்ரீ. சு. மகேஸ்ரவக்குருக்கள்*
சுதுமலை மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ மணிகளை ஒழுக்க சீலராகவும் பண்பாளராகவும் வாழச் செய்கின்றது



# ஆசியுரை

எத்தனையோ சான்றோர்களையும் அறிஞர்களையும் உருவாக்கி எண்ணிலடங்காத அன்னையரை மகிழ்வித்த பெருமையுடையது மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. இப்பாடசாலை 165வது ஆண்டு விழாவைக் கொண்டாடி மெமோறியல் 6 என்னும் மலரையும் வெளியிடுவதையிட்டு நாம் மகிழ்வதோடு மட்டுமல்லாது கலந்து கொள்வதிலும் பெருமையுற்ற மெமோறியல் தாயை வணங்குவதோடு ஆசியும் நல்கு வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பாடசாலை ஒரு தலை சிறந்த அதிபரையும் ஆசிரியர்களையும் நன் மாணாக்கரையும் கொண்டு இப்பிரதேசத்தின் முன்னோடிப் பாடசாலையாகத் திகழ்கிறது. இப்பாடசாலையில் நடைபெறும் விழாக்களை இங்கே குறிப்பிடுகிறேன் இப்பாட சாலையின் அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மாதா, பிதா, குரு, தெய்வம் எனப்படுகின்ற தெய்வீக விழா எங்களை மட்டுமன்றி கலந்து கொள்கின்ற அனைவரையுமே மெய்சிலிர்க்க வைக்கும். புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்க்கு மட்டுமன்றி க.பொ.த. சாதாரண, க.பொ.த. உயர்தர மாணவ மணிகளும் தங்களுடைய பெற்றோர், ஆசிரியர், மதப் பெரியோர், அறிஞர், சான்றோனர் போன்றவர்களிடம் வணங்கி ஆசிபெறச் செய்கின்ற பெருமை இப்பாடசாலை அதிபரையே சாரும். இப்படி பல விழாக்கள் இப்பாடசாலையில் நடைபெறுகின்றன.

இவ்விழாக்கள் மாணவ மணிகளை ஒழுக்கசீலர்களாகவும் பண்பாளர்களாகவும் வாழச் செய்கின்றது. இன்றும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவ மாணவியர் மாதா, பிதா, குரு, தெய்வம் போன்றவர்களிடம் பணிவும் மரியாதையும் கொண்டுள்ளதை நாம் காணலாம். தலைசிறந்த தலமை, பண்பாளர்களான ஆசிரியர்கள், பண்புமிக்க மாணவர்கள் இவர்களால் மெமோறியல் அன்னையும் பெருமிதமடைகிறாள். நீண்ட கல்விப் பாதையில் வெற்றி நடைபோடும் மொமோறியல்த் தாயை வாழ்த்துவதோடு இவ் விழா சிறக்க அதிபர், ஆசிரியர்கள், மாணவமணிகள் வாழ நாடு சிறக்க என்னுடைய நல்லாசி களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*சிவசிறி பரமேஸ்வர ஜெயகுமாரக் குருக்கள்*
**பிரதமகுரு மானி. மருதடி விநாயகர் திருக்கோயில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வியறிவை ஊட்டுவதிலும் அறிஞர்கள் மற்றும் கல்விமான்களை உருவாக்குவதிலும் சிறப்பாகச் செயற்பட்டுள்ளது**



# மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

1836ம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க மிஷனரிமாரின் ஞாபகார்த்தமாக எமது மண்ணில் ஆரம்பிக்கப்பட்ட மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இவ்வருடம் தனது 165வது ஆண்டு நிறைவினை கொண்டாடுவதையிட்டும் அதன் ஞாபகார்த்தமாக "மெமொறியல் மலர் 6" இனை வெளியிடுவதையிட்டும் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது தமிழ் பேசும் சமூகத்தின் மூலதனங்களில் ஒன்றான கல்விச் செல்வத்தை வளம்படுத்துவதில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பங்கு பணியை அனைவரும் அறிவர். எமது பிரதேசங்களில் பாடசாலைகள் விரிவாக்கம் பெற்றிராத காலப்பகுதிகளிலிருந்து இன்றுவரை எமது மக்களுக்கு கல்வியறிவை ஊட்டுவதிலும் அறிஞர்கள் மற்றும் கல்விமான்களை உருவாக்குவதிலும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை சிறப்பாகச் செயற்பட்டுள்ளது.

நீண்டகாலக் கல்விப் பாரம்பரியம் கொண்ட இப்பாடசாலை, கடந்த இரு தசாப்தங்களாக எமது மண்ணில் தலை விரித்தாடிய யுத்த நடவடிக்கைகளால் தனது கல்விச் செயற்பாடுகளில் சில பின்னடைவுகளைச் சந்தித்துள்ளமை துரதிஷ்டவசமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புரனரமைப்பு ஆகிய விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையிலும் எமது சமூகத்தின் நிம்மதியான வாழ்வுக்காக அரசியற் செயற்பாடுகளை முன்னெடுப்பவர்கள் என்ற வகையிலும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கு தேவையான சகல உதவிகளும் ஒத்தழைப்புகளும் நல்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறுபட்ட இடர்களுக்கும் மத்தியிலும் இன்று வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் உணர்வு பூர்வமாக சேவையாற்றி வரும் அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எனது மனப் பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

அதேவேளை, இப் பாடசாலையில் கல்வியைத் தொடரும் மாணவச் செல்வங்கள், தமது கல்வியை சிறப்பாகப் பெற்று எதிர்காலச் சமூகத்தின் சிற்பிகளாக மலர்ந்து எமது மண்ணிற்கு சிறந்த சேவையாற்ற வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

~ நன்றி ~

மக்கள் சேவையிலுள்ள,

*கே. என். டக்ளஸ் தேவானந்தா. (பா.உ)*

**செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி.**

**வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் கடமையை பாங்குடன் ஆற்றிவரும் அதிபர்

# ஆசிச்செய்தி



வடபகுதியில் அதிக ஆரவாரமின்றி ஆக்கபூர்வமாக கல்விப் பணிகளும் அதனோடிணைந்த பணிகளும் ஆற்றிவரும் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி 165 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்வது குறித்து நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

அமெரிக்க மிஷனரிமாரின் வருகையால் வடபகுதியில் பல கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன. அவற்றுள் ஒன்றான மானிப்பாய் மெமோறியல் கல்லூரி கடந்த காலங்களில் பல கல்விமான்களை உருவாக்கியுள்ளது. கல்வியோடு கலைப் பண்பாட்டு வளர்ச்சிக்கும், விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கும் நிறையவே பங்களிப்பினை நல்கியுள்ளது.

கடந்த காலங்களில் வெளியான மெமோறியல் மலர்கள் கல்லூரியின் சாதனைகளையும் பெறுமதியான தகவல்களையும் சேர்த்துத் தந்ததுடன், ஆசிரியர்கள், மாணவர்களின் கருவூலங்களையும் உள்ளடக்கி கனதியாகவே மலர்ந்துள்ளன.

இனிவரும் நாட்களில் இக்கல்லூரி மென்மேலும் வளர்ந்து நன் மாணவர்களை உருவாக்கவும், உருவாகும் மாணவர்கள் உன்னத நிலையையும் அடையவும் பிரார்த்திப்பதோடு ~ பத்தாண்டுகளுக்கு மேலாக பயின்ற பாடசாலையிலேயே அதிபர் கடமைகளை பாங்குடன் ஆற்றிவரும் அதிபர் திரு. ஏ. எம். அருணாசலம் உட்பட ஏனைய சகலரையும் ~ மலராசிரியர் பொறுப்புகளை மனம் கொள்ளத்தக்க வகையில் பூர்த்தி செய்யும் ஆசிரியர் திரு. எஸ். சிவராஜனுக்கும் நல்வாழ்த்துக்கள்.

*எஸ். தில்லைநடராஜா*
மேலதிக செயலாளர்
கல்வி அமைச்சு. பத்திரமுல்லை.
ஸ்ரீஜெயவர்த்தனபுர.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுச் சாதனைகளை வெளிக்கொணரும் ஆவணம்

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாண வரலாறு கல்வியியற் பின்புலத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதற்கு அடையாளமாக அங்கு ஓங்கி வளர்ந்து சேவையாற்றும் கல்வி நிறுவனங்கள் சான்றுகளாக உள்ளன. அந்த வகையில் யாழ் மாவட்டத்தின் கல்விப் பாரம்பரியத்தைக் கடந்த 165 வருடங்களாகப் பேணிக் காத்து வரும் மானிப்பாய் மெமோறியலின் காத்திரமான பங்களிப்பு நினைவு கூரத்தக்கது.

கடந்த 165 வருடங்களாக மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் சாதனைகளும் அது சந்தித்த சோதனைகளும் ஏராளம். ஒரு காலத்தின் பதிவுகளை ஆவணப்படுத்தி அடுத்துவரும் சந்ததிக்குக் கையளிப்பது என்பது அர்த்தமுள்ள சாதனை என்பதை நாளைய வரலாறு புகட்டும்.

மானிப்பாய் மொமோறியலில் இருந்து ஆண்டு தோறும் வெளிவரும் "மெமோறியல் மலர்" அந்தக் கல்லூரியின் வரலாற்றையும், சாதனைகளையும் வெளிக்கொண்டுவரும் நல்லதொரு ஆவணமாக விளங்குகின்றது.

அத்தகையதொரு ஆவணப்படுத்தலின் வெளியீடாக இரண்டாயிரத்து ஒன்றிலும் மலரும் "மெமோறியல் மலர்-6" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். இப்பெரு முயற்சியில் முன்னின்று உழைத்துவரும் அதிபர், பிரதி அதிபர், மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்.

*க. பரமேஸ்வரன்*
செயலாளர்.

2001-02-01

வடக்கு கிழக்கு மாகாண கல்வி,
பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக்கல்விச் செயற்பாடு மிகத் திருப்தி



# ஆசியுரை

யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை 165 ஆண்டுகள் கல்விப் பணி செய்து மெமோறியல் மலர் 6 வெளியிடும் இவ்வேளையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் ஆசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 1993ஆம் வருட இப்பாடசாலை தனது 157வது ஆண்டு நிறைவு செய்த காட்சியை நேரில் பார்க்கவும் வாழ்த்தவும் எனக்கு பெருவாய்ப்பு கிட்டியது. ஆயினும் அந்த எட்டு ஆண்டுகளின் பின் மெமோறியல் கண்ட வளர்ச்சி கல்வி சிந்தனை உள்ளவர்களை தன்பால் ஈர்த்துள்ளமை குறிப்பிடக் கூடியது ஆகும். அதிபர், ஆசிரியர்கள், பாட சாலை சமூகம் ஒருங்கிணைந்து நிறைவான பணியாற்றும் காட்சியை இப் பாடசாலை யில் நிறைவாக கண்டிருக்கிறோம்.

வருடாவருடம் பகிரங்கப் பரீட்சைகளிலும், பகிரங்கப் போட்டிகளிலும் இப் பாடசாலை மாணவர்கள் பெற்றுவரும் வெற்றிகள் வரலாற்று அம்சம் ஆகும். 2000ம் ஆண்டு ஆகஸ்ட் மாத உயர்தரப் பரீட்சையில் மெமோறியலின் ஒரு மாணவன் மாவட்ட மட்டத்தில் கலைப் பிரிவில் முதலாம் நிலையையும் இன்னொரு மாணவன் பதினொராவது நிலையையும் பெற்றதோடு மட்டுமல்லாது இவ்வாண்டில் பரீட்சை எழுதிய 31 மாணவர்களில் முப்பது மாணவர் பல்கலைக்கழக புகுமுக தகுதி பெற்றமை கல்வி பணி வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஒழுக்க மேம்பாட்டிலும், பண்பாடு உள்ள மாணவரை உருவாக்குவதிலும் இப் பாடசாலை ஏனைய பாடசாலைகட்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்கிறது. மாகாண மட்டத்தில் கூட பாடசாலையின் ஒழுக்கச் சிறப்புக்கும் திறமையான செயற்பாடுகளும் பல உயர் அதிகாரிகள் பாராட்டியதை நான் அறிவேன். விசேடமாக ஆரம்பக் கல்விச் செயற்பாடகள் மிகத் திருப்திகரமாக இருப்பதை கடசியாக நான் பாடசாலையை தரிசித்தபோது அறியக் கூடியதாக உள்ளது. மானிப்பாய் மெமோறியல் ஆங்கில்ப பாடசீலை தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து எமது தேசத்தில் ஒரு தலைசிறந்த கல்லூரி யாக மிளிரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

*இ. சிவானந்தன்*
மாகாணக் கல்விப்பணிப்பாளர்
வட கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மிகவும் பழமை வாய்ந்த ஒரு கல்வி நிறுவனம். இக்கல்லூரி 1836ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை திறம்பட இயங்கி வருவதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இக்கல்லூரியின் சாதனைகள் மிகப் பல. இச் சாதனைகளுக்குப் பின்னால் உந்து சக்தியாக விளங்கும் அதிபர், ஆசிரியாகளை நான் மிகவும் பாராட்டுகின்றேன். இக்கல்லூரியிற்றான் எனது மாமனார் பண்டிதர் திரு. மு. கதிரவேலு அவர்க்ள் கல்வி கற்பித்து ஓய்வு பெற்றார்கள் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இக்கல்லூரி 1994ம் ஆண்டிற்குப் பின் இப்பொழுது மெமோறியல் கல்லூரி 6ம் ஆண்டு மலரினை வெளியிடுகிறது. கல்லூரி மாணவர்களின் படைப் பாற்றலை எடுத்துக்காட்டுவதாக இம்மலர் அமைகின்றது. கல்வியின் ஓரங்கமாக விளங்கும் படைப்பாற்றலைக் காலத்திற்குக் காலம் வெளிக்கொண்டு வருவதில் இக்கல்லூரி ஆற்றும் பெரும் பணியை மிகவும் பாராட்டுகின்றேன்.

இம்மலருக்கு மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களுக்கு பயன்தரக்கூடிய கட்டுரைகளை வழங்கியுள்ளார்கள்.

இம் மலர் ஆண்டுதோறும் மலர வேண்டுமென்பது எனது ஆசை. இம்மலர் மேன்மேலும் சிறப்புற்றோங்க எனது மனமுவந்த ஆசைகளைக் கூறி அமைகிறேன்.

*ச. நா. தணிகாசலம்பிள்ளை*

2001 - 05 - 05

மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்
யாழ் மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பான முகாமைத்துவம் பாராட்டக்கூடியது . . .

# கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம் மானிப்பாய் மெமோறியல் கல்லூரிக்கென நீண்டகாலப் பாரம்பரி யங்கள் பலவுண்டு. சமூகத் தேவைக்கான கல்வி ஏற்பாடு, ஒழுக்கவாழ்வு, கலைப் பண்பாடுகளைக் கட்டிக் காத்தல், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, விடாமுயற்சியும் முன்னேற்றமும் இவை யாவற்றையும் கொண்டியங்குவதே அப்பாரம்பரியமாகும். பாடசாலை வளர்ச்சியில் பெற்றோரும், மாணவரும், ஆசிரியர் அதிபர் சமூகமும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்படும் பாங்கு பலரையும் கவரச் செய்யும். பாடசாலையின் அழகுச் சூழல், ஆசிரியர் - மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் யாவற்றையும் ஒழுங்குற அமைத்து சிறப்பான முகாமைத்துவம் செய்யும் அதிபரின் பணி யாவராலும் பாராட்டத்தக்கது. அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்களின் அரும் பணியை மானிப்பாய் மெமோறியலும் மு/யோகபுரம் மகா வித்தியாலயமும் கண்டு அனுபவித்தவன் என்ற வகையில் பாடசாலை வளர்ச்சிக்கு என்றும் துணை நிற்பார் என நம்புகிறேன்.

பாடசாலையினரால் வெளியிடப்படும் மெமோறியல் கல்லூரிச் சஞ்சிகை முயற்சியை பாராட்டுவதோடு தொடர்ந்து வெளிவர வேண்டும் எனும் பெரு விருப்பையும் தெரிவிக்கின்றேன்.

ச. சுப்பிரமணியம்

2001 - 02 - 23

கல்விப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2000ம் ஆண்டு கலைப்பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்மை பெற்று பல்கலைக்கழகம் புகுவது கல்வி வளர்ச்சியின் சாதனை



# வாழ்த்து

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை தனது 165வது ஆண்டை நிறைவு செய்வது குறித்து வெளியிடும் மெமோறியல் மலர் 6 எனும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். பதினாறு தசாப்தங்களுக்கு மேல் சிறந்த கல்விப் பணியாற்றி வரும் மெமோறியல் தனக்கென்று ஓர் பாரம்பரியத்தைக் கொண்டது. சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற ஞானிகளையும், புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர் திரு. வீ. எஸ். துரைராஜா போன்ற பல கல்விமான் களையும் உருவாக்கி ஆரம்பக்கல்விக்கு அத்திவாரமிட்ட பெருமை இப்பாடசாலைக்கு உண்டு.

நீண்டகாலமாக இவ் பாடசாலைச் செயற்பாடுகளை அறிந்த வகை யிலும், மிக அண்மையில், ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்த வகையிலும் இப்பாடசாலையின் முதனிலைக் கல்வியின் சிறப்புக்கள் பாராட்டப்பட வேண்டியவை.

அதேபோல் இடைநிலைக் கல்வியும், உயர்நிலைக் கல்வியும் இங்கு விருத்தியடைந்து வருவது மகிழ்ச்சி தருகிறது. 2000ம் வருட ஆகஸ்ட் மாத க.பொ.த(உ/த) பரீட்சைப் பெறுபேறுகளில் கலைப் பிரிவில் இப் பாடசாலை மாணவன் ஒருவர் யாழ் மாவட்டத்திலே முதலாவது நிலையையும், இன்னொரு மாணவன் மாவட்டத்தில் 11வது நிலையையும் பெற்று இப்பாடசாலைக்குப் பெருமை சேர்த்தமை வரலாற்றுக் குறிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக கற்றல் கற்பித்தல் நடைபெற பல வளக்குறைவுக்கு தடையாக விருப்பினும், குறைகளுள் நிறைவுகண்டு மெமோறியல் வளர்ந்து வருவது எம்மைச் சிந்திக்க வைக்கிறது. இப்பாடசாலையின் பெரு வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர்கள் அளித்துவரும் பேராதரவு போற்றுதற்குரியது. மெமோறியல் அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்கள் மாணவரது கல்வி வளர்ச்சியில் அக்கறையுடையவர் மெமோறியல் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இடம் பெயர்ந்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் கல்வி வலயத்தின் மு / யோகபுரம் மகா வித்தியாலயத்தில் 20 மாதங்கள் பணியாற்றி, மாவட்டத்திலேயே சிறந்த அதிபர் எனப் பாராட்டும் சான்றிதழும் பெற்றவர். இவரது காலத்தில் யோகபுரம் மகா வித்தியாலயத்தின் வரலாற்றில் 8D பெறுபேறுகளை மாணவர் பெற்றுக்கொண்டது பலராலும் நன்றியோடு சுட்டிக்காட்டப் பட்டது. மெமோறியல் பல பணி செய்து வளர மனதார வாழ்த்துகிறேன்! வாழ்க!!

*திருமதி. அ. வேதநாயகம்*

**வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள**
**ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை காட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கிறது



# வாழ்த்துச்செய்தி

யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரியைச் சார்ந்த கல்விச் சமூகம் கல்லூரியின் 165வது வயதிலே 'மெமோறியல் மலர்' எனும் சஞ்சிகையை வெளியிடுவதனையிட்டு பேரானந்தம் அடைகின்றேன்.

1836ல் 7 மாணவர்களுடன் ஆரம்பித்த பாடசாலை 1993ல் 2023 மாணவர்களையும் 1999ல் 1085 மாணவர்களையும் தன்னகத்தே கொண்டு பல இடர்கள் மத்தியிலும் பெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது. வலிகாம வலயத்தில் 1000ற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட நான்கு பெரிய பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். வரலாற்றுப் பெருமையைக் கொண்டது. இடம் பெயர்ந்த காலத்திலும், மீளக் குடியமர்ந்த பின்பும் தனக்கேயுரித்தான பாணியில் வாழ்க்கை நெறி புகட்டி நிற்கின்றது. இச்செழுமையால் பெருந்தொகையான மாணவர்களைக் கவர்ந்து கலைக்கோயிலாக, திசைகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றது.

கல்விக் கூடங்கள் தனித்து பரீட்சைப் பெறுபேறுகளை வெளிக்காட்டம் நிறுவனங்களாக மட்டுமல்லாது உயர் நடத்தை கொண்ட பிரசைகளை உருவாக்கும் ஆலயங்கள் என்பதற்கு இக் கல்லூரி சிறந்த உதாரணமாக விளங்குகிறது. இப் பெருமைகளைக் கொண்ட இக் கல்லூரி இச் சஞ்சிகை வெளியீட்டு மூலம் மாணவர்களது, ஆசிரியர்களது உணர்வுகளை வெளிக்காட்டி நிற்கின்றது. இவ் இன்பம் ஆக்குபவருக்கும், பயன்களடைபவருக்கும் உயர்வைத் தரும். சிறப்பாக மாணவர்கள் இப் பராயத்தில் இப்படியான சஞ்சிகைகள் ஊடாக திறன்களை விருத்தி செய்து கொள்வதோடு உயர்ந்த வாழ்க்கை இலட்சியங்களையும் அமைத்துக் கொள்வர். இவ் உயர்ந்த பணிக்குத் துணையான அதிபர், உட்பட சகலரையும் வாழ்த்துவதோடு இவ்வாறு காலா காலம் தொடர வேண்டுமெனவும் அன்புடன் வேண்டி நிற்கின்றேன்.

வீ. இராசையா
வலயக் கல்விப் பணிப்பாளர்.
வலிகாமம்.

மருதனார் மடம்.
சுன்னாகம்.
2001-03-15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புகழ் பூத்த நினைவுகளைச் சுமந்து வரும் சஞ்சிகை

# வாழ்த்துச்செய்தி



மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை 165 ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்நாளில் இவ்வறிவாலயத்தின் புகழ் பூத்த நினைவுகளைச் சுமந்து வெளிவரும் சஞ்சிகையை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"மெமோறியல் அன்னை" என்று வழிபடும் அதிபரையும் நெறி பிறழாது கல்விக் கோட்பாடுகளை உயர் சிந்தனையுடன் எம் குழந்தைகட்குப் பரிவுடன் எடுத்துச் செல்லும் கண்ணியம் மிக்க ஆசிரியர்களையும் பெருமித உணர்வுடன் நினைவு கூருகின்றேன்.

கல்வியை நிறைவுடனும் கடமையைப் பரிவுடனும் ஆற்றும் தலைமைத் துவம்தான் பெருமையுடன் சஞ்சிகையை வெளியிடும் உரித்துடையது. அந்த வகையில் ஏழைக் குழந்தைகளையும் உயர்வாகப் பேணி சமய சமரசம் கண்டு பண்பாடு கலாச்சாரம் மிக்க மாணவர்களைச் சமூகத்திற்கு அளித்துக் கொண்டிருக்கும் இப்பாடசாலையில் தொடர்ந்தும் மாணவர் ஆக்கங்கள் வெளிவருவதற்கு ஆசிரியர்கள் சிறப்புடன் வழிகாட்டுவார்கள் என மகிழ்வுடன் எதிர்பார்க்கும் இவ்வேளையில் இப்பாடசாலையில் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் நிறைவுடன் கல்விப் பாதையில் வழிநடந்திட வாழ்த்துகிறேன்.

*திருமதி. றெ. இருதயநாதன்*
பிரதிக் கல்விப்பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்
மருதனார் மடம்

2001-05-20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜை ஆகும் கூடம்

# ஆசிச்செய்தி



165 ஆண்டு காலமாக மானிப்பாயிலும் அதனைச் சூழ்ந்துள்ள இடங்களிலும் வாழ்ந்து வரும் சந்ததியினருக்கு கல்விச் செல்வத்தையும் மனித நேயப் பண்பாட்டையும் வாரி வழங்கி வளர்ந்து வரும் மெமோறியல் அன்னையின் சாதனையாக வெளிவரும் ஆறாவது மெமோறியல் மலருக்கு ஆசியுரை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கொண்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏனைய பாடசாலைகள் பார்த்துப் பின்பற்றக்கூடிய சிறந்த ஒழுங்கமைப்புக் கொண்ட பாடசாலையாக நிர்வாகக் கட்டமைப்பு, மாணவர் ஒழுக்கம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இணை பாடவிதானச் செயற்பாடுகள் அழகும் தூய்மையும் கொண்ட தோற்றம் என்பவற்றில் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக இப்பாடசாலை உன்னத நிலையில் விளங்கி வருவது யாவரும் அறிந்த உண்மையாகும். இக்கல்லூரியின் இத்தகைய சிறப்பிற்குக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரும்பணியாற்றி வரும் தற்போதைய அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்களின் சீரிய தலைமைத்துவம் மிக முக்கியமானது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

கல்வி அறிவு, பொருளாதார வசதி, சமூக முன்னேற்றம் என்பற்றில் பின்னடைவு பெற்ற பெற்றோர்களின் பிள்ளைகள் பெருமளவில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை அளித்து வந்த இப்பாடசாலை அத்தகைய பாடசாலைச் சமூகத்தின் ஏகோபித்த ஆதரவுடன் வீறு நடைபோட்டு முன்னேறி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்கள் மட்டுமன்றி பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் அரவணைப்பிலும் இப்பாடசாலை பல துறை வளர்ச்சிகளையும் கண்டு யாழ் மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகவும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தின் மிகப் பெரிய பாடசாலையாகவும் விளங்கி வருகின்றதென்றால் அது தற்போதைய அதிபரின் விடாமுயற்சியும் சிறந்த ஆளுமையும் அதன் வெளிப்பாடாக பாடசாலைச் சமூகத்துடன் அவர் பேணிவரும் சிறந்த அணுகு முறையுமே காரணமெனலாம்.

மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்களின் திறமைகளை வளர்த்தெடுத்து சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரசைகளாக இக்கல்லூரி மாணவர்களை உருவாக்கி வரும் ஞான விளக்குகளாம் இக்கல்லூரி ஆசிரியர்களை இச் சந்தர்ப்பத்தில் மறந்து விடமுடியாது. அவர் தம் அர்ப்பணிப்புடன் கூடிய சேவை மனப்பான்மையே மெமோறியல் அன்னையின் வளர்ச்சிக்கு வித்தாக அமைந்து வருகின்றது. இவ்வாசிரியர்களின் ஒத்துழைப்போடு மாணவர் திறன்களை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகவும் பாடசாலையின் பெருமையை வெளியுலகுக்கு மேலும் எடுத்துக் காட்டும் சான்றாகவும் மெமோறியல் அன்னையின் ஆறாவது சஞ்சிகை வெளிவருவது மிகுந்த பாராட்டுதற்குரியதொன்றாகும்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை தன் வளர்ச்சிப் பாதையில் தங்கு தடையின்றித் தொடர்ந்து முன்னேறி அறிவொளி மிக்க சமுதாயம் ஒன்றை உருவாக்கும் இலக்கில் முழுமையாக வெற்றி பெற இறைவன் அருளை வேண்டி எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*க. தனபால சிங்கம்*

**2001-05-10**

**உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏட்டுக் கல்வியாக மட்டுமல்லாமல் நிதர்சனமாகப் போதிக்கும் கல்விக் கூடம்



# ஆசிச்செய்தி

கல்வியே உயர்ந்த செல்வம், கற்க மறுப்பவர் வாழ மறுப்பவர், அறிவு சுற்றம் காக்கும் கருவி, கற்கை நன்றே கற்றை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே . . . எனக் கல்வியின் மாண்பினை அடுக்கிக் கொண்டே போகலாம். கல்விச்சாலைகள் எம் அக இருள் போக்கும் அறிவாலயங்கள். திருக்கோயில்கள் போல் தினமும் வழிபட வேண்டியவை பள்ளித் தலங்கள். இப்புனித தலங்களே மனிதனைப் புனிதனாக்கும், ஆசுநீக்கும் ஆசிரியத் தெய்வங்களுக்கு அறிவு சுரக்கும் அருள் நிலையங்கள். மேற்குறித்த இலக்கணங்களுக்கு பூரண உதாரண நிறுவகமாக விளங்குவது மானிப் பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. யாழ்ப்பாணத் திருநாட்டில் மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாட்டை கல்விச் சாலையில் ஏட்டுக் கல்வியாக மட்டும் போதிக்காமல் நிதர்சனமாக ஊட்டிவரும் ஒப்பற்ற கல்லூரி மெமோறியல் பாடசாலை. இப்பண்பாட்டுக் கல்விச்சாலையின் பரிபூரண சிறப்புக்கு காரண கர்த்தாக்களாக விளங்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குகிறேன். பாடசாலை வளர்ச்சியின் ஆவணமாக வெளிவரும் "மெமோறியல் மலர்" சிறக்க நல்லாசி கூறுவதோடு மலராசிரியரின் முயற்சியை வாழ்த்தி, இறைவனைப் பிரார்த்தித்து எனது ஆசியினை நிறைவு செய்கிறேன்.

*செஞ்சொற் செல்வர். ஆறு திருமுருகன்*
ஆசிரியர்
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி
சுண்ணாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன உறுதியையும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்ற பக்குவத்தையும் ஊட்டும்

# ஆசிச்செய்தி

"மெமோறியல்" என சுருக்கமாக அழைக்கப்படும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, சீரழிவுக்குள்ளான இன்றைய சூழ்நிலையிலும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருப்பதையிட்டு பெருமிதமடைகிறேன். தன்னலமற்ற விடா முயற்சியும் எல்லோரினதும் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்புடன் கூடிய தன்னம்பிக்கையும் தான் அதற்குக் காரணமாகும். நற்பிரசைகளை உருவாக்குவதுதான் கல்வியின் அடிப்படை நோக்கமாகும். இவ்வாறு நோக்கும் போது மெமோறியல் ஆற்றிய பணி மகத்தானதாகும். போர்நிலை கண்டு துவண்டுவிடாமல் மாணவ சமுதாயம் கல்வியை கண்ணும் கருத்துமாய் கசடறக்கற்று முன்னேற வழிசமைப்பதில் மெமோறியல் அரும்பணியாற்றி வருகிறது. குறிப்பாக வடகிழக்கு பாடசாலைகள் 21ம் நூற்றாண்டின் சவால் களையும் சந்தர்ப்பங்களையும் எதிர்கொள்வதற்கு பல இடர்பாடுகள் இருக்கச் செய்கின்றன. இவற்றைப் போக்க அனைவரும் ஒற்றுமையாகப் பாடுபட வேண்டும். இதனிடையில் மெமோறியல் பெற்றுவரும் வளர்ச்சியும் பெறுபேறு களும் மிகுந்த உற்சாகம் ஊட்டுவதாயுள்ளன. மாணவர்களுக்கு மன உறுதியை யும் தாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்ற பக்குவத்தையும் மெமோறியல் தொடர்ந்து ஊட்டி வைக்கும் என்பதில் எனக்கு பெரும் நம்பிக்கை உண்டு.

கல்லூரியின் எல்லா முயற்சிகளையும் வளர்ச்சிப் போக்குகளையும் அமுதமாக திரட்டி செழுமைசேர்க்கும் "மெமோறியல் மலர் VI" ஐ நான் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

1999-02-23

வ. திருநாவுக்கரசு
(பழைய மாணவன்)
கொழும்பு மாநகரசபை உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலை நிமிர்ந்து நிற்கும் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை**

# ஆசிச்செய்தி

ஒரு கல்லூரியின் நீண்ட காலப் பாரம்பரியங்களும், அதன் சாதனைகளும் எதிர்காலச் சந்ததியினருக்கும் கையளிக்கப்பட வேண்டுமாயின், அவை ஆவணப் படுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அவ்வப்போது நடைபெற்று வருகின்ற அசம்பாவிதங்களினால் பல கல்லூரிகளின் வரலாறே மறைக்கப்பட்டு விட்டன.

"மானிப்பாய் மெமோறியல்" ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் சிறந்த ஆங்கிலப் பாடசாலையாகப் புகழோடு விளங்கிய கல்லூரி. 1995 காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள இடப்பெயர்வுகளினால் யாழ்ப்பாண வரலாற்றுடன், மொமோறியலின் வரலாறும் ஒரு இருண்ட காலத்திற்குள் தள்ளப்பட்டுவிட்ட, அந்தத் துயரத்தில் இருந்து படிப்படியாகத் தன்னை வளர்த்து மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கும், "மானிப்பாய் மொமொறியல் ஆங்கிலப் பாடசாலை" தனது "மெமோறியல் மலர் 6" வெளியீட்டின் பிரவேசத்துடன் ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்தகால வரலாற்றையும் சாதனைகளையும் மாணவர்களின் ஆக்கங் களையும் தாங்கி வெளிவர இருக்கும் "மெமோறியில் மலர்" யாழ்ப்பாணக் கல்வி உலகின் ஒரு காலப் பகுதியின் குறிகாட்டியாகத் திகழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

இத்தகைய தம் வரலாறுகளைப் பதிக்கும் ஆண்டு மலர்களை ஒவ்வொரு பாடசாலையும் வெளியிட்டு வைக்க வேண்டும். இம்மலர் வெளியீட்டுக்கு முன்னின்று உழைக்கும் அதிபரையும் மலர்க் குழுவினையும் பாராட்டுகின்றேன்.

*சுந்தரம் டிவகலாலா*

2001-03-09

முன்னாள் செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை ஒளிமயமாக்கும் . . .

# முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

மாகாணக் கல்வித்திணைக்களத்தின் எண்ணங்களுக்கு வண்ணம் சேர்க்கும் வகையில் வெளிவரும் சஞ்சிகைகள் எமக்கு நிறைவான மகிழ்வைத் தருகின்றன.

காலத்தை ஒளிமயமாக்கித் தன் கல்விச் செயற்பாடுகளைச் சிறப்புடன் மேற்கொண்டுள்ள யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை வெளியிடுகின்ற இம் "மெமோறியல் மலர்" மணம் பரப்ப வாழ்த்துகிறேன்.

அது தாங்கிவரும் ஆக்கங்கள் மாணவரின் அறிவை, ஆற்றலை, அகப் பாங்கை மேம்படுத்தி அவர்தம் கல்வியில் ஊக்கம் பெற ஆசிக்கின்றேன்.

*க. கந்தசாமி.*
முன்னாள் மாகாண கல்விப்பணிப்பாளர்
வடகிழக்கு மாகாணம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்போடு அரவணைக்கும் மெமோறியல் தாய்



# ஆசிச்செய்தி

யாழ் மாவட்டத்தில் உள்ள வலிகாமம் கல்வி வலயத்தின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கிவரும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை தனது 165 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்து வெளி யிடும் ஆறாவது மலருக்கு ஆசியுரை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சியடை கின்றேன்.

இன்றைய புதிய கல்வி மறுசீரமைப்பின் வழியில் சஞ்சிகை ஆக்கங்கள் மிக முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. அந்த வகையில் இப் பாடசாலை யினால் வெளியிடப்படும் சஞ்சிகையானது மாணவர்களது அறிவுசால் பரப்பளவு விரிவடைந்து பாரம்பரிய கோலத்தில் மாற்றம்பெற்று புதுப் பொலிவுடன் மிளிர் வதைப் பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

சென்ற ஆண்டு தென்மராட்சியில் நடைபெற்ற போர் அனர்த்தங்களால் நாலா பக்கங்களும் பரவலாக சென்றுள்ள மாணவர்களின் ஒரு பகுதியினரை அன்போடு அரவணைத்த இம் மெமோறியல் தாயை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. இவ்வாறு இடம்பெயர்ந்த மாணவர்களது ஆக்கங்களையும் தாங்கி வருவது இம்மலரின் விசேட அம்சமாகும்.

மனிதநேயம்மிக்க இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களது ஆற்றல், பண்பாடு, ஒழுக்கம் என்பவற்றினூடாக தோன்றும் வழிகாட்டல்களைப் பாராட்டு கின்றேன். இச் சஞ்சிகையை வெளியிட முன்வந்த நூலாசிரியர், செயற்குழு உறுப்பினர்கள் எல்லோருக்கும் வாழ்த்துத் தெரிவிப்பதுடன் இச்சஞ்சிகை மேலும் சிறப்புடன் விளங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்கி விடை பெறுகின்றேன்.

க. மயில்வாகனம்
அதிபர்
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா
சாவகச்சேரி
(தற்காலிக முகவரி)
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்கள், ஆசிரியர்களின் செயல்பாடுகளே இப்பாடசாலையின் வளர்ச்சியாகப் பர்ணமிக்கின்றது

# வாழ்த்துச்செய்தி



மெமோறியல் ஆங்கில பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் என்ற வகையில் இம்மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1967ம் ஆண்டிலிருந்தே இப்பாடசாலை அபிவிருத்திச் செயல்பாடுகளில் ஈடுபாடுடையேன். இக்காலப்பகுதியில் இங்கு கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களின் செயல்பாடுகளே இப்பாடசாலையின் வளர்ச்சியாகப் பர்ணமிக்கின்றது. பாடசாலையை மேற்பார்வை செய்யும் கல்வி இலாகா உத்தியோகத்தர்களின் சேவையும் பாடசாலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றது. விசேடமாக இப்பாடசாலையின் பிள்ளைகளின் பெற்றோர்கள் பாடசாலை வளர்ச்சிக்காக அதிபர், ஆசிரியர் முன்வைக்கும் பணிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து உதவி வருகின்றார்கள்.

இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று யாழ் மாவட்டத்தில் முதன்மையான பாடசாலையாக விளங்க எல்லாம் வல்ல மருதடி விநாயகன் அருள்பாலிக்க வேண்டி எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

*த. சீவரத்தினம்*
செயலர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

2001-05-04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதா பிதா குரு தெய்வ வழிபாட்டின் சின்னம்

# ஆசிச்செய்தி



பல ஆண்டுகளாக கல்வியிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்த பல நற்பிரஜைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு அயராது உழைத்து வருகின்ற மானியூர் மெமோறியல் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் என்பதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். நான் இங்கு செயலாளராக இருந்த காலத்தை மீட்டிப் பார்க்கும்போது பல இன்னல் களிற்கு மத்தியில் பாடசாலையின் தரம் தளராமல் என்றும் நிமிர்வுடன் நடத்தி வந்த வருகின்ற அதிபர்களையும் கடமையை கண்ணாக மதிக்கும் ஆசிரியர் களையும் அவர்களை தெய்வமாக மதிக்கும் மாணவர்களையும் சகோதர பாசத்துடன் பழகும் அவர்கள் குணத்தையும் கலை கலாச்சார விளையாட்டு நிகழ்வுகள் நிறைவாக நிகழ்வதையும் "மாதா பிதா குரு தெய்வ வழிபாடு" என்னும் நிகழ்வு மூலம் மாணவர்களிற்கு பணிவும் கீழ்ப்படிவும் பயிற்றப்படு வதையும் கண்ணுற்றிருக்கிறேன். வேறு எங்கும் இல்லாத ஒரு நிறைவு இக்கல்லூரியில் கற்கின்ற கற்று வெளியேறிய மாணவர்களிற்கு இருப்பதாக உணர்கிறேன். "நிறைவாழ்வு" என்ற தனது மகுட வாசகத்திற்கு இலக்காக பாடசாலை இயங்கி வருவதைக் கண்டு புழங்காகிதம் அடைகிறேன்.

இப்பாடசாலை மேலும் பல நூற்றாண்டுகள் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு வளமான பணிபுரிந்து கல்வியோடு கூடிய ஒழுக்கத்தில் சிறந்த பல நூறு தலைவர்களை உருவாக்கி எம்மண்ணை சிறப்பிக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து என்றும் வளமுடன் வளர வாழ்த்துகிறேன்.

கல்லூரி வளாகம்
அளவெட்டி
2001-04-04

*திரு. செ. செல்வநேசன்*
பாடசாலை அபிவிருத்திச் சங்க
முன்னாள் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் புகழ் பார் எங்கும் ஒலிக்க
## மாணவர்கள் சாதனை படைக்கட்டும்



# வாழ்த்துகிறேன்

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் 165வது ஆண்டு நிறைவையொட்டி மெமோறியல் மலர் 6 என்னும் சஞ்சிகை வெளிவருவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது கல்லூரியை திறமை மிக்க அதிபர்கள் முகாமையாளர்களாக இருந்து வழிநடத்தியுள்ளனர். அவர்களுடன் ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட அனைவரினதும் ஒருமித்த உழைப்பின் காரணமாக சகல துறைகளிலும் உன்னத வளர்ச்சியடைந்து வருகின்றது.

ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் எமது கல்லூரி விளையாட்டுத் துறையில் முன்னர் சாதனை படைத்தது போன்று தற்போது கல்வியிலும் பல சாதனைகள் படைத்து வருகின்றது. எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடு படும் எமது அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்களின் விடா முயற்சி காரணமாக மென்மேலும் முன்னேற்றமடைந்து வருகின்றது.

எமது பாடசாலையின் புகழ் பார் எங்கும் ஒலிக்க எமது மாணவர்கள் அனைத்துத் துறைகளிலும் சாதனைகளைப் படைக்க வேண்டும். கலைத்துறையில் 2000ம் ஆண்டு எமது மாணவன் முதனிலை பெற்றது ஒரு பெரும் திருப்பம் எனக் கருதுகிறேன். நல்ல பல ஆக்கங்களையும் வரலாற்றுப் பதிவுகளையும் ஆவணமாகப் பேண இம்மலர் இப்பாடசாலையின் அரும் சொத்தாக அமையும் என நம்புகிறேன். இச் சஞ்சிகை வெளிவர உழைத்த அனைத்து உள்ளங்களையும் வாழ்த்தி, கல்லூரியின் ஒளி பிரகாசிக்க நடராஜப் பெருமானையும் யேசு பிரானையும் பணிந்து நிறைவு செய்கிறேன்.

*சி. சண்முகநாதன்*
உப அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியரின் உள்ளத்தில் இருந்தவை பேனா முனையில்...



அன்பு நெஞ்சங்களுக்கு வணக்கம்!

"மெமோறியல் மலர் 6" பற்றி உங்களுடன் பேசுவதில் பேரானந்தம் அடைகிறேன். இக்குழந்தையானது கருவுற்ற நாளில் இருந்து சுகப் பிரசவமாகி உங்கள் கைகளில் தவழும்வரை ஏற்பட்ட சுமைகள், இடர்கள் அதிகம் அவற்றை எல்லாம் மறை பொருளாக நின்று நீக்கி, என்னை வழிப்படுத்திய எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் பாத கமலங்களை வணங்கிக்கொண்டு எனது பேனா முனை தொடர்ந்து உங்களுடன் பேசுகின்றது.

மெமோறியல் மலர் 4, 5 ஆகியவற்றின் ஆசிரியராக பணியாற்றிய அனுப வத்துடன் இந்த மலரை ஆக்கியுள்ளேன். மெமோறியல் வரலாற்றில் தொடர்ந்து மூன்று சஞ்சிகைகட்டு ஆசிரியராக பணியாற்ற கிடைத் தமை ஒரு வரலாற்றுப் பதிவுதான். இப்பத்திரிகா தர்மத்துக்கு ஒத்த பணியை என்னிடம் வழங்கிய மலர்க் குழுவுக்கும், எனது மதிப்பார்ந்த அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்கட்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

இச் சஞ்சிகையானது இம்முறை எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களது ஆக்கங்களையே பெருமளவு தாங்கி நிற்கின்றது. மாணவர்களின் ஆக்கங்கள், ஓவியங்கள், செயற்திறனை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் வரலாற்று குறிப்புகள் என்பன மலரை அலங்கரிக் கின்றன. ஒரு பாடசாலை சஞ்சிகையானது பாடசாலைச் செயற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையே பெருமளவு தாங்கி வெளிவர வேண்டும் இச் சஞ்சிகையில் பாடசாலையின் சாதனைகள், கல்விச் செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் எல்லாம் வரைபடங்கள், புள்ளி விபரங்களுடன் எடுத்துக் கூறப்பட்டு உள்ளன.

இம் மலரை சிறந்த முறையில் வெளியிடுவதற்கு தனது முழுமையான பங்களிப்பை நல்கிய புனித வளன் அச்சக முகாமையாளர் வணக்கத் துக்குரிய ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருக்கும், ஏனைய பணியாளர் கட்கும் எனது விசேட நன்றிகள். அவ்வப்போது வேண்டிய ஆலோ சனைகளை வழங்கி எனது பணி சிறப்புற உதவிய எமது பாடசாலை அதிபர் அவர்கட்கும், மலர்க் குழுவுக்கும் மலருக்கு சிறந்த ஆசியுரை களை வழங்கிய சமயப் பெரியோர்கட்கும், ஏனைய கல்விசார் உத்தி யோகத்தர்கட்கும் மலர் ஆசிரியர் என்ற வகையில் நன்றி பகர்கிறேன். விசேடமாக கேட்டபோது எமது மலரை வாழ்த்தி ஆசியுரை வழங்கிய மாண்புமிகு வடக்கு கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

இந்த மலரின் நிறைவுகளை உங்கள் அன்புக்குரியவர்களுடன் பேசுங்கள். ஆலோசனைகள் இருப்பின் எனக்கு சொல்லுங்கள். அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

அன்புடன்
*சி. சிவராஜன்*
மலர் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Principals

| | | |
|---|---|---|
| 1. | Mr. E. Vellautham | 1836 –1847 |
| 2. | Mr. P. Thiruvilankam | 1848 – 1864 |
| 3. | Mr. Poniah Strong | 1864 – 1871 |
| 4. | Mr. Vairavanathan Page | 1872 – 1881 |
| 5. | Mr. T. Arunasalam | 1882 – 1889 |
| 6. | Mr. A. M. Nathaniel | 1889 – 1899 |
| 7. | Mr. Carol Visvanathar | 1900 – 1911 |
| 8. | Mr. Edmon Fitch | 1911 – 1919 |
| 9. | Mr. Scader Manickavasagar | 1919 – 1926 |
| 10. | Mr. T. G. Thomas | 1926 – 1931 |
| 11. | Mr. J. S. Navaratnam | 1931 – 1936 |
| 12. | Mr. S. P. Rajaratnam | 1937 – 1941 |
| 13. | Mr. S. V. Alagaratnam | 1941 – 1960 |
| 14. | Mr. J. V. Thambynayagam | 1961 – 1964 |
| 15. | Mr. J. M. G. Samuvel | 1964 – 1966 |
| 16. | Mr. V. H. Sampanthar | 1966 – 1970 |
| 17. | Mr. K. G. Annappah | 1971 – |
| 18. | Mr. K. Kailayanathan | 1971 – 1975 |
| 19. | Mr. K. Vaithiyanathasarma | 1975 – 1978 |
| 20. | Mrs. P. Sivanantharajan | 1978 – 1980 |
| 21. | Mr. V. Suntharathas | 1980 – 1983 |
| 22. | Mr. V. Ponnudurai | 1983 –1989 |
| 23. | Mr. A. M. Arunasalam | 1989 – 1996 |
| 24. | Mrs. C. Yogeswaran (Acting) | 1996 – 1998 |
| 25. | Mr. A. M. Arunasalam | 1998 – 1999 |
| 26. | Mrs. C. Yogeswaran (Performing) | 1999 – 2000 |
| 27. | Mr. A. M. Arunasalam | 2000 – Up to date |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vice-Principals

1. Mr. G. N. Rajasungam
2. Mr. G. Amapah
3. Mr. V. Sundradas
4. Mr. V. Ponudurai
5. Mrs. P. Mahadeva
6. Mr. A. M. Arunasalam
7. Mrs. C. Yogeswaran
8. Mr. S. Sanmuganathan
9. Mrs. C. Yogeswaran
10. Mr. S. Sanmuganathan

# Primary School Principals

i. Mr. R. C. Chellaiah
ii. Mr. S. Subramaniya Iyar
iii. Mr. K. Theiventherampillai
iv. Mr. K. Thirunavukarasu
v. Mr. N. Sebamalai
vi. Mr. V. Thevadasan
vii. Mr. A. G. Frendo
viii. Mrs. E. Velleipuram
ix. Mr. K. Sivanesan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி ஆசிரியர்களும் அலுவலக பணியாளர்களும் 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

மதிப்புக்குரிய முதன்மை விருந்தினர்களே,
சிறப்பு விருந்தினர்களே,
முன்னாள் அதிபர், ஆசிரியர்களே
சகோதரப் பாடசாலை அதிபர்களே,
ஆசிரியர்களே,
பெற்றோர்களே,
மாணவர்களே,
பழைய மாணவர்களே,
நலன் விரும்பிகளே,

'நிறை வாழ்வு' [Abundunt Life] என்னும் மகுட வாசகத்தை உயிர் மூச்சாகக் கொண்ட மானிப்பாய் மெமோறியலின் 165வது ஆண்டு நிறைவு, மெமோறியல் மலர் 6 வெளியீடு, பெற்றோர் தினம் பாடசாலைப் பரிசளிப்பு ஆகியன ஒன்றிணைந்த இம்மாண்புறு விழாவிற்கு வருகை தந்துள்ள தங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

தமிழ் மக்களது இன்றைய கல்வியில் பெரும் அக்கறை காட்டி அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் தூய்மையுடன் உழைத்துவரும் மேலதிக மாகாணக் கல்வி பணிப்பாளர் கலாநிதி உயர்திரு ச. நா. தணிகாசலம்பிள்ளை அவர்களே। தாங்கள் இன்று மொமோறியல் மலர் 6 வெளியீட்டு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டிருப்பது குறித்து மெமோறியல் குடும்பம் பெருமகிழ்வடைகின்றது. விசேடமாக பழைய மாணவர்கள் பெரியதொரு நன்றிக்கடன் தீர்த்துவிட்ட நிறைவு கொள்கிறார்கள். காரணம் இன்றலர்ந்த 'மெமோறியல் மலர் 6' சஞ்சிகை, 30 ஆண்டுகளுக்கு மேலாக இப்பாடசாலையில் தமிழ் மணக்க பணி செய்த பேராசானும் தங்கள் மிக நெருங்கிய உறவினருமான "சிவபதி" வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அமரர் பண்டிதர் மூ. கதிரவேற்பிள்ளை ஐயா அவர்களுக்கு சமர்ப்பணம் ஆகிறது. பொருத்தமான விழாவிற்கு தாங்கள் வருகை தந்திருப்பது மெமோறியலின் ஞாபகார்த்தமாக பல்லாண்டு நிலைக்கப் போகின்றது. வடக்கு கிழக்கு முழுவதும் இயல்பாகவே தேங்கிக் கிடக்கும் கல்விசார் திறன்களை இனங்கண்டு உந்துதல் கொடுத்து புதுமெருகூட்டி ஆசிரியர்களையும் மாணவர்களையும் நிறைவாக வழிநடத்திப் பெரும் பணியாற்றி வரும் தங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

உயர் கல்விப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துயாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினை ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு ஒரு முன் மாதிரியாக மிளிர வைத்துக் கொண்டிருக்கும் துணைவேந்தர் பேராசிரியர் உயர்திரு பொ. பால சுந்தரம்பிள்ளை அவர்களே மெமோறியலின் இன்றைய பரிசுத் தினம், பெற்றோர் தினம் ஆகிய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தங்கள் துணைவியார் சகிதம் வருகை தந்திருப்பது நாம் செய்த பாக்கியமே. அகவை அறுபதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு செய்து மணிவிழாக் காணும் தாங்கள் பவள விழா, நூற்றாண்டு விழா, கண்டு இன்புற வேண்டும் என வாழ்த்துகிறோம். அறிவும் ஆற்றலும், எம் மண்ணின் கல்வியையும் பண்பாட்டினையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற தாகமும், உடைய பெருந்தகையீரான தாங்கள் கடந்த 20 ஆண்டு களுக்கு முன் ஒரு முறை எமது உயர்தர மாணவர் ஒன்றிய இராப்போசன விருந்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரை இன்று மாவட்ட மட்டத்தில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் எமது மாணவர் முதன் நிலை பெறும் அளவிற்கு உத்வேகம் தந்ததை வரலாறு கூறும். இத்தனை மாண்பு கொண்ட தங்களை பணிவுடன் அகமகிழ வரவேற்கிறோம்.

கணவரின் அத்தனை மாட்சிக்கும் காரண கர்த்தாவாகவும், நல்லாசிரியை யாகவும், மங்கையர் திலகமாகவும் திகழும் திருமதி பாலசுந்தரம்பிள்ளை அவர்களே! தங்கள் கரங்களால் எமது மாணவர்கள் பரிசில்களைப் பெறுவது பெரும் பேறாகும். தங்களை வரவேற்பதில் நாம் இன்புறுகிறோம்.

விசேட விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கே. வி. குகேந்திரன் அவர்களே! தங்கள் வரவு எம்மை யெல்லாம் இன்புறச் செய்கிறது. நலிந்துபோன எம்மக்களின் அன்றாட இயல்பு களுக்கேற்ப வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் எனும் உணர்வோடு தாங் களும் தங்கள் அமைப்பும் அயராது உழைப்பது தமிழ் மக்கள் அறிந்த ஒன்றே. நல்ல சேவை உள்ளம் பக்குவ சிந்தனையும் தன்னலமற்ற செயற்பாடும் கொண்ட ஒரு தலைவருடைய வழிகாட்டலில் கருமமாற்றும் தங்களை பாட சாலைச் சமூகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

எமது பிரதேச வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படும் மானிப்பாய் பிரதேச சபைத்தலைவர் திரு அன்ரன் வெலிச்சோர் யோண்சன் அவர்களே உங்களை வரவேற்பதில் மகிழ்வடைகின்றோம்.

வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் உயர் திரு. வீ. இராசையா அவர்களே! அமைதியாக, அடக்கமாக, அளவீடு செய்ய முடியாத பெருங் கல்விப் பணி யாற்றி வரும் தாங்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருப்பது உவகை தருகிறது. மனம் குளிர வரவேற்கிறோம்.

வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதய நாதன் அவர்களே! தாங்கள் எமது பாடசாலை மீது வைத்திருக்கும் நன்மதிப்பு, பற்று, கரிசனையை நாம் அறிவோம். நல்லதொரு வழிகாட்டியாக விளங்கினீர்கள். தங்களை சிறப்பு விருந்தினராக வரவேற்பதில் மகிழ்ச்சியடை கின்றோம்.

சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. தனபால சிங்கம் அவர்களே! கடமை உணர்வும் நேரம் தவறாமையும் கல்வி வளர்ச்சிச் சிந்தனையும் கொண்ட தங்களை சிறப்பு விருந்தினராக வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மெமோறியல் மலர் சஞ்சிகை வெளியீட்டுரை வழங்க வந்திருக்கும் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு கோ. சி. வேலாயுதம் அவர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் அன்பும் உறவும் மெமோறியலுக்கு ஒரு தனித்துவ மகிமை தருவது. தங்களை கரம்கூப்பி வரவேற்கிறோம்.

மெமோறியல் 6 மலரினை நன்கு உற்றுநோக்கி அறிவியல், அழகியல் ரீதியாக மதிப்பீட்டுரை வழங்க வந்திருக்கும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களே எங்கள் பாடசாலை யின் மலருக்கு மதிப்பீட்டுரை வழங்க வந்திருப்பது பேரானந்தம் தருகின்றது. தங்களை இன்முகத்துடன் வரவேற்கிறோம்.

எமது பாடசாலை வளர்ச்சிக்கு தங்களை அர்ப்பணித்து ஓய்வு பெற்ற, இட மாற்றம் பெற்ற ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே உங்கள் அனை வரையும் இப்பெருவிழாவில் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மெமோறியல் அன்னையின் வளர்ச்சிக்கு மனவளம், பொருள் வளம் வாரி வழங்கும் இனிய பெற்றோரே, பழைய மாணவர்களே நலன் விரும்பிகளே உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

ஏழு ஆண்டுகளின் பின் இப்பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழாவிற் கான ஒரு அறிக்கையை நான் சமர்ப்பிக்க வாய்ப்புக் கிடைத்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். மகிழ்வடைகின்றேன். 13-06-1994ல் தொடக்கம் 1998ம் வருடம் வரையான காலப்பகுதியில் எமது பாடசாலையில் கல்விசார் வளர்ச்சிச் செயற்பாடுகள் பௌதீக வளச் செயற்பாடுகள் பற்றி எனக்குப் பதிலாக அக்காலப் பகுதியில் மிக இக்கட்டான சூழ்நிலையிலும் மெமோறியலை பொறுப்பேற்று நடத்திய உப அதிபர் திருமதி. ச. யோகேஸ் வரன் அவர்கள் 12-06-1998 ஆண்டு பரிசளிப்புவிழா அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார். ஆயினும் அவற்றில் இடம் பெறத் தவறிய ஒரு சில முக்கிய குறிப்புக்களை மட்டும் குறிப்பிட்டு அதன்பின் இவ்விழாவிற்கான அறிக்கையை தொடருவது பொருத்தமெனக் கருதுகிறேன். 1995ம் ஆண்டு மே மாதம் இறுதியில் எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னோக்கிப் பாய்தல் யுத்த நடவடிக்கையால் மெமோறியல் சமூகம் இரண்டு தடவைகள் உள்ளூ ருக்குள் இடம்பெயர வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இப்பதற்ற காலங் களில் பா.அ.வி. சங்கம் பாடசாலையின் பல அபிவிருத்திப் பணிகளைப் பல இலட்சம் ரூபாவில் செயல்படுத்திக் கொண்டிருந்தது. விசேடமாக இரு நூறு மாணவர்களுக்கான 80 சோடி நீள மேசைகளும் வாங்குகளும் 120 000/- ரூபா செலவிலும் தற்காலிக கொட்டகைகள் இரண்டும் தலா (100 நீளமா னவை - அரை நிரந்தர கட்டிடம் கன்னார் இடப்பட்ட கூரையாஜ் மாற்றும் பணி 85 000/- ரூபா செலவிலும் செய்து முடிக்கும் தறுவாயில் 30-10-1995ல் ஒருவரை ஒருவர் சந்திக்காமலே தென்மராட்சிக்கு இரவோடு இரவாக புலம் பெயர்ந்து பல இழப்புக்களையும் சந்தித்த மெமோறியல் சமூகத்துக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் 1996ம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ் கல்வி வலயம் 2 இன் ஆலோசனைக்கேற்ப யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தி யாலயத்தில் எமது பாடசாலையை இயக்கினோம். 1996ம் வருடம் ஏப்ரல் 19ம் திகதி வரை அங்கு பாடசாலை நடத்தப்பட்டது. எமக்கு இடம் தந்த மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயச் சமூகத்துக்கு எமது மனமார்ந்த நன்றிகள் அன்றைய தினம் அங்கிருந்தும் இடம் பெயர வேண்டி ஏற்பட்டது. இடம்பெயர்ந்த மெமோறியல் சமூகத்தோடு அதிபராகிய நானும் வன்னிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெயர்ந்தேன். தென்மராட்சியில் இருந்த ஏனையோர் மீண்டும் வலிகாமம் வந்து மீளக் குடியமர்ந்தனர்.

1996ம் வருடம் யூன் மாதம் பாடசாலை மிகக் குறைந்த மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் மீளவும் இயங்க ஆரம்பித்தது. உப அதிபராகக் கடமையாற்றிய திருமதி ச. யோகேஸ்வரன் அவர்கள் பலவித சிரமங்கள் மத்தியிலும் பாடசாலையை பொறுப்பேற்று திறம்பட நடாத்தினார். இணை உப அதிபராக விருந்த திரு. சி. சண்முகநாதன் அவருக்கு துணையாக செயற்பட்டார். இவர்களது முயற்சி பாராட்டுக்குரியது. இடம்பெயர்ந்த நான் கிளிநொச்சி மாவட்ட சிவபாதக் கலையகத்திலும் 1996 ஆகஸ்டின் பின் முல்லை மாவட்ட மு/யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் தற்காலிக அதிபராக இணைக்கப்பட்டு 09-06-1998 வரை கடமையாற்றி மீண்டும் யாழ்ப்பாணம் வந்து 18-06-1998ல் மெமோறியல் அன்னையைப் பொறுப்பேற்று நடாத்தினேன். 01-06-1999 தொடக்கம், எதிர்பாராத வகையில் வலிகாமம் கல்வி வலயத்துடன் இணைக்கப்பட்டேன். பல மாணவர்கள் பெற்றோர்கள், கல்விமான்கள், ஆகியோரது வேண்டுதலுக்கேற்ப பல நல்ல உள்ளங்களின் ஆசியோடு மீண்டும் 17-10-2000ம் திகதி தொடக்கம் மொமோறியல் அதிபராகக் கடமையேற்றேன். இவை வரலாற்றுக் குறிப்பாக வேண்டும் என்பதே என் நோக்கமாகும்.

## வரலாறு

1836ல் மிஷனரிமாரின் இறையாசியோடு மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையின் தென்கிழக்கு மூலையில் 7 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட மெமோறியலின் வரலாறு, 1946 ஜீன் 12ம் திகதி தற்போதைய வளாகத்துக்கு அதிபர் 'அழகர்' ஐயாவினால் கொண்டு வரப்பட்டமையுட்பட இன்றைய நிலை வரையும் நீடித்துச் செல்கிறது. விபரமான வரலாற்றுக் குறிப்புகள் மெமோறியல் மலர் நான்கிலும் ஐந்திலும் வெளியிடப்பட்டிருப்பதால் விரிவஞ்சி அதனைத் தவிர்க்கிறேன்.

165 ஆண்டுகள் நிறைவு ஒரு பெரிய சாதனைதான். இச்சாதனைகளை ஈட்ட மெமோறியல் அன்னை சந்தித்து வரும் சோதனைகள் எண்ணிலடங்கா. இன்று தரம் 1 தொடக்கம் 13 வரை ஆண், பெண் என இரு பாலாருமாக 1389 மாணவர்கள் கற்கிறார்கள். தரம் 1 சி பாடசாலை ஆயினும் காலத்திற் கேற்ப பல மாற்றங்களை உள்வாங்க மெமோறியலாள் விரும்புகிறாள். பல பெற்றோர் பழைய மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் பெரு விருப்புக் கேற்ப யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை எனும் பெயரை யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி எனப் பெயர் மாற்றஞ் செய்வது இன்றியமையாததாகும். அதுபோல விஞ்ஞான, கணித உயர்தர பிரிவினை ஆரம்பித்து எமது மாணவர் தொடர்ந்து இங்கேயே கலை, வர்த்தக, விஞ்ஞான, கணிதப் பாடத்துறைகளைக் கற்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டியதவசிய மாகிறது. இன்று இங்கு விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் மேலதிக கல்விப் பணிப்பாளர் அவர்களும் இவ்விரண்டு தேவைகளையும் நிறைவேற்றித்தர ஆவன செய்து தர வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கம்

இன்றைய காலகட்டத்தில் சர்வதேசம் முழுவதும் கைநழுவிப் போய்க் கொண்டிருப்பது மனித ஒழுக்கம் என்பது யாவருக்கும் கவலை தருகிறது சமுதாய மேம்பாட்டின் மூல வேரான ஒழுக்கக் கல்வியை மேம்படுத்தும் சமுதாயத்தில் ஒழுக்கத்தை நிலை நாட்டவும் கல்விச் சாலைகளினதும் பெற்றோர், பெரியோர்களதும் தலையாய கடமை ஆகும்.

இந்த அடிப்படையில் ஒழுக்கக் கல்வியை மேம்படுத்துவதிலும் இன்னமும் இருப்புக் குலையாத தனக்கேயுரிய பாரம்பரியங்களோடு அன்று தொட்டு இன்றுவரை மாணவர்களிடையே பலரும் போற்றத்தக்க வகையில் மெமோறிய லன்னை ஒழுக்கத்தை நிலைநாட்டி வருவதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இக்காரியத்தில் காலத்துக்குக் காலம் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், ஒழுக்காற்றுத் துறைக்கு பொறுப்பான ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள் அனைவரையும் நன்றியோடு பாராட்டுகின்றோம். 1994 இன் பின் ஒழுக்காற்றுத் துறையில் மிகப் பெரிய அளவில் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்ட ஆசிரியர்கள் திரு. ச. விமல்ராஜன், திருமதி. ப. முருகதாஸ், திருமதி. வி.ஜே.பை. மூர்த்தி, திரு. சி. சிவராஜன், திரு. சொ. ஜெயவீரசிங்கம், செல்வி சி. சிற்றம்பலம் போன்றோர் ஆற்றிய பணிகள் இடர்கள் மத்தியிலும் மகத்தா னவை சிரேஷ்ட மாணவத் தலைவர்களும் பாராட்டுக்கு உரியவர்கள் மேலும் மெமோறியலில் ஒழுக்கம் தொடர்ந்தும் சிறப்பாக பேணப்படும்.

## பாடசாலையின் வளமும் வளர்ச்சியும்

1994 இன் பின் பாடசாலை நெருக்கடியான காலங்களிலும் தனது பணியை தளரவிடவில்லை. ஆசிரியர் பற்றாக்குறை கட்டடத் தளபாட பற்றாக்குறை, கற்றல் கற்பித்தல் உபகரண பற்றாக்குறை ஆகியவற்றினூடாக மாணவர் களுக்குச் சிறப்பான அளவில் பணியாற்றி வந்துள்ளது. வருடந்தோறும் பகிரங்க பரீட்சையின் முடிவுகள் பெரும் வளர்ச்சியை காட்டி நின்றுள்ளன. வருடா வருடம் மாணவர் தொகை அதிகரித்து இன்று 1178 இந்து மாணவர் களையும் 211 கிறிஸ்தவ மாணவர்களையும் சேர்த்து மொத்தம் 1389 மாணவர் களுடன் இயங்குகிறது. குடா நாடு முழுவதும் பாடசாலை கட்டட வளங்கள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படும் இவ்வேளையில் எமது பாடசாலை நூற்றாண்டுப் பழமை வாய்ந்த தூர்ந்து போன பாவனைக்கு உதவாது எனத் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட கட்டடங்களில் மழையில் நனைந்தும் வெய்யிலில் காய்ந்தும் மர நிழல்களிலும் புழுதியிலும் எம் மாணவர்கள் சொல்லொனாத் துயருடன் கல்வி பெறுவது கல்வி ஆவலர்களின் இதயத்தை தொட்டுச் செல்வதுடன் எமது பாடசாலை வளர்ச்சியின் ஒரு தடைக்கல்லாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. இன்றுள்ள மாணவத் தொகைக்கு ஏற்ப தேவையான ஆசிரியர் தொகை 49 ஆயினும் இன்று தென் மராட்சியில் இருந்து வந்து இணைக்கப்பட்ட 4 ஆசிரியர்களுடன் சேர்த்து மொத்தம் 39 பேர் மிகப் பெரிய ஆசிரியர் வளகுறைவோடு தினமும் கல்விச் செயற்பாடு சிரமங்கள் மத்தியிலும் முன்னெடுக்கப்படுகின்றது. ஆரம்பக் கல்வி, ஆங்கிலம், கிறிஸ்தவம், உடற்கல்வி, சித்திரம், நடனம் ஆகிய துறைகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான ஆசிரியர் குறைவு நீண்ட காலமாக பற்றாக்குறையாக உள்ளது. இந் நிலை எம் கல்வித் திணைக்களம் விரைவில் நிவர்த்தி செய்யும் என நம்புகிறோம்.

## பரீட்சைப் பெறுபேறுகள் கல்விச் சாதனைகள்

1998ம் வருடம் க.பொ.த (சா/த) பரீட்சையில் 85% மாணவர்கள் சிறந்த பெறு பேறுகள் பெற்றனர். அவர்களுள் செல்வன் யோகேஸ்வரன் திவாகர் 8 பாடங் களும் D சித்திகளும் ஆங்கில இலக்கியத்தில் C சித்தியும் பெற்று மெமோறி யல் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். இவர் கலை நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என பல்வேறு போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களிலும் பல தங்கப் பதக்கங்கள் பெற்றுச் சாதனை படைத்து மெமோறியல் தாய்க்கும் தனக்கும் பெரும் புகழ் தேடிய வர். இதே ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 80% மாணவர்கள் சித்தியடைந்தமையும் சு. துரைரத்தினம், எஸ். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் முறையே யாழ்ப்பாண, சப்பிரமுக பல்கலைக்கழகங்களுக்கு தெரி வானமையும் அதேபோல் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 4 மாணவர்கள் சித்தியடைந்தமையும் மகிழ்ச்சி தருகின்றது.

1999ல் க.பொ.த (உ/த) பரீட்சையில் மாவட்ட நிலையில் 11வது இடத்தில் ந. குமுதா, யாழ் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானமையும் 85% மாணவர்கள் 180 புள்ளிகளுக்கு மேல் பெற்றமையும் சிறப்பம்சமாகும். இதே ஆண்டில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சின்னத்துரை சுதாகர் 8D சித்திகள் பெற்றமை யும் 95% மாணவர்கள் 6 பாடங்களில் சித்தியடைந்தமையும் 60% மான மாணவர்கள் உயர்தர வகுப்பு கற்பதற்கு தகுதி பெற்றமையும், 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 2 மாணவர்கள் சித்தியடைந்தமையும், 2000ம் வருட க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகள் மிகச் சிறந்தவையாக அமைந்ததோடு காலம் காலமாக இருந்து வந்த கணித, விஞ்ஞான பாடங்களின் பெறுபேற்று வீழ்ச்சியை உயர்த்தி 60% மான மாணவர்கள் கணித விஞ்ஞான பாடங்களில் சிறப்பான சித்தியை ஈட்டி தந்தமை மகிழ்ச்சி தருகின்றது. கற்பித்த ஆசிரியர்களுக்கு எனது நன்றிகள்.

2000ம் ஆண்டு க.பொ.த (உ/த) கலைப் பிரிவில் முடிவுகள் மேலும் எமது பாடசாலை வளர்ச்சியை கோடிட்டுக் காட்டின. செலவன் குணம் சசிக்குமார் எனும் மாணவன் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய 3 பாடங்களிலும் 'A' சித்தி பெற்று யாழ் மாவட்டத்தில் முதன்மை மாணவனாக திகழ்ந்தமையும், செல்வன் துரைராஜா சற்குணராஜா யாழ் மாவட்டத்தில் 11வது நிலையில் தெரிவானமையும் அதே பரீட்சைக்கு தோற்றிய 32 மாணவர்களுள் 31 பேர் 180 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெற்றமையும், இவர்களுள் 5 பேர் பல்கலைக்கழக புகுமுக வெட்டுப் புள்ளியைப் பெற்றமையும் மெமோறியலின் உயர் கல்வி வளர்ச்சியைக் காட்டுகிறது. இதே வருடம் வர்த்தகப் பிரிவில் செல்வி கிரிஜா பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார். க.பொ.த (சா/த) பரீட்சையில் செல்வன் ஜெயச்சந்திர பைரவமூர்த்தி பரணிதர் சர்மா 7D களைப் பெற்றும், தோற்றிய மாணவர்களுள் 59 பேர் 6 பாடங்களுக்கு மேல் சித்தியைப் பெற்றும், இவர்களுள் 20 பேர் கணித, விஞ்ஞான உயர் வகுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்கும் 31 பேர் கலை, வர்த்தக வகுப்பிற்கும் தகுதி பெற்றிருப்பது எமது கல்வி வளர்ச்சியில் ஓர் மைல் கல்லாகும். இதே ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 6 மாணவர்கள் சித்தியடைந்தமையும் செல்வன் சர்வானந்தன் துசந்தன் 175 புள்ளிகளைப் பெற்று சிறப்பாகச் சித்தியடைந் தமையும் குறிப்பிடத்தக்கது.

1998, 1999, 2000ம் ஆண்டுகளில் மேற்கூறிய பரீட்சைப் பெறுபேறுகளுக்கு காரண கர்த்தாவாக இருந்த ஆசிரியர்களுக்கும் அந்தந்தக் காலங்களில் பாடசாலையை வழிநடத்திய அதிபர்களுக்கும் நன்றிகள்.

## மன்றங்களும் செயற்பாடுகளும்

மாணவர் திறனை வளப்படுத்துவதற்காக பாடசாலைக் கூட்டுறவு வீநியோகச் சங்கம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம், முத்தமிழ் மன்றம், விஞ்ஞான கணித மன்றம், நுண்கலை மன்றம், நாடக மன்றம், மனைப் பொருளியல் மன்றம், வர்த்தக மன்றம், உயர்தர மாணவர் மன்றம், சேவைக் கழகம் (Interact Club), குழந்தை இலக்கிய மன்றம், விவசாய மன்றம் இவற்றினுடைய செயற்பாடுகள் தனித்தனி அறிக்கைகளாக இம்மலரில் இடம் பெறுகின்றன.

## விளையாட்டுக்கள்

விளையாட்டுச் செயற்பாடுகளில் எமது பாடசாலை நீண்ட காலமாகத் தனக் கென ஒரு இடத்தை கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. உடற்பயிற்சி, உதைபந்து, கரப்பந்து, வலைப்பந்து போன்ற போட்டிகளிலும் மெய்வல்லுநர் நிகழ்வுகளிலும், 1994ல் தொடங்கிய கோட்ட, வலய, மாவட்ட நிலைகளிலும் பல முதன்மையிடங்களைப் பெற்றுச் சாதனை புரிந்தது யாவரும் அறிவர். 1998ல் மாகாண மட்டத்தில் கு. நிறஞ்சன் குண்டெறிதல் நிகழ்வில் பங்கு பற்றி தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவானமையும், ப. பத்மகுமார் தேசிய மட்டத்தில் சுகத்தாஸ் ஸ்ரேடியத்தில் 8000 மீற்றர் தெரிவு ஓட்டப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டமையும் மகிழ்ச்சி தருகிறது. பொருத்தமான விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஒருவர் கடந்த 7 ஆண்டுகளாக எமக்கு நியமிக்கப்படாத போதும் கல்லூரியின் ஆசிரியர்களான, செல்வி சிவயோகவதன் சிற்றம்பலம், திரு. க. ரட்ணேஸ்வரன் ஆகியோர் விளையாட்டுத்துறைகளைப் பொறுப்பேற்று அரும்பணியாற்றினர். 1999, 2000ம் வருடங்களில் இவர்களுடன் இணைந்து ஆசிரியர் திரு. இரா. வாசுதேவன், தொண்டராசிரியர்கள் திரு. கே. சாம்சன், செல்வி. ஆ. சறோஜினி ஆகியோர் இத்துறையில் இன்றுவரை சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். 2000ம் வருடம் 17 வயது ஆண்கள் பிரிவு கரப்பந்து போட்டியில் கோட்ட மட்ட சம்பியன் விருதை எமது அணி பெற்றுக் கொண்டது. வலைப்பந்துப் போட்டியிலும் வலயமட்டப் போட்டியில் பங்குபற்றும் தகைமை பெற்றது பாராட்டுக்குரியது.

## பொதுவான செயற்பாடுகளும் உணர்வுகளும்

மெமோறியல் மலர் 6-1996.06.13, 2000.12.31ல் வரையான முக்கிய வரலாற்று குறிப்புக்களுடன் வெளிவருகின்றது. ஆயினும் 2001.06.12 வரையான உணர்வு களையும் ஒரு சில இடங்களில் குறித்து நிற்கின்றது. நிர்வாகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்த வரையில் 1996.04.19 வரை என்னோடு பக்கபலமாக இருந்து பணி யாற்றியவர் உபஅதிபர் திரு. திருமதி ச. யோகேஸ்வரன் அவர்கள். அதே போல் இணை உப அதிபர் திரு. சி. சண்முகநாதன் கனிஷ்ட பிரிவு அதிபர் திரு. க. சிவநேசன், பகுதித் தலைவர்களான திரு. பா. சபாரத்தினம், திருமதி. ச. இரத்தினசிங்கம், திரு. இ. இராஜகுலசூரியர் ஆகியோரின் பங்களிப்பு மகத்தானது. இதன் பின்னரான குறிப்புக்கள் ஏற்கனவே வெளி யிடப்பட்டுள்ளமையால் தவிர்க்கப்படுகின்றது. மீண்டும் 2000.10.18ம் திகதி தொடக்கம் அதிபராக நான் பொறுப்பேற்றேன். உபஅதிபராக திரு. சி. சண்முகநாதனும் இணை உப அதிபராக திருமதி யோ. கமலசிங்கமும் சிரேஷ்ட பகுதித் தலைவராக திரு. சொ. ஜெயவீர சிங்கமும், கனிஷ்ட பிரிவு அதிபராக திரு. க. சிவநேசனும் இன்று வரை கடமையாற்றி வருகின்றார்கள் அலுவலக முகாமைத்துவ உதவியாளராக திரு. வே. சிவானந்தநாதன் அவர்கள் கடமையாற்றுகிறார்கள்.

அலுவலகத்தில் ஓர் நிரந்தர எழுதுவினைஞர் கடமையாற்ற வேண்டிய இடத் தில் அமைய கடமை எழுதுனராக திருமதி. யேசு மரியதாஸன் கடமையாற்று கிறார். இவரது நியமனம் நிரந்தரமாக்கப்பட வேண்டும். தொண்டு அடிப் படையில் தட்டெழுத்தாளர் பணியை செல்வி சந்திரவதனி கதிர்காமு ஆற்றி வருகிறார். 1995ம் ஆண்டு வரை அலுவலகப் பணியாளராக கடமையாற்றிய திரு. ந. கணேசமூர்த்தி, ஆசிரியர் நியமனம் பெற்றுச் சென்ற பின் இன்று வரை பதில் நியமனம் செய்யப்படவில்லை. அலுவலகப் பணிகள் முடங்கு கின்றன. எனவே இவ்வெற்றிடம் அவசியம் நிரப்பப்பட வேண்டியுள்ளது. விஞ்ஞான கூட உதவியாளராக திரு. க. ஜெகதீஸ்வரனும் இரவு நேரக் காவ லாளியாக திரு. சி. மயில்வாகனமும் கடமையாற்றுகிறார். பதில் கடமைபுரியும் நிவாரணக் காவலாளி வெற்றிடம் இன்னமும் நிரப்பப்படாமல் இருக்கின்றது. நிவாரண சுகாதாரத் தொழிலாளியாக திரு. பூ. காளிதாசன் கடமையாற்று கின்றார். நூலகர் ஆளனி வெற்றிடம் நிரப்பப்படாததால் பழைய மாணவர் சுப்பிரமணியம் முகுந்தன் தொண்டு அடிப்படையில் நூலகராக பணியாற்றுகிறார்.

## சமய சமூக நிறுவனங்களோடு இணைந்த செயற்பாடுகள்

1998ம் வருடம் சைவ பரிபாலன சபை நடத்திய ஆறுமுகநாவலர் பேச்சுப் போட்டியில் செல்வி அர்ச்சனா செல்வநேசன் முதலாம் இடம் பெற்று தங்கப் பதக்கம் பெற்றார். இ. தனுஜா சமயப் பரீட்சையில் மூன்றாம் இடம் பெற்று வெண்கலப் பதக்கம் பெற்றார்.

2000ம் வருடம் யாழ் மாநகரசபை நடத்திய பண்ணிசைப் போட்டியில் செல்வி. ஜெ. வைஷ்ணவி முதலிடமும் திருநெறிக் கலாமன்றம் நடத்திய பண்ணிசைப் போட்டியில் 2ம் இடமும் வகித்து முறையே தங்கப் பதக்கமும், வெள்ளிப் பதக்கமும் பெற்றார். பு. நாகரஞ்சன் இதே போட்டியில் மூன்றாம் இடம் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

2000ம் வருடம் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்திய சைவ சமய அறிவுப் பரீட்சையில் முதலாம் இடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. மனோகரன் சிறுவர் உரிமைகள் தின ஓவியப் போட்டியில் முதலாமிடம் பெற்று 2000 ரொக்கப் பரிசையும் மானிப்பாய்க் கோவிற்பற்று லயன்ஸ் கழக சித்திரப் போட்டியில் 2ம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றார். இவர்கட்கு எமது வாழ்த்துக்கள்.

## தியாக உணர்வு ஒன்று

எமது முன்னாள் அதிபர்கள் அனைவரும் ஏதோ வகையில் மெமோறியல் அன்னையை அணி செய்தவர்கள் என்ற பெருமைக்குரியவர். இவர்களுள் திரு வேலுப்பிள்ளை சுந்தரதாஸ் (கனடா) இன்று வரைக்கும் மெமோறியல் வளர்ச்சியையே தன் மூச்சாகக் கொண்டு வாழ்பவர். அடிக்கடி, கடிதமூலம் எம்மை உற்சாகப்படுத்துபவர் இவர்களது பணியுள்ளம் எம்மால் மறக்கப்பட முடியாதவை. அவர் நீடித்த ஆயுள் பெற்று வாழ வேண்டுகிறோம்.

1996ம் ஆண்டு வரை அலுவலகப் பணிக்கு உதவிய திரு. இராஜரட்ணம் சேயன் அவர்கட்கு நன்றிகள். அதன் பின்பு அலுவலகப் பணியாற்றிய பழைய மாணவர் கந்தையா பாலமுருகேசனுக்கும், தொண்டுள்ளத்தோடு கணனி இயக்குனராக கடமையாற்றும் திரு எற்றியன் நோயல் அவர்களுக்கும் நன்றிகள். இவ்வறிக்கை சுட்டி நிற்கும் காலப் பகுதியில் எமது பாடசாலையில் இணைந்த சகல ஆசிரியர்களையும் வரவேற்றுக் கொள்வதுடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற, இளைப்பாறிய ஆசிரியர்களையும் நன்றி கூறி வாழ்த்துகிறேன். விசேடமாக இளைப்பாறிய ஆசிரியர்கள் திருவாளர் பா. சபாரட்ணம், இ. இராஜகுலசூரியர், திருமதி. ச. இரட்ணசிங்கம் ஆகியோரை நன்றியுடன் வாழ்த்துகின்றேன். பதவி உயர்வு பெற்று கல்வியற் கல்லூரிக்கு சென்ற ஆசிரியை சுகந்தி சுப்பிரமணியம், இக் கல்லூரியின் எனது மாணவனும் சக ஆசிரியருமாகிய கதிர்காமு இரட்ணேஸ்வரன் ஆகியோருக்கும் எனது வாழ்த்துக்கள் இல் வாழ்க்கையில் இணைந்து கொண்ட ஆசிரியர்களையும் பெரு வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

எமது முன்னாள் அதிபர் அமரர் டபிள்யூ ஜீ. அன்னப்பா அவர்களது மகன் திரு. அ. ஜெயராஜ் ஆசிரியர் அவர்களின் அனுசரனையுடன் 1998–11–03ல் எமது பாடசாலை நூலகம் புனரமைக்கப்பட்டு "ஞானசிகாமணி அன்னப்பா ஞாபகார்த்த அறிவாலயமாக" இயங்கி வருகிறது. ஆசிரியர் வளம் குறைந்த காலங்களில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து கல்விப் பணியாற்றிய சகல தொண்டராசிரியர்களுக்கும் எனது நன்றிகள்.

மெமோறியல் ஆசான்கள் வல்லவர்கள், நல்லவர்கள். கருத்து முரண்பாடுகளைப் பேசித்தீர்த்து அன்னியோன்னியமாக பணியாற்றி வாழ்பவர்கள். இதனால் கடமையாற்றிய அதிபர்களுக்கு ஓர் அசத்தியமான மனத்துணிவு. மெமோறியல் அன்னைக்கு ஓர் பெருமை. இந்நிலை நீடிக்க வாழ்த்துகிறேன். பாடசாலை வளர்ச்சியில் அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் மிகத் திருப்தியாக பங்களிப்புச் செய்கின்றன. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 1 லட்சம் ரூபாவும், பழைய மாணவர் சங்கம் 50,000/- ரூபாவையும் மொமோறியல் நாடக மன்றம் 50,000/- ரூபாவையும் வழங்கி எமது பாடசாலையின் வடகிழக்குப் புறமாக, இராமேஸ்வரம் ஒழுங்கையில் அமைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 பரப்பு 13.6 குழி விஸ்திரமான காணியை கொள்வனவு செய்து (பதிவு இலக்கம் 03592 – 26.04.2000) பாடசாலைக்கு வழங்கியுள்ளது. இவர்கட்கு எனது நன்றிகள். போரூட் (FORUT), பட்டினிக்கு எதிரான அமைப்பு (ACTION FAIM), சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்கள் அவ்வப்போது குடிநீர், மலசலகூடத் தேவைகளையும் பராமரிப்பு சேவைகளையும் வழங்கி உதவின. அவர்களுக்கு எமது நன்றிகள்.

பாடசாலைக்கு மணி ஒன்று இல்லாத குறையை 20,000/- ரூபா செலவில் பழைய மாணவன், அமரர் ஐயாத்துரை ஏகாம்பரநாதன் ஞாபகார்த்தமாக அன்பளிப்புச் செய்த பெற்றார் திரு. த. சிவரத்தினம் குடும்பத்தினருக்கு எனது நன்றிகள்.

மெமோறியலின் 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின் தொடர்ந்தும் தமது இடைநிலைக் கல்வியை இப்பாடசாலையில் தொடரும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடைத்திட்டம் ஒன்றை அளவெட்டியைச் சேர்ந்த திரு. செல்லத்துரை செல்வநேசன் என்பவரும் அவரது சகோதரி திருமதி செல்வரதி கணேசன் அவர்களும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் அன்பளிப்புச் செய்துள்ளார்கள். அதே பிரிவுக்கான புலமைப் பரிசு ஒன்றை இராஜேந்திரா ஞாபகார்த்த புலமைப் பரிசு நிதியமாக சட்டத்தரணி அமரர் சிவா இராஜேந்திரம் அவர்களது மகன் இ. வசந்தகுமார் அவர்கள் 10,000/- ரூபாவை அன்பளிப்புச் செய்தார்கள். இவர்களுக்கு எமது நன்றிகள்.

இவ்வாண்டு அறிக்கையை பலவித மனச் சுமையோடு எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் இரண்டு ஆறுதலளிக்கும் நற்செய்திகள் கிடைத்தன. ஒன்று வடக்கு கிழக்கு புனர்வாழ்வு இந்து சமய அபிவிருத்தி தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சரின் ஆசியுரை, அதில் எமது பாடசாலையின் தேவைகளை நிறைவேற்ற சகல வளங்களும் வழங்கப்படும் என்ற குறிப்பு பெரும் மகிழ்வை தந்தது. மாண்புமிகு அமைச்சர் நீண்ட காலமாக மெமோறியல் செயல்பாடுகளை அறிந்தவர். மெமோறியலின் வளர்ச்சிக்கு பல சந்தர்ப்பங்களில் உதவியவர் அவர்களுக்கு எமது நன்றிகள்.

இரண்டாவது கொழும்பின் பிரபல தொழில் அதிபரும் மொமோறியலின் முன்னாள் பிரபல ஆசிரியருமான திரு. பி. பி. நாதன் அவர்களது பேரனும் சுதுமலையைச் சேர்ந்தவருமான திரு காராளசிங்கம் இந்திரன் தனது தந்தையார் பொன்னம்பலம் காராளசிங்கம் ஞாபகார்த்தமாக க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிறப்பான சித்தி பெறும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் நிதியம் ஒன்றுக்காகவும் பேரனார் திரு. பி. பி. நாதன் ஞாபகார்த்தமாக க.பொ.த சாதரண தரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெறும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் நிதியத்துக்காகவும் ரூபா 75,000 ரூபாவும் 30.05.2001ல் அன்பளிப்புச் செய்துள்ளார். அவர்கள் காலமறிந்து தேவையறிந்து செய்துள்ள இக்கொடை மெமொறியலில் பாட்டனாரின் பெயரோடு பின்னிப் பிணைந்து வரலாற்றில் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. இவர்களது குடும்பம் சீரும் சிறப்பும் பெற்று வாழ எல்லாம் வல்ல மருதடி விநாயகரை பிரார்த்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஒகஸ்ட் க.பொ.த உயர்தரப் பீட்சையில் மாவட்ட மட்டத்தின் முறையே முதலாம், பதினொராம் இடத்தைப் பெற்ற நவாலியைச் சேர்ந்த செல்வன் குணம் சசிக்குமார், உடுவில் தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த செல்வன் துரை ராஜா சற்குணராஜா ஆகிய இருவரும் எமது பாடசாலை பின் நடேசர் ஆலயத்துக்கு ஒவ்வொன்றும் 5 அடி உயரமும் 90 கிலோ எடையும் 7,000 ரூபா மதிப்புமடையதுமான இரண்டு பித்தளைக் குத்துவிளக்குகளை உபயமாக வழங்கியுள்ளார்கள். எம் பெருமான் அருள் புரிவாராக.

2000 ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மிகத் திறமையான பெறுபேறுகளைப் பெற்ற செல்வன் ஜெ. பரணிதரசர்மா ரூபா 8,000 பெறுமதி யான கோவை அலுமாரி ஒன்றையும் நடேசர் ஆலயத்துக்கு 1,600 ரூபாவுக்கு பஞ்ச மணி ஒன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளார். இவரது வளமான வாழ்வுக்கு மெமோறியல் அன்னை வாழ்த்துகிறாள்.

பாடசாலை வளங்களைப் பேணும் வகையில் எல்லா மாணவர்களும் ஏதோ ஒரு வகையில் தம்மை அர்ப்பணித்து செயற்படுவது பெருமை தருகிறது. விசேடமாக சி. அகிலன் சு. முகுந்தன் சி. மணிவண்ணன் சு. ஈஸ்வரக் கண்ணன் ஆகியோரது பணி பாரட்டுக்குரியது. அதே போன்று பழைய மாணர்கள் கு.யோ. பற்றிக், ந. மதனரூபன், க. கெங்காதரன், ச.சசோபன், த. ஆனந்தரூபன், க. விஸ்வநாதன், செ. தர்மேந்திரா, சு. துரைரத்தினம், சி. சுபாகரன், செ. றெக்ஸ் அருள்நேசன், ஜெ. சுரேஸ்குமார், மா. கலைச் செல்வன், தே. ரூபன் சிரோஸ்குமார், செ.சத்தியரூபன் ஆகியோரது பணி காலத்தால் மறக்க முடியாதது.

பாடசாலை உயிர் நாடியாக விளங்கும் மானிப்பாய் அருள்மனை சிறுவர் இல்லம், ஏலிம் சிறுவர் இல்லம் ஆகியவை எமக்கு வழங்கி வரும் அளப்பரிய உதவிகள் நன்றியுடன் குறிப்பிடத்தக்கவை.

வெள்ளிக்கிழமை தோறும் பாடசாலையில் சமயப் பிரார்த்தனைகள் எமமை வளம்படுத்துவன. நடேசர் ஆலயத்தில் நடைபெறும் பூசைகளை முன்னின்று நடத்திய சிவ.சிறி, மோகன் குருக்கள், எமது மாணவன் செல்வன் பரணிதர சர்மா அவர்தம் தந்தையார் பிரம்ம ஸ்ரீ ஜெயச்சந்திர பைரவமூர்த்தி பாட்டனார் மாணவ ஆதீனம் சிவசிறி சுந்தரமூர்த்தி குருக்கள் எமது பழைய மாணவன் இரா. வாசுதேவன் ஆகியோருக்கும் இன்றைய சிவாச்சாரியர் தியாகராஜ குருக்கள் ஆகியோருக்கும் விசேடமாக எம்மை என்றும் ஆசீர்வதிக்கும் மருதடி விநாயகர் தேவஸ்தானக் குரு. சிவசிறி ஜெயக்குமார் குருக்கள் அவர்கட்கும் நன்றிகள்.

கிறிஸ்தவ பிராத்தனையை நடத்த உதவிய அருட்திரு திருமதி. தம்பியப்பா அடிகள், அருள்திரு பீ. வீ. எம் யேசுதாஸ் அடிகள், அருள்திரு என். டி. ஜெபநேசன் அடிகள் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

எம்மையெல்லாம் அரவணைத்து ஆசீர்வதித்து வளர்த்த மூத்த தமிழ் ஆசான் தெய்வீக குரு, அமரர் பண்டிதர். மு. கதிரவேல்பிள்ளை, தென் இந்திய திருச்சபையின் பேராயர் அமரர் பேரருட்திரு திரு. டி. ஜே. அம்பலவாணர், மெமோறியலின் மூத்த பழைய மாணவன் சட்டத்தரணி அமரர் சிவா ராஜேந்திரன், மருதனார்மடம் சேவாச்சிரம குரு அமரர் அருட்திரு சாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் மொமோறியல் குடும்பத்தைச் சார்ந்த தொழில் அதிபர் அமரர் அ. அதிசயரட்ணம் பேஜ், மெமோறியல் வளர்ச்சியில் ஆர்வத்தோடு பணி யாற்றிய கல்விப் பணிப்பாளர் அமரர் சு. இரத்தினராசா ஆகியோர் அமரத்துவம் அடைந்த செய்தி தாங்கமுடியாத துயரைத் தருகிறது. இவர்களது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

பல அம்சங்களைச் சுட்டி நிற்கும் இவ்விழாவின் வெற்றிக்கு அயராது உழைத்தவர்கள் பலர். அவர்களை நன்றியுடன் பாராட்டுகிறோம். 1994 இன் பின் இன்று வெளியிடப்படும் அறிக்கை முடிந்தவரை முக்கியமான தகவல் களை உள்ளடக்கியதாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மிகக் கவனமாக செயற்பட்டோம்.

வருடாந்த அறிக்கை பல வருடங்களின் அறிக்கையாக மாறியதால், நீண்டு போவதை உணருகிறேன். முக்கியமான தகவல்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டுமென்பதால் முயற்சித்தோம்.

'நிறைவாழ்வு' மகுட வாசகம் தாங்கிய எமது பாடசாலைச் சின்னம் வட்ட வடிவானது. எமக்கென்று ஒரு நோக்கத்தோடு நாம் செயற்பட வேண்டும் என்பதைக் குறிக்கும். நடுவிலே தாமரைமலர் தீபம் தாங்கிக் காட்சி தருகின்றது. ஒளி கண்டு மலரும் தாமரை என்பது போல அறிவொளி கொண்டு அகம் மலர வாழ்வோம் என்ற தத்துவம் அது. தீபத்தின் மேலே மகான் யேசு, மக்களுடைய துன்பத்தைச் சுமந்த அடையாளச் சிலுவை. எத்தகைய துன்பத்துள்ளும் கல்வி அறிவு வேண்டும் என்பதனைக் குறிக்கும். அதே வேளை இறை மகன் எமக்கு வாழ்வில் அகவொளி தந்து நிறைவாழ்வு அருள்வானாக என்பது மறு பொருள்.

இளநீல வர்ணம் இசைந்த பொன்மய மஞ்சள் (Gold and Sky blue) சேர்ந்து அசைந்தாடும் பாடசாலைக் கொடி, நீலவானில் அடிப்பரப்பில் பொன் மயமான ஒளிக்கதிர் பரப்ப காலம் பிரகாசம் ஆவது போல் இயல்பாகவே துல்லியமாக இருக்கும் மனதில் அறிவொளி பரவும் என்பதைக் குறிக்கிறது.

மேற்கூறிய இலச்சனையும், கொடியும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பெருமையின் அணிகலன்கள்.

'மெமோறியல் மலர் 6' ஆசிரியர், மாணவரது கடின உழைப்பின் பிரசவம். இம்மலர் சிறக்க உழைத்த தலைவர், செயலாளர், மலர்க்குழுவுக்கு நன்றிகள். மலராசிரியர் திரு. சி. சிவராஜன் மொமோறியலுக்குக் கிடைத்த பெரு வளங் களுள் ஒன்று. பாடசாலைக் கருமங்கள் முழுமை பெற உழைக்கும் பெருமை அவரைச் சாரும். அவருக்கு எனது விசேட நன்றிகள். நீண்ட நேரம் தங்க ளோடு அறிக்கையூடாக உரையாடினோம். சகலருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் கூறி விடை பெறுகிறேன். நன்றிகள்.

அ. மு. அருணாசலம்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை மறுப்பும் உழைப்பின் பெருமையும்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STAFF 2001

1. Mr. A. M. Arunasalam - Principal – SLPS-1
2. Mr. S. Sanmuganathan - Trained Maths – Dupty Principal
3. Mr. K. Sivanesan - Trained General – Primary Head
4. Mr. S. Jayaweerasingam - B.Com, Dip in Edu.
5. Mr. S. Rajaratnam - BA
6. Mr. N. Balakrishnan - Trained Social Studies
7. Mr. S. Sivarajan - Dip.in.Agri [Kundasale], Dip. in Agri [ J.C.A.I] Nadaga Kalavidagar, Primary Trained
8. Mr. E. Gnaneswaran - BA, Dip in Edu.
9. Mr. K. Kunaratnam - BA, Dip in Edu.
10. Mr. K. Kanageswaran - Trained Science
11. Mr.K.Somaskanthamoorthy - Trained Science
12. Mr. E.J. Leslie - Trained English
13. Mr. R. Vasuthevan - Trained Maths
14. Mr. T. Sivagnanam - Trained Primary
15. Mrs. Y. Kamalasingam - Trained Com-Co-Deputy Principal
16. Mrs. C. Yogeswaran - BA
17. Mrs. J. Varatharajan - BA, Dip in Edu.
18. Mrs. Y. Sundralingam - BA, Dip in Edu, Trained Home Sc.
19. Mrs. V.J.B. Moorthy - Trained Music
20. Mrs. P. Sabanathan - Trained Home Science
21. Mrs. P. Shanmugarajah - Trained English
22. Mrs. S. Arulvathanan - Trained Primary
23. Mrs. K. Balakrishnan - Trained Primary
24. Mrs. P. Murugathas - Trained Maths
25. Mrs. S. Somanathan - BA, Dip in Edu.
26. Mrs. S. Sathiapalan - B.Com.
27. Mrs. S. Ramesh - B.Sc.
28. Mrs. K. Nithiyananthan - Trained Tamil



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. Mrs. P. Uthayakumar - Trained Primary
30. Mrs. S. Navaneethakrishnan- Teacher Trainee
31. Miss. S .Sittampalam - Trained Maths
32. Miss. R. Pathmanathan - B.Com.
33. Miss. M. Nadarajah - BA
34. Miss. T. Karthigesu - Teacher Trainee
35. Miss. T. Srikanthan - Trained Science
36. Miss. S. Cumarasamy - Teacher Trainee
37. Miss. M. Kathambary - Dip in Music , Music Kalavidagar

## Amalgamated Teacher's of Thenmaradchchy

1. Mr. Mylvaganam - BA, Principal
2. Mrs. J. Gaston Roy - Trained Com.
3. Mrs. R. Indra Rajah - B.Sc, Dip in Edu.
4. Miss. S. Sasikala - B.Sc.
5. Mrs. B. Sivakumaran - B.Sc., Dip.in Edu.

## Part - time English Teacher's

1. Mr. R.Rajakulasooriyar - Trained Gen. , Lond. A/L
2. Miss. S. Selladurai - A/L
3. Miss. V. Tharmasekaram - A/L

## Non- Academic Staff

1. Mr. V. Sivananthanathan - BA, Administative Asst.
2. Mrs. J. Jesumariathasan - Clerk
3. Mr. R. Jagatheswaran - Lab. Asst.
4. Mr. S. Mylvaganam - Watcher
5. Mr. P. Kalithasan - Labourer
6. Mr. Netion Noel - Computer Operator [ Volunteer ]
7. Mr. K. Visuvanathan - School Co-op Sales Manager [ Volunteer ]
8. Miss. C. Kathirkamar - Typist [ Volunteer]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Volunteer Teachers

1. Mr. B. Premaranjith - A/L
2. Mr. K. Neranjan - A/L
3. Mr. R.K. Samsan - A/L
4. Mr. S. Mugunthan - A/L
5. Miss. T. Samanthy - A/L
6. Miss. R.Kanimoly - A/L
7. Miss. P. Vijitha - A/L
8. Miss. S. Shanmugapriya - A/L
9. Miss. R. Ponniah - A/L
10. Miss. R. Satkunam - A/L
11. Miss. B.Navaratnasingam - A/L
12. Miss. A. Sarojini - [Voucational Tr.] P.T

## Staff - 2000

1. Mr. K. Retneswaran - Trained Art.
2. Mr. K. Thayaparan - Trained Primary
3. Mr. T. Rubasingam - Part Time English Teacher [Rtd. Survey Dept.]
4. Mrs. S. Ratnasingam - B.Sc , Dip in Edu., Trained English
5. Mrs. J. J. Fernando - Teacher Trainee
6. Miss. S. Subramaiam - BA (Hons) , Dip in Edu.
7. Miss. A. Jeyasingam - Teacher Trainee
8. Miss. S. Villavarajan - Trained Primary
9. Miss. S. Murugesu - Trained H.Sc.
10. Miss. S. Kandiah - Trained Dance
11. Miss. Bawany Uruththramoorthy - Teacher [Volunteer]

## Non-Acadamic Staff

1. Mr. B. Balamurugan - Clerk [ Volunteer]

## Volunteer Teachers -1999

1. Mrs. K. Arulnathan
2. Miss. Rajani Nadesar
3. Miss. Premaranee Kanapathipillai
4. Miss. S. Poonkulali



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையை வணங்குகிறோம்



பவள விழாக் கண்ட அன்னை துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை சிவநெறி தழைக்க, தர்மம் வளர்க்க அன்பு செழிக்க பல்லாண்டு வாழ்கவென மெமோறியல் கல்லூரிச் சமூகம் வாழ்த்துகிறோம் வணங்குகின்றோம்.

# பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

1. நாடகமும் அரங்கியலும் துறையில் கலாவித்தகர் பட்டம் பெற்ற எமது ஆசிரியர் திரு சிதம்பரப்பிள்ளை சிவராஜன்

2. கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளர்களாகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற எமது ஆசிரியர்கள் செல்வி சுகந்தி சுப்பிரமணியம், திரு. கதிர்காமு இரட்ணேஸ்வரன்

3. பட்டப்பின் கல்வி டிப்புளோமா பெற்ற ஆசிரியர்கள்
   அ) திரு சொ. ஜெயவீரசிங்கம்
   ஆ) திருமதி. ஜெ. வரதராஜன்
   இ) செல்வி. சு. சுப்பிரமணியம்
   ஈ) திருமதி. ய. சுந்தரலிங்கம்
   உ) திருமதி. சி. சோமநாதன்

4. தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற எமது முன்னாள் ஆசிரியர் திரு. G. V. ராதாகிருஷ்ணன் ஆகியோரை மென்மேலும் கல்வியொளி பரப்பி வாழ்கவென வாழ்த்துகிறோம்! வளர்க!!

- மெமோறியல் குடும்பம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியத்துவமே உருவான உபஅதிபர்

1970களில் யா/ மானிப்பாய் மெமோறியலின் நல்லாசிரியராகப் பணியேற்ற திருமதி. பி. மகாதேவா அவர்கள் ஒரு சிறந்த கடவுள் பக்தியுடையவர். க.பொ.த. உயர்தர வகுப்புகளில் புவியியற் பாடத்தையும், சாதாரண வகுப்புகளில் சமூகக்கல்விப் பாடத்தை யும் சிறப்பாக் கற்பித்த நல்லாசாள். இப்பாடசாலையில் நான்கு அதிபர்களுக்குக் கீழ் கடமையாற்றிய இவர் 1983 – 1988 வரை உப அதிபராகவிருந்து பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார். தனது உடல் நிலை காரணமாக சேவை முதிர்ச்சியடைய முன்பே ஓய்வு பெற்றார். எனினும் இவர் காட்டிய அன்பு வழி, மெமோறியலை வழிநடத்துவதற்கு பின்னைய அதிபர்களுக்கு உறுதுணையாக இருந்தது. தற்போது, மாத்தளை நகரில் தன் குடும்பத்துடன் வாழ்ந்து வரும் இவர் நீடு வாழவேண்டுமென மெமோறியலின் நன்றியுள்ள இதயங்கள் எல்லாம் வல்ல யேசுபிரானை மன்றாடுகின்றார்கள்.

# எமது பாடசாலை சேவையில் வெள்ளிவிழாக் கண்ட ஆசிரிய பெருந்தகை

## திருமதி. யோகரத்தினம் கமலசிங்கம்

### SLTS – Class 1

### இணை உப அதிபர்



ஆசிரியத்துவத்தை தன்னுடன் இணைத்துக் கொண்ட கடமையை தெய்வீகமாக நினைக்கின்ற சுமைகளை இலகுவாகக் கணிக்கின்ற ஒரு ஆசிரியை திருமதி. யோ.கமலசிங்கம், எமது பாடசாலையில் 8–9–75 தொடக்கம் இன்றுவரை ஆறு அதிபர்களின் கீழ் தனது சேவையை ஆற்றிக் கொண்டு இருக்கின்றார். 1–6–66 இல் க/நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை தொடங்கிய இவர் வர்த்தக பாட விசேட பயிற்சியை பலாலி ஆசிரிய கலாசாலையில் பெற்றார். அதன்பின்பு நயினாதீவு மகா வித்தியாலயம், யா/பரமேஸ்வராக் கல்லூரி, தின்னவேலி முத்துத்தம்பி வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி போன்றவற்றில் தனது பணியை ஆற்றினார். அமைதியாக அடக்கமான சுபாவம் உள்ள இவர் எல்லா ஆசிரியர்களினது, மாணவர்களினதும் உள்ளங்களை தன்பால் ஈர்த்த ஒரு பண்பாளர் 2002ம் ஆண்டு சித்திரை மாதம் தனது முப்பத்தாறு வருட சேவையை நிறைவு செய்து கொள்ளும் இவ் ஆசிரியரைப் பாடசாலைச் சமூகம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2000ம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் யாழ் மாவட்டத்தில் முதல் இடம் பெற்ற எமது மாணவன்

### - செல்வன் ஞானம் சசிக்குமார் -



தன்னடக்கம், பணிவு, கடமை, கட்டுப்பாடு என்ற அம்சங்களை தனதாக்கிய இம்மாணவன் 2000ம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றமையை கல்லூரிச் சமூகம் பாராட்டுகின்றது. தனது பாடத் தெரிவில் தன்னால் திறமையாகக் கற்றக் கூடிய பாடங்களான நாடகமும் அரங்கியலும், அளவையியல், இந்து நாகரீகம் ஆகிய பாடங்ளை தானே தெரிவு செய்து ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் நன்கு கற்று 3A பெற்றமை குறிப் பிடத்தக்கது. இதனால் கலைப்பிரிவில் மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். கல்வியுடன் மட்டும் நின்றுவிடாமல் நாடகம், பேச்சு, நாடகப் பிரதியாக்கம், விளையாட்டு என்பன இவரது கைதேர்ந்த துறைகளாகும். இவர் தனது கல்விக் காலத்தில் சிறந்த மாணவ தலைவனாக வும் செயற்பட்டுள்ளார். அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் அன்புக்குரிய வனாகச் செயல்பட்டுள்ளார். சிறந்த கல்விமானாகவும், நற்பிரஜையாகவும் மிளிர இறை பிரார்த்தனைகள்.

## பிரதம ஆணையாளர் விருது பெற்ற சாரணன்


### - செல்வன். ஜே. பரணீதர்சர்மா -



க.பொ.த. சாதாரண வகுப்பில் கல்விகற்று 2000ஆம் ஆண்டு சிறந்த பெறுபேற்றை பெற்று பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்துள்ளார் (7D, 3C) சிறந்த சாரணனாக செயல்பட்டு தற்போது விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு சென்றுள்ளார். எதிர்காலத்தில் சிறந்து விளங்க எமது பாராட்டுக்கள்.




1983இல் சுவாமி ஞானப்பிரகாசர் நினைவு தினத்தின் போது பாடசாலையில் வெளி யிடப்பட்ட முதல் நாளுறையைப் பார்க் கின்றோம்.



1998இல் எங்கள் பாடசாலை ஆரம்பிக்கப் பட்ட மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை யின் ஸ்தாபகர் வைத்திய கலாநிதி சாமுவேல் பிளக்கிறீன் அவர்களின் ஞாப கார்த்த முத்திரை வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் ஒரு பதிவு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி, பேராசிரியர் கே. கைலாசபதி அவர்கள் 1981ம் வருடம் எமது கல்லூரிப் பரிசு தினத்தின் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட காட்சியைக் காண்கிறோம். அவர் கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்வு இதுவேயாகும்.

# மணிவிழா கண்ட தமிழ் நெஞ்சமே! வாழ்த்துகிறோம்!!

தமிழ் அழகுக்கு அடிமையான, தமிழ் முருகனுக்கு சண்முகனுக்கு தாசனாகி, குறுமுனி அகத்தியன் வழியில் தமிழ் மணம் பரப்பும் யாழ் பல்கலைக்கழக பட்டப் பின் படிப்புக் கற்கை நெறிகள் பீடாதிபதி, பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களை மெமோறியல் குடும்பம் தமிழ்த் தொண்டு பரவ பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் தந்த 'பண்டிதர்' மு. கதிரவேற்பிள்ளை ஐயாவுக்கு

*மெமோறியல் மலர் 3 இலிருந்து மீள் பிரசுரமாகின்றது.*

1946ம் வருடம் தொடக்கம் 1974ம் வருடம்வரை மெமோறியல் தாய்க்கு செந்தமிழ் மலர் கொண்டு அணி செய்த தமிழாசான். வட்டுக்கோட்டை இறாத்தலடியைச் சேர்ந்த பண்டிதர் மு. கதிரவேற்பிள்ளை அவர்கள் 1997ம் ஆண்டு வைகாசி மாதம், தென்னிலங்கையில் தனது மைந்தர் இல்லத்தில் அமரத்துவமடைந்த செய்தியறிந்து அவர் தம்முருவேற்றிய மைந்தர்கள் நாம் ஆறாத்துயரடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவரால் பாடசாலை வளாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நடேசப் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

பண்டிதர் ஐயாவுக்கு அஞ்சலி செய்யு முகமாக 1954ல் வெளியான The Memorial Magazine – VoL I ல் எழுதப்பட்ட ஒரு ஆங்கிலக் கவிதையினையும் பழைய மாணவனும், முன்னாள் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க செயலாளரும், தற்போது கனடா நாட்டில் வசிப்பவருமான செ. யோ. யோசப்பு அவர்களால் மெமோறியலின் நாடக மலரொன்றில் 1974ம் வருடம் எழுதப்பட்ட கட்டுரையொன்றையும் இங்கே தருகிறோம்.

"Deep love makes the pundit run still
finds it expedient each class hour to fill
with some work for lazy and indifferent folk
none can, in his class time, dare to balk"

- By "Truant" -

## மெமோறியலில் இருபத்தைந்து ஆண்டுகளாக இலக்கியந்த தந்த பண்டிதர்

எழுத்தறிவித்தவன் இறைவனாவான்!

அமைச்சராயினென்; அதிகாரிகளாயினென் அவர்தம் அதிகாரநிலை அகன்றவுடன் மக்கள் மனதிலிருந்து மறைந்து விடுவதுடன் மறந்துவிடப்படுவதும் உண்டு. ஆனால் பதவியிலிருந்து விலகியபின்பும் மக்களால் மதிக்கப்படும் தகைமையும், சமுதாயத்தில் உயரியவொரு நிலைமையும் என்றும்போல நின்று நிலவுவது நல்லாசிரியன் ஒருவனுக்கே! பதவியிலிருந்து விலகிய பல்லாண்டுகளின் பின்னர் பண்டிதர் கதிரவேலுப்பிள்ளை அவர்கள் அறிவொளியூட்டிய வெள்ளிவிழாச் சேவையை நினைவு கூருகிறோம் என்றால் அன்னாரின் தன்னலமிக்க ஆசிரியப் பணியும், பொன்னெனப் போற்றும் கடமையுணர்வும், மன்னிய புகழும் வார்த்தையில் வடித்தற்க எளிதாமோ!

நாவிலுயர் நக்கீரர்; கவிச்சக்கரவர்த்தி, ஒட்டக்கூத்தர் ஆகியோரின் மாணவர்களைக் கண்டால் தமது அறிவின் சிறுமைகண்டு எனைய மாணவர்கள் உள்ளூரப் பொருமுவதும், பேரச்சம் கொள்வதும் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் தரும் காட்சி! பண்டிதர் அவர்களிடம் தமிழ் கற்கும் மாணவர்கள் பற்றி மெமோறியலின் சுற்றுப்புறப் பாடசாலைகளின் மாணவர்கள் மனதில் அத்தகையதோர் உள்ளுணர்ச்சியிருந்ததற்கு அவர் தம் மாணாக்கர்களே சாட்சி!

"வான்யா றன்ன தூய்மையும், வான்யாறு நிலம்படந் தன்னலம்படரொழுக்கமும், திங்களன்ன கல்வியும், திங்களொடு ஞாயிறன்ன வாய்மையும் யாவது மஃகாவன்பும், வெஃகா வுள்ளமுங்" கொண்டு பண்டிதர் கதிரவேலும்பிள்ளை அவர்கள் பாடங்களைப் போதிக்கும் திறன் தனித்தன்மை வாய்ந்தது. அப்பெற்றியர்தம் மாணாக்கர் என்ற ஒன்றே மெமோறியல் பழைய மாணவர் என்று சொல்லிக் காலமெல்லாம் உள்ளத்திருத்திக் களித்தின்புறப் போதுமானது."

'பண்டிதர்' என்ற தாரக மந்திரம் மெமோறியலுடன் சங்கமமாகிச் செறிந்துள்ளது. அப்பெருந்தகை பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும் அவர் புகந்திய சக்தி; ஏற்றிய ஒளி மெமோறியலை மேலும் பற்பல துறைகளிலும் வளர்க்கும் என்று திடமாக நம்பலாம்.

வாழ்க பல்லாண்டு பண்டிதர் அவர்கள்!
வாழ்க என்றும் அறிவொளியூட்டும் அன்னை மெமோறியல்!

*திரு செ. யோ. யோசேப்பு* 28/9/1974



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் அன்னையின் ஞானப்பிரகாசரின் பன்மொழிப் புலவன்
சுவாமி ஞானபிரகாசரின் வாழ்க்கைக் குறிப்பு ஒன்று



# பாடசாலை வாழ்க்கை

## பட்டுத் துணியும் வயிர மோதிரமும்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவருடைய மைத்துனருக்கு எழுதிய கடிதத்திலிருந்து அவருடைய பாடசாலை வாழ்க்கையைப் பற்றிய சுவையான வரலாறுகளை அறிக்கூடியதாயிருக்கிறது.

"பதினொரு வயதளவில் என் சனன ஊராகிய மானிப்பாயில் பிறந்த மனையிலே தானே என் தந்தையின் சகோதரிமாருடைய ஆதரவில் இருந்துகொண்டு தந்தையாருடைய பள்ளிக்கூடத்திலேயே (மெமோறியல் கல்லூயிரில்) இங்கிலீசு படிக்க அனுப்பப்பட்டேன். அப்போது சிறிய தந்தையார் எனக்கு வீட்டிலிருந்த அதி விலைபெற்ற பட்டுத்துணிகளை உடுத்தி அனுப்பியதுமன்றி, தமது வயிரக்கணையாழியையும் எனக்கு அணிந்துவிட்டார். அது தளதளத்துக் கொண்டிருந்தபடியால், பின்னொருநாள் கைக்கு அளவான விசித்திர வேலைப்பாடுள்ள வேறொரு மோதிரத்தை அனுப்பினார். இவ்வாறான பட்சத்தின் அடையாளங்களே சிறுவர் மனதில் பதிந்துகொள்ளுமாதலால் இன்றைக்கும் இதுபோன்ற பல அன்பின் செயல்கள் என் மனதில் இருக்கின்றன."

"மானிப்பாய்ப் பள்ளிக்கூடம் அக்காலம் அமெரிக்கன் புறொட்டஸ்தாந்து மிஷனோடு ஒரு சிறிது சம்பந்தப்பட்டிருந்தது. மாணாக்கர் சுவிசேஷ வாக்கியங்களை வாய்ப்பாடமாக்கிக் கொடுக்க வேண்டுமென்பதும், ஓய்வு நாள் பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டுமென்பதும் பள்ளிக்கூட ஒழுங்குகள். சிறிய தந்தையார் புதுச்சேரியில் பதிப்பித்த சத்திய வேத சுவிசேஷமொன்று வாங்கித்தந்த அதிலிருந்தே பாடங்கொடுக்கும்படி செய்தார்."

# Our Donors

The late Mr. A. A Page as everyone knows hails from an illustrious family, a family which is closely associated with our institution. His grand father the late Mr. Vairavanather Page was our Principal and during his tenure of office did wonders to uplift this school. The Page family have always had our School at heart and did all they could to see the rise of Memorial. They were real benefactors. Our Page Block which remains to this day though old, is a menument of their kind gesture.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We are deeply grieved over the demise of Mr. A. A. Page, a great educationist, a business magnet and a philanthropist.

The Memorial Community in order to remember and honour him and his flock have decided to give coverage in our new magazine by reproducing an article published in Volume Two of our magazine to make known their dedicated service and sacrifice.

We also hope to rename the existing Page block as Page Memorial Block in the near future.

## Our Benefactors

Mr. A. A. Page is the biggest contributor to our funds, a steadfast helper in our efforts to raise funds and a close follower of the rise and fall of Memorial. It is rightly so.

Our school has been identified with Me. P.S. Page (Sr.) of Manipay since its very inception. It was generally known as the school of Mr. Page. We are hence very fortunate indeed to have a grandson of Mr. Page evincing an unabated interest in our school in spite of the lapse of years and the changes the school has undergone. It is an undying tribute to the deep love and affection that prompted the Page to spend themselves in the service of education and the community on the one hand, and to the sustained service rendered by this school; to the poorer and less privileged in the community.

Mr. A. A. Page, our present donor, had a brilliant career as a student, seldom if ever, missing the first place in any class. A noble son of the soil, he identified himself with the Y.M.C.A. and Christian Endeavour classes. He was popularly known as Athisayam. His life was a beacon light and be won many friends and influenced them for the better. He joined the Ceylon Theatres. Hard work and grit coupled with his brilliance found no limits. His rise to eminence was both meteoric and phenomenal. He rose up to become a chartered accountant and holds the F.C.A. – a rare academic award in Accountancy. Today he is the Deputy Managing Director of the Ceylon Theatres Ltd.

His very name Athisayam denotes wonder, Seldom does a name match a man as it does in his case. He is a wonder indeed – not for his handsome personality, not for his pleasing manners, not for his beaming brilliance, not for his enviable position in life but for his oneness with the less fortunate, his deep sympathy for the under-privileged, his rare understanding of men and matters, and above all his winsome simplicity and exemplary humility.

Mrs. Page in true Gardiner fashion lends him ample support. We are proud of them. We salute them.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெமோறியலன்னையின் மூத்த தலைமகன் (சாம் அண்ணன்) சாம். தே. ஆல்பிரட் அடிகளாருக்கு எமது பாதாஞ்சலி



மானிப்பாயைச் சேர்ந்தவரும் நவாலித் திருச்சபையின் உறுப்பினருமான சாம். தே. அல்பிரட் அடிகளார் மருத னார் மடம் கிறிஸ்தவ சேவாச்சிரமத்தில் ஒரு தொண்ட னாக 1946ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி ஆச்சிரமத்தின் ஐக்கியத்துள் சேர்க்கப்பட்டார். ஆரம்பக் கல்வியை மெமோறியல் அன்னையிடம் பயின்ற அவர் இடைநிலை உயர்நிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூயிரில் பெற்றவர். இவரது விசுவாச வாழ்வு அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாய் அமைந் தது. ஆச்சிரமத்தின் திருப்பணிக்காக தன்னை முழுமை யாக ஒப்படைத்தவர். இப்பணியைத் தொடங்க முன் இறையியல் பயிற்சி பெறுவதற்காகச் செரம்பூர் இறையி யல் கல்லூரிக்குச் சென்றார். இதன்பின் சில ஆண்டுகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாசரேந்தூரில் இயங்கி வந்த திருமறையூர் தமிழ்நாடு இறையியல் கல்லூயிலும் பயிற்சி பெற்றார். இவரும் ஒரு சிறந்த பாடகர். தன்னையே தியாகம் செய்து பிறரின் நலத்திற் காகப் பாடுபட்ட ஒரு உத்தம ஊழியன். இவரைச் 'சாம்' அண்ணர் என அழைத்தனர். மேமோறியலின் 158வது ஆண்டு நிறைவு விழாவில் 1994 ஜூன் 12ம் திகதி கலந்து கொண்டு மெமோறியல் மண்ணைப் புனிதப்படுத்திய துடன் ஆசியும் வழங்கினார். உயர்ந்த தோற்றம், உறுதியான நெஞ்சம், ஏழைகளுக்கும், துயர் நிறைந்தவர்கட்கும் இரங்கி உதவும் நெஞ்சம், கண்களிலே அருட்பார்வை, பேச்சி னிலே கம்பீரம், கம்பீர நடை, காவி உடை, கழுத்திலே செம்மஞ்சள் கயிற்றிலே தொங்கும் சிலுவை அடையாளம் சிந்தனையின் மொத்த வடிவந் தான் சாம் அண்ணன்.

தெய்வீக நாதம் இசைத்த சேவகர் சாம் அண்ணா 1998ல் கர்த்தருக்குள் நித்திரை யாகிய செய்தி, எம்மவர்க்கு துயர் படிந்த ஒரு வரலாறு ஆகும். மெமோறியல் அன்னை தன் மூத்த தலைமகனை இழந்து கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறாள். அன்னாரது நித்திய இளைப்பாற்றிக்காக ஆண்டவரை மன்றாடுகிறோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*
*பாடசாலைக்குடும்பம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கல்லூரித்தாய் பற்றி கலையரசு
க. சொர்ணலிங்கம் அவர்கள் 28–08–74இல் கூறியவை.

# என்னை மனிதனாக்கிய கல்லூரி

மானிப்பாய் மெமோறியல் கல்லூரிப் பழைய மாணவர்களுள் மிக முதிர்ந்தவர் நான் என்பதை எண்ணி மிக மகிழ்ச்சியடைகிறேன். ஆரம்பத்தில் ஒழுங்கையில் இந்தப் பாடசாலை "பேச்சற்றை" பள்ளிக்கூடம் என்ற பெயரில் நடைபெற்று வந்தது. இக்கட்டிடமிருந்த காலத்தில் 1897ம் ஆண்டு இரண்டாம் வகுப்பு மாணவனாகச் சேர்ந்தேன். அந்தக் காலத்தில் பல சகோதரர்கள் அங்கு மாணவர்களாய் இருந்தனர். முதல் மாணவனுக்கு இலவசக் கல்வியும் இரண்டாவது மாணவனுக்கு அரைச் சம்பளமும் மூன்றாவது மாணவனுக்கு வேறு சலுகைகளும் கிடைத்தன. இரண்டு வருடம் இலவசமாயும் இரண்டு வருடம் அரைச் சம்பளத்திலும் இரண்டு வருடம் முழுச் சம்பளம் கட்டியும் கல்வி பயின்றேன்.

புதிய கட்டடம் கட்டப் பெற்றதும் அதன் திறப்புவிழா ஞாபகம் நேற்று நடந்தது போல் இருக்கிறது. அந்தக் காலத்தில் அரசாங்கத்திலிருந்து வருடாந்த உதவிப் பணம் பெறுவது வழக்கம். அந்த ஆண்டு அரசாங்கத்தால் நடத்தப்பெறும் பரீட்சையில் மாணவர் அடையும் சித்தியின்படி கணக்கிட்டே சம்பளம் கொடுக்கப்படும். அதனால் ஆசிரியர்கள் யாவரும் தங்கள் கடமைகளை மிகச் சிரத்தையுடன் செய்து வருவார்கள். இதனால் மக்களிடையே ஆசிரியர்கள் மீது பெரும் மதிப்பு இருந்து வந்தது. நான் இப் பாடசாலையில் சேர்ந்த நாள்தொட்டு அதன் மீது எனக்கு அதிக அன்பும் பற்றும் இருந்து வந்தது. ஏனாகில் *எனது கல்விக்கு அத்திவாரமிட்டது இப்பாடசாலையென்பதற்காகவே.*

பலமுறை என்னாலியன்ற உதவியையும் அளித்துள்ளேன் பாடசாலைப் பருவத்தில் பல நாடகங்களில் சேர்ந்து நடித்தேன். *என்னை ஒரு கலைஞனாக வித்திட்டது இக் கல்லூரியே.* 1906ம் அண்டு பல நாடகங்களை நடித்துக் கல்லூரிக்கு நிதி திரட்டிக் கொடுத்தேன்.

**கலையரசு சொர்ணலிங்கம் நடித்த புகழ் பெற்ற நாடகங்களில் சில**

1. சாரங்கா தாரா
2. வேதாள உலகம்
3. சகுந்தலை
4. மனோஹரா
5. விரும்பிய விதமே
6. வாணிபுர வணிகன்
7. பக்தமீரா
8. சம்பூரண ஹரிச்சந்திரா
9. உத்தம பத்தினி
10. சந்திரஹரி
11. காதலர் கண்கள்
12. பாதுகா பட்டாபிஷேகம்
13. லீலாவதி சுலோசனா
14. தேரோட்டி மகன்

மெமோறியல் கட்டிட நிதிக்காக தயாரித்து மேடையேற்றிய நாடகம் "வேதாள உலகம்"



Manohara in the Garden Scene—1923

(ஆதாரம் – ஈழத்தில் நாடகமும் நானும்)
தகவல் : சி. சிவராஜன் (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாடசாலையின் மாணவர் கல்வி, கட்டிடத் தேவைகளைக் கருத்தில் கொண்டு உதவி புரியும் வள்ளல்கள்

1920~1950 காலப் பகுதியில் ஆங்கில ஆசிரியராக மூன்று தசாப்தங்கள் எமது பாடசாலையில் கல்விப் பணியாற்றி ஓய்வு பெற்ற அமரர்~பொன்னையாநாதன் அவர் மகன் அமரர் பொ. காராளசிங்கம் ஞாபகார்த்தமாக இவர்களுடைய பேரனும், மகனுமாகிய உயர்திரு க. இந்திரன் – தொழில் அதிபர் அவர்கள் எங்கள் உயர்தர மாணவச் செல்வங்களுக்கு புலமைப் பரிசில் வழங்க பெரும் நிதியினையும், மாணவர்கள் பொருத்தமான இடத்தில் இருந்து கல்வி கற்க வேண்டு என்ற நன் நோக்கில் கட்டிட வசதியையும் உருவாக்கி தருகிறார்கள்.

கல்லூரிச் சமூகம் இந்த வள்ளல்களின் நற்பணியை பாராட்டி இந்த வித்தியா தர்ம பணி சிறக்க இறைவனை வேண்டி நன்றி பகர்கின்றது. இதன் ஞாபகார்த்த மாக அமரர் பொன்னையா நாதன், காராளசிங்கம் அவர்களின் வாழ்க்கை முறை முன் உதாரணமாக மெமோறியல் மலர் 06 இல் வெளியாகின்றது.



## P. KARALASINGHAM
## Attorney – at – Law & International Tax Consultant

Mr. Ponniah Karalasingham is a graduate in Science and Law, besides being a practicing lawyer who was called to the Bar in 1971. At the age of 20 years he joined the Inland Revenue Department as an Assistant Assessor and served as a Senior Assessor, when he left the Department to join the legal profession. He studied at Manipay, Memorial English School upto 8th standard & then sat for his advanced level from Jaffna Hindu College. He has established himself as one of the foremost authorities in the field of Sri Lanka Taxation, in his practice as an Attorney-at-Law and Tax consultant over twenty - five years.

He served as a common wealth consultant in Tax Administration to the Government of Barbados, St. Kitts and Nevis, and Montserrat in the Caribbean Community.

He has been invited as speaker to International Conferences in Taxation on



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He has been invited as speaker to International Conferences in Taxation on International Taxation Issues as well as on Sri Lankan and Caribbean Taxation. He has also been a speaker at various Seminars and Conferences in Sri Lanka. He has also addressed various seminars overseas on Investment Opportunities in Sri Lanka. Mr. Karalasingham has been an honorary member of the Amsterdam based International Fiscal Association (I.F.A) in Barbados and also its branch in Sri Lanka. He is also a member of the International Bar Association and its committee on Taxes. He has also addressed the Lawasia Conference several times and is a member of the Asian Law body. He has presented papers to various conferences namely the International Fiscal Association, and to various Tax and Law journals Overseas and in Sri Lanka.

He has authored five books - 'A Guide to Turnover Tax in Sri Lanka', 'Corporate Taxation in Sri Lanka' and 'A Guide to Taxation' (6 editions) on Sri Lanka Taxation. A Guide to Goods & Services Tax and 'The Guide to Taxation in Barbados Taxation is to be published shortly.

A Guide to taxation and A Guide to Turnover Tax have both been translated and published in Sinhala.

## அமரர் சட்டத்தரணி பொன்னையாநாதன் காராளசிங்கம் அவர்களின் வாழ்க்கைக்கோலம்

உயர்குடிச் செம்மலாய் வாழ்ந்த சுதுமலை கிழார் ஆசிரியர் பொன்னையா அவர்களின் மகனாய் மார்ச் மாதம் 5ம் திகதி 1936 ஆம் ஆண்டில் பொ. காராளசிங்கம் இவ்வுலகிளல் ஜனனமானார். சுதுமலைப் பதியையே பிறப்பிடமாகக் கொண்ட இவர் புகழ்மிக்க யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் தமது கல்வியின் பெரும் பகுதியினை மேற்கொண்டதோடு சிறந்த கல்விமான்களாக விளங்கிய யாழ் இந்து தலைமையாசிரியர்களான அ. குமாரசுவாமி, வி. எம். ஆசைப்பிள்ளை இவர்கள் வழிநடத்திய காலத்து உத்தம மாணவனாகப் பிரகாசித்தார். அவரது சக மாணவர்கள் பலர் பல துறைகளின் முன்னோடிகளாகவும், புகழ்மிக்க தலைவர்களாகவும் இவரைப் போலவே பேரும் புகழும் பெற்று விளங்கினார்கள்.

யாழ் இந்துக் கல்லூரியிலிருந்து யாழ் பல்கலைக்கழகம் புகுந்த பொ. காராளசிங்கம் 1953 தொடக்கம் 1956 வரை விஞ்ஞானப்பட்டதாரியாகப் புகழுடன் வெளிவந்தார். இவருடன் உடன் பயின்ற மாணவர்களும் இவரைப்போன்றே பெரும் பேரும் புகழும் பெற்றார்கள் என்பதும் உண்மை. இவர்களுள் நடுநாயகமாக விளங்கினார் காராளசிங்கம் அவர்கள். விஞ்ஞானப் பட்டதாரியாக வெளிவந்த பொ. காராளசிங்கம் தொடக்கத்தில் அந்நாள் வழக்கப்படி யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆசிரியராக ஆறுமாதங்கள் கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு இலங்கையிற் புகழ்பூத்த திறமையாளரைக் கவர்ந்த இலங்கை இறைவரி இலாகாவில் பதவி பெற்றுக் கடமையாற்றி, 1972ம் ஆண்டு சிரேஷ்ட இறைவரி அத்தியட்டசகர் என்ற பதவி வகித்தபொழுது அச்சேவையிலிருந்து இளைப்பாறினார். அச்சேவையில் பொ. காராளசிங்கம் தொடர்ந்தும் பணியாற்றியிருந்தால் அத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக இன்று விளங்கியிருப்பார் என்பது மறுக்கமுடியாதவொன்று.

தி. பொ. காராளசிங்கம் அவர்கள் இளைப்பாற்றியதற்குக் காரணம் அவர் அத்துறையில் இன்னும் அதிகமாகப் பிரகாசிக்க வேண்டும் என்பதே. அவர் தொடர்ந்தும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் மாணவனாகப் பதிவு செய்து L.L.B. என்ற பட்டத்தகைமை பெற்றார். 1971 ஆண்டு சட்டவல்லுனராக அழைக்கப்பெற்றுச் சிறப்புப் பெற்றார்.

1973ம் ஆண்டு தொடக்கம் சட்ட ஆலோகசகராகவும், சர்வதேச வரி மதிப்பாளர் ஆலொசகராகவும் பணியாற்றியுள்ளார். சர்வதேச அரங்கிலும், இலங்கையிலும் வரி சம்மந்தமான அறிவியலில் ஒப்பாரும் மிகாருமில்லாது விளங்கிய திரு. பொ. காராளசிங்கம் அத்துறை சம்பந்தமாக ஆக்கபூர்வமான பல கட்டுரைகளையும் நூல்களையும் ஆக்கிப் பெருமை பெற்றுள்ளார் என்பது பல அத்துறை அறிஞர்களின் கணிப்பீடாகும்.

அவர் எழுதிய நூல்களின் பட்டியல் தரப்பட வேண்டிய ஒன்றே.

1. வருமானவரிக் கைநூல்
2. வியாபார விற்பனைவரி வழிகாட்டி
3. கம்பனிகளின் வரி வழிகாட்டி
4. விற்பனை வரிப்பற்றிய கைந்நூல்

திரு பொ. காராளசிங்கம் அவர்கள் இலங்கையிலும், சர்வதேச அடிப்படையிலும் பலதரப்பட்ட பணிகளை ஆற்றியுள்ளார். அவை பெறுமதி வாய்ந்தவை. உலக அறிஞர்களால் போற்றிப் பேசப்படுபவை.

திரு. பொ. காராளசிங்கம் அவர்கள் பொது நலநாடுகளின் வரி ஆலோசகர் என்ற வகையில் மேற்கிந்திய தீவுகளில் ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார். 1990 தொடக்கம் 1992 வரை இப்பணி தொடர்ந்தது.

பின்வரும் நாடுகளில் நிகழ்ந்த வரி சம்பந்தமான கருத்தரங்களில் தலைமைதாங்கியும், சொற்பொழிவாற்றியும், பங்குபற்றியுள்ளார்கள்.

1. இலங்கை
2. மேற்கிந்திய நாடுகள்
3. ஆசிய வரிபற்றிய சம்மேளனங்கள்
4. ஒல்லாந்து தேசத்தின் ஆமஸ்ராடமில் நிகழ்த்திய வரிமதிப்புச் சபையில் ஆற்றிய பெறுமதிவாய்ந்த சொற்பொழிவு.

திரு. பொ. காராளசிங்கம் அவர்கள் இலங்கையில் மற்றும் உலகம் முழுவதிலுமான புகழ்மிக்க சஞ்சிகைகளில் வரிமதிப்பீடு சம்மந்தமான பல்வேறு நுண்ணிய விடயங்களில் பெறுமதி வாய்ந்த பங்களிப்புகள் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பின்வரும் சபைகளில் அங்கம் வகித்துள்ளார்.

1. சர்வதேச வரிவல்லுணர்கள் சபை
2. ஆசியச் சட்டவாக்கச்சபை
3. சர்வதேசச் சட்டவாக்கசபை
(வரியியல் குழு அங்கத்துவம்)

அவர் பின்வரும் தாபனங்களில் செயற்பாட்டுக் குழு அங்கத்துவம் வகித்துள்ளார்

1. கொழும்பு மத்திய பகுதி றொட்டரிக் கழகம்
2. யாழ்ப்பாண இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தில் உப தலைவர் (கொழும்புக் கிளை)
3. இந்திய – இலங்கை நட்புறவுச் சங்கம் (காரியக் குழு அங்கத்துவம்)
4. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினரும், பிரதித் தலைவருமாகப் பலகாலம் உழைத்தவர்.

புகழ் மிக்க சுதமலை அம்மனைக் குல தெய்வமாக இளமையில் வழிபட்ட தி. பொ. காராளசிங்கம் கடவுட் சிந்தனையும் ஆத்மீக நம்பிக்கையும் உள்ள ஒருவராகவே வாழ்ந்தார். இறைவழிபாடும் இறைவன் சேவையும் அவர்தம் வாழ்வின் கண் விளங்கியது.

மறைந்த காராளசிங்கம் அவர்கள் நாட்டின் அரசியல் சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். கொழும்பு மாநகரில் வாழ்நது வருகின்ற தமிழ், முஸ்லீம் மக்களின் பிரச்சனை தொடர்பாக அதிக கரிசனையுடன் செயற்பட்டுத் தொண்டாற்றினார்.

அதே நேரத்தில் இந்த நாட்டின் சிங்கள மக்களுடன் தொடர்பு கொண்டிருந்ததோடல்லாமல், பல தலைவர்களின் நன்மதிப்பினைப் பெற்றிருந்தார் என்பதுவும் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். நாட்டின் அரசியல் பிரச்சனைக்கு சமாதானமான ஒரு அரசியல் தீர்வினைப் பெற வேண்டுமென்று அவர் முனைந்து செயற்பட்டார். பலதடவைகள் வெளிநாடு சென்று வாழ்வதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தபோதும் அவற்றினை உதறி எறிந்து இலங்கையிலேயே வாழவேண்டு என்பதற்காகவும் அவர் முன்னின்று உழைத்தார்.

இவர் தனது மனைவி மூன்று புத்திரர்கள் ஆகியோரைவிட்டுச் சென்றுள்ளார். இவரது புத்திரர்களில் இருவர் மருத்துவர்கள். முற்றவுர் வெற்றிகரமான முதலீட்டு ஆலொசகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்பும் பண்பும் மிக்கவராக இருந்ததுடன் பலராலும் நேசிக்கப்பட்டவராகவும் மனிதநேயம் மிக்கவராகவும் வாழ்ந்து, தனது வாழ்வை அர்ப்பணிப்பு மிக்க ஒன்றாக அமைத்ததோடல்லாமல் பிறர்மதிக்க வாழ்நது சமுதாயத்தில் உயர்வுமிக்க உதாரணபுரிபவராகவம் நல்வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்து மறைந்தார்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

– திருக்குறள் –

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழிப்பு மாற்ற நிலை தூக்கம்

*திருமதி கோகிலா மகேந்திரன்*
உதவிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி
வலிகாமம் கல்வி வலயம்

எமது சாதாரண வாழ்வில் பகல் நேரத்தில் நாம் விழித்திருக்கும் போது எமது மனம் காணப்படும் நிலை பிரக்ஞை நிலை என்று பேசப்படும். இந்தப் பிரக்ஞை நிலையில் சிறு சிறு மாற்றங்கள் ஏற்பட்டாலும், நாம் பெரும்பாலும் ஒரு சிறு வீச்சு எல்லைக்குள்ளேயே இருப்போம். இத்தகைய சாதாரண விழிப்பு நிலையில் இருந்து பெருமளவு வேறுபடும் ஒரு நிலையே விழிப்பு மாற்ற நிலை எனக் கருதப்படும்.

"மனம் ஒரு நனவோடை" என்கிறார் வில்லியம் ஜேம்ஸ். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மனதில் தோன்றும் எண்ணங்கள், பிரதிமைகள், மனக்கிளர்ச்சிகள், புலக்காட்சிகள் போன்றன பெருமளவு மாறுபடக்கூடியது.

விழிப்பு மாற்ற நிலைகள் பலவுள்ளன. அவற்றில் ஒன்று தான் நித்திரை:

நித்திரை என்பது ஒரு தனிப்பட்ட, கலப்பில்லாத உடற்தொழிலியல் நிலை இல்லை. அது பல நிலைகளின் கலவையாகும். ஒருவரது உடல், உள நலத்திற்குத் தூக்கம் மிக முக்கியமானதாகும். ஒரு நாளில் 25—40 முறை எமது தூக்கத்தின் நிலை மாறுபடுகிறது என்பது ஆச்சரியமான விடயமாகும்.

ஒருவர் ஒரு நாளில் தூங்கும் நேரம் அவரது வயது, தொழில், உடல், உள நிலைகள் போன்ற பல காரணிகளைப் பொறுத்து மாறுபடலாம். ஆறு மாதக் குழந்தை ஒன்று 13—16 மணி நேரம் தூங்கும்போது, சாதாரண வளர்ந்த மனிதன் ஒருவன் ஏழு அல்லது எட்டு மணி நேரம் தூங்குவான். கூர்மையான ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்ற சில விஞ்ஞானிகள் ஒரு நாளில் 3 மணி நேரம் மாத்திரமே தூங்குவதாக அறியப்பட்டுள்ளது.

1930ம் ஆண்டில் முதன் முதலாக நித்திரை பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்துவந்த விஞ்ஞான வளர்ச்சி மூலம் EEG மூளையின் மின் அலைகளைப் பதிவு செய்தது.

தூக்கத்தில் பல படிநிலைகள் காணப்படும் முதலாவது படி அயர்ந்து போகும் நிலை ஆகும். மிகவும் குறைந்த தூக்கமுள்ள இந்நிலையில் சீரற்ற EEG யும் விரைவான கண்மடல் அடிப்பும் காணப்படும்.

இரண்டாவது படி நிலையில் முதலாவதை விட ஆழமான தூக்கம் உண்டாகும். இந் நிலையில் இடையிடை விரைவான அலைகள் தோன்றும்.

மூன்றாவது படி நிலையில் இன்றும் ஆழமான தூக்கம் வருமாயினும், இது மாற்றம் குறைந்த தூக்கமாகும்.

படி நாலு, மிகவும் ஆழமான தூக்க நிலை ஆகும். இந் நிலையில் தூங்கிக் கொண்டிருப்பவரை எழுப்புவது மிகவும் கடினமாகும். தூங்குபவருடைய பெயரைச் சொல்லி அழைத்தால் அல்லது அவர்களுடைய குழந்தை அழுதால் இவர்களை எழுப்ப முடியும். இந்த நிலையில் EEG மிக ஒழுங்கானதாக இருக்கும்.

விரைவான கண்ணசைவு காணப்படும் ஐந்தாவது படி நிலை REM நித்திரை எனப்படும். ஒரு இரவில் நாலு அல்லது ஐந்து முறை REM நித்திரை தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நேரத்தில்தான் பெரும் பாலும் கனவு கள் தோன்றுவதாகக் கூறப்படுகிறது.

இதற்கு முந்திய நான்கு நிலைகளும் Non-REM நித்திரை என வழங்கப்படும். ஒரு மணி நேர ஆழ்ந்த நித்திரைக்குப் பிறகு முதல் REM தோன்றிச் சில நிமிடங்கள் நீடிக்கும். அப்போது ஏற்படும் விரைவான கண் அடிப்பு மூடப்பட்ட கண் மடல்களுக்கு ஊடாகவே சிலவேளை தெரியும். ஒரு இரவு முழுவதும் இந்த REM-non REM வட்டங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். இத்த கைய ஒரு வட்டம் ஏறத்தாழத் தொண்ணூறு நிமிடங்கள் வரை நீடிக்கும் நித்திரையின் பிற்பகுதியில் (விடியற் காலைக்குச் சற்று முன்) வரும் REM சிலவேளை ஒரு மணித் தியாலம் வரை நீடிக்கலாம். Non-REM நித்திரையின் போது உண்மையான அர்த்த முள்ள சிந்தனைகள் தொடருகின்றன.

கனவுகள் அர்த்தமுள்ளவை என்றே சரித்திர காலம் தொட்டு மனிதன் கருதி வந்திருக்கிறான். ஆனால் ஆதி காலத்தில், கனவுகள் எதிர்காலத்தை எதிர்வு கூறுவன என்றும் கடவுளிடம் இருந்து வரும் செய்தி கள் என்றும் கருதப்பட்டன. கனவிலே கடவுள் வந்து கூறுவதான நம்பிக்கைகள் இன்னும் எமது சமூகத்தில் உள்ளன. எமது பஞ்சாங்கங்களில் கனவின் பலன் போடப்படு வது கனவுகள் எதிர்காலத்தை எதிர்வு கூறு வன என்ற நம்பிக்கை இன்றும் எம்மிடம் உள்ளதையே சுட்டுகிறது.

இடைக்காலத்தில் கனவுகள் அர்த்த மற்றவை என்று கற்றறிந்தவர்களால் கருதப் பட்டன. இப்போது மீண்டும் உளவியல் ரீதி யாகக் கனவுகள் அர்த்தம் பொதிந்தவை என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

நாம் இப்போது எப்படி இருக்கிறோம் என்று சொல்பவைதான் கனவுகள் என்ற கருத்தை முன்வைத்தார். சிக்மன்ட் புரொயிட் என்ற உளவியலாளர். "கனவுகளின் விளக் கங்கள்" என்ற தனது நூலில் அவர் "கனவுகள் என்பவை எமது சாதாரண பிரக்ஞை நிலையில் பாவிக்கப்படும் மொழி அல்லாத இன்னொரு குறியீட்டு மொழியில் ஆழமான அர்த்தமுள்ள செய்திகளைத் தருவன" என்று குறிப்பிடுகிறார். இந்தக் கனவு மொழி கனவு காண்போனின் தற்போதைய நிலையைக் குறியீடு மூலம் காட்டும். "கனவுகள் என்பவை நனவிலி மனதுக்கான இராஜ பாதைகள்" என்பது புரொயிட்டின் கூற்றாகும். சமூகம் ஏற்றுக் கொள்ளாத சில பாலியல் வன்முறை உந்தங்களை வெளியிடும் ஒரு இடமாகவும் கனவு இடம் பெறுவதாகப் புரொயிட் கருதி னார். கனவில் இவை இடம் பெறும்போது ஏனையோரின் விமர்சனம் தவிர்க்கப்படு கிறது. ஆகவே கனவு நனவிலி மனதுக் கான ஒரு கண்ணாடியாக மட்டுமல்ல, ஒரு முக்கிய இசைவாக்கமாகவும் கருதப்படலாம்.

மொத்தமான நித்திரை நேரத்தில் 20% ஆன நேரம் REM நித்திரையில் செலவா கிறது. REM நித்திரையில் குழப்பம் ஏற்படுத் தப்பட்டால் அவர்கள் பகலில் பதற்றமடைந்து காணப்பட்டமை பரிசோதனைகள் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது. REM தூக்கமானது ஒருவரது உளச் சமநிலையைப் பேணுவதில் முக்கியமானதாகும் என்பது சிலரது கருத்து. வேறு சிலரோ REM நித்திரை ஒரு உடற் றொழிலியல் தேவையே தவிர உளவியல் தேவை அல்ல என்று கருதுகிறார்கள். எது எப்படி இருப்பினும் ஒருவரின் கனவுலக மொழி கண்டவர்தான் தனது நனவிலி மனது டன் தொடர்பு கொண்டு அதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அகமுக ஆளுமை உள்ளவர்களுக்குக் கனவுகள் அதிக அளவு நினைவில் இருக் கும். மனிதன் தன்னை ஒருமைப்படுத்து வதற்குத் தனக்கு வழிகாட்டும் பாதையே கனவு என்று பேர்ல்ஸ் சொல்வார். என் னில் தூங்கிக் கொண்டிருக்கும் நானுக்கு, விழித்தெழும் உணர்வு கொண்ட நான் தரும் செய்திதான் கனவு.

ஆகவே கனவு என்னைக் கண்டு பிடித்த என்னில் நான் இழந்த பகுதியை மீண்டும் ஒரு மைப்படுத்தி எனது ஆளுமை யைக் கட்டி எழுப்ப உதவுகிறது.

தடை, கட்டுப்பாடு, அமுக்கம், பயம் ஆகியவை காரணமாக எமது வாழ்வுப் பாதையில் சிதறி இருக்கும் பகுதிகளை மறுத்து மறந்து எமது அடி மனதில் புதைத்து வைத்துள்ளோம். இவை யாவும் மீண்டும் எமது வாழ்வில் நுழைய அனுமதி கேட் கின்றன. பகல் வெளிச்சத்தின்போது மன மானது எண்ணங்களையும், இயல்பூக்கங் களையும் பார்க்க மறுத்துத் தணிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. இவை இரவின் தூக்கத்தில் மாறுபட்ட உருவத்தின் நிழல்களாக வருகின்றன. எமது பயங்களும் தீர்க்கப்படாத ஆசைகளும், எமது வாழ்வின் கதைகளாக எம்மை மையப் பாத்திரமாகக் கொண்டு எழும்.

ஒருவருக்கு இரு பெண்களில் யாரைத் திருமணம் செய்வது என்பதில் சிக்கல் இருந்தது. அவரது கனவில் இரு கிணறுகள் தோன்றின. ஒரு கிணறு கட்டுடன் கூடியதாக இருந்தது ஆயினும் அதில் காணப்பட்ட நீர் உப்புத்தன்மை கூடியதாக இருந்தது. மற்றைய கிணற்றுக்குக் கட்டு இருக்கவில்லை. ஆனால் அதனுடைய நீர் சுவையுள்ளதாக இருந்தது. இந்தக் கனவு அவரது பிரச்சனைக்கு எளிதாகத் தீர்வு காணும் வழியைக் காண்பிக்கும் அருமையான குறியீட்டுக் கனவாகும்.

சிலர் இறந்து போனவர்களை மீண்டும் மீண்டும் கனவில் காண்பது வழமையாகும் உளப் பூர்வமாக அவர்களுக்குப் பிரியாவிடை சொல்ல இன்னும் முடியவில்லை என்பதே இதன் அர்த்தம்.

நல்ல ஆழ்ந்த தூக்கத்தைப் பெறுவதற்கு ஒழுங்கான நித்திரைப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அடிக்கடி நித்திரை நேரத்தை மாற்றக்கூடாது. கோப்பி, புகையிலை போன்ற தூண்டிகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாள் தோறும் சிறிதளவு தேகாப்பியாசம் செய்ய வேண்டும். நித்திரைக்காக எந்தவித மாத்திரையையும் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும். விழிப்பு மாற்ற நிலை செழுமையாக அமைந்தால் விழிப்பு நிலையில் வாழ்வு வெற்றிகரமானதாகும்.

# நாடகத்தின் தோற்றம்

நாடகம் என்பது மனித வாழ்க்கையில் ஏற்கனவே காணப்பட்ட சம்பவங்களை, ஒரு கலைஞன் தன்னால் கற்பனை செய்யப்பட்ட விடயங்களுள் இணைந்து ஒரு குறித்த நேரத்தில், குறித்த இடத்தில், குறிக்கப்பட்ட பார்வையாளர் முன்னிலையில் செய்து காட்டும் கலையாகும். இது அவ்விடத்தில் பல கலைஞர்களையும் இணைத்து நடிகர்களால் முன்னெடுக்கப்படும் செயல் நிகழ்வாக விரிகிறது. ஆகவே நடிகர்கள் உணர்வுடன் பார்வையாளருக்குச் செய்துகாட்டும் செயல் நிகழ்வு என்றும் சுருக்கமாக இதனைக் கூறலாம்.

நாடகத்தின் தோற்றம் பற்றி நாம் எடுத்து நோக்கும்போது அதுபற்றி ஆய்வினை மேற்கொண்ட பல ஆய்வாளர்கள் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கூறியுள்ளனர். இக்கூற்றுக்களில் ஒரு நெகிழ்ச்சித் தன்மை காணப்படுவதை யாரும் இலகுவில் அவதானிக்கமுடியும். இவர்களது கருத்துக்களின் அடிப்படையில் தொழில்சார் நடவடிக்கைகள், குழந்தைகளின் இயல்பூக்க நடவடிக்கைகள், சமயச் சடங்குகள் அல்லது காரணங்கள் போன்ற செயற்பாடுகளில் இருந்தே நாடகம் தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகின்றது.

நாடகம் என்பது அளிக்கை செய்யப்படும் ஒரு செயல் நடவடிக்கையாகும். குழந்தைகள் தாம் சூழலில் காண்பதைப்போலச் செய்தல் ஒரு இயல்பூக்க நடவடிக்கையாகும். தேர்த் திருவிழாவைப் பார்த்துத் திரும்பிய குழந்தை குரும்பை, ஈர்க்கு போன்றவற்றைப் பயன்படுத்தித் தேர்செய்து விளையாடுகின்றது. இச் செயற்பாட்டைப் போலச் செய்தற் பண்பானது காணப்படுகின்றது. இப் பண்பே நாடகத்தின் பண்பு ஆகையால் குழந்தையின் இயல்பூக்க நடவடிக்கை நாடகத் தோற்றத்தின் தோற்றுவாயாகக் கருதப்படுகின்றது.

நாடகத்தின் தோற்றம்பற்றி பரத முனிவர் கூறும்போது நாடகம் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டதென கூறுகின்றார். கடவுள் ஆடிய போது தான் கண்டதாகவும் அதன் பின்னரே நாடகம் பற்றிய இலக்கண நூலான நாட்டிய சாஸ்திரத்தை தான் வெளிப்படுத்தியதாகவும் கூறுகின்றார். இந்தியாவினுடைய மிகப் பழமையான நாடகம்பற்றிய நூலாக நாட்டிய சாஸ்திரம் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகத்தின் தோற்றம் பற்றிய கருத்துக்களில் விஞ்ஞான ரீதியாகவும், அறிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவு நாடகம் சமயச்சடங்கில் இருந்து தோற்றம் பெற்றதென்பதாகும் என ஜே. தொம்சன் என்பவர் இக்கருத்தினை முன்வைத்துள்ளார்.

மனித குலத்தின் ஆரம்ப காலத்தில் தொழில் நடவடிக்கையே சடங்காக உருவாக் கப்பட்டது. வேட்டைத் தொழிலை வாழ்வுத் தொழிலாகக் கொண்டிருந்த புராதன வேடர் களிலிருந்தே நாகரீக மனிதன் பரிணாமம் பெற்றதாகப் பரிணாமக் கொள்கை கூறுகின் றது. வேட்டைத் தொழிலை வேடர்கள் தமது அடுத்த பரம்பரைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதனால் சடங்குகள் அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றன.

மொழி என்பது தோற்றம் பெறாத நிலையில் ஆதிவாசிகள் உடல், குரல், பாவம் ஆகியவற்றையே சடங்கில் பிரதானப் படுத்தினர். வேட்டைத் தொழிலை மறு சந்ததிக்குக் கற்றுக் கொடுக்கும் போது சிலர் விலங்குகள் போன்றும், சிலர் அவற்றை வேட்டை ஆடுபவர்கள் போன்றும் பாவனை செய்தனர். இச்செயற்பாட்டில் உடலால் விலங்குபோன்ற அசைவையும், குரலால் விலங்கின் சத்தத்தையும் உருவாக்கினர். ஏற்கனவே வேட்டையாடப்பட்ட விலங்குகளின் தோல்கள் மற்றும் அங்கங்களைத் தம்மில் அணிந்து காட்டினர். இது ஒருவகை ஒப்பனையாயிற்று. இந்நிகழ்வில் போலச் செய்தல் பண்பும் மேலோங்கிக் காணப் பட்டது. இத்தகு நிகழ்வுகளை நிகழ்த்தியபின் வேட்டைக்குச்சென்ற வேட்டைக்குழுவுக்கு நிறைய வேட்டைப் பொருட்கள் கிடைத்தன. ஆகவே இந்நிகழ்வில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது எனக் கருதிய ஆதிக்குடிகள் இந்நிகழ்வினைத் திரும்பத் திரும்ப நிகழ்த் தினர். வேட்டையாடுதலைப் போலச் செய்யும் போது இயற்கைச் சக்தியானது மகிழ்வடை வதனாலேயே ஏராளமான வேட்டைப் பொருள் கிடைக்கின்றது எனக்கருதி அதனைத் தன் குழுவுக்கு முன்னிலையில் பரிபூரண நம் பிக்கையோடு குறிப்பிட்ட வெளியில் செய்து காட்டினர். இதுவே மனிதனது ஆரம்பகால நாடக நிகழ்வாகக் கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு வேட்டையாடிய சமூகம் காலப் போக்கில் அலைந்து திரிவதை விடுத்து தமக்கென்றொரு தனியான வாழ் விடத்தை அமைத்தனர். நாளாந்தம் உண வுக்கு அலைவதைத் தவிர்த்துக் காடுகளை அழித்து விவசாயம் செய்ய முற்பட்டனர். விவசாயம் செய்வதில் பருவகால மாற்றங் கள் பாதிப்பை ஏற்படுத்தின. பருவகால மாற் றங்களை தம் வயப்படுத்துவதற்காக மனிதன் தனது ஆரம்ப சடங்குகளில் மாற்றங்களை உண்டு பண்ணினான். அவை பின்னர் நிலைத்து நிற்கும் போக்குடைய சமயச்சடங் குகள் ஆயின. இச்சடங்குகளில் எவன் இவற்றை முன்னின்று செய்தானோ அவன் மதகுருவானான்.

காலப்போக்கில் நாடகத்தில் நடிக்கும் தனிப்பிரிவு ஒன்று சமூகத்தில் உருவாகியது. தனியொரு பிரிவினரின் கைக்குவந்த நாடகம் நுணுக்கமான வளர்ச்சியைப் பெற்றது. பின் னர் நடிகன் தன்னை ஆட்சிபுரிந்த தலைவர் களது தேவைகளை நிறை வேற்றுபவனா னான். அன்றாட சமூகம் பொருளாதார அமைப்புக்களுக்கு ஏற்ப நாடகங்களின் கரு வும் உருவும் அமையலாயின. ஒவ்வொரு நாட்டினதும் சமூகவளர்ச்சி, இயற்கைச்சூழல் ஆகியவற்றிற்கேற்ப நாடகம் வளர்ந்து சிறக்க லாயிற்று.

*கு. சசிக்குமார்*
**12 கலைப்பிரிவு (2000)**

> அர்த்தமற்ற சொற்களால்
> ஆக்கப்பட்ட ஆயிரம்
> பேச்சைவிட, அர்த்தமுள்ள
> ஒரு சொல் மேலானது
>
> *- புத்தபிரான் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் காட்டுவளங்களும் அதனை அழிப்பதால் ஏற்படும் தீமைகளும் காடழிப்பினைத் தடுக்க அரசுமேற்கொள்ளும் நடவடிக்கைகளும்

இலங்கையில் இயற்கை வளங்களில் இயற்கைத் தாவரம் என்பது முக்கியமான ஒன்றாகும். இவ் இயற்கைத் தாவரங்களில் காடுகள் ஒரு பெரும் பகுதியாகும். ஒரு நாட்டில் காடானது 25% மாகக் காணப்பட வேண்டும். ஆனால் இப்போது இலங்கையில் 25% காணப்படாது அழிவுற்று 16% மாகக் காடுகள் காணப்படுகிறது. காடுகள் எனும்போது இயற்கைத் தாவரங்கள் அதிகளவில் காணப்படும் இடம் காடுகள் ஆகும். இக்காடுகளின் தன்மைகள் அப்பிரதேசத்தில் காலநிலை மண் என்பவற்றிற்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகிறது. இவை காணப்படுகின்ற தரைத்தோற்றத்துக்கு ஏற்பவும் காடுகள் வேறுபட்டுக் காணப்படும் இவற்றை அடிப்படையாகக் கொண்டு

- தாழ்நாட்டு ஈரவலயக் காடுகள்
- தாழ்நாட்டு உலர்வலயக் காடுகள்
- மலைநாட்டு ஈரவலயக் காடுகள்
- மலைநாட்டு உலர்வலயக் காடுகள்
- அரை உலர் வலயக் காடுகள்
- கடல் தாவரங்கள்

என வகைப்படுத்தலாம். தாவரத் தன்மைகளும் இவற்றில் வேறுபாடுகளும் காணப்படுகிறது. இவ்வாறான காடுகள் இலங்கையில் ஏறக்குறைய மொத்த நிலப் பரப்பு (201) ஆகக் காணப்படுகிறது. இக் காடுகளில் மனிதன் பல்வேறு தேவைகளுக்கு அழிக்கிறான் இவ்வகையில்

- சேனைப்பயிற்செய்கை
- கைத்தொழில்
- நிலத்தைப்பெற்றுக்கொள்ளுதல்

எனும் பிரதான காரணங்களுக்காக மனிதன் காடுகளை அழிக்கிறான் பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்கச்செய்யும் நோக்குடன் அதிக செலவின்றி மேற்கொள்ளவும் கூடிய வருமானம் பெறவும் சேனைப்பயிற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. காடுகளை அழித்து, எரித்து அப்பிரதேசத்தில் பயிர் செய்வதே சேனைப் பயிர்செய்கை ஆகும். அவ்வாறு பயிர்ச்செய்கை முறை ஒரு நிலத்தில் இரண்டு அல்லது மூன்று தடவையின் பின்னர் விளைச்சல் குறைந்து செல்ல பயிர் செய்யாது விடப்படும் இதன் பின்பு புதிய காடு அழிக்கப்படும். இவ்வகையில் காடடின் பெரும் பகுதி அழிக்கப்படுகிறது.

பல்வேறு வகையான கைத்தொழில் மேற்கொள்ளப்படுவதனால் மரம் ஒரு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுத்தப்படுவதனாலும் இதற்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன.

வாகன உதிரிப்பாகம் செய்யவும் மனித தேவைகளைப் பூர்த்திசெய்யவும் காடுகள் அழிக்கப்படுகிறது.

நிலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு காடுகள் அழிக்கப்படுகிறது. அதிக அளவில் பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப குடியிருப்பு அமைக்கவும், தொழிற்சாலை உருவாக்கவும் குடியேற்ற நகரம் உருவாக்கவும் வீதி, வைத்தியசாலை, பாடசாலை, வழிபாட்டு ஸ்தலங்கள் போன்றன அமைக்கவும் காடுகள் அழிக்கப்படுகிறது. இவ்வகையில் துரித மகாவலித் திட்டத்தின் கீழ் பல்வேறு பலநோக்கு அபிவிருத்தித் திட்டம் மூலம் விவசாயக் கிராம குடியேற்றம் மூலம் பெரும் பகுதியான காடுகள் அழிக்கப்படுகின்றன.

இவ்வகையில் காடுகள் அழிக்கப்படுவதனால் பல்வேறு பிரச்சனைகள் நாட்டில் ஏற்படுகின்றன அவற்றில்

- காலநிலை மாற்றம்
- மழை கிடைக்காமல் போதல்
- மருந்து மூலிகைகள் பெறாதுபோதல்
- ஒட்சிசன் அளவு குறைதல்
- மண்ணரிப்பு ஏற்படுதல்
- புவிவெப்பம் அதிகரித்தல்
- இயற்கை எழில் கெடுதல்
- மண்வளம் குன்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்வேறு கைத்தொழில்கள் தடைப்படுதல்**

காடுகள் அழிக்கப்படுவதால் காபனீ ரொட்சைட் ($CO_2$) அதிகரித்துக் காணப்படும். அத்துடன் மழை குறித்த காலத்துக்கு இல் லாது போதல் நிலத்துக்கான நிழல் குறை வடைய வெப்பம் அதிகரித்து காலநிலைத் தன்மை மாற்றமடையும்.

தாவரங்களின் வேர்கள் மண்ணைப் பற்றி பிடித்து வைத்திருக்கின்றது. இதன் மூலம் மண் படை பாதுகாக்கப்படுகிறது. ஆனால் காடுகள் அழிக்கப்படுவதால் மண் படை தளர்வுற்று மண்ணரிப்பு ஏற்படுகிறது.

தாவரங்கள் ஆவியுயிர்ப்புச் செய்வதன் மூலமே நீராவி வளிமண்டலத்தில் கலக்கின் றது. மேலும் முகில்கூட்டம் ஒடுங்கி மழை யாவதற்கு காடுகள் அழிக்கப்படுவதனால் கிடைக்கும் மழையின் அளவு குறைவடைந்து செல்லும் அத்துடன் மழை வீழ்ச்சிக் காலம் வேறுபடும்.

தாவரங்கள் அழிக்கப்படுவதனால் நிலத் துக்குக் கிடைக்கும் இயற்கை நிழல் இல் லாது போகிறது இது. ஒரு குளிர்ச்சியான நிழலாக இருக்கும். இதனால் தரையில் வெப்பம் மட்டுப்படுத்தப்படும் ஆனால் காடு கள் அழிக்கப்படுவதால் குளிர்ச்சியான நிழல் இல்லாது போக தரையில் வெப்பநிலை மிக உயர்வடைந்து காணப்படுகிறது.

காடுகளில் வேறுவேறு வகையான மருத்துவ மூலிகைகள் காணப்படுகின்றன. இவ்வாறான மருத்துவ மூலிகைகள் காடழிப் பின் மூலம் அழிக்கப்படுவதனால் சுதேச மூலிகை வைத்தியம் பாதிக்கப்படும்.

காடுகளில் பல்வேறு வ்கையான ஒட்டுண்ணித் தாவரம் அழகிய பூக்களைக் கொண்டு காணப்படுகின்றது. அத்துடன் கீழ்வளரி பாசிகள், பல்வேறு வகையான தாவரங்கள் பறவைகள் விலங்குகள் ஏனைய உயிர்கள் போன்றனவும் காணப்படுகின்றன. இவை இயற்கை அழகைக் கொடுக்கின்றன. அத்துடன் உல்லாசப் பயணிகளைக் கவர் கின்றன. இவ்வாறான இக்காடுகள் அழிக்கப் படுவதனால் இயற்கை எழில் கெடுகின்றன அத்துடன் உல்லாசப்பயணத்துறையும் பாதிப் படைகிறது.

தாவரங்கள் காபனீர் ஒட்சைட்டை ($CO_2$) உள்ளெடுத்து ஒட்சிசனை ($O_2$) வெளிவிடுகிறது. இவ் ஒட்சிசன் உயிரினங் கள் சுவாசிப்பதற்கு ஏற்றதாக இருக்கின்றது. காடுகள் அழிக்கப்பட்டால் காபனீர் ஒட்சைட் வளிமண்டலத்தில் அதிகரிப்பதுடன் ஒட்சிசன் அளவு குறைகிறது. இதனால் உயிரினம் அழியும் நிலை ஏற்படுகிறது.

காடுகள் அழிக்கப்படுவதால் மண்ணின் மேற்படை பல்வேறு காரணிகளால் இடம் மாறுகின்றது. இவ்வாறு நடைபெறுவதனால் தாவர இலை தழைகளை மண்ணுக்கு நைத ரசன் (N) வழங்குவதனாலும் சில தாவர வேர்கள் மண்ணுக்கு நைதரசன் வழங்குவ தாலும் காடுகள் அழிக்கப்பட்ட மண்ணுக்கு கிடைக்கும் வளம் குறைவடைகிறது.

காடுகள் அழிக்கப்படுவதால் மரத்தினை மூலப்பொருளாகக் கொண்டு மேற்கொள்ளப் படும் கைத்தொழில்கள் பாதிப்படையும் இலங் கையில் காடுகள் அழிக்கப்படுவதனால் பல் வேறு தீமைகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்கு இலங்கை அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

- வனப்பாதுகாப்புத்திட்டம் உருவாக்க பாது காப்பு அதிகாரிகளை நியமிக்கிறது.
- புகழ் அரண்களாக சில பிரதேசங்களை பாதுகாக்கிறது.
- சிங்கராஜா வனம் தேசிய சொத்தாகவும் முக்கோணத்திட்டத்தின் கீழ் பாதுகாக்கப் படுகிறது.
- தேசிய மரம் நடுகை வாரம் கொண்டா டப்படுகிறது.
- காடுகள் அழிப்பவர் மீது சட்டபூர்வ நட வடிக்கை எடுத்தல்.
- மீள் காடுகள் உருவாக்கப்படுகின்றமை.
- காடுகள் அழிப்பதால் ஏற்படும் தீமை களைப்பற்றியும் மக்களுக்குப் போதித்தல்.

இவ்வாறான நடவடிக்கைமூலம் அரசு காடுகளை அழிப்பதில் இருந்து காடுகளைப் பாதுகாக்கிறது.

*தி. திபோஸ்பாபு*
கலைப்பிரிவு(2002) 12A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வருமானக் கணிப்பீட்டில் இரட்டை எண்ணல் பிரச்சனை

ஒரு பொருளாதாரத்தில் உற்பத்திக் காரணிகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டினால் உற்பத்திச் சுற்றோட்டமானது ஏற்படுகின்றது. இவ் உற்பத்திச் சுற்றோட்டத்தின் மூலம் ஒரு வருமான சுற்றோட்டமும் அதன் மூலம் ஓர் செலவுச் சுற்றோட்டமும் ஏற்படுகிறது. எனவே ஒரு வருட காலப் பகுதியில் உற்பத்திச் சுற்றோட்டங்களின் பெறுமதியினை கணிப்பீடு செய்து கொள்வதையே தேசிய வருமான கணக்கீடு எனப்படும். இக் கணிப்பீட்டு முறையானது பின்வரும் மூன்று முறைகளில் அமையலாம்.

1. உற்பத்தி முறை Production Method
2. வருமான முறை Income Method
3. செலவு முறை Expenditure Method

ஒரு குறிப்பிட்ட வருடகாலப் பகுதியில் ஒரு நாட்டின் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் இறுதிப் பணப் பெறுமதியைக் கூட்டுவதன்மூலம் தேசிய வருமானத்தினை அறிந்து கொள்ளும் முறையே உற்பத்தி வழியிலான தேசிய வருமானக் கணக்கீடு ஆகும். இவ்வாறு தேசிய உற்பத்தியை கணிப்பீடு செய்யும்போது இரட்டை எண்ணல் பிரச்சினை என்பது ஏற்பட ஏதுவாக அமைகிறது.

ஓர் உற்பத்தித் தரவினை ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை தேசிய உற்பத்தியில் கணிப்பீடு செய்யப்படுகின்றபோது சேர்க்கப்படுவதனால் ஏற்படுவதே இப்பிரச்சினை ஆகும்.

ஓர் பொருளாதாரத்தில் பல்வேறுபட்ட பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும். அந்த வகையில் மூலப்பொருள், இடைத்தரப் பொருள், முடிவுப் பொருள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றது. இதன்படி மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு இடைத்தரப் பொருட்களும் இடைத்தரப் பொருட்களை கொண்டு முடிவுப் பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த வகையில் மூலப் பொருட்களின் பெறுமதியானது இடைத்தரப் பொருட்களின் பெறுமதிக்குள்ளும் இடைத்தரப் பொருளின் பெறுமதியானது முடிவுப் பொருட்களின் பெறுமதிக்குள்ளும் அடக்கப்பட்டிருக்கும். எனவே தேசிய உற்பத்தியினை கணிப்பீடு செய்கின்றபோது முடிவுப் பொருட்களின் பெறுமதியுடன் மூலப் பொருள், இடைத்தரப் பொருள் ஆகியவற்றின் பெறுமதிகளை மீண்டும் கூட்டுகின்றபோது ஏற்படுவது இரட்டை எண்ணல் பிரச்சினை ஆகும்.

உதாரணமாக :— சீமெந்து என்ற முடிவுப் பொருளின் உற்பத்தியினை எடுத்துக் கொள்வோமானால் சுண்ணாம்புக்கல், கிப்ஸம் என்பன பயன்படுத்தப்படுகிறது. இந்த வகையில் சுண்ணாம்புக் கல்லின் பெறுமதியானது அரைக்கப்பட்ட பெறுமதிக்குள்ளும் அரைக்கப்பட்ட பெறுமதியானது முடிவுப் பொருளாகிய சீமெந்துக்குள்ளும் காணப்படுகின்றது.

எனவே உற்பத்தி வழியில் தேசிய வருமானத்தினை கணிக்கும் போது முடிவுப் பொருளாகிய சீமேந்துடைய பெறுமதியுடன் சுண்ணாம்புக் கல்லின் பெறுமதியும் அரைத்த சுண்ணாம்புக் கல்லின் பெறுமதியை மீண்டும் சேர்க்கின்றபோது ஏற்படுவதே இரட்டை எண்ணல் ஆகும். தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும்போது ஏற்படும் இரட்டை எண்ணல் பிரச்சினையை நீக்க பின்வரும் இரண்டு வழிமுறைகள் கையாளப்படுகிறது.

1. முடிவுப் பொருட்களின் பெறுமதியினை அடிப்படையாகக்கொண்டு கணிப்பிடுதல்
2. தேசிய உற்பத்தியினை கூட்டப்பட்ட பெறுமதி அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கூட்டப்பட்ட பெறுமதியை பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்

| உற்பத்திகள் | உற்பத்தி கட்டங்கள் | மொத்த விற்பனை பெறுமதி | இடைத்தரப்பொருள் கொடுப்பனவு | கூட்டப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|---|
| A | சுண்ணாம்புக்கல் | 15 | — | 15 |
| B | அரைத்த சுண்ணாம்புக்கல் | 35 | 15 | 20 |
| C | சீமெந்து | 60 | 35 | 25 |
| | | 110 | = 50 | + 60 |

இரட்டை எண்ணல் பிரச்சினையானது வருமான வழியில் தேசிய வருமானம் கணிக்கும்போது ஏற்படலாம்.

குறிப்பிட்ட வருடத்தில் மக்களுக்கு கிடைக்கின்ற வருமானம் உற்பத்தி தொடர்புடையதாயும் உற்பத்தி தொடர்பற்றதாயும் அமையலாம். இவற்றை இரண்டாக வகுக்கலாம்.

1. பயன்தரு கொடுப்பனவுகள்
2. கைமாற்றல் கொடுப்பனவுகள்

இதில் பயன்தரு கொடுப்பனவுகள் என்பது குறிப்பிட்ட வருடத்தில் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் ஈடுபடுவதால் பெறப்படும் பெறுகைகளை இது குறிக்கும். இது இருபக்க கொடுப்பனவுகளாகும். ஏனெனில் காரணிச் சேவையை கொடுத்து அதற்கு பதிலாக பெறப்படும் பண வருமானமே இதுவாகும். இது வாடகை, வட்டி, கூலி, இலாபம் என பல்வேறு வகைப்படும். இது தேசிய வருமானத்தில் சேர்க்கப்படும்.

கைமாற்றல் கொடுப்பனவு என்பது குறிப்பிட்ட வருடத்தில் உற்பத்தியுடன் தொடர்பற்ற முறையில் கொடுப்பவை இவையாகும். இவை ஒருபக்க கொடுப்பனவுகளேயாகும். அதாவது எவ்வித காரணிச் சேவையையும் வழங்காமல் பெறப்பட்ட வருமானங்களாகும். உணவு மானியம், பொதுபடுகடன் வட்டி, ஓய்வூதியம், நன்கொடைகள் போன்ற பலவும் இவ்வாறானவை. இவற்றை கூட்டுதல் கூடாது. இவற்றை கூட்டுவதால் இரட்டை எண்ணல் பிரச்சினை ஏற்படுகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. தேசியவருமானம் – மா. சின்னத்தம்பி (வெளியீடு–1992)
2. தேசியவருமானம் – வீ. பரமேஸ்வரன் (வெளியீடு–1998)


*மன்சியா ஐயாத்துரை*
12 வர்த்தகம் (2002)

## நாடக மேடை

உலகில் மிகப் பெரிய நாடக மேடை ஐக்கிய அமெரிக்காவில் நீவாடா பிரதேசத்தில் றினோ நகரில் அமைந்துள்ள 'ஸிக்பீல்ட் றாம்' ஆகும். 176 அடி உயரமானது. 3 முக்கிய லிப்டுகளைக் கொண்டது ஒவ்வொரு பகுதிகளிலும் 1200 கதாபாத்திரங்களை அடக்கலாம். 62 ½ அடி விஸ்திரமான பகுதிகளில் சுழல் மேடைகளும் 800 வர்ண விளக்குகளும் உண்டு.

நன்றி 11-12-1996 தினகரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தர் தினம் - 1999 விருந்தினர்கள்:-
திருவாளர்கள் இராஜ மகேந்திரசிங்கம், சட்டத்தரணி இ. வசந்தசேனன்



இல்ல மெய்வல்லுநர் போட்டி - 1999 அதிபருடன் வலயக் கல்விப்
பணிப்பாளர் திரு. வீ. இராசையா அவர்கள்



மாகாண மட்ட தமிழ் மொழித் தினம் - 1997 பரிசுபெற்ற
அப்பூதியடிகள் நாடகத்தில் ஓர் காட்சி




ஆரம்பப் பிரிவு மாணவரின் கலைநிகழ்வு - 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகத்தில் வேடப்புனைவும் ஒப்பனையும்

நடிகனின் நடிப்பு ஆற்றலை வெளிப் படுத்த உதவும் ஊடகங்களில் ஒன்றாக வேட உடையும், ஒப்பனையும் இருப்பது குறிப்பிடத் தக்கது. இது ஒரு நுண்கலையும் ஆகும். நாடகக்கலையின் முழுக் கட்புல விளைவிற் குக் காட்சி அமைப்புடன் வேட உடுப்பும், ஒப்பனையும் ஒத்துழைப்பு வழங்குகின்றது. வரலாற்று ரீதியாகப் பார்க்கின்றபோது நாடக மூலகங்கள் ஒவ்வொன்றும் தொழில் ரீதி யாகத் தனித்தனித் துறைகளாக வளர்ந்து வந்தன. ஆயினும் வேட உடுப்பும் ஒப்பனை யும் நடிகனால் பேணப்பட வேண்டியன. எனவே இவை நடிகனில் தங்கியிருக்க வேண்டிய நிலையிலுள்ள கலைகள் ஆகின் றன. நுட்பமான முறையில் விதானிக்கப்பட்டு நடிகரிடத்தில் செவ்விய முறையில் செயற் படுத்தும் போது நடிகனிற்குப் பதிலாக ஒரு கதாபாத்திரமே தோன்றும் அற்புதம் நிகழும்.

நடிகனிற்கும் வேடஉடை, ஒப்பனைக்கு முள்ள தொடர்பு மிக இறுக்கமானது. அவை நடிகனிடத்தில் தோன்றும் ஆளுமை மாற்றங் களைப் பிரதிபலிக்கின்றன. சில சமயங்க ளில் மாற்றங்களிற்கு ஊன்றுகோலாகவும் இவை அமையும். ஒரு நடிகனை உருவாக்க வேட உடையும் ஒப்பனையும் அவசியம். பாத்திரத்தை வெளிக்காட்ட அவை முக்கிய இடம்வகிக்கும் ஆதி மூலங்களை ஆராயும் போது ஆதி மனிதன் நிகழ்த்திய சடங்கில் பூசாரியும் பிறரும் ஒப்பனையிலும், வேட உடுப்பிலும், முகமூடியிலும் தோன்றினர். கிரேக்க நடிகர்கள் பார்வையாளனின் கவ னத்தை ஈர்க்க வேட உடுப்பும், முகமூடியும், பாத அணிகலன்களும் அணிந்தனர். வெவ் வேறு பாத்திரங்களைக் குறிக்க வெவ்வேறு முகமூடிகளை அணிந்தனர். முகமூடியின் பாவனை அற்றுப்போன காலத்தில் ஒப்பனை மூலம் முகமூடியின் தன்மை ஏற்படுத்தப் பட்டது.

யதார்த்த மனோரதிய நாடகங்களில் மனிதனை விகாரப்படுத்தாமல், மெழுகுதிரி ஒளியில் நாடகம் நிகழ்த்தப்பட்டபோது கடும் ஒப்பனையும், நிறத்தாலான ஆடையும் தேவைப் பட்டது. கூத்தில் பந்தங்களின் ஒளியில் பகட்டான உடையுடனும், பெரும் முகமூடிக ளுடனும் நடிகர் தோன்றினர். இன்றைய மோடியுற்ற அரங்கில் குறியீட்டு ஒப்பனை யும், வேட உடுப்பும் பயன்பாட்டிலுள்ளன. கிரேக்க அரங்கில் நடிகனைப் பெருப்பித்துக் காட்ட வேட உடை பயன்பட்டது. ஒருவரே இருவராகத் தோன்றவும் இரட்டையர் போன்ற பாத்திரங்களைத் தாங்கி நடிக்கவும் பல்வேறு மன எழுச்சிகளைக் காட்டவும், விசித்திரமான உருவங்களை உருவாக்கவும் வேடமுகம் பயன்படுகின்றது. நாடகத் தயாரிப்பில் வேட உடையை யதார்த்தம், யதார்த்த விரோதம் எனப் பாகுபடுத்தலாம். யதார்த்த வேட உடை பொதுவாகச் சமூக நாடகங்களுக்கும், வர லாற்று நாடகங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

பாத்திரங்களின் உளவியல் பண்பு மாறு வதை வேட உடையால் காட்டலாம். இப்ச னின் பாவை வீடு என்ற நாடகத்தில் நோறா என்ற பெண்மணியின் உடை அவளிற்கு செழுமையாக இருந்தமை ஆரம்பத்தில் அவ தானிக்கப்படும். மற்றும் குளிரான காலம் என்பதைக் காட்ட அவள் அணிந்த தடிப்பு உடை உதவும். மற்றும் ஆண், பெண் நடிகர்கள் இனவேறுபாடு முதலியனவற்றை இனம் காணவும் வேட உடை பயன்படும்.

சமூக அந்தஸ்துகள் வேட உடைமூலம் காட்டப்படலாம். ஓர் அரச நாடகத்தில் அரச னிற்குக் கவர்ச்சியான நிறங்களும், அழகுத் தன்மை வாய்ந்த உடைகளும் பயன்பட்டன. சேவகர்களிற்கு முழங்கால் மட்டும் வெள்ளை அல்லது நிறக்குறைவான உடைகள் பயன் பட்டன.

ஒப்பனையும், யதார்த்தம், யதார்த்த விரோதம் என இரு வகைப்படும். பாத்திரத் தின் இயல்பை நடிகனிற்குக் கொண்டுவரல் ஒன்று. பௌதீகப் பண்பைக் கொண்டிருத்தல் மற்றொன்று. உதாரணமாக 30 வயது இளை ஞனை 65 வயது முதிய வராக்கும்போது அவருடைய பௌதீகப் பண்புகளைக் கொண்டுவரக் கூடியதாக யதார்த்த ஒப்பனை அமைய வேண்டும். குறியீட்டின் மூலமும் ஒப்பனையை வெளிக்கொணரலாம். உதார ணமாகக் கிருஷ்ணர் பாத்திரத்திற்கு நீள அங்கியுடன் ஓர் மயிலிறகையும் குத்திவிட் டால் அது குறியீடாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகப்பூச்சுக்கள் மூலம் நிறமாற்றங்களை ஏற்படுத்தலாம். ஒப்பனை செய்து குறித்த பாத்திரத்தை அந்த இடத்திற்கு அந்த மன நிலைக்குக் கொண்டு வரமுடியும். உதாரண மாக வாய்க்கு மேலே புள்ளடி [X] போன்ற அடையாளம் இடும்போது பேச்சுச் சுதந்திரம் இல்லை என்பதை பார்வையாளருக்கு உணர்த்த முடியும்.

பூண் (கோமாளி) பாத்திரத்தின் வேட உடைகள்மூலம் அந்தப் பாத்திரத்தின் குண இயல்பை, மேடையில் தோன்றி அதன் செயற்பாட்டை காட்ட முன்பே பார்வையா ளர், கூடத்திலுள்ளோர் புரியக் கூடிய நிலையை ஏற்படுத்தும்.

ஆபரணங்கள், ஆடை, அணிகலன் ஒப்பனை உட்புகும்போது அங்கு அந்தஸ்து என்ற விடயத்தையும் தெளிவுபடுத்தும். உதார ணமாக அரசிப்பாத்திரம் ஆடம்பரமான ஆபர ணம் அணியும். அதேவேளை தோழிப்பாத் திரம் கவர்ச்சி குறைவான ஆபரணங்கள் அணியும்.

புராண இதிகாச வரலாற்று நாடகங்கள் அந்தக் காலத்திற்குரிய உடை ஒப்பனை யைக் கொண்டிருக்கும். இதனால் குறித்த நாடகம் அல்லது பாத்திரத்தின் காலத்தை அறியமுடியும். உதாரணமாக புறநானூற்றுக் காலப் பாத்திரம் அந்தக் கால உடை ஒப்ப னையைக் கொண்டிருக்கும் காலத்திற்குரிய நாடக ஒப்பனை காலத்தைப் பிரதிபலிக்கின் றது. ஆனால் இது அனைத்து மக்களும் விளங்கிக் கொள்வார்களா என்ற வினாவுக்கு உரியது.

ஒப்பனை மேலாகத் தோன்றும்போது தனியான ஆளுமை கொண்டவனாக நடிகன் தோன்றுவதை அனுபவரீதியாகக் கூறமுடியும். எனவே நாடகத்தில் வேட உடைப்புனைவு மிகவும் முக்கியமானது என அறிந்து கொள்ளமுடியும்.

*கந்தசாமி மணிவண்ணன்*
கலைப்பிரிவு (12A) 2002



# நாட்டிய நாடகம் (ஆடற்கதை)

*திரு. சி. சிவராஜன் - ஆசிரியர்*
நாடக கலாவித்தகர். விவசாய டிப்ளோமா (குண்டசாலை)
விவசாய டிப்ளோமா (J.C.A.I). ஆரம்பக்கல்வி விசேட பயிற்சி

ஆடற்கதை (நாட்டிய நாடகம்) என்பது நாட்டியத்தின் அடிப்படை அம்சத்தைக் கொண்ட ஆடல் மூலம் கதை சார்ந்த கருப்பொருளை ஒரு கூட்டு முயற்சியின் ஊடே வெளிப்படுத்துதல், இந்த ஆடற்கதை மரபை மேலைத்தேசத்தில் "பலே" (Ballet) என்று குறிப்பிடுவர். ஆனால் நாட்டிய நாட கம் என்ற சொல் தமிழில் ஆடற்கதை எனக் குறிப்பிடப்படும்போது ஒரு நல்ல எண்ணக் கருவை தோற்றுவிக்கும். நாட்டிய நாடகமா னது பரத நாட்டியம், கதகளி, குச்சுப்பிடி, மணிப்பூரி முதலிய நடன வகைகளை தனித்துவ மாகக்கொண்டு ஆக்கப்படலாம். ஆனால் தற்போது பன்னலைத்திரட்டு (Eclectic) முறை அதாவது பல தரப்பட்ட நடன வகைகளின் சாயல்களைக் கொண்ட கூட்டு அம்சம் கொண்டதாகவும் இந்த ஆடற்கதையானது தயாரிக்கப்படுவதை அவ தானிக்க முடிகின்றது. எது எவ்வாறிருப்பி னும் பரத நாட்டியம், கதகளி போன்ற நடன வகைகளிற்குரிய தனித்துவமான பண்பு களைக் கொண்டு அளிக்கை செய்யப்படும் ஆடற்கதை பலராலும் விரும்பப்படும் இங்கு நாட்டியத்துடன் நாடகமும் இணைந்து வருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் நாட்டியத்திற்குரிய பண்புகள் குன்றாமல் மேலோங்காமல் நாடகத்திற்குரிய பண்புகள் இணைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டியம் என்பது மிகச் செழுமைப் பட்ட மிக உன்னத வரையறை விதிக்கப் பட்ட ஊம் மொழி. இங்கு இலக்கணங்கள் வகுக்கப்பட்ட அந்த வரையறைக்கு உட்பட்ட நிலையில் நின்று கொண்டு நிகழ்த்துவதாகும். குறிப்பிட்ட இலக்கணம் அமைந்துள்ள எல்லை (Range) இல் நிற்கவேண்டும். இது ஒரு கயிற்றில் நடப்பது போன்றது. ஏனெனில் சற்று நழுவும் போது தன்னுடைய தனித்துவத்தை இழந்துவிடும். நாட்டியம் பேசும் மொழிகளாக அசைவு ஆட்டம், முத்திரை (அபிநயம்), ஸ்தானம், பாவம், அசைவுக்கோலம் (Pattern) போன்றன காணப்படுகின்றன. ஆடற்கதையின் ஊடே எமது பாரம்பரிய நிகழ்வுகளான புராண இதிகாச வரலாற்று நிகழ்வுகளையும் சமூகத்தின் தேவையை ஒட்டிய விடயங்களையும் நாட்டியத்தின் அம்சங்கள் நழுவாது கதையினூடே வெளிப்படுத்த முடியும்.

ஆடற்கதையின் மூலம் விடயத்தை வெளிப்படுத்துவதற்கு அங்க அசைவுகளான ஆங்கீக அபிநயமும் ஆகாரிய அபிநயம் எனப்படும் ஆடை அணிகலன்களும் முதன்மை பெறுகின்றது. ஆனால் பரத நாட்டியம் போன்ற நடன வகைக்குரிய நடு நிலையான உடை (Netural Dress) இங்கு தேவைப்படமாட்டாது. பொதுவாக புராண வரலாற்று நிகழ்வுகள் நடைபெறும் போது கவர்ச்சியான (Colour Full) உடையையே பார்வையாளர் விரும்புவர்.

## கரு (Theme)

ஆடற்கதையினைத் தெரிவு செய்யும் போது அந்த செயற்பாட்டின் ஊடே சமூகத்திற்கு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆடற் கதையின் கரு அமைய வேண்டும். உதாரணமாக "அரிச்சந்திர மயான கண்டம்" என்ற நாட்டிய நாடகத்தை எடுப்பின் உண்மை வெல்லும் என்ற சமூக விழுமியத்தை இப் புராண கதையினூடே வெளிப்படுத்த முடியும்.

கனகாத்திரம் மிக்க கரு என்பதனாலேயே இன்றும் அரிச்சந்திர மயான காண்டம் என்ற நிகழ்வு மக்களால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. இதில் இருந்து தெரிவு செய்யப் படும் ஆடற்கதையின் கரு அந்த நிகழ்வை வலுப்படுத்தும் என்பது புலனாகின்றது. புராண இதிகாச கதைகள் புத்த விவிலியக் கதையாக இருப்பினும் மக்களுக்கு கொடுக்கப்படும் செய்தி மிக முக்கியமானது. அதை விட இலக்கற்ற முறையில் நெறிப்படுத்தப் படும் ஆடற்கலை மூலம் வெறும் அழகியற் கோலங்களை மட்டுமே காண்பிக்கமுடியும். அதனால் எதிர்பார்க்கப்படும் இலக்கினை அடைய முடியாது. "ஆடற்கதை நிகழ்வு ஆனது மிக மிக நீண்ட அழகான பரப்பை உள்ளடக்கியது. ஆடற்கதைகளுக்கு கருவைத் தெரிவு செய்யும்போது புராண இதிகாசக் கதைகளின் கருவை மையப்படுத்தி எழுதத் தேவையில்லை. சமுதாயத்தின் தேவைகளை ஆதாரப்படுத்திய கருக்களை உறுதி செய்யக்கூடிய கதைகளை உருவாக்க முடியும்.

## இசையும் பக்க வாத்தியமும் (Music and Instruments)

இசையினுடைய மாதா பிதாவாக சுருதியும் லயமும் இருப்பதை நாம் அறிவோம் ஆடற்கதையானது ஊம் மொழி மூலம் வெளிப்படுத்தப்படுவதால் இந்தக் கதையை வளர்த்துச் செல்ல இசை முக்கிய ஊடகமாக இருக்கின்றது. குறித்த இராகங்களோடு கூடிய பாடல்களை நடிகன் உள்வாங்கும் போது அதற்கேற்ப தனது முகபாவங்களை வெளிப்படுத்த முடியும். உதாரணமாக சிவரஞ்சினி, முகாரி ஆகிய இராகங்களினூடே வெளிப்படும் பாடல் சோக உணர்வை கொண்டுவரும். நாடகத்தினுடைய தன்மையினைப் போன்று இங்கேயும் ஒரு கூட்டுக் கலை அம்சம் புலப்படுகின்றது.

எனினும் இசை அதாவது பாட்டின் ஆதிக்கத்தில் முழு நிகழ்வும் தங்கி இருப்பது விரும்பப்பட மாட்டாது. ஆடற்கதையின் கருப்பொருள் கூட பாட்டின் ஆதிக்கத்தில் தான் முழுமையாக தங்கியிருக்கும் ஒரு குழப்ப நிலை இருக்கக்கூடாது. இதற்கு காரணம் சரியான நெறியாள்கை முறை தெரியாமையேயாகும். இசையுடன் பக்கவாத்தியக் கருவிகளும் இணைகின்றன. தேவைக்கு அதிகமான வாத்தியப் பிரயோகம் கூட இந் நிகழ்வின் தனித்துவத்தை இழக்கச்செய்யும் நாட்டியம் என்பது பாவம், ராகம், தாளம் என்பவற்றுக்கு கட்டுப்பட்டது. எனவே தாளம் பிசகாமல் நிகழ்வை நகர்த்திச் செல்ல நட்டுவாங்கத் தாளத்தோடு இசைந்து நிற்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருதங்கம் என்பது அசைக்க முடியாத உண்மை. தாளத்துக்கு ஏற்பவே இந்த நிகழ்வு ஒரு "ரிதும்" பெற்று இருப்பது குறிப் பிடத்தக்கது. நாடகத்தில் பாவிக்கப்படும் ஒலிகள், ஓசைகள் கூட வாத்தியங்களின் ஊடே வழங்கி நாடகத்தின் பண்பை ஒத்த தாக ஆடற்கதையில் வெளிப்படுத்த முடியும். பொதுவாக இசை கலையில் வல்லமை பெற்றவர்கள் பாடும் போது தமது பாடல் திறமையை வெளிக்கொணர முனைந்து ஆடற்கதை மேடையில் நடைபெறுவதை மெய்மறந்து பாடுவர். இது அவர்களின் திறனை வெளிப்படுத்தினாலும் கதை ஓட் டத்தை குறுக்கீடு செய்யும் எனவே இசைக் கலைஞர்கள் மிகக் கவனமாக தாளத்துக்கு இசைந்து தமது பாடல்களை இசைக்க வேண்டும். இங்கு பாடலுக்கு ஏற்ப நடிகர்கள் மேடையில் நடிக்கின்றார்கள் என்பதை மறந்த விடக் கூடாது.

இசைக் கருவிகளை இசைக்கும் கலைஞர்களும் தமது இசைக் கருவிகளின் ஊடாக நாட்டிய நாடக நிகழ்வு வளர்ந்து செல்வதை மறந்துவிடக்கூடாது. சில கலை ஞர்கள் இசைக்கத் தொடங்கினால் பாடல் நட்டுவாங்கம் ஆகிய நிகழ்வுகளை மேலோங்கி நிற்கத்தக்கதாக இசைப்பதை காண்கிறோம். நிகழ்ச்சி நடைபெறும் வேளை இதற்கு ஒரேயொரு வழி ஒலிபெருக்கி பாவிப்பின் அங்கு சென்று எந்த வாத்தியத் திலே இருந்து வெளிப்படும் சத்தத்தை குறைக்க அல்லது கூட்ட வேண்டுமோ அதற்குரிய திருதியை அழுத்தி சத்தத்தை சீர்செய்வதே பொருத்தமான வழி. பொருத் தமான வாத்தியங்களை இசைக்க வேண் டும். உதாரணமாக கண்ணன் ஆயர் பாடி யில் நிற்கும் நிகழ்வு எனில் புல்லாங்குழல் ஓசை, போர் ஆரம்பிக்கும் வேளை சங்கு ஒலி வழங்கல். இவ்வாறான நிகழ்வு மேடை யில் நடைபெறும் போது ஆடற்கலையானது சிறப்படையும் தாள வாத்தியங்களின் ஊடாக இடி மின்னல் குதிரையின் குழம்போசை, கத்தி தீட்டல், குயில், பறவைகளின் சத்தங் கள் பொழுது புலர்தல், அம்பு எய்தல் போன்றவற்றை ஏற்படுத்தலாம். பொதுவாக இசையானது நடிகனை அந்தத் தாளத்தக்கு எடுத்துச் சென்று நடிக்க வைப்பதுடன் பார் வையாளரையும் குறித்த தாளத்துக்கு அழைத்துச் செல்வதை உணர முடிகின் றது. இது குறித்த நிகழ்வே இசைப் பணி யின் உச்ச நிலையாகும். ரச பாவங்களுக்கு ஏற்ப இராகங்கள் அமைய வேண்டும. உதாரணமாக குழந்தையை தாலாட்டும்போது நீலாம்பரி இராகம் பாடவேண்டும்.

## வேட உடையும் ஒப்பனையும்

ஒரு பாத்திரத்தை அரங்கத்தில் கண்ட உடன் வேட உடை ஒப்பனையே முதல் பதிவை பார்வையாளன் மனதில் ஏற்படுத் தும் (First Impression) இது அந்த நிகழ்வு முடியும் வரையும் மட்டுமல்ல தொடர்ந்தும் ஒரு பதிவை அவனிடம் ஏற்படுத்தும் எனவே பாத்திரங்கட்கு பொருத்தமான வேட உடை யினை நாட்டிய நாடகத்தில் அணியலாம். இந்த வேட உடை பரத நாட்டிய நிகழ்வில் (Neutral Dress) நடுநிலையான உடையாக இருக்கும் வேட உடையின் மூலம் பாத்திரத் தின் வயது, அந்தஸ்து, காலம், இடம், பதவி, உளவியல் மாற்றம், மதம், பண்பாடு, பருவமாற்றம், இலட்சியம் என்பவற்றை அறிவிக்க உதவும். உதாரணமாக சேக்ஸ்பி யரின் நாடகங்களில் வரும் பாத்திரங்களில் பெரும்பாலானவை எலிசபெத்தின் காலத்துக் குரியவை, இப்சனின் ஒரு பாவை வீடு நாடகத்தின் நோறா பாத்திரத்தின் உடை நோர்வே நாட்டின் குளிர் பிரதேச உடை யைக் காட்டும். இது வேட உடையின் சிறப்பம்சம் ஆகும்.

ஒப்பனையானது சிறப்பாக மேற்கொள் ளப்படின் மேடையில் தோன்றும் பாத்திரத் துக்கு ஒரு தற்துணிவு தன்னம்பிக்கை ஏற் படுவதை அனுபவமாக காணமுடிகின்றது. நான்கு வகையான அபிநயங்களில் ஆஹார்ய அபிநயம் இந்தக் கருத்தை மேலும் உறுதி செய்யும். பொதுவாக ஆங்கீக, ஆகார்ய, வாச்சிக, சாத்வீக அபிநயத்தின் மொத்த வடிவமே நாட்டிய நாடகம் என்று கூறலாம். ஆங்கீக அபிநயத்தினுள் நிருத்திய, நிருத்த ஆடல்களைக் குறிப்பிடலாம். இசை, உரை யாடல், வாத்தியக் கருவிகளின் தீர்மானம் ஜதி என்பன வார்சிக அபிநயத்தினுள் அடங்கும் நாட்டிய நாடகத்தைப் பொறுத்த வரையில் உணர்வுகளின் வெளிப்பாடு சாத் வீக அபிநயம் எனக் குறிப்பிடப்படும் எனி னும் நாட்டியத்திற்குரிய நாட்டிய தர்மி கவனிக் கப்படவேண்டும். உதாரணமாக அரிச்சந்திர மயான காண்ட நாட்டிய நிகழ்வில் சந்திர மதி கண்ணீர் விட்டு அழக்கூடாது உணர்வுகள் மூலமும் முகபாவ முகமும் கருத்தைப் புலப்படுத்துவது நாட்டிய தர்மி எனப்படும் கண்ணீர் விட்டு அழுதல் லோக தர்மி எனப்படும். எனவே நாட்டியத்துக்குரிய அம்சங்கள் வழுவாது கவனிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளி அமைப்பு

நாட்டிய நாடகத்தை நெறியாள்கை செய்பவருக்கும், இசையமைப்பாளர், ஒப்பனை யாளர், நடிகர் என்பவர்களுக்கிடையே நெருங்கிய உறவு தேவை. ஒருவருடன் ஒருவர் கலந்து பேசியே நல்ல தீர்மானங் களை எடுக்க வேண்டும். ஒளி அமைப் பாளர் முதலில் பிரதியை நன்கு வாசித்து நிகழ்வை ஒத்திகைகளின் போது பார்வை யிட வேண்டும். மங்களகரமான நிகழ்வு அரங்கில் இடம்பெறும் போது மஞ்சள் நிற ஒளியைச் செலுத்தலாம். ஆபாயம், போர் என்பன நிகழும்போது சிவப்பு ஒளியைச் செலுத்தலாம். இவை சில உதாரணங்கள் ஆகும். ஒரு பாத்திரத்தை முதன்மைப்படுத்த பொட்டொளி (Spot Light) பயன்படும். வேட உடைக்கும் ஒளிக்கும் தொடர்பு இருப்பதை மறந்து விடக்கூடாது. பொதுவாக சாதாரண மின் குமிழ் மூலம் ஒளியை வழங்கலாம். Tube Light பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் பாத்திரங்கள் விகாரமாகத் தோற்றம் கொடுக் கும். எனவே ஒளி அமைப்பாளர் விடய அறிவு நிரம்பியவராக இருக்கவேண்டும் அல்லது நிகழ்வையே பாழாக்கி விடுவார். ஒப்பனை வேட உடை இரண்டின் நிறத்தை யும் ஒளி (Light) மாற்றாமல் இருக்க வேண்டும். வேட உடையின் இழை (Texture) ஐ கூட தீர்மானிக்கவேண்டும். இந்தக் குறிப்புக்கள் ஒளி அமைப்பின் முக்கியத்துவத்தை நன்கு புலப்படுத்தும்.

## காட்சி அமைப்பு

ஆடற்கதையின் போது பொதுவாக காட்சி அமைப்பு தேவைப்படமாட்டாது. நடிக னாலேயே காட்சி அமைப்பை உருவாக்கி பார்வையாளர் மத்தியில் இடம் பிடிக்கலாம் என்பது அனுபவ வாயிலான உண்மை. எனினும் தற்போது ஒளி, இசை யமைப்பு, பக்கவாத்திய கலைஞர்களின் ஊடாக காட்சி அமைப்பை ஏற்படுத்தலாம். உதாரண மாக இசைக்கருவி பயன்படுத்துபவர் காலைக் காட்சியை அரங்கில் காட்டும்போது நடிகர் நடனம் மூலம் கருத்தைப் புலப்படுத்த பூபாள இராகத்தை வயலின் மூலம் கொடுக்கலாம் போர் தொடங்கும்போது போர்முரசு கொட்ட லாம். இவை எல்லாம் நெறியாளரின் உத்தி யில் தங்கி உள்ளன. சீன் பயன்படுத்துவது ஆடற்கதை நிகழ்வில் தேவைக்கு மிஞ்சிய விடயம் என்றே கருதலாம்.

## ஆடற்கதை உருவாக்கும்போது

ஆடற்கதை என்பது தனியே நாட்டி யம் என்று கருதாவிட்டால் இலகுவாக ஆடற்கதையை எழுதிவிடலாம். இக்கருத்தை மேலும் நுணுகி அணுகும் போதுதான் உண்மை புலப்படும். அதாவது பெரும்பா லான நாட்டிய நாடகப் பாடல்களில் பொருத்த மற்ற முறையில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று முழுமையான பாடல்களைப் புகுத்தி ஆடற்கதையின் உண்மைக் கோலத்தை சிதைக்கின்றனர். அத்துடன் ஆடற்கதை நெறியாளருக்கு கதையம்சம், விடய அறிவு என்பன பூரணமாகத் தெரிய வேண்டும் அத்துடன் இவர் இசை அறிவு, வாத்தியங்களை ஓரளவு கையாளக்கூடிய வராக இருப்பின் நிகழ்வின் வெற்றி இங்கு கூறவேண்டிய ஒன்றல்ல. அரங்கில் நிகழ்வு நடை பெறும்போது பார்வையாளர் கூடத்தில் இருப்போரை ஒன்றிக்க வைப்பது நிகழ்ச்சி யின் வெற்றியைக் காட்டும். சொல்லப்போகும் போது கரு என்ன என்பதை தயாரிப்பாளர் தெரிந்துகொள்ள வேண்டும். கருவைச் சுற்றி மேடைக்கு ஏற்ப கதைப்பின்னல் அமைய வேண்டும். கதைக்கு ஏற்ப பாத்திரங்கள் இயக்குனரால் உரிய முறையில் இனங் காணப்பட வேண்டும். சில சந்தர்ப்பங்களில் போதிய அளவு நடிகர்கள் அல்லது நடனக் காரர் இல்லாவிட்டால் ஒப்பனை, ஆடல் மூலம் அதை நிவர்த்தி செய்து பாத்திரத் தின் பண்பை வெளிக்கொணர முடியும். பாத்திரங்களுக்கு இடையேயான கருத்துப் பரிமாற்றங்களை வரையறை செய்து கொள்ளவேண்டும். அடுத்த அங்கமாகத் தான் தாள நடைக்கு ஏற்ற பாடலாக அல்லது சந்தத்துக்கு ஏற்ற வசன நடை யாக வாச்சிக அபிநயம் அமையவேண்டும். இத்தகைய ஒழுங்குமுறை பேணப்படும்போது தான் கதையைத் தாங்கி நிற்கும் பாத்திரங் களின் இயல்பு நிலை துல்லியமாக வெளிப் படும். இந்நிலையில் கதைப்புலம் நன்கு விளங்கக்கூடியதாக பாத்திரங்களின் நடமாட் டம் அமையும்.

## ஆடற்கதை நிகழ்வு பற்றிய கண்ணோட்டம்

ஆடற்கதையானது கட்புல, செவிப் புலத்துக்குரிய நிகழ்வு ஆகும். பார்வையா ளன் ஒருவரின் மனதில் ஏற்படும் உணர்வு மனமாற்றம் என்பன இந்நிகழ்வின் வெற் றியை எடுத்துக்காட்டும் என்பதில் ஐயமில்லை.

*கலை இன்பமே நிலையான இன்பம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை நில அளவையும் சங்கிலி நாடா அளவீடும்

# BASE SURVEY AND CHAIN AND TAPE MEASUREMENT

### நில அளவை வரைவிலக்கணம்

பூகோளத்தின் மேற்பரப்பில் அல்லது பூமியின் எப்பாகத்திலாவது தேவைக்கேற்ப பிரதேசங்களை அளவிடல் நில அளவை எனப்படுகிறது. அதாவது ஒன்றுடன் ஒன்று சார்பளவில் தொடர்புடைய நிலையங்கள் தூரங்கள் உயர வேறுபாடுகள் திசைகள் போன்ற இன்னோரன்ன தகவல்களை அளவீடு செய்தல் நில அளவை எனலாம் எனினும் நில அளவை வகை அளவீடு அடிப்படைத் தொழில்நுட்பம் என்பனவற்றிற்கு ஏதுவாய் மாறுபட்டு அமையலாம்.

### நில அளவை வரலாறு

இந்நில அளவை முறையானது முதன் முதலிலே எகிப்திய நாகரீக மக்களின் மூலம்தான் உருவாக்கப் பெற்றது. அதாவது இங்கே காணப்பட்ட விவசாய நிலங்களானது வெள்ளப் பெருக்கினால் அழிவதனால் அதன் பரப்புக்களின் எல்லைகள் பாதிப்படையும் இதனால் இந்நாகரீக மக்கள் நிலஅளவை முறைமூலம் படங்களைத் தயாரிக்கத் தொடங்கினர். இதற்கு ஆதாரங்களாக கி.மு.2800ம் ஆண்டளவில் மொசப்பத்தேமியாவில் வாழ்ந்த விவசாயிகளினால் வரையப்பட்ட வரைபடம் கிடைத்துள்ளது. இப் படத்திலே விவசாய எல்லைகளை வரைபடமாக கழிமண்தகட்டில் வரையப்பட்டுள்ளது. இதிலே மலைகள், ஆறுகள், எல்லைகள் என்பன தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

பின்பு இந்நில அளவையானது 18ம், 19ம் நூற்றாண்டுகளிலே தேசப்படங்களை வரைந்து கொள்ள நாடுகள் ரீதியாக இது வளர்ச்சி பெற்று பின்பு 20ம் நூற்றாண்டில் விஞ்ஞானம், போக்குவரத்து, கணிதம், புவியியல் வரைபடவியல், அரசியல் போன்ற பல்வேறு துறைகளில் பின்னிப் பிணைந்துள்ளது.

### நில அளவீட்டு முறைகள்

புவிமேற்பரப்பை அளவீடு செய்யும் முறைகளாக பின்வரும் 5 அளவை முறைகள் காணப்படுகின்றன. அவையாவன:

1. சங்கிலி நாடா நில அளவை (Chain and Tape survey)
2. தளபீட கருவி நில அளவை (Plane Table survey)
3. தியோடலைற் நில அளவை (Theodlite survey)
4. மட்டமானிக் கருவி நில அளவை (Levelling survey)
5. அரிய திசைகாட்டிக் கருவி நிலஅளவை (Prismatic compass survey)

இவற்றிலே சங்கிலி நாடா நில அளவை முறைபற்றி சிறப்பாக நாம் ஆராய்ந்து நோக்கினால் புவியின் ஒரு பகுதியனை சங்கிலி நாடா போன்ற கருவிகளை பயன்படுத்தி அளவீடு செய்தல் சங்கிலி நாடா அளவீடு என கூறப்படுகிறது. இந்நில அளவை முறையினில் சங்கிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாடா என்பன பிரதான உபகரணங்களாக விளங்க வேறு சில உபகரணங்களும் இந் நில அளவையில் பயன்படுத்தப்படுக்கிறது. அவையாவன:

i. நிரை அளவுகோல்
ii. கூளை
iii. குத்தூசி அல்லது அம்பு
iv. திசையறி கருவி
v. வெளிக்கள பதிவேடு

இக்கருவிகளின் மூலம் சிறந்த மட்ட மான நிலப்பகுதிகளிலே கூடுதலாக நில அளவீடு மேற்கொள்ளப்படுகின்றது. மட்ட மற்ற பிரதேசங்கள் மலைப்பிரதேசங்கள் நீர் கொண்ட பகுதிகள் சதுப்பு நிலங்கள் அடர் காட்டுப் பிரதேசங்களில் இந்நில அளவீடு மேற்கொள்ளுதல் கடினமாகும் இருந்தும் சில தொழில்நுட்ப முறைகளைப் புகுத்தினால் அவற்றிலும் மேற்கொள்ளலாம் இச்சங்கிலி நாடா நில அளவீட்டை ஆரம்பிக்க முன்னர் 5 ஆரம்ப நடவடிக்கையினை மேற்கொள்ளப் பட வேண்டியுள்ளது.
அவையாவன:

1. அளவையிடும் பரப்பு சங்கிலிநாடா அள வீட்டு முறைமூலம் அளவிட ஏற்ற பௌதீக பண்பாட்டு அம்சங்கள் உள் ளதை உறுதிப்படுத்தல்.
2. சங்கிலி நாடா அளவையில் பயன்படுத் தப்படும் அனைத்து உபகரணங்களை யும் ஓரிடப்படுத்தி செவ்வை பார்த்துக் கொள்ளல் வேண்டும்.
3. அளவீடு மேற்கொள்ள உத்தேசித்த பரப்பை நோட்டமிட்டு எல்லைகள் அள விட வேண்டிய பௌதீக பண்பாட்டு உறுப்புகளை வரையறை செய்தல்.
4. கூளைகள் ஏற்றப்படும் புள்ளிகள் சங்கிலிக் கோடுகள் இடப்பட வேண்டிய போக்குகளை தெரிவுசெய்து அடையாள மிடல்.
5. மேற்படி 4 அம்சத்தையும் கவனத்திற் கொண்டு அளவிட உத்தேசிக்கப்பட்ட பரப்பின் மாதிரி வரைபடத்தை தயாரித்துக் கொள்ளுதல்.

இவ்வாறாக களக்குறிப்புப் புத்தகத்தில் வரை யப்பட்ட மாதிரிப்படத்தின் உதவியுடன் ஒவ்வொரு சங்கிலிக் கோடுகளின் போக்கி லும் அளவிட உத்தேசித்து பௌதீக பண் பாட்டு அம்சங்களிற்கு நிலைக்குத்துக்களை யும் (Offset) அவ்வவ் நிலைக் குத்துக்க ளின் வாசிக்கப்படும் இணைப்புக்களைக் களக் குறிப்பேட்டில் பதிவுசெய்தல் வேண்டும். இவ்வாறாக மாதிரிச் சங்கிலிக் கோடுகளை அமைத்து நில அளவை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட பகுதி ஒன்றை பின்வரும் வரைபடம் காட்டுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வரைபட விளக்கம்

| | | |
|---|---|---|
| ஆதாரக்கோடு | : | A, C |
| கூளைகள் | : | A, B, C, D, E, F, G |
| பரீட்சார்த்தக் கோடுகள் | : | B-G, E-F |
| சுற்றுவளை கோடுகள் | : | A-B, B-C, C-D, D-E, A-E |
| கட்டடம் | : |  |
| கிணறு | : | ○ |
| மரங்கள் | : |  |

இவற்றிலே ஓர் பிரதேசத்தை அளவீடு செய்வதற்கு மிகவும் ஓர் அடிப்படை அம்ச மாகக் காணப்படுவது ஆதாரக்கோடே ஆகும். இவ் ஆதாரக் கோட்டைத் தெரிவு செய்யும்போது பின்வரும் அம்சங்களை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் அவை யாவன:

1. மொத்தப் பிரதேசத்தினையும் பிரதிபலித்தல் வேண்டும்.
2. ஓர் கோடாக அமைதல் வேண்டும்.
3. தடங்கல் ஏற்படக்கூடாது.
4. கோடானது முறிவடைதல் கூடாது.

இவ்வாறாக பெறப்பட்ட வெளிக்களக் குறிப்பினை வரைபடமாகக் ஆக்கும்போது அளவுத்திட்டம் திசை, தெளிவு நோக்கம் போன்றவற்றைக் கவனத்தில் எடுத்து குறித்த அளவுத்திட்டத்திற்கேற்ப நடுநிலமை தவறாது வரைபடமாக்குதல் சிறந்த நில அளவை யாளனின் பண்பாகும். இவ்வாறாக ஓர் பிரதேசத்தை அளவீடு செய்த இந்நில அளவை முறையினில் சில வழுக்கள் காணப்படுகின்றன.

அவையாவன:

1. சங்கிலி, நாடா என்பனவற்றின் நியம நீளம் கூடி அல்லது குறைந்திருந்தால் ஏற்படும் வழுக்கள்.
2. சங்கிலி தொடர் அளவீடு செய்யும் போது சரியான திசையாக்கம் இன்மை சரியாக நீட்டாமை போன்றவற்றால் ஏற்படும் வழுக்கள்.
3. கிடையின்மை, தொய்தல், இழுவை மாறல் நீட்டாமை என்பவற்றால் ஏற்படும் வழுக்கள்.
4. வெப்பமாற்றத்தால் சங்கிலிநாடா விரி வடைதல், சுருங்குதலால் ஏற்படும் வழுக்கள்.
5. பிழையாக வாசித்தல் தவறாய் எண்ணு தல் பிழையாக களக்குறிப்புப் புத்தகத்தில் எழுதுவ தனால் ஏற்படும் வழுக்கள்.
6. கவனக்குறைவாய் பிடித்தல் அடையாள மிடல் வாசித்தல்.

## அம்புநிலை இடப்பெயர்ச்சி

இவ்வாறாக இந்நில அளவீட்டு முறை யினில் மேற்போர்ந்த குறைபாடுகள் காணப் படுகின்றதை நாம் அவதானிக்க முடிகிறது.

## முடிவுரை

இவ்வாறான இச்சங்கிலி நில அள வீடானது மிகவும் ஓர் தாழ்ந்த தொழில் நுட்பமாகவே காணப்படுகிறது. பல பிழைகள், வழுக்கள், சிரமம், காலதாமதம் கூடிய ஆளணி போன்ற சிரமங்களை ஏற்படுத்தக் கூடிய சங்கிலிநாடா நில அளவீடாகும் எனி னும் குறைந்த முதலீடு, எளிய தொழில் நுட்பம் கையாள்வது இலகு சிறிய பரப்பு களை அளவீடு செய்து கொள்தல் சுலபம் என்பவற்றால் இச் சங்கிலிநாடா நில அளவையானது நீடித்து நிலைத்துள்ளது.

### கட்டுரை ஆக்கத்திற்கு துணைபுரிந்த நூல்கள்

1. செய்முறைப் புவியியல் (1)
— S. T. B. இராஜேஸ்வரன் M.A

2. ஆற்றல்சஞ்சிகை இதழ்கள்11,12
— செல்வி.சோபனா பிறேமினி ஸ்ரீபன் B.A. Hons

க. முகேதாஸ்
13 கலைப்பிரிவு (2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணர் 1999/2000
SCOUT TROOP



குருளைச் சாரணர் 1999/2000
CUB SCOUT PACK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் வாழ்வும்

"சமயமும் வாழ்வும் இணைந்திட்ட போது தான் உலகம் பிரகாசிக்கின்றது" என்பது ஒரு கவிஞன் கூற்று. உண்மைதான் சமயமும் வாழ்வும் இணைய வேண்டும். அதாவது தசையும் நகமுமாக வேண்டும். அப்போதே வாழ்வில் ஒளி உண்டாகும். மனம் தூய்மையடையும். நம்பிக்கை உருவாகும். உண்மைகள் புரியும். அதற்காக மூட நம்பிக்கையினுள் மூழ்குமாறு கூறவில்லை. உண்மைகளை கண்டு தெளிந்து அதன் வழி நின்று ஒரு ஒழுங்கில் ஒழுகுதலே வாழ்வு. சமயம் என்னும் போது அது 'வழி' என்று பொருள்படும். 'இறைவன் அடையும் வழி' என்று கூறுவர். அறிஞர் இரண்டும் உன்னத வழிகள் என்பர். உண்மையை துலங்கச் செய்யும் பாதைகள் இரண்டும் இணைகின்ற போது உலகம் ஓங்கும்.

சமயம் என்ற ரீதியில் பார்க்கின்ற போது உலகிலே எத்தனையோ வகைச் சமயங்கள் இருக்கின்றன. அவைகளுள் பல வேத ஆகமங்களை கொண்டவை ஆயினும் அவை ஒன்றைத்தான் கூறுகின்றன. அதாவது அச்சமயங்கள் இறைவனை அடையும் வழியை கூறுகின்றன. அதாவது அவற்றில் பல கிளையாறுகள் உள்ளன. அவை எல்லாம் ஓடியோடி இறுதியில் சங்கமிக்கும் இடம் கடல் ஆகும். அது போன்று தான் இந்த சமயங்களும் பல உள்ளன. அடையும் இடம் இறைவனின் பாதங்களே. "வாழ்க்கை என்பது வாழ்வதற்கே". ஆம் வாழ்க்கையை சிலர் சீரழிக்கிறார்கள். அதாவது நாங்கள் வெளிச்சத்துக்கு செல்கிறோம் என விட்டில் பூச்சிகள் விளக்கின் நெருப்பில் கருகுவது போல வாழுகின்றார்கள். இது நிதர்சனம். விட்டிலைப் போன்றவர்களுக்கு உண்மையை உணர்த்தவும், துன்பமுற்றவர்களுக்கு ஆறுதல் சொல்லவும் இன்ப போதையில் இருப்பவர்க்கு போதையை தெளிவிக்கவும் இந்த சமயம் பயன்படுகின்றது.

உண்மையிலே வாழ்விற்கு உரமூட்டுவது சமயம்தான். "யானைக்கு தும்பிக்கை போல மனிதனுக்கு நம்பிக்கை" என்று கூறுவது சமயம்தான். சோர்வுற்று இருப்பவனுக்கு தட்டிக் கொடுக்கும். இறைவன் ஒருவன் இருக்கிறான் என்ற பயத்தில் வாழ்கிறான். இதனைக் கண்டு பிறர் பாவம் செய்யாமல் வாளாதிருந்து விடுவர். "பிறப்புண்டேல் இறப்புண்டு" என்றும் அதாவது ஒளி உண்டெனில் இருளும் உண்டு என்றும் சமயம் கூறி நிலையாமையை அறிவுறுத்தி மக்களை நிலையான காரியம் செய்யத் தூண்டுகிறது. சமய நூல்கள் இதற்கு பேருதவி செய்கின்றன. வேதங்கள், ஆகமங்கள், பைபிள், திருக்குறள், நாலடியார், திருக்குர்—ஆன், ஆசிய ஜோதி என அவற்றை சொல்லிக் கொண்டே போகலாம். இவை அறத்தை, தர்மத்தை, நியாயத்தை, வாழ்வை, அதற்குகந்த நல்லவற்றை கூறுகின்றன. இதனால் மனிதவாழ்வு வளம்பெற உதவுகின்றது.

ஆகவே இந்த சமயம் வாழ்விற்கு முக்கியமானது என்பது முடிந்த முடிபு. இந்த சமயமும் வாழ்வும் பிரிக்க முடியாதவை. அதாவது இரத்தமும் நீரும் போல, தசையும் நகமும் போல என்று கூறலாம். எது எவ்வாறு இருந்தபோதிலும் மனிதன் இந்த சமயத்தின் மூலம் நெறிப்படுத்தப்படுகிறான். உண்மைகளை உணர்கிறான். ஒரு ஒழுங்கிலே வாழ்கிறான். நல்லகம் அவர்களில் குடிகொள்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே வாழ்விற்கு சமயம் முக்கியம். சமயமும் வாழ்வும் இன்றியமையாதவை.

செ. தனேஸ்வரி
13 கலைப் பிரிவு (2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெமோறியல் (மாணவ) அதிபர்

மெமோறியல் அன்னையின் மாண்பு மிகு மாணவனாய்
எம் போன்ற மாணவர்க்கெல்லாம் இனிய தந்தையாய்
கண்போலெமைக் காத்து நல்வழி காட்டிடும்
பண்பான பலர் போற்றும் அதிபராம்

தடிபோல் தோற்றம் உடையவராம் நல்ல
தாடியை முகத்தில் உடையவராம்
கோடி பொன் கொடுத்தும் இவர் போலலோர் அதிபரை
தேடிக் காண முடியாது போங்கள்

பாடசாலையே அவரது கோவிலாம்
நடேசரே அவர் போற்றும் தெய்வமாம்
விடா முயற்சியே அவரது வேத மந்திரமாம்
திடீர் முடிவெடுப்பதில் சிறந்த தீரனாம்

நித்தம் நித்தம் மாணவர் நாம்
கூத்தும் கும்மாளமும் அடித்திடும் வேளையில்
சத்தம் போடாமல் எம் பின் வந்து நின்றே
பித்தம் தெளியப் போட்டிடுவார் பிரம்பாலே

புத்தம் புது விடயங்களை அவரெமக்கு
நித்தம் சித்தம் தந்திடுவார் அழியாச்
சொத்திந்த கல்வியே என்றெமக்கு
புத்தி சொல்லித் தந்திடுவார் நிதம்

திடீர் திடீரென வகுப்பிற்கு வந்திடுவார்
சுடச் சுட வினாக்களை தொடுத்திடுவார்
பட படவென பதில் கூறத் தவறின்
சட சடவென முதுகில் சுள்ளிட தந்திடுவார்

ஆசிரியரிடம் நிறைவாக வேலை வாங்குவதில்
அசகாய சூரராம் எம்வதிபர் போல் யாம்
காசினியில் வேறொருவரையும் ஒருபோதும்
காண முடியாது கால்கடுக்க ஓடினாலும்

*ரூபிணி செல்வராஜா*
**13 வர்த்தகப் பிரிவு (2001)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Stages of Human Life

Childhood is a stage of human life lasting from the end of babyhood at about 18 months of age until the beginning of adplescence at 12 to 14 years. As bodyhood ends and childhood begins, four important changes occur. Children learn to walk and run, which allows them to explore without adult help. They begin to use language to communicate with others. They start to think and solve simple problems by using symbols, and remember knowledge about the world around them. Finally, they begin to observe and imitate the people around them.

Childhood is divided into two stages. Early childhood lasts from is months to 6 years. Late childhood lasts from about 6 years to 12 or 14 years of age. During each of these stages children change in their use of language, their ways of thinking, their behavior and the way they interact with one another, and their understanding of themselves and others.

During early childhood adults and older children care about their physical setup and values, to acquire knowledge that will prepare them to live in their family and community. Throughout childhood – children are gradually given more independence and responsibility for their own behavior. In many societies, childhood is followed by adolescence, a further time of preparation and learning for adulthood.

However, in some parts of the world, children of about 14 are treated as adults, and begin to work, marry and become parents.

*T. Satkunarajah*
12 Arts 2000

**"Education Loses it's vitamins when its strained through the medium of a foreign tongue"**

***- Rabirdranth Tagore -***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண மாணவர்களும் சப்ரகமுவ பல்கலைக்கழகமும்

கடந்த காலங்களில் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் புதிய பல்கலைக் கழகங்களின் புதிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தயங்கினார்கள். இதற்கு காரணம் அரசியற் பிரச்சனையும் கற்கை நெறி சம்மந்தமான போதிய தகவல்கள் குறைவாக இருந்தமையுமே காரணம் ஆகும். இதனால் பல மாணவர்கள் தமது பல்கலைக் கழக அனுமதியை இழந்த துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானார்கள். அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பல மாணவர்களும் இடம் தொடர்பான பீதியினால் பல்கலைக்கழக அனுமதியை ஏற்காது விட்டனர். ஆனால் தற்போது இன்னிலை வெகுவாக மாறி விட்டது. கடந்த காலங்களில் சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களால் கற்கை நெறிகள் சம்பந்தமாக வழங்கப்பட்ட விளக்கங்களாலும் யாழ் மாவட்டத்தில் அவர் களினால் நடத்தப்பட்ட கூட்டங்களினாலும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இப் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகளின் தாற்பரியத்தை உணர்ந்துள்ளனர். இதன் காரணமாக யாழ் மாவட்டத்தில் இருந்து இப்பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர் களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எனினும் எதிர்காலத்தில் இந்த பல்கலைக் கழகத்துக்கு அதிகமான மாணவர்கள் அனுமதியைப்பெற அவர்களுக்கு போதிய விளக்கங்கள் கொடுக்க வேண்டியது சிரேஷ்ட மாணவர்களின் கடமையாகும்.



சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அமை விடத்தை நோக்குகின்றபோது கொழும்பில் 162கி.மீ. தொலைவில் கொழும்பு—பதுளை பிரதான வீதியில் இருக்கும் பம்பஹின்ன சந்தியில் இருந்து 500M தூரத்தில் அமைந் துள்ளது. ஓர் அழகான எழில் கொஞ்சும் இரத்தினக் கற்கள் வளம் கொழிக்கும் இரத்தினபுரி மாவட்டத்தில் இப்பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. 158 ஏக்கர் நிலப் பரப்பில் இதன் விஸ்தீரணம் அமைந்து காணப்படுகின்றது. மேலும் எவ்வித அரசி யல் சிக்கலோ பாதுகாப்பு கெடுபிடிகளோ இல்லாத கற்றலுக்குரிய அமைதியான பிரதேச மாகக் காணப்படுகின்றது. அத்துடன் இப் பிரதேசங்களில் தமிழ்மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சப்பரகமுவ பல்கலைக்கழக வரலாறு இலங்கையில் இணைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகள் அமைக்கப்பட்ட 1992ம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகின்றது. இந்த இணைக்கப்பட்ட சப்ரகமுவ பல்கலைக்கழகம் 1995ம் ஆண்டு தேசிய பல்கலைக்கழக மாக தரமுயர்த்தப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தின் கீழ் ரஹங்கல, புத்தல போன்ற வளாகங்களும் இணைக்கப்பட்டுள்ளன. பல் கலைக்கழக வரலாற்றிலே விஷேட இடத் தைப் பெற்றுள்ள சப்ரகமுவ பல்கலைக் கழகம் பின்வரும் சட்டவிதிகளுக்கு அமைய தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளு கின்றது. இப்பல்கலைக்கழகம் இலங்கை யின் பன்னிரண்டாவது பல்கலைக்கழகமாய் அமைந்து தன் வளமான நான்கு ஆண்டு கால வளர்ச்சியைப் பூர்த்தி செய்துள்ள துடன் இங்கு பயின்ற மாணவர்களுக்கான முதற்பட்டமளிப்பு விழாவினையும் 1998ம் ஆண்டு யூன் மாதம் தற்போதைய ஜனாதி பதி மாண்புமிகு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் நடாத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய 1000க்கும் மேற்பட்ட பட்டதாரி மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக் கின்றனர். இப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக (Vice-Chancellor) பேராசிரியர் தயானந்த சோமசுந்தர அவர்கள் இருக்கின் றனர். பதிவாளராக (Registrar) திரு எம். எஸ். ரத்னதிலக கடமையாற்றுகின்றார்.

இப்பல்கலைக்கழகமானது ஐந்து பீடங் களைக் கொண்டு அமைந்திருக்கின்றது.

(i) முகாமைத்துவ பீடம் (Faculty of Business Studies) (Management RST) இதன் சிறப்பு கற்கை நெறிகளாக வணிக முகாமைத்துவம் (Business Management), நிதி முகாமைத்துவம்(Financial Management) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (Marketing Management), சுற்றுலா முகாமைத்துவம் (Tourism Management) என்பன போதிக்கப்படுகின்றன. இந்த கற்கை நெறிக்கு விஞ்ஞானமாணி (B.Sc. Degree) வழங்கப்படுகிறது.

(ii) சமூக விஞ்ஞானங்களும் மொழிகளும் பீடம் (Faculty of Social Science and Languages) (RS) இக்கற்கை நெறியில் சமூக விஞ்ஞானத்தில் சிறப்பு கற்கை நெறிகளாக பொருளியல், புவியியல், அரசறிவியல், சமூகவியல், புள்ளிவிபர வியல் என்பனவும் மொழித்துறையின் சிறப்பு கற்கை நெறிகளாக ஆங்கிலம், சிங்களம், தமிழ், ஜேர்மன், ஜப்பான், ஹிந்தி, பிரெஞ்சு என்பன போதிக்கப்படு கின்றன. மேலும் இந்த கற்கை நெறி களுக்கு (B.A. (Special) உள்ளது.

(iii) நில அளவை விஞ்ஞானத்துறை (Faculty of Surveying Science) இக்கற்கை நெறி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மட்டுமே உள்ளது. இக்கற்கை நெறியாக [Degree B.Sc. (Special)] உள்ளது.

(iv) பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் (Faculty of Applied Sciences) இப்பீடமானது சப்ர கமுவ பல்கலைக்கழகத்தின் வளாகமான புத்துளையில் போதிக்கப்படுகின்றது. இதன் சிறப்பு கற்கை நெறிகளாக


1. இயற்கை வளங்கள் [B.Sc. (Natural Resources)]
2. உணவு விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் [B.Sc. (Food Science and Technology)]
3. பௌதீக விஞ்ஞானம் [B.Sc(Physical Science)]

என்பன காணப்படுகின்றது.

(v) விவசாய விஞ்ஞான பீடம் (Faculty of Agri-culture Science) இப்பீடமானது சப்ர கமுவ பல்கலைக்கழகத்தின் வளாக மான ரஹங் கலையில் போதிக்கப்படு கின்றது. இது மூன்று சிறப்பு கற்கை நெறிகளை கொண்டுள்ளது.

1. ஏற்றுமதி விவசாயம் (Department of export Agriculture)
2. கால்நடை உற்பத்தி (Department of Live-stock Production)
3. விவசாய முகாமைத்துவம் (Department of Agriculture Business Management)

இதன்மூலம் அதிவிசேட [B.Sc (Special)] பட்டத்தை பெறக்கூடியதாக உள்ளது.



சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது முக்கிய சில விசேட அம்சங்களையும் குறிப்பிட வேண்டியுள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் நடைபெறும் விரி வுரைகள் யாவும் Oxford பல்கலைக்கழக முறைகளே பின்பற்றப்படுகிறது. இலங்கை யில் உள்ள பல்கலைக்கழகங்களில் சப்ர கமுக பல்கலைக் கழகத்தில் மட்டுமே தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று துறை களும் போதிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது. இப்பல்கலைக்கழகத்தில் யப்பான், பிரான்ஸ், ரஷ்யா போன்ற வெளிநாட்டு விரிவுரையாளர்களும் கடமையாற்றுகிறார்கள். இது மாணவர்களுக்கு ஓர் உறவுப் பாலத்தை உருவாக்குகின்றது என்பதில் எவ்வித சந்தே கமும் இல்லை. அத்துடன் நாம் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற மொழிகளை யும் கற்கக்கூடிய வசதி வாய்ப்புக்களை கொண்டுள்ளதாக இப் பல்கலைக்கழகம் அமைகின்றது. இது தவிர, பிறநாட்டு மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை கற்கக்கூடிய வாய்ப்பு இங்கு உள்ளது. இங்கு தமிழ், சிங்களம், முஸ்லீம் என்ற மூன்று இனத்தைச் சேர்ந்த மாணவர்களும் எவ்வித இனபேதமின்றி கல்வி கற்பது நாம் கொடுத்த வரப்பிரசாதமாகும். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 75க்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட 120 ற்கும் அதிகமான தமிழ் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏனைய மாவட்டங்களைப் போலல்லாது வெளியிடத் தொடர்புகள் குறைந்த ஓர் மாவட்டமாகக் காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள மாணவர்கள் குறுகிய வட்டத்துக்குள் கல்வியைத் தொடர்கின்றனர். ஆனால் வெளி மாவட்டங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றபோது அவர்கள் ஓர் பரந்த உலகத்துக்குளிருந்து பரந்துபட்ட அறிவினை (Knowledge) பெறக்கூடியதாக உள்ளது. எனவே இலங்கை சப்ரகமுவ பல்கலைக் கழகமானது சிறப்பு வாய்ந்த ஓர் பல்கலைக் கழகமாக விளங்குகின்றது.

*பா. பாலசுப்பிரமணியம்*
2ம் வருடம்
சமூக விஞ்ஞான மொழிகள் பீடம்
சப்ரகமுவ பல்கலைக்கழகம்
(மெமோறியல் பழைய மாணவன்)

# புவி நடுக்கம் பற்றிய ஓர் அறிமுகம்

புவியின் மேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 700கி.மீ ஆழத்திற்குள்ளிருக்கும் பாறைத் திணிவுகளின் சடுதியாக ஏற்படும் சறுக்கல் அல்லது குறைத்தல் காரணமாக உண்டாகும் அதிர்ச்சியே புவி நடுக்கமாகும். புவி நடுக்கத்தினால் ஓரிடத்தில் ஏற்படும் அதிர்ச்சியானது அலை உருவில் பரவுகிறது. ஓர் நீர் குட்டையில் கல்லை வீசினால் அக்கல் வீழ்ந்த இடத்திலிருந்து வட்ட வடிவமான அலைகள் ஆரத் திசைகளிற் பரவுவதை அனைவரும் அறிவர். அதுபோலவே புவி நடுக்க அலைகளும் ஒரு மையத்திலிருந்து வெளிநோக்கிப் பரவுகின்றன. புவிநடுக்கம் 1 முதல் 3, 4 நிமிடங்கள்வரை நீடிக்கலாம். அதேசமயம் முதலில் வெளிப்படும் நடுக்க அலை 1 செக்கனுக்கு 3 கி.மீ வேகத்தில் 1000 கி. மீ தூரம் பரவும்.

உலகில் நாள்தோறும் பல நடுக்கங்களும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான நடுக்கங்களும் ஏற்படினும் அவற்றில் பெரும்பாலானவை சிறிதளவில் இருப்பதனால் அவற்றின் தாக்கம் நமக்குப் புலப்படுவதில்லை. அவ்வப்போது ஆங்காங்கு ஏற்படும் பெரிய நடுக்கங்களே பேரழிவையும், இழப்பையும் உண்டு பண்ணுகின்றன. 1995ஆம் ஆண்டு மே, யூன் மாதங்களில் ஜப்பானின் கம்சட்கா குடா நாட்டுப் பகுதிகளிலும் 1997ஆம் ஆண்டு மே மாதத்தில் வட கிழக்கு ஈரானிலும் ஏற்பட்ட நடுக்கங்களினால் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டுபோனமை குறிப்பிடத்தக்கது.

## புவிநடுக்கங்களின் வகைகளும், வலயங்களும்

புவி நடுக்கங்கள் புவியினுள்ளே ஏறத்தாழ 700 கி.மீ ஆழம் வரை ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் பெரும்பாலான நடுக்கம் புவியோட்டுப் பகுதியிலேயே உண்டாகின்றன. புவி நடுக்கங்களை அவை ஏற்படும் ஆழத்தின் அடிப்படையில்

(1) ஆழமற்ற நடுக்கங்கள்
(0–70 கி.மீ ஆழம்)
(2) இடைநிலைப் புவி நடுக்கங்கள்
(70–300 கி.மீ ஆழம்)
(3) ஆழ் குவிய நடுக்கங்கள் (300 கி.மீ)

எனவும் அவற்றுடன் தொடர்புள்ள வலயங்களுடன் இணைத்து

(i) எரிமலைப் புவிநடுக்கம்
(ii) புவியோட்டுப் புவி நடுக்கம்
(iii) பாதாளப் புவி நடுக்கம்

எனவும் வகைப்படுத்தலாம். உலகில் ஆண்டு தோறும் பதிவு செய்யப்படும் புவி நடுக்கங்களில் 80% மானவை தகட்டெல்லைகளிலேயே ஏற்படுவதாகத் தெரிகிறது. அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சமயம் பசுபிக்கிலும் வேறு சில இடங்களிலுமுள்ள சில எரிமலை வலயங்களில் குறைந்த அளவில் (10%) புவி நடுக்கங்கள் உண்டாகின்றன. புவி நடுக்கம் ஏற்படும் கிரமம், செறிவு என்பவற்றின் அடிப்படையில் புவியிலுள்ள பிரதான புவிநடுக்க வலயங்கள் பின்வருமாறு:—

1. பசுபிக்கைச் சுற்றியுள்ள எரிமலை வில்லுகளையும் ஆழமான பல அகழிகளையும் உள்ளடக்கிய வலயம். இவ்வலயத்தில் அலூசன், கர்மாடெக், யப்பான், மின்டனோ, ரொங்கா, பேரு—சில்லி முதலிய 18 அகழிகள் அடங்குகின்றன. இவ் வலயத்தில் இடைநிலை நடுக்கங்களும் அவற்றிலும் அதிகமாக ஆழ் குவிய நடுக்கங்களும் ஏற்பட்டு வருகின்றன.
2. மத்திய தரைக் கடலிலிருந்து ஈரான், திபெத் ஊடாக வட்சினாவின் தியன்சன் மலைப் பிரதேசம் வரையுள்ள வலயம் இவ்வலயத்தில் அல்பைன்—இமய மலையாக்கத்துடன் தொடர்புள்ள ஆழமற்ற புவிநடுக்கங்களே அதிகமாக ஏற்படுகின்றன. உலகில் ஏற்படும் புவிநடுக்கங்களில் 15% மானவை இவ்வலயத்தில் ஏற்படுவதாகத் தெரிகிறது. இதுவும் ஒரு பழைய தகட்டொருங்கல் வலயமாகும்.
3. அதிக வெப்ப பாய்ச்சலையும் எரிமலைத் தொழிற்பாட்டையும் கொண்ட நடு சமுத்திரப் பாறைத்தொடர் வலயம் இது. மத்திய அந்திலாந்திக், மேற்குப் பசுபிக், இந்து சமுத்திரத்தின் தென்பகுதி ஆகியவற்றை உள்ளடக்கும். இங்கும் பெரும்பாலும் ஆழமற்ற புவி நடுக்கங்களே ஏற்படுகின்றன.
4. குறை வலயங்கள் :— கலிபோனியாவிலுள்ள சான் அன்டிரியாஸ் குறை வலயம். துருக்கியிலுள்ள அன்ற்றோலியா குறைவலயம், நியூசிலாந்தின் அல்பைன் வலயம் போன்றவை இப்பிரிவிலடங்கும். இங்கும் ஆழமற்ற புவி நடுக்கங்களே ஏற்படுகின்றன.

## புவிநடுக்க அலைகள்

புவிநடுக்கத்தினால் ஏற்படும் அலைகள் புவிநடுக்கப் பதி கருவிகளினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு தோன்றும் புவி நடுக்க அலைகளை P—அலை (முதலலை) S – அலை (துணையலை) L – அலை (மேற்பரப்பு அலை) என மூன்றாக வகுப்பர். P—அலைகள் செக்கனிற்கு 8 கி.மீ வேகம் கொண்டவை. இந்த அலையின் பாதையில் குறிக்கிடும் ஒவ்வொரு துகளும் அலைபாயும் திசையில் முன்னும் பின்னும் சுருங்கி விரியும். இவை திடப்பொருட்கள் திரவப்பொருட்கள் அனைத்தையும் தங்கு தடையின்றி ஊடுருவிச் செல்வன S—அலைகள் அதிர்வு அலைகளாகும். இவற்றின் வேகம் 4.5கி.மீ செக்கன் ஆகும். இவை செல்லும்போது இவற்றின் பாதையிலிருந்தும் ஒவ்வொரு துகளும் செங்குத்தாக உயர்ந்து தாழும். இவை திடப்பொருட்களை மட்டுமே ஊடுருவிச் செல்வன. இந்த S—அலைகளே புவி நடுக்க அழிவுகளைத் தோற்றுவிப்பன. L – அலைகள் வேகம் குறைந்தவை.

## புவிநடுக்க அலையின் விளக்கப்படம்




P – முதலலை
S – துணையலை
L – மேற்பரப்பு அலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புவிநடுக்கங்களின் விளைவுகள்

புவிநடுக்கங்களினால் ஏற்படும் விளைவுகள் அவற்றின் தாக்கத்தைப் பொறுத்து வேறுபடும். பொதுவாக குறைந்த ஆழத்தில் ஏற்படும் புவி நடுக்கங்களே அதிக தாக்கத்தையும் அழிவையும் உண்டு பண்ணுகின்றன. மேலும் புவிநடுக்க குவியங்களுக்கு அண்மையிலும் அதிர்ச்சி அலைகள் சரிவாகச் சென்று தாக்குமிடங்களிலும்தான் பாதிப்பு அதிகமாயிருக்கின்றது. புவிநடுக்கங்களினால் ஏற்படும் அனர்த்தங்களுக்கு மேற்பரப்பு அலைகளின் தாக்கமே பிரதான காரணமாகும். நீண்ட வீச்சுடைய அவ்வலைகள் பரவுதலினால் நிலப்பிளத்தல், கட்டிடங்கள் இடிதல், இரும்புப் பாதைகள், முறுக்கப்படுகல். பாலங்கள் உடைதல் போன்ற பல விளைவுகள் உண்டாகின்றன. புவி நடுக்கங்களின் தாக்கத்தை (செறிவை) கணிப்பதற்கு மேர்காலி (Mercalli) என்பவரின் அளவுத்திட்டம் 1902ம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படுகிறது. திருத்தப்பட்ட மேர்காலியின் அளவுத் திட்டத்தின்படி புவி நடுக்கங்களின் தாக்கம் பின்வருமாறு:

| அலகு | நிலச் சுழற்சி | வெளிப்பாடு |
|---|---|---|
| (i) | <10 | புவியதிர்ச்சி பதி கருவியினால் மட்டும் உணரப்படும் |
| (ii) | >10 | கூர்மையான புலனுடையோரால் மட்டும் உணரப்படும் |
| (iii) | >25 | அசையாதிருப்பவர்கள் உணர்வர் |
| (iv) | >50 | மிதமானது. போக்குவரவு செய்பவர்கள் உணர்வர். |
| (v) | >100 | உறங்குவோர் விழிப்பர். மணிகள் ஒலிக்கும். |
| (vi) | >250 | பலமானது. சிற்றழிவு. |
| (vii) | >500 | மிகப் பலமானது. சுவர்கள் பிளத்தல் பீதி ஏற்படல். |
| (viii) | >1000 | புகை போக்கிகள் இடிதல் |
| (ix) | >2500 | பலமற்ற வீடுகள் இடிதல். |
| (x) | >5000 | பல கட்டிடங்கள் இடிதல். |
| (xi) | >7500 | பலத்த சேதம், நிலம் பிளத்தல், பாலங்கள் உடைதல் |
| (xii) | >9800 | முழுச் சேதம், பொருட்கள் மேலே வீசப்படுதல் |

**தகட்டொருங்கல்** : தகடுகள் கீழிறங்கும் வலயங்களில் அகழிச் சுவருக்கும் கீழிறங்கும் தகட்டுக்குமிடையில் ஏற்படும் உராய்வுத் தடைகள் சறுக்கல்கள் என்பவற்றால் அப் பகுதியில் ஆழமற்ற புவிநடுக்கங்கள் உண்டாகலாம். அதுபோலவே இரு கண்டத் தகடுகள் மோதும் வலயங்களிலும் ஆழமற்ற நடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. இவ்வாறு யூரேசியத் தகடும் இந்தியத் தகடும் மோதிக் கொண்டிருக்கும் நீண்ட எல்லையில் இவ்வகையான நடுக்கங்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.
(1997இல் ஈரானில் ஏற்பட்ட நடுக்கம்)

## புவிநடுக்கங்களுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள்

புவி நடுக்கங்கள் சடுதியாக ஏற்படுவதனால் அவற்றுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தல் சாத்தியமானதன்று. எனினும் புவிநடுக்க வலயங்கள் என அறியப்பட்டவற்றில் வாழும் மக்கள் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம். குறிப்பாக நகர நிர்மாணிப்பு விரிவாக்கம் போன்றவற்றில் ஈடுபடும்போது குறை வலயங்களைத் தவிர்த்தல் நல்லது. மேலும் கட்டிட அமைப்பின்போது சாதாரண சீமெந்துக்கு பதிலாக செறிவூட்டிய கொங்கிறீற் கலவைகளைப் பயன்படுத்துதல் விரும்பத்தக்கது. ஆனால் புவிநடுக்க வலயங்களில் வாழ்பவர்கள் கற்களுக்குப் பதிலாகப் பாரமற்ற மரப்பொருட்களினால் வதிவிடங்களை அமைத்தல் பாதுகாப்பானது. அதே சமயம் சீமெந்துக் கட்டிடங்களைக் கட்டும்போது அடித்தளப் பாறை வரை அத்திவாரமிடுதல் அவசியம். மேலும் புவிநடுக்க வலயங்கள் மலை சார்ந்தவையாக இருப்பின் குத்துச் சாய்வுப் பகுதியில் குடியிருப்புக்கள் அமைத்தல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவி நடுக்கங்களை முன்னறிவிப்பதற்குப் பல முயற்சிகள் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றில்

(1) காந்தப் புவி வேறுபாடுகளைக் கண்டறிதல்
(2) குறை வலயங்களின் இருபக்கங்களிலும் திரிகோண கணித முறையில் அளவீடு செய்து நில உயர வேறுபாடுகளை அவதானித்தல்
(3) அவ்வாறே இரு இடங்களுக்கிடையேயுள்ள நேர்கோட்டுத் தூர வேறுபாடுகளைக் கண்டு அறிதல்
(4) சரிவு மானிகள் மூலம் சாய்வுகளை அளவிடுதல்
(5) கிணறுகளின் நீர்மட்ட வேறுபாடுகளை அளந்தறிதல்
(6) நுண்மையான புவிநடுக்க பதி கருவிகள் மூலம் சிறு அதிர்வுகளைப் பதி செய்தல்
(7) விகாரமானிகள் மூலம் (Strain) நிலத்தில் ஏற்படும் விரிவாக்க மற்றும் அமுக்கத்தை அளவிடுதல் ஆகியன குறிப்பிடத்தக்கவை. இவற்றைத் தவிர குறை வலயங்களில் P.S அலைகளின் வேக வேறுபாட்டின் அடிப்படையில் புவி நடுக்கங்களை முன்னறிவிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. அதாவது P.S எனப்படும் அலைகளின் வேகம் புவி நடுக்கங்கள் ஏற்படுவதற்கு சற்று முன்னர் இயல்புக்கு மாறான முறையில் வேறுபட்ட ஒரு ஒழுங்கில் மாற்றம் அடைவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே அத்தகைய வேக விகித மாற்றங்களை முன் கூட்டி அறிவதன்மூலம் மக்களின் பாதுகாப்புக் கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மேல் குறிப்பிட்டவாறு புவி நடுக்கங்களின் வகைகளும், வலயங்களும், அலைகளும் விளைவுகளும், தகட்டொருங்கல் என்பனவும் அதற்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளும் தொகுத்து கூறப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்:**


1. சுற்றாடற் புவியியல் (93,94ம் பக்கம்) கலாநிதி குணராஜா.
2. புவி வெளியுருவவியல் தத்துவங்கள்
3. வீரகேசரி பத்திரிகை — 15—12—1995 8ம் பக்கம்
4. உதயன் பத்திரிகை 10—01—2001 3ம் பக்கம்
5. அறிவுக் களஞ்சியம் 1992—12 இதழ் 24ம் பக்கம்


*பி. பிறேமதாஸ்*
13 கலைப்பிரிவு (2000)

## இசைக் கருவிகள்

- தோற்கருவி – மிருதங்கம், தவில், பேரி, தபேலா, கெஞ்சிரா, பறை, ஜென்டை, சுத்தமத்தளம், டோலக்
- துளைக்கருவி – நாதஸ்வரம், புல்லாங்குழல், கிளானெட், முகவீணை, சங்கு, ஷணாய், ஒத்து
- நரம்புக்கருவி – வீணை, கோட்டுவாத்தியம், வயலின், தம்புரா, சித்தார், யாழ், மெண்டலீன், வயோலோ, தில்ரூபா
- கஞ்சக் கருவி – சேமக்கலம், ஜால்ரா, கடம், ஜலதரங்கம், கொத்துமணி, முகர்சிங்
- மிடற்றுக்கருவி – குரல்வளம்

*தொகுப்பு - திருமதி. வி. ஜெ. பை. மூர்த்தி*
இசை ஆசிரியை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் தவிப்பு



*திருமதி யோ. கமலசிங்கம்*
சிரேஷ்ட பகுதித் தலைவர்

தமிழ் அன்னை தவிக்கிறாள்
தலை குனிந்து நிற்கிறாள்
வளமான வாழ்வை எண்ணி கண்கள்
குளமாகி நிற்கிறாள் கடுந்துயரோடு

கையில் விலங்கொடு நிற்கிறாள்
டையன் வந்து வீடுவிப்பான் என்கிறாள்
தையல் அவள் துயர்துடைக்க நீவிர்
கையாலாகாதவராகி விட்டீர்களா கண்மணிகாள்

நித்தம் நித்தம் அலைகிறாள்
பித்துப் பிடித்து ஓடுகிறாள்
சத்தம் போட்டு அரற்றுகிறாள்
புத்தம் புது வாழ்வை எண்ணி

நித்திரையின்றி வாடுகிறாள்
இத் தரையை எண்ணி ஏங்குகிறாள்
பத்தரை மாற்றுத் தங்க மலரை
பரிதவிக்கவிடல் தகுமா சொல்லுங்கள்

தாகத்தோடு தவிக்கிறாள்
பாகப் பிரிவினை வெறுக்கிறாள்
ஏகபோகத்தை நச்சியே
ஏகாந்தமாய் திரிய எண்ணுகிறாள்

போரினால் ஏற்பட்ட அனர்த்தத்தால்
சீரழிந்து போயுள்ள தம் மக்கள்
ஊரூராய் அலைவது கண்டு
சோர்ந்து துவண்டு துடிக்கிறாள்

இடப்பெயர்வினால் எம் மக்கள்
இடம்பெயர்ந்து பெயர்ந்தே
சடமாக மாறி விட்டனரோ மனத்
திடமும் குன்றி விட்டனரோ மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னும் மினி சினிமாவும் வந்தாச்சு
கண்ணெதிரில் காணாதவருடன் கதைக்க போனும் வந்தாச்சு
எண்ணம் போல் வாழலாம் என்றிருப்போரே நீவீர்
எண்ணிப் பார்த்தீரா வன்னி மக்கள் படும் அவலத்தை

பட்டது போதும் இனிப் பொறுக்க முடியாது
ஓட்டமாக ஓடி வந்தே நீவீர் அவள்
வாட்டத்தைத் தீர்த்திடுவீர் அவளுக்கு
வளமான வாழ்வைக் கொடுத்திடுவீரே

புத்தி கெட்டு மக்களனைவரும்
தத் தமது நலம் கருதி நிற்கிறார்
ஒத்தபடி எல்லோரும் சேர்ந்திட்டால்
இப் புவியில் எமக்கேது குறை என்கிறார்

# பூமிக்கு வந்த புனிதத் தாய்

கல்கத்தா நகரத்தின் காவிய நாயகியை எளிதிலே எவரும் மறந்திடமுடியாது. நன்றிப் பெருக்குடன் நினைவுகூரப்பட வேண்டியவள் இறைவனுடன் இரண்டறக் கலந்தவள் அவளைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை வடிப்பதற்கு எனக்கு தகுதியில்லை. எனினும் எனது பேனா முனையை சற்று ஆழப் படுத்தி அவளைப் பற்றி ஒரு சில வரிகளைப் படைக்கிறேன்.

அவள் அன்னை திரேசா. கிறிஸ்து வந்து இன்று இரண்டாயிரம் ஆண்டுகள் ஆடம்பரம், களியாட்டம், குடிவெறி, காமம், இச்சை இன்று உலகையே உலுக்கும் சில தீய வழிகள் விஞ்ஞானத்தின் விந்தையை ஒரு கணம் நினைத்தால் கம்பியூட்டர், இன்ரநெற், ஈமெயில் போதாது என்று செவ்வாய்க் கிரகத்தில் தன்னுடைய இருப்பை உறுதிப் படுத்த நினைக்கின்றான் மனிதன். இத்தகு ஆடம்பரத்தின் மத்தியில் சாக்கடைச் சகதிகளுக்குள் சஞ்சலம் இல்லாது நடந்த ஓர் அன்னையைப்பற்றி அறிந்து கொள்வோம்.

அன்று மாதத்தின் முதல் வெள்ளிக் கிழமை 1997 செப்டெம்பர் 5ம் திகதி இளம் சூரியன் காலையில் துயரம் தோய்ந்த முகத்துடன் மேகத் திரையால் மொட்டாக்கு போட்டுக் கொண்டு பூமியை எட்டிப் பார்த்தான். மாங்காய் பழுக்கப் போவதை முதலில் அறிந்து கொள்கிறது காகம். இன்று அன்னையின் உயிர் பிரியப் போவதாக சொல்லி உலகத்தை விடியற் காலையிலே எழுப்பிக் கரைந்தன.

மரணத்தின் காலடிச் சத்தத்தின் சலங்கை ஒலி ஒவ்வொரு நிமிடமாக நெருங்கிக்கொண்டு இருந்தது. அவள் கூறிய இறுதி வார்த்தைகள் "இயேசுவே! நான் உம்மை நேசிக்கிறேன். இயேசுவே! இயேசுவே" அருகில் நின்ற டாக்டர் கதறி அழுதார். அண்மையில் நின்ற அருட் சகோதரிகளின் கண்கள் நீர்க் குளமாகியது. கல்கத்தா கண்ணீர்க் கடலாகியது. உலகம் கண்ணீர் சொரிந்தது.

ஏன் இந்த அன்னைக்காக இவ்வளவு ஜீவன்களும் கண்ணீர் மல்கினார்கள். அவளில் அப்படி என்ன சிறப்பம்சம் இருந்தது என்றால் அவள் அயலானிலே இயேசுவைக் கண்டாள். துயரப்படுவோரிலே இயேசுவை உணர்ந்தாள். வேதனைப்படுவோரிலே இயேசுவை சுவைத்தாள்.

அன்னை திரேசா ஒருநாள் காலையில் சாக்கடைக்கருகில் உடல் முழுவதும் புண்ணாகி அந்தப் புண்ணை புழுக்கள் தின்று கொண்டிருப்பதால் துடிதுடித்துக் கொண்டிருந்த மனிதனை தூக்கிச்சென்று மருத்துவமனைக்கு கொண்டு வந்தார். "இன்னும் ஒரு சில மணி நேரத்தில் இறக்கப்போகும் மனிதனுக்கு ஏன் அன்னை வீணாக விலை உயர்ந்த மருந்தைச் செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும்?" என மருத்துவர் கேட்டார். அதற்கு அன்னை திரேசா "என் கிறிஸ்துவை நான் இம் மனிதனில் பார்க்கிறேன். என் கிறிஸ்து வேதனைப்படும் போது நான் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும். கிறிஸ்துவும் இம்மனிதனும் ஒன்று தான்" என்றார். மனித உயிரைக் காப்பாற்றினாள்.

நம்மைச் சுற்றி உள்ளவர்களில் அன்புச் சேவையில் நாம் கடவுளைக் கண்டால் அதுதான் நமக்கு இவ்வுலக சொர்க்கமாக அமையும். மத்தேயு நற்செய்தியிலே கிறிஸ்து கூறுகிறார். சின்னஞ் சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றை செய்யப்போவதெல்லாம் எனக்கே செய்தீர்கள் (மத்தேயு 25:40) கிறிஸ்துவின் இந்த இனிமையான வார்த்தைகளுக்கு செயல்வடிவம் கொடுத்தாள் அன்னை திரேசா.

பட்டம், பதவிகள், பணம், புகழ் எதுவுமே அவள் வாழ்விற்கு வேண்டியதாக அவள் கருதவில்லை. மாறாக பிறரன்பே அவளுக்கு தலையானதாகத் தெரிந்தது. தனது 17ம் வயதிலே கல்கத்தா வீதிகளில் அன்புப் பணிக்காய் கையேந்தி அலைந்தவள் தனது 84ம் வயது வரை அதே அன்புப் பணிக்காய் அல்லும் பகலும் அலைந்தாள்.

அவள் தன்னுடைய வாழ்விலே எதன் மீதும் நம்பிக்கை வைக்கவில்லை அல்லது எவர் மீதும் நம்பிக்கை வைக்கவில்லை. மாறாக அவள் நற்கருணை ஆண்டவரிலே அசையாத விசுவாசமும் நம்பிக்கையும் அன்பும் வைத்திருந்தாள். அதனால் அனைத்திலும் திடமாக வெற்றிகொண்டாள்.

ஒருமுறை ஒரு நாட்டின் பெரிய தலை சிறந்த பிரதிநிதிகளில் ஒருவர் அன்னையிடம் சென்று ஒரு கேள்வியைக் கேட்டார். "அன்னையே நீ உலகம் முழுவதிலும் பல்லாயிரம் மடங்களை நிறுவி உள்ளீர்கள். பல அநாதைகளை கைவிடப்பட்டவர்களை, முதியவர்களை, வறியவர்களை, நோயாளர்களை பராமரித்து வருகின்றீர்கள். யார் உங்களுக்கு பண உதவிதருவது, இவற்றை எல்லாம் கொண்டு நடாத்துவதற்கு சக்தியை பலத்தை தருவது யார்?" என்று கேட்டார். அதற்கு அன்னை அவரை அழைத்துக் கொண்டு சென்று தனது சிற்றாலயத்தை திறந்து நற்கருணை ஆண்டவரைக் காட்டி இவர்தான் எனக்கு பண உதவியையும் சக்தியையும் பலத்தையும் தருவார் என்றார். ஆழமான இறை பக்தியும் இறை நம்பிக்கையும் அவளை புனிதத் தாய் நிலைக்கு உயர்த்தியது.

## அன்னை அடிக்கடி பாவிக்கும் வசனங்கள்

மௌனத்தின் கனி இறைவணக்கம்
இறைவணக்கத்தின் கனி கடவுள் பற்று
கடவுள் பற்றின் கனி அன்பு
அன்பின் கனி சேவை
சேவையின் கனி சமாதானம்



அவள் ஒரு திறந்த புத்தகம்
நாங்கள் படிக்க வேண்டும்
அவள் ஒரு கலைக்கூடம்
நாங்கள் பயில வேண்டும்
அவள் ஒரு வரலாறு
நாங்கள் வாசிக்க வேண்டும்
அவள் ஒரு வாழ்வு
நாங்கள் அனுபவிக்க வேண்டும்

*பி. றஞ்சன்*
12 கலைப்பிரிவு (2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரணியர் - THE GUIDE

## 1999 - 2000



## சிறு தோழர் - LITTLE FRIENDS

## 1999 - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றம் அளித்தாய் எழிலே என் தாய்

விண்ணும் மண்ணும் வீசும் காற்றும் வியக்கும் உன்னாலே
என்னுள் இருக்கும் ஏற்றம் முழுதும் என்னவள் உன்னாலே
கண்ணும் உந்தன் கவிதை முழுதும் கருத்தே என் தாயே
எண்ண வீச்சை எழுத்தில் முடிக்க என்னால் முடியாதே

வாழ்வில் உயர வழிகள் சொன்னாள் வண்ணத் தாயவளே
ஊழ்வினை என்னை உறுத்தியபோதும் உறுதுணையானவளே
தாழ்வு வரினும் தயவாவாள் என் தங்கத் தாயவளே
ஏழ்மை அகற்றி ஏற்றம் தருவாள் எழிலே என்னவளே

குணத்தில் மணியே குலத்தில் உயர்வே குங்குமத் தாயவளே
மனத்தில் மலரே மங்களச் சுடரே மதியாய் ஆனவளே
தனத்தில் தளைப்பே தலைமைச் சிறப்பே தாங்கும் சுமை நீயே
தினமும் உந்தன் நிகழ்ச்சி தன்னில் திண்மை பெற்றிடுவேன்

உருவின் திருவே உண்மை அன்பே உயர்வின் ஒளி நீயே
பெருமை உன்னால் பெற்றேன் என் தாய்
பொறுமையின் பொக்கிசமே
கவியின் உயிரே கடவுளின் வடிவே காணும் என் தாயே
புவியின் வடிவே புலரும் பொழுதே புண்ணியஸ்தலம் நீயே

தனிநிகர் பேறவள் தரணியில் உயர்ந்தவள்
தளைத்திடும் இன்ப ஊற்றே
கனியுள்ளம் கொண்டவள் கடுமையின் எதிரவள்
காப்பாற்றும் அடைக்கலமே
இனிய நல் தூயவள் இமையாய் இருப்பவள்
இன்பமே தருபவள்
புனிதத்தின் புஸ்பமாம் புதுமையாய் நிதம் அவள்
புகழினைப் பாடுவேனே.

*யோ. நிலானி*
**13 கலைப் பிரிவு (2001)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகமும் அரங்கியல் பாடம் மனிதனை ஆளுமை உடைய மனிதனாக்கும்

நாடகமும் ஒரு புனிதமான கலையாகும். சடங்குகளின் அடியாகவும் நாடகம் தோற்றம் பெற்றது. நாடகத்தின் தோற்றம் பற்றி பல்வேறு கொள்கைகள் உண்டு. விஞ்ஞான ரீதியாகவும் பொதுவாகவும் பலராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகவும் உள்ள கொள்கையின்படி சடங்கின் அடியாகவும் நாடகம் தோற்றம் பெற்றது எனக் கூறலாம்.

எனவே தான் நாடகம் கற்பதால் நாடகத்தின் கதையையும், கருத்துக்களையும் பாத்திரங்களின் குண இயல்புகளையும் கதையில் வரும் சூழ்நிலைகளையும் பார்ப்போர் கண்டு, கேட்டுச், சுவைத்து, அனுபவித்து மகிழவைப்பதே நாடகத்தின் குறிக்கோளாகும். பார்ப்போர் நாடகத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டுமானால் அதனை அவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். கருத்துக்களும், உணர்ச்சிகளும் சரியான வழியில் நாடகத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டாலே பார்ப்போரால் நாடகம் புரிந்துகொள்ளப்படும். நாடகம் கருத்துக்களை வெளிப்படுத்தும் அழகியல் கலையாக விளங்குகிறது. உடலின் உறுப்புக்களால் அதாவது அவற்றின் அசைவுகளால் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆடை அணிகலன்கள், ஒப்பனை காட்சியமைப்பு ஆகிய புற பொருள்களால் வெளிப்படுத்துவதும், உள்ளத்தின் மனோ நிலையாகிய அமைதியையும் கொந்தளிப்பையும் முகத்தாலும் மெய்சிலிர்த்தல் போன்ற உடலிற் காணப்படும் உள்ளுணர்வின் வெளிப்பாடுகளாலும் தெளிவுபடுத்தும் சிறந்த ஊடகமாக இருக்கின்றது.

மேற்படி அபிநயத்தினூடாக சூழல்களுக்கேற்ப நாடகம் மனித நடத்தைகளுக்கு விளக்கமளிக்கிறது. ஒரு பாத்திரம் மேடையில் தோன்றியதும் பார்ப்போரை முதலில் கவர்வது, அதன் வேடப் புனைவாகும். ஆகவே தான் ஒரு நாடகத்தின் வெற்றிக்கு ஒப்பனையும் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாகும். சொல், நடிப்பு என்பவற்றை விட முதலில் பாத்திரத்தை வெளிப்படுத்துவது ஒப்பனையாகும். ஒப்பனைமூலம் ஒரு பாத்திரத்தின் உண்மைத் தோற்றத்தைப் பெறமுடிந்தால் மட்டுமே ஏனைய அபிநயங்களின் துணைக்கொண்டு நாடக தயாரிப்பில் வெற்றி பெறமுடியும். ஏனெனில் ஒப்பனை மூலம் தான் ஒரு பாத்திரத்தின் குணவியல்பு, தேசம், இனம், பிறப்பு, வயது, மனநிலை என்பவற்றைக் காட்டமுடியும். நடிகர் மேடையில் தோன்றும்போது போலி நகைகளையே அணிதல் வேண்டும். தங்கம், முத்து, மணி என்பவற்றாலாகிய பெறுமதிமிக்க நகைகளை அணியக்கூடாது. ஏனெனில் நடிகன் பெறுமதியான அணிகலன்களை அணிவானானால் அவனுடைய சிந்தனை சிதறும்போது பாத்திரத்தை உள்வாங்கி உணர்ந்து அவனால் நடிக்கமுடியாது.


இக்கருத்துக்களை மனதில் கொண்டு இவ் நாடகமும் அரங்கியல் பாடத்தினூடாகப் பல்வேறு பிரச்சனைகளை வெளிப்படுத்தி ஆறுதல் அடையமுடியும். ஒத்திகை நாடகத்தின் வெற்றிக்கு இன்றியமையாதது. தொழில் முறை நடிகர்களாக இருந்தாலும்கூட அடிக்கடி ஒத்திகை பார்த்து நடிப்பது அவசியமாகும். ஒத்திகை எப்பொழுதும் பக்க வாத்தியங்களுடனேயே நடத்த வேண்டும். ஒரு நாடகத்தின் வெற்றிக்கு சிறந்த எழுத்துரு மட்டும் இருந்தால் போதாது. நல்ல தயாரிப்பாளரும் நெறிப்படுத்துனரும் அவசியம் அதே போல் பாத்திரங்களுக்கேற்ப பொருத்தமான நடிகர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுப்பதும் இன்றியமையாததாகும். சரீர வளமும் ஒரளவு நடிப்பாற்றலுமுடையவர்களாக இருக்க வேண்டும். ஒரு நாடகத்தின் வெற்றிக்கு இவையனைத்தும் இன்றியமையாதவை ஆகும். நாடகம் வெறும் கட்புலன் அரங்கு மட்டுமல்ல. அல்லது கட்புலனும், செவிப்புலனும் இணைந்து பார்ப்போரிடத்தில் சிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையை தூண்டுவதே நாடக அரங்கு ஆகும். எனவேதான் நாடகமும் அரங்கியல் பாடம் கற்பதால் இலகுவாக நாடகங்களை நடிக்கக் கூடியதாக உள்ளது. எனவேதான் உலகிற் சிலர் புகழோடு பிறக்கின்றார்கள், சிலர் புகழைத் தேடிக்கொள்கிறார்கள், சிலரிடம் புகழ் தேடி வருகின்றது. நாடகமும் அரங்கியல் பாடத்தைக் கற்பதால் மேடைக் கூச்சம் இன்மை, தலைமைத்துவம், சிறந்த ஆளுமை என்பன விருத்தி பெறுகின்றது. அத்துடன் கலை என்பது மனதுக்கு நிம்மதியையும், ஆறுதலையும், ஆன்மீக வளர்ச்சியையும் தரும் ஊடகம் ஆகும்.

*சுபாநிதி இராஜதுரை*
12 கலைப்பிரிவு (2002)



# இயற்கைச் சூழல் மாசுறுதலும் அதன் தாக்கங்களும்

*திரு. க. கனகேஸ்வரன்*
ஆசிரியர். விசேட பயிற்சி விஞ்ஞானம்

நாம் வாழும் இயற்கை சூழல் முன் னெப்போதும் இல்லாததைவிட பெருமளவில் மாசடைந்து வருகின்றது. இன்று உலகெங்கும் இயற்கைச் சூழல் மாசுறுதல் பற்றியே முழுக்கவனம் செலுத்தப்படுகின்றது. இந் நிலையில் எமது நாட்டிலும் பாடசாலைக் கல்வி ஊடாக மாணவர்கள் மத்தியில் இயற்கைச் சூழல் மாசுறும் வழிகள் பற்றியும் அதைத் தவிர்க்கும் வழி முறைகள் பற்றியும் அறிவூட்டப்படுகின்றது.

நாம் வாழும் இயற்கைச் சூழலில் முக்கிய அம்சங்கள் வளி, நீர், நிலம் என்பனவாகும். இவை எங்ஙனம் மாசுறுகின்றன இதனால் ஏற்படும் தாக்கங்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வளி மாசடைதல்

நாம் வாழும் புவியைச் சூழவுள்ள வளி மண்டலம் பல்வேறுபட்ட மனித நடவடிக்கைகள் மூலம் மாசுறுவது கண்கூடு. கைத்தொழிற் புரட்சியின் பின்னரே மாசுறுதலின் அளவு அதிகரித்துள்ளது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சி காரணமாகவும் சனத்தொகைப் பெருக்கமும் வளி மாசடைதலை அதிகரித்துள்ளன. இன்று உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாகனங்களின் பயன்பாடு பெருகியுள்ளது. இவ்வாகனங்கள் மூலம் வளியுடன் சேரும் மாசுக்கள் சொல்லிடங்காது. வாகனங்களிலிருந்து வெளியேறும் காபனீரொட்சைட் ($Co_2$) காபனோரொட்சைட் வாயு (Co) காபன் துணிக்கைகள் என்பன வளியுடன் கலக்கின்றன. கைத்தொழில் வளர்ச்சியுற்ற நகரங்களில் தொழிற்சாலைகளிலிருந்து இயந்திரங்களை இயக்கப் பயன்படும் நிலக்கரி, கனிய எண்ணெய்கள் மூலம் வெளியேறும் வாயுக்கள் வளியை மாசடையச் செய்கின்றன. ஏனைய எரிபொருட்களைவிட நிலக்கரியைப் பயன்படுத்துவதனால் வளி மாசடையும் வீதம் அதிகமாகும். கொழும்பு போன்ற நகரங்களில் வாகனங்களின் பெருக்கத்தால் சூழலிலுள்ள வளி கருமை நிறமடைந்து புகையாகக் காணப்படுகின்றது. வாகனங்களில் செல்வோர் மூக்கைமூடி வடிகட்டிகள் அணிந்துசெல்லும் காட்சி சர்வசாதாரணமாகிவிட்டது.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சு வாயுக்களான $So_2$, $Cl_2$ போன்றவை வளி மாசுறச் செய்கின்றன. இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சு வாயுக்களிலிருந்து மக்களைக் காக்கவே உயர்ந்த புகை போக்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்த போதிலும் இவ்வாறான நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தின் கீழே வரக்கூடிய சாத்தியமுண்டு. இவ்வாறு நடைபெறும் போது வளிமண்டலத்தின் கீழ் புகை மண்டலங்களால் மூடப்படும். இது 'ஸ்மொக்' என அழைக்கப்படும். இப்படியாக 'ஸ்மொக்' மேகங்கள் திரள்வதால் பேரபாயங்கள் ஏற்பட்டுள்ளன.

1948ம் ஆண்டில் அமெரிக்காவில் டொஹெரா என்ற சிறிய கைத்தொழில் நகரமொன்றில் இப்படியானதொரு நிலையமயேற்பட்டு பலர் நோய்வாய்ப்பட்டதுடன் 20பேர் மரணமடைந்துள்ளனர்.

1952ம் ஆண்டில் லண்டனில் 'ஸ்மொக்' மேகமொன்று பரவியதால் 4000 மக்கள் இறந்துள்ளனர். இவ்வாறான நிலைமைகள் எமது நாட்டிலும் இடம்பெறக்கூடிய அளவுக்கு கொழும்பு, இரத்மலானை போன்ற இடங்களில் தொழிற்சாலைகளின் பெருக்கம் காணப்படுகின்றது. அஸ்பெஸ்டஸ் தயாரிப்பு, மசகு எண்ணெய் சுத்திகரிப்பு, ஈயம் கந்தகம் பயன்படுத்தும் கைத்தொழில்கள்மூலம் வளியுடன் சேரும் நச்சுப் பதார்த்தங்களினளவு அதிகம். அத்துடன் ஜெட் விமானங்கள் 12km – 15km இடைப்பட்ட பிரதேசத்தில் பறப்பதால் அவற்றிலிருந்து பெறப்படும் புகை ஓசோன் ($O_3$) படலத்தில் துவாரம் ஏற்படுமளவுக்கு நிலைமையை உண்டாக்கியுள்ளது. இதனால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் ஊடுருவி புற்றுநோய் உட்பட பலவித நோய்களை ஏற்படுத்த இடமுண்டு. அலுமினியக் கைத்தொழில் காரணமாக வளியுடன் கலக்கும் ஐதரசன் புளொரைட் (HF) வாயு தாவரவர்க்கங்களுக்கு பெரும் தீங்கை ஏற்படுத்தும். அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடாகிய ஜப்பானில் வீதியின் இருமருங்கும் தேவைப்படுத்துமிடத்து மக்கள் ஒட்சிசன் வாயுவைச் சுவாசிக்க வசதியாக வழிவகை செய்யப்பட்டுள்ளதை நோக்கும்போது அந்தளவுக்கு சூழல் வளி மாசடைந்துள்ளது எனக் கருதலாம்.

தாய்லாந்தின் 'வொஸ்புரி' என்னும் இடத்தில் கடந்த வருடம் இரசாயனத் தொழிற்சாலை ஒன்று தீப்பற்றி எரிந்த பொழுது வெளியேறிய 'பொஸிஜன்' என்ற இரசாயனப் பொருள் காரணமாக பெருமளவு மக்கள் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறினர். இவ்விரசாயனப் பொருள் 2ம் உலக மகாயுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்டது. எமது நாட்டில் யுத்த சூழ்நிலை காரணமாக பெருமளவு பயன்தரு மரங்கள், காட்டு மரங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் இயற்கை வாயுச் சமநிலை பாதிக்கப்படுகிறது. இன்று வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்புக்கும் மழை வீழ்ச்சி குன்றியதற்கும் காலநிலை முற்றாக மாற்றமடைந்துள்ளமைக்கும் இவ்வாறான எமது நடவடிக்கைகளே காரணமாகும்.

## நீர் மாசடைதல்

எமக்கு மிக இன்றியமையாத நீர் வளம் பல்வேறு வழிகளில் மாசுறுகின்றது. விவசாய நடவடிக்கைகளில் வளமாக்கிகள், களை கொல்லிகள் என்பவற்றின் மிதமிஞ்சிய பாவனை, தொழிற்சாலைக் கழிவுகளை நீர் நிலைகளில் திணித்து விடுதல் என்பன நீரை மாசுறச் செய்கின்றன. பெருமளவு தொழிற்சாலைகள் இவ்விதம் பல்வேறு காரணங்கள், வசதிகள் கருதி நீர் நிலைகளுக் கண்மையில் நிறுவப்பட்டுள்ளன. உணவைப் பதப்படுத்தும் ஆலைகள் புடவை உற்பத்தி ஆலைகள் கடதாசிக் கூழ் தயாரிக்கும் ஆலைகள், இரசாயப் பொருளை உற்பத்தி செய்யும் ஆலைகள் என்பன நீர் நிலைகளுக்கருகில் நிறுவபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தொழிற்சாலைகளிலிருந்து நீருடன் கலக்கும் பதார்த்தங்களால் நீர் துர்நாற்ற முடையதாகவும் அருவருப்பூட்டும் சுவையுடையாகவும் மாற்றமடையும். நீர் வாழ் மீனினங்கள் அழிய நேரிடும். ஈய உற்பத்தித்துறை பெருமளவில் நீரை மாசடையச்செய்கின்றது. நீர்க்கோளத்தில் பெரும் பகுதி சமுத்திரங்களாகும். கனிய எண்ணெய்க் கப்பல்கள் விபத்துக்குள்ளாதலும், நடுக்கடலில் எண்ணெய்ச் சுரங்கம் அகழ்தலில் ஏற்படும் விபத்துக்கள் காரணமாக சமுத்திர நீர் மாசடைகின்றது. 1967ம் ஆண்டு மார்ச் 18ந் திகதி பிரான்சிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்று கொண்டிருந்த 'டோரோ கனியொன்' என்ற குவைத் கப்பல் 117,000 தொன் மசகு எண்ணெய்யுடன் கடலில் மூழ்கியது. 1969ம் ஆண்டு கலிபோர்னியாவில் பாபரா கடற்கரை ஓரமாக இருந்த எண்ணெய்ச் சுரங்கம் வெடித்ததால் தினமும் 30,000 கலன் எண்ணெய் 11நாட்களில் வெளியேறியது. இவ்வாறு வெளியேறிய எண்ணெய், கடல் மேற்பரப்பில் போர்வை போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பெருமளவில் அழிந்தமை பின்னர் அறியப்பட்டது.

Uranium Penetrators எனப்படும். யூரேனிய ஊடுகருவிகள் (இவை முழுமையாகப் தயாரிக்கப்பட்ட ஷெல்கள், ரவைகள் என்பன வாகும்) இவை கதிர் வீச்சு அபாயம் கொண்டவை. இவ்வாறான 40தொன் யுரெனியம் கழிவு ரவைகள், ஷெல்கள் வளைகுடாப் போரில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் நிலத்தடி நீர், மண் வளங்கள் அச்சமூட்டும் அளவுக்கு மாசடைந்து வருகின்றது இதனால் இளம் சிறார்களிடையே இரத்தப்புற்று நோய் (லூக்கேமியா) நோய் ஏற்படுகின்றது. நகர்ப்புறங்களில் மனிதக் கழிவுகள் குழாய் வழியாக எடுத்துச் செல்லப்பட்டு கடல் நீரில் திணிக்கப்படுகிறது. நீர் மாசடைதலால் நீர் வாழ் உயிரினங்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதோடு மனித குலமும் வாந்திபேதி, வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களால் இன்னலுற நேரிடுகிறது.

## தரை மாசடைதல்

சூழலின் மற்றொரு அம்சமான தரை குப்பை கூளங்களால் நிறைந்து காணப்படுகின்றது. பாவனைக்குதவாத இரும்புகள், கழிவு உலோகங்கள் பிளாத்திக்குகள் என்பவற்றால் தரை மாசடைகின்றது. கிருமிநாசினிகள், வளமாக்கிகள் என்பனவும் மண்ணின் தன்மையை மாற்ற மடையச் செய்கின்றன. இன்று உலகமெங்கும் ஏராளமான வெடி பொருட்கள் தரையில் புதைக் கப்பட்டுள்ளன. இவை காரணமாக தரை மாசடைகின்றது. கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இயந்திர சாதனங் களையும் அடிக்கடி மாற்றிக் கொள்வதால் பயன்படுத்திக் கழிக்கப்பட்ட இவ்வாறான பொருட்கள் தரையில் குவிக்கப்படுதல் தரை மாசடைதலுக்குக் காரணமாகிறது.

மேற்குறிப்பிட்ட வளி, நீர், தரை என்ற அம்சங்களைவிட நமது சூழல் இரைச்சல், சத்தம், அணுக்கதிர் வீச்சுக்கள் என்பவற்றாலும் மாசடைந்து காணப்படுகிறது. விஞ்ஞான உலகம் இன்று மாசுறும் இயற்கைச் சூழலை எவ்விதம் மனித வாழ்வுக்கு உகந்ததாக மாற்றியமைப்பதென மூளையைப் பிசைந்த வண்ணம் உள்ளது. அந்த வகையில் நாம் வாழும் சூழலை மாசுறாது பாதுகாப்பது எமது கடமை என உணர்ந்து செயற்படுவோமாக.

# இலங்கையும் நாணயமாற்று விகிதமும்

நாணயமாற்று விகிதத்தில் ஏற்பட்ட தற்போதைய மாற்றமானது பல பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது. அதனை நாம் தெளிவாக விளங்குவதற்கு பின்வரும் கருத்துக்கள் உறுதுணையாக உள்ளது.

### நாணயமாற்று விகிதம்

ஒரு நாட்டு நாணயத்தின் பெறுமதியினால் பிறிதொரு நாட்டு நாணயத்தின் வடிவில் புலப்படுத்தினால் அதுவே நாணய மாற்று விகிதம் எனப்படும். அதாவது இரண்டு நாடுகள் தமது நாணயங்கள் ஒன்றுக் கொன்று என்ன விகிதத்தில் பரிமாற்றுகின்றதோ அதுவே நாணயமாற்று விகிதம் எனப்படும். எனவே ஒரு நாட்டு நாணயத்தின் விலையே நாணயமாற்று விகிதமாகும்.

உதாரணமாக ஒரு டொலர் = 50/-
1$ = 50/-

ஒரு நாட்டில் நிலவக்கூடிய நாணய மாற்று விகிதத்தில் முக்கியமானவற்றை வருமாறு நோக்கலாம்.

i. நிலையான நாணயமாற்று விகிதம்
ii. முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்று விகிதம்
iii. மிதக்கும் நாணயமாற்று விகிதம்

### நிலையான நாணயமாற்று விகிதம்

ஒரு நாட்டு நாணயத்தின் நாணய மாற்று விகிதமானது அந்த நாட்டின் அரசாலோ அல்லது மத்திய வங்கியாலோ நிர்ணயிக்கப்பட்டு அது நீண்ட காலப்பகுதிக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதுவே நிலையான நாணய மாற்று விகிதமாகும். இது நாளாந்தம் தளம்பல் அடையாமல் மிக நீண்ட காலப் பகுதிக்கு உறுதியாக அல்லது நிலையாக இருக்கும். இலங்கையில் 1977 நவம்பர் 15ற்கு முன் நிலையான நாணயமாற்று விகிதமே காணப்பட்டது.

## முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் நாணயச்சபையின் நாணய அதிகாரிகளின் கட்டுப்படுத்தல்கள் நிர்வகிப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டு செலாவணிச் சந்தையில் அந்நியச் செலாவணிக்கான கேள்வி நிரம்பல்களை அடிப்படையாகக் கொண்டு நாணயமாற்று விகிதம் நிர்ணயிக்கப்பட்டால் அதுவே முகாமை செய்யப்பட்ட தளம்பும் நாணயமாற்று விகிதமாகும்.




வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வி D-$D_1$ ஆக உயரும்போது நாணய மாற்று விகிதம் FE ஆக உயர்வடையும். வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வி $D_2$ ஆக வீழ்ச்சியடையுமாயின் நாணயமாற்று விகிதம் $FE_2$ ஆக வீழ்ச்சியடையும். இந்நிலமை மிதக்கும் நாணயமாற்று விகித முறையாகும். நடைமுறையில் இம் மிதக்கும் நாணயமாற்று விகிதம் பல பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதற்காக நாணய அதிகாரிகள் $FER_3$ – $FER_4$ ஆகிய வற்றுக்கு இடையில் சிறிதளவு தளம்பக்கூடியவாறு நாணயமாற்று விகிதத்தை கட்டுப்படுத்தல் முகாமை செய்யப்பட்ட தளம்பும் நாணயமாற்று விகிதம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதன் அடிப்படையில் இலங்கையில் 1977 நவம்பர் 15 முதல் 2001 தை 22ந் திகதி வரை இலங்கையில் இவ் முகாமை செய்யப்பட்ட தளம்பும் நாணயமாற்று விகிதம் காணப்பட்டது.

## மிதக்கும் நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கியின் நாணயச் சபையின் நாணய அதிகாரிகளின் கட்டுப்படுத்தல்கள், நிர்வகிப்புக்கள் எதுவுமின்றி நூற்றுக்கு நூறு வீதமும் செலாவணிச் சந்தையில் அந்நியச் செலாவணிக்கான கேள்வியை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் நாணயமாற்று விகிதம் நிர்ணயிக்கப்பட்டால் அதுவே மிதக்கும் நாணயமாற்று விகிதம் விகிதமாகும்.

2001 ஜனவரி 23ம் திகதியிலிருந்து இலங்கையில் சுதந்திரமாக மிதக்கும் நாணய மாற்று விகிதமே காணப்படுகிறது.

வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்கள் குறித்து முற்கூட்டியே தீர்மானித்து அறிவித்து வந்த மத்தியவங்கி 2001 ஜனவரி 23ம் திகதி முதல் அந்த விகிதங்களை அறிவிப்பதிலிருந்து விலகியிருப்பதாக திடீரென அறிவித்தது. இலங்கை ரூபாவின் பெறுமதியை சந்தையில் ஸ்திரமாக்கும் பொருட்டு சுயாதீனமாக அதை இயங்கவிடும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய வங்கி அறிவித்தது.

மத்தியவங்கியின் அறிவித்தலின்படி இனி மேல் சந்தையில் புழக்கத்திலுள்ள நாணயக்களுக்கான சராசரி விலைகளின் அடிப்படையில் அமெரிக்க டொலரினதும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களினதும் விலைகளை வர்த்தக வங்கிகளும் சந்தை சக்திகளும் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களை கட்டுப்படுத்தும் செயற்பாடு மத்திய வங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகளுக்கும் வெளிநாட்டு நாணயமாற்று நிறுவனங்களுக்கும் கைமாறி உள்ளது. இதனால் எதிர்காலத்தில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாதது என்றும் குறிப்பிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001 ஜனவரி 23ம் திகதி 82/= ஆக இருந்த டொலரின் பெறுமதி மத்திய வங்கியின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து உடனே 90/= ஆக உயர்ந்தது. எனினும் சற்று நேரத்தில் அதன் பெறுமதி 88/= ஆக வீழ்ச்சி கண்டது.

பாரிய யுத்தத்தின் மத்தியில் பொருளாதார யுத்தம் ஒன்றுக்கும் முகங் கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் ரூபாவை சுதந்திரமாகத் தளம்பவிட்டதன் மூலம் டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதித் தேய்வை தடுத்து நிறுத்துவதற்கு பொருளாதார ரீதியிலும் மோதவேண்டி ஏற்பட்டுள்ளது. 17 ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் விளைவாகவே இத்தாக்குதல் பொருளாதாரத்தின் மேல் விழுந்துள்ளது. இது பற்றி இன்று சகல தரப்பிலும் பலத்த அச்ச உணர்வே காணப்படுகின்றது.

பின்வரும் நோக்கங்களை பின்னணியாகக் கொண்டே ரூபா சுதந்திரமாக மிதக்க விடப்பட்டுள்ளது.

- தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்லும் ரூபாவின் பெறுமதியை உறுதிப்படுத்தல்.
- ஏற்றுமதி வருமானத்தைப் பெருக்குதல்
- வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்தல்
- உயர்ந்துவரும் வட்டிவீதத்தைக் குறைத்தல்
- திறந்த சந்தைப் பொருளாதாரமாக இலங்கையை மாற்றல்

போன்றனவே அவையாகும். எனினும் நாணயமாற்று விகிதம் தளம்பவிடப்பட்டதனால் பல சாதக விளைவுகளும் பல பாதக விளைவுகளும் ஏற்படலாமென பொருளியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

*க. மீனலோஜினி*
13 வர்த்தகப்பிரிவு (2001)

## உலகின் முக்கிய ஆண்டுகள்

| | |
|---|---|
| சர்வதேச சமாதான ஆண்டு | 1986 |
| உலக வீடற்றோர் ஆண்டு | 1987 |
| உலக ஆசிரியர் ஆண்டு | 1991 |
| உலக விண்வெளி ஆண்டு | 1992 |
| உலக பழங்குடி மக்கள் ஆண்டு | 1993 |
| உலக குடும்ப நல ஆண்டு | 1994 |
| உலக சகிப்பு தன்மை ஆண்டு | 1995 |
| உலக மனித உரிமை ஆண்டு | 1998 |
| உலக முதியோர் ஆண்டு | 1999 |
| உலக சர்வதேச சமாதான ஆண்டு | 2000 |
| உலக உள நலம் பேணல் ஆண்டு | 2001 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைதகரசின் தேற்றத்தை நிறுவுதல்

திருமதி ப. முருகதாஸ்
ஆசிரியர். விசேட பயிற்சி கணிதம்


கி.மு.569—500 காலப்பகுதியில் வாழ்ந்த பைதகரஸ் தத்துவ ஞானியும் கணித நிபுணரும் ஆவார். கணிதத்தில் எண்கணிதம், கேத்திர கணிதம், வானசாஸ்திரம், சங்கீதம் போன்ற பகுதிகளுக்கும் உரியவராக பைதகரஸ் திகழ்ந்தார் என்று கருதப்படுகிறது. எண்கள், சதுரஎண்கள், கூம்பக எண்கள் பற்றி பைதகரஸ் தேற்றத்தை முறமையான தேற்றமொன்றாக வெளிப்படுத்தி நிரூபித்தவரும் ஆவார்.

## பைதகரசின் தேற்றம்:

யாதுமொரு செங்கோண முக்கோணியில் செம்பகத்தில் வரையப்பட்ட சதுரத்தின் பரப்பளவு செங் கோணத்தை உள்ளடக்கும் பக்கங்களின்மேல் வரையப்பட்ட சதுரங்களின் பரப்புகளின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.

## இதனைச் செயல்மூலம் நிறுவும் வழிமுறைகள் பின்வருவன

**முறை I**




AB = 3 அலகு BC = 4 அலகு இரு பக்கங்களிலும் அமைந்துள்ள சதுரங்களை 1 சதுர அலகு கொண்ட சிறு சதுரங்களாகப் பிரிக்கவேண்டும். இவ்வாறே செம்பக்கத்தில் அமைந்த சதுரத்தையும் ஏற்கனவே மற்றைய இருபக்கங்களிலும் பிரித்த அளவுகொண்ட (1 சதுர அலகு) சிறு சிறு சதுரங்களாகப் பிரிக்க வேண்டும். சதுரங்களை எண்ணுக.


AB பக்கத்தில் 9 சதுரங்கள்
BC பக்கத்தில் 16 சதுரங்கள்
மொத்தமாக 9 + 16 = 25 சதுரங்கள்
BC பக்கத்தில் 25 சதுரங்கள்
எனவே $AB^2 + BC^2 = AC^2$




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முறை II

பக்கம் BC ல் அமைந்த சதுரத்தை மேற்கண்டவாறு பிரித்து எடுத்து பக்கம் AC யில் அமைந்த சதுரப் பகுதியில் பக்கம் ABயிலுள்ள சதுரத்தையும் பிரித்து எடுத்த முக்கோணப் பகுதிகளையும் பொருத்துவதன் மூலம் நிரூபிக்கலாம்.




முறை III





நீ (a+b)
சதுரம்

① ② ③ ④ பொருந்தும்

$c^2 = a^2 + b^2$




$c^2$ $a^2$ $b^2$
தராசில் இட்டு நிறுத்தால் பொருந்தும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படம் (I) செங்கோண முக்கோணி
படம் (II) செம்பக்கதத்தில் வரையப்பட்ட சதுரம்
படம் (III) மற்றைய இருபக்கச் சதுரங்களையும் பக்கத்தில் கொண்ட உருவம்
செயல்:— படம் (III) ல் காட்டியவாறு இரு முக்கோணிகளைப் வெட்டி பாகங்கள் மூன்றாக்கிப்
பின் படம் (II) ல் பொருத்திக் காட்டலாம்.

இவ்வாறான செயல் முறைகளைக் கையாளுவதன் மூலம் பைதகரசின் தேற்றத்தை நிரூபித்துக் காட்டலாம். செயல்முறை கற்பித்தலின் பங்கு அதிகரித்து வரும் இக்காலக் கட்டத்தில் சதுரம் BCDE இன் மையத்தை O எனப் பெயரிடுக O ற் கூடாக AC ற்குச் சமாந்தரம் வரைக. வரைந்த சமாந்தரம் FG ற்கு O ற் கூடாகச் செங்குத்து வரைக. 4 பாகங்களாக பிரித்து எடுத்து மேற்கண்டவாறு பொருத்துக.


**முறை IV**





(I)





(I I)




(III)




நீ (a + b)
சதுரம்

மேற்கண்ட செயற்பாடுகள் பிரயோசனமாக காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஓய்வுபெற்றும் தற்போது பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக் கற்பிக்கும் ஆசிரியர் திரு. இ. இராஜகுலசூரியர் மாணவ தலைவனுக்கு சின்னம் சூட்டுகிறார்.

சாரண மாவட்ட ஆணையாளர் (காங்கேசன்துறை) சாரணர் செல்வன் ஞா. ஐங்கரனுக்கு மாவட்ட ஆணையாளர் கட்டிழையை வழங்குகின்றார்.



போட்டியின்போது சாதனை படைக்க தயாராகும் சின்னஞ் சிறார்கள் - 1997.



பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சிறுவர் பூங்கா மாணவரின் கலை நிகழ்வு - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கூட்டுறவு வரலாறு

ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் கிராமிய விவசாயிகளின் பிரச் சனைகள் மக்களின் வாழ்க்கை முறையில் ஆங்கிலேயர் அக்கறை உடையவர்களாக காணப்பட்டனர். இதன் விளைவாக 1904ம் ஆண்டு விவசாயிகளின் கடன் தொல்லை களையும் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சனை களையும் தீர்ப்பதற்கான வழிகள் பற்றி ஆராயப்பட்டது. இதன் காரணமாக இலங் கையில் "விவசாய சங்கம்" என ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதற்கு நிறை வேற்று அதிகாரம் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு இதன் தலைவராக "சேர் கென்றி பிளோற்" நியமிக்கப்பட்டார். இவர் கிராமிய மக்களிடையே கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இதற்கு அமைவாக தென் மாகாணத் தில் பல கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக் கப்பட்டன. எனினும் அவை சிறிது காலத் தில் நலிவடைந்து இல்லாது போயிற்று இதனையறிந்த அறிஞர்கள் பட்டினியில் வாடும். கிராமிய மக்களிற்கு கூட்டுறவு அமைப்பே சிறந்தது எனக் கருதி "1909ம் ஆண்டு" "விவசாய வங்கி குழு" எனும் குழு அமைக்கப்பட்டது. 1910ம் ஆண்டு இக்குழுவினால் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டது. இதுவே கூட்டுறவு சம்பந்தமான முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது அறிக்கை ஆகும். இவ்வறிக்கைக்கு அமை வாக 1911ம் ஆண்டு ஓர் கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. இது 1911ம் ஆண்டு 7ம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் கட்டளைச் சட்டம் என அழைக் கப்படுகிறது. இதுவே கூட்டுறவு சம்பந்த மான முதலாவது சட்டமாகும். இதிலிருந்தே இலங்கையின் கூட்டுறவு சட்ட வரலாறு ஆரம்பமாகிறது. இதன் பிரகாரம் முதலாவது ஐக்கிய நாணய சங்கம் மாத்தறை மாவட் டத்திலுள்ள வெல்படபத்து எனும் கிராமத் தில் பதிவு செய்யப்பட்டது. இதன் பதிவாள ராக சேர். பொன் அருணாசலம் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

1912ம் ஆண்டு கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் தோற்றம் பெற்றன. 1942ம் ஆண்டு நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டன. 1947ம் ஆண்டு விவசாயப் பொருள் உற்பத்தியும் அவை களின் விநியோகத்திற்குமான கூட்டுறவு சங் கங்கள் உருவாக்கப்பட்டது. 1927ம் ஆண்டு முதலாவது பாடசாலை கூட்டுறவு சங்கம் முதன் முதலாக அளவெட்டி அருணோதயா கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை யின் கூட்டுறவு வரலாற்றில் 1957ம் ஆண்டு ஓர் முக்கிய ஆண்டாகும். இவ்வாண்டிலேயே ஒரு நோக்கு கூட்டுறவு சங்கம் மட்டுமன்றி பலநோக்கு கூட்டுறவு சங்கங்களும் தோற்றம் பெற்றன.

1956ல் பதவிக்கு வந்த அரசு கூட்டு றவு துறைக்கு முக்கியத்துவம் வழங்கியது. இதற்கமைய கூட்டுறவு ஓர் மக்கள் இயக் கம் என்றும் இதற்கு நிதி உதவி, கல்வி விரிவாக்க உதவி சட்ட பாதுகாப்புகள் என் பன வழங்கப்பட வேண்டும் என கூட்டுறவு அமைச்சராக இருந்த "பிலிப் குணவர்த்தனா" அவர்களால் வலியுத்தப்பட்டது. கூட்டுறவு துறைக்கு தனிப்பட்டவரது தலையீடு அவசிய மற்றது எனவும் அரசின் தலையீடு அவசிய மானது எனவும் வலியுறுத்தப்பட்டது. 1986ல் நிதிப்பலவீனமுற்ற கூட்டுறவு சங்கத்துக்கு கூட்டுறவு நிதியிலிருந்து கடன் வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டது.

1987ல் கூட்டுறவு தேசிய மகாநாடு கொழும்பில் நடைபெற்றது. 1989ல் 12ம் இலக்க மாகாண சபைகள் சட்டம் உருவாக்கப் பட்டது. 1989ல் அதிகார பரவலாக்கல் திட்டத் தின் கீழ் கூட்டுறவு பணிகள் மாகாணசபை யிடம் ஒப்படைக்கப்பட்டது. மாவட்ட கூட்டுறவு சபைகள் மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப் பட்டன. வடக்கு கிழக்கு மாகாணத்துக்கென தனியான கூட்டுறவுத் திணைக்களமும் கூட்டுறவு கல்லூரி திருகோணமலையிலும் உருவாக்கப்பட்டது. 1991ம் ஆண்டு ஜன சக்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1992ம் ஆண்டு 11ம் இலக்க கூட்டுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்கள் திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது. 1993ல் பொல்கொல்லையில் நுகர்ச்சி கூட்டுறவின் 50வது பூர்த்தி விழா கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் முத்திரையும் வெளியிடப்பட்டது. 1993ல் கொழும்பில் திருப்பொலி கூட்டுறவு கட்டட திறப்புவிழா நடைபெற்றது. 1994ம் ஆண்டு அதிகார பரவலாக்கல் திட்டத்தின் கீழ் கூட்டுறவு திணைக்களத்தின் பொறுப்புகள் பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 1996ல் பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த கணக்காய்வு பகுதி மீண்டும் கூட்டுறவுத் திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப் பட்டது. 1997ல் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அபிவிருத்தி பொறுப்புகள் மீண்டும் கூட்டுறவு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 1997ல் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சம்மேளனம் உருவாக்கப் பட்டது. 1998ல் யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் உருவாக்கப் பட்டது. 2001ல் திரு கோணமலையிலுள்ள கூட்டுறவு கல்லூரி வவுனியாவிற்கு இடம் மாற்றப்பட்டது.

*அ. ரேனுகா*
13 வர்த்தகப்பிரிவு (2001)

# பருவ வயது பிள்ளைகளுக்கு பெற்றோரின் நெருக்கமான உறவு

*திருமதி. பி. சபாநாதன்*
விசேட பயிற்சி மனைப்பொருளியல்

குழந்தைகள் மழலைச் சொற்களால் மகிழ்வித்தும் சிறுநடைகள், குறும்புகள் செய்து சிறப்புற்று நாளுக்கு நாள் வளர்ந்து பருவ வயதினைஅடைகின்றனர். இப்பருவ வயதானது நடை உடை, பாவனை முதலியவற்றால் வேறுபட்டு வருவதை நாம் உணர்கின்றோம். இவை பெண் பிள்ளை களை அதிகமாக பாதிக்கின்றது. ஆகையால் ஒரு தாயானவள் இவற்றை உணர்ந்து அப்பெண் பிள்ளைகளை மிக கவனமான நோக்குடன் நிதானம், பொறுமை, கண்டிப்பு, கவனம், அன்பு ஆகியவற்றை கடைப்பிடித்து நடந்து கொண்டால் அவர்கள் மனம் புண் படாது நல்ல மன வளர்ச்சி உண்டாகக் கூடும்.

இன்றைய கால கட்டத்தில் பெற்றோர்க்கும் இப்பருவ பிள்ளைகளுக்குமிடையே பல முரண்பாடுகள் ஏற்படுவதை காணக்கூடிய தாக இருக்கின்றது. இப்பருவத்தில் உள்ளவர் கட்கு போதுமான மன பக்குவம் இருக்காது. எடுத்ததெற்கெல்லாம் கோபப்படுவதும், வாக்குவாதப்படுவதும் தங்களிடத்தில் நம்பிக்கை அற்று சந்தேகப்படுகிறார்களே என்ற எண்ணமும் ஏற்படக் கூடியதமாக இருக்கும். இவற்றை தவிர்க்க குடும்பத்தில் ஏற்படும் கஷ்டங்கள், நஷ்டங்கள், இன்பதுன்பங்கள் ஆகியவற்றை அவர்களும் உணரக்கூடிய தாக நடந்துகொள்ள வேண்டும். இவ்விடத்தில் பெற்றோரும் பிள்ளைகளும் புரிந்துணர்வுகளுடன் செயற்படுவார்களேயானால் சுமூக மான குடும்ப அமைப்பை பேணுவதுடன் சந்தோஷமாக வாழக்கூடியதாகவும் இருக்கும்.

இப்பருவத்தில் பெற்றோர் கூடிய கவனம் எடுத்து பிள்ளைகளை அவதானிக்க வேண்டும். தவறுகள் ஏற்படின் உடனுக்குடன் கண்டிப்பதால் பூரண வெற்றியடைய முடியாது. பதிலாக அவற்றை நயமாக எடுத்துரைத்து இது தவறென தாங்களாகவே உணரும்படி அன்பாக விளக்கிக் கூற வேண்டும். இந்த இடத்தில் பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புள்ள பெற்றோராக, அறிவை ஊட்டும் ஆசானாக உற்ற இடத்தில் உயர்ந்த நண்பர்களாக பலதையும் பகிர்ந்து சிந்தித்துக் கதைக்கும் தோழர்களாக மாற வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகள் தம் உள்ளத்திலிருப்பதை ஒளிவு மறைவின்றி உங்களிடம் பகிர்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

தோழர்கள், உற்றார் உறவினர்களுடன் பழகவும் சேர்ந்து பொழுது போக்கவும், படிக்கவும், விளையாடவும் தடை கூறாது அனுமதிக்க வேண்டும். போட்டிகளிலும் சுற்றுப் பிரயாணங்களிலும் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும். இவற்றினால் தான் ஒரு தன் நம்பிக்கை வாழ்க்கையில் ஏற்பட்டு சிறு சிறு ஏமாற்றங்களை எளிதாக ஏற்றுக் கொண்டு சமாளிக்க கூடியதாக பழகிக் கொள்வார்கள்.

இக்காலங்களில் இயற்கையாகவே உடலில் தென்படும் மாற்றங்களும், அதனால் ஏற்படும் உள மாறுபாடுகளும், உணர்ச்சிகளும் பதற்ற நிலையை உருவாக்குகின்றன.

ஆகவே பெற்றோர் தம் பிள்ளைகளின் இக்காலப் பகுதியில் அவதானத்துடனும் பாசத்துடனும் அணுக வேண்டும்.

எதிர்காலத்தில் கணவன் மனைவியாக, தாய் தந்தையாக, குடும்பத் தலைவன் தலைவியாக பல பாத்திரங்களை ஏற்க வேண்டியவர்களாகின்றனர். அதற்கான நிலை இக்காலப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்படுகின்றது. வாழ்க்கைமுறை, அதன் பெறுமானம், பொறுப்புணர்ச்சி, சிந்தனைகள் என்பன பிள்ளைகளிடத்தில் ஊட்டப்படவேண்டிய காலமாகும்.

எனவே பெற்றோர் இப்பருவ பிள்ளைகளுடன் நெருக்கமான உறவை வைத்துக் கொள்ளவேண்டும். பிள்ளைகளும் தாம் நினைத்தபடி நடந்து திரிந்து, குலத்திற்கும், குடும்பத்திற்கும் அவப் பெயரை உருவாக்காது பண்போடும் பணிவுடனும் பெற்றோரின் ஆலோசனைகளைக் கேட்டு நடக்கக் கூடியதுமான நிலையை உருவாக்கி உத்தமமான வாழ்க்கையை நடத்தி உயர்வு பெற வேண்டும்.

## நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| அற்புத திருவந்தாதி | ~ காரைக்கால் அம்மையார் |
| அபிராமி அந்தாதி | ~ அபிராமிப்பட்டர் |
| ஆசாரக் கோவை | ~ அப்துல் மஜீத்துப் புலவர் |
| ஆசியஜோதி | ~ கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை |
| ஆத்திசூடி | ~ ஔவையார் |
| இலங்கை வளம் | ~ சோமசுந்தரப் புலவர் |
| இலக்குமி துதி | ~ அதிவீரராம பாண்டியன் |
| கம்பராமாயணம் | ~ கம்பர் |
| கொன்றை வேந்தன் | ~ ஔவையார் |
| சத்திய சோதனை | ~ காந்தியடிகள் |
| சீவக சிந்தாமணி | ~ திருதக்கதேவர் |
| சீறாப்புராணம் | ~ உமறுப் புலவர் |
| திருக்குறள் | ~ திருவள்ளுவர் |
| தேம்பாவனி | ~ வீரமாமுனிவர் |
| நாலடியார் | ~ சமண முனிவர்கள் |
| யாழ் நூல் | ~ விபுலானந்த அடிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் நவீன சித்திரக் கலையும் கலைஞர்களும்

*கி. நிறஞ்சன்*
தொண்டராசிரியர்

இலங்கை வரலாற்றை நோக்கும்போது பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் உள்நாட்டு கலைப் படைப்புக்களின் வீழ்ச்சியுடன் ஐரோப்பிய தழுவல்கள் இந்நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டதும் நவீன சித்திரக்கலை ஆரம்பமாகியதெனலாம். 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக் கலைஞர்கள் தமது திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காக ஐரோப்பிய தழுவல்களைப் பெற்றனர் என்பதை அவர்களது வெளிப்பாடுகள் உணர்த்துகின்றன.

1893இல் குடியேற்ற கல்வி முறையின் கீழ் சித்திரக்கலை ஒரு பாடமாக்கப்பட்டது. இதனால் சித்திரக்கலையுடன் தொடர்புடைய புதிய ரசிகர் எண்ணக்கருக்கள் ஐரோப்பாவிற்கு பரவிச் செல்லலாயிற்று. இளைய சித்திரக் கலைஞர்களிடம் எழுச்சியும் விழிப்பும் ஏற்பட்டது. அதிக கலைஞர்கள் தங்கள் சொந்தக் கற்பனைகளை சித்திரமாக வரைவதற்கான ஆராட்சியில் ஈடுபட்டனர். ஆபிரிக்க கோத்திரக் கலையின் தழுவலைப் பெற்று பிக்காசோவால் படைக்கப்பட்ட ஆக்கங்கள் உலகெங்கும் பரவியதோடு, ஆசியக் கலைஞர்களுக்கு புதிய வழிகளைத் தூண்டுவதற்கும் தேடுவதற்கும் காரணமாய் அமைந்தது. எமது இளம் கலைஞர்களுக்கும் இது சாதகமாயிற்று.

1887இல் கொழும்பு ரோயிங் கிளப் என அழைக்கப்பட்ட இலங்கை கலை மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. காட்சிப்படுத்தல், கலைஞர்கள் ஊக்குவிப்பு போன்றனவை இதனால் நடாத்தப்பட்டது.

ஐரோப்பா முழுவதும் கலைகளைத் தேடிய எமது நாட்டுக் கலைஞர்கள் தமக்கென புதிய வழியின் அவசியத்தை உணர்ந்தனர். லயனல் வென்ட் என்பவர் ஒழுங்கு செய்த சித்திரக் காட்சியில் ஜோர்ஜ் கீற், ஜியொப்ரிபீலிங், வின்சர் போன்றவர்களின் படைப்புகள் வெளிப்படுத்தப்பட்டன. பிற்காலத்தில் ஐஸ்ரின் தரணியகல என்பவரும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார். 1930இன் இறுதியில் ஹரிபீரிஸ், மஞ்சுசிறி, ஜோர்ச்க் லாசாவன், ஒப்ரிகோலட், அஸ்வன் பீரிஸ், ரிச்சாட் கப்ரியல் போன்ற கலைஞர்கள் புதிய நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்தனர். அக்குழு "43வது குழு" எனப் பெயரிடப்பட்டது. 1943இல் ஆரம்பிக்கப்பட்டதால் இப் பெயரிடப்பட்டது. இதற்கு லயனல் வென்ட் அளப்பரிய சேவையாற்றினார். மக்களிடம் கலை ரசனையை ஏற்படுத்துதல், சித்திரக் கலைஞர்களை ஊக்குவித்தல், ஐரோப்பாவில் மாற்றமுறும் சித்திரக்கலையின் மீது ரசிகர்கள் கவனத்தை ஈர்த்தல் போன்றவை இம்மன்றத்தின் பிரதான நோக்கமாகும்.

43வது குழுவைச் சேர்ந்த ஜோர்ச்கீற் இந்தியக் காவியக் கதைகளை தொனியாகக் கொண்டு சித்திரமாக்கினார். இந்திய இசையில் வரும் ராகம் தொடர்பான பல சித்திரங்களை இவர் படைத்தார். பொரளை கோதமி விகாரையில் வரையப்பட்ட சித்தார்த்தரின் பிறப்பு, மயாதேவியின் கனவு, யமனை வெற்றி கொள்ளல் போன்றவை இவரது விசேட சித்திரம் ஆகும். யமனை வெற்றி கொள்ளல் சித்திரம் பிகாஸோவின் குவார்ணிக்கா ஓவியத்துடன் ஒப்பிடப்பட்டது.

**எ. ஸீ. ஸீ. எஸ் அமரசேகர**

1903இல் இவரது "பூனைக்குட்டி" சித்திரத்திற்கு முதலிடம் கிடைத்தது. உருவக சித்திரக் கலையில் (Portrait Art) அதிக ஆர்வம் காட்டிய இவர் எமது நாட்டின் பிரதமர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றோரின் மேலுடம்பைக் காட்டும் ஓவியங்களை வரைந்துள்ளார். இவரது உயர் சித்திரமாக "யகதுறு தியனியா" என்ற படைப்பைக் கருதலாம்.

### எல். டீ. பீ. மஞ்சுசிறி

புதிய ஓவியங்களைப் படைப்பதிலும் பார்க்க பழையவற்றைப் பாதுகாப்பதில் அதிக ஆர்வம் காட்டினார். உள்நாட்டு சித்திரத்தின் ஆக்கபூர்வமான தன்மையை மேற்குலகிற்கு எடுத்துக்காட்டி சர்வதேச "மெக்ஸைஸே" பரிசைப் பெற்றார். புதிய பாராளுமன்றத்தில் ஓவியம் வரைந்த இவரது தாராதேவிச் சித்திரம் கண்ணாடிச் செதுக்கலுக்குள்ளாக்கப் பட்டுள்ளது.

### ஜே. பீ. ஏ. பெரேரா

அரச நுண்கலைக் கல்லூரியில் அதிபராக இருந்தவர். உருவகச் சித்திரக் கலையில் திறமைசாலியாக விளங்கியவர்.

### சோளியஸ் மென்டிஸ்

இங்குள்ள புதிய களனி விகாரை ஓவியங்கள் மூலம் பிரசித்தி பெற்றவர் பௌத்த வரலாற்றுடன் தொடர்புடைய தலதாவைத் தரிசித்தல், சங்கமித்த அரசமரத்தை தரிசித்தல், மகியங்கனை யக்சதமான விகாரையின் அரசி கடலுக்குப் பலியாதல், ஆங்கிலேயர் கழனி விகாரையை அழித்தல் போன்றவை இவரது முக்கிய ஓவியமாகும்.

### டேவிட் பேன்டர்

நவீன ஓவியங்களை கிறிஸ்தவ தேவாலயங்களில் வரைந்து பெருமைபெற்றார். கண்டியிலுள்ள திரித்துவ தேவாலயத்தில் இவரது படைப்புகளைக் காணலாம்.

### ஸ்ரான்லி அபேசிங்க

இலங்கையின் உயர்ந்த சித்திரக் கலைஞராக கருதப்படும் இவர் சுதந்திரமான ஒரு படைப்பாளர் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள யானை ஊர்வலம் அவரது படைப்பாகும். உருவச் சிலைகளாக சித்திரம் வரைவதில் நிபுணத்துவம் உண்டு.

### திலக அபேசிங்க

இத்தாலிய ஸ்தானிகராலயத்தில் இவரது சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. மென்மையான வர்ணங்களை தெரிவு செய்வார். "ஆகாயம்", "பூக்களை ஏந்திய பெண்கள்", "ஒரு தாயின் வாழ்க்கை" ஆகியவை இவரது சிறந்த படைப்பாகும்.

### ஜஸ்டின் தரணியகல

தனது வாழ்நாள் முழுதும் மனித உருவங்களையே தொனிப் பொருளாகக் கொண்டு ஓவியங்கள் படைத்தார். சிங்கள கொடூடிக் கலையும், ஹென்றிமதீஸ், ஜோர்ஜ் பிராக், பிக்காசோ போன்ற கலைஞர்களின் தழுவல்களும் இவரின் சித்திரத்தில் காணப் படுகின்றது. "தங்கமீனுடன் யுவதி" எனும் சித்திரம் கரு நிறமான பெண் ஒருத்தியின் காருண்யத்தை வெளிப்படுத்துகின்றது.

### அயிவன் பீரிஸ்

நவீன சித்திரக் கலைஞர்களுள் முக்கிய இடம்பெற்றவர். இவரின் நிலக்காட்சித் தொகுப்புகள் அழகிய செய்யுள் காவியமொன்றைப் போன்றது. கடற்கரை, மீனவர் குடிசைகள், தென்னை மரங்கள், வள்ளங்கள், கடல் அலைகள் போன்றவற்றை யதார்த்தமற்ற தனது மன வெளிப்பாடாக வரைந்துள்ளார்.

### திஸ்ஸ ரணசிங்க

நவீன சிற்பக் கலையில் முன்னணியில் திகழ்ந்த இவர் உலோகத்தலான D. S. சேனா நாயக்காவின் சிலையை (பாராளுமன்றத்திற்கு முன்னால்) ஆக்கியுள்ளார். 1961இல் ஆசிய மன்றத்தால் வழங்கப்பட்ட பரிசைப் பெற்றக்கொண்டார்.

> அன்பு தருவதும் அன்பைப் பெறுவதும் மனித வாழ்வில் பெரும் பேறுகள்
> ஏல்லோருக்கும் கொடுத்து வைப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் சுவையும் அழகியல் உணர்வும்

"ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க்கு உணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்"

என்னும் சேனாவரையாரின் காப்புச் செய்யுளினால் ஆதியில் தமிழ்மொழியானது சிவபெருமானால் அகத்திய முனிவருக்கு அருளப்பட்டது என அறியமுடிகிறது. இதிலிருந்து கன்னித் தமிழாம் செந்தமிழின் தோற்றம் வளர்ச்சிபற்றிச் சிறப்புற நோக்கமுடிகிறது. இந்தவகையில் தமிழின் பிறப்பிடமாம் தமிழ் நாட்டிலே தமிழ்மொழியானது தங்குதடையின்றி தெளிந்து நன் நீரோட்டமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. இதனால் மக்கள் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டவேண்டிய தேவை கற்றோர்க்கும், புலவர்களுக்கும் எழுந்தது. இதனால் அவ்வக்காலச் சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்ற நிலைக்கண்ணாடிகளான இலக்கியங்கள் தோன்றின. இப் பல்வேறுபட்ட இலக்கியங்கள் பல சுவை பொருந்தியனவாகவும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியனவாகவும், அழகியல் விழிப்புணர்ச்சி கொண்டனவாகவும் அமைந்து இருந்தன. இவ்வகையில் இவ் இலக்கியங்களின் பல்வேறுபட்ட சுவைபற்றி நோக்குவோம்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்பதனை மக்கள் மத்தியில் புகுத்த விரும்பினான் வள்ளுவன். இதனால் எழுந்தது வள்ளுவம். உலகப் பொதுமறையான இது உலகில் வாழும் அனைத்து மக்களும் கடைப்பிடித்து நன்னிலை அடைவதையே முக்கிய குறிக்கோளாக் கொண்டுள்ளது. இங்கே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களும் இணைந்து இளையோடி இருப்பதைக் காணலாம். இதில் சாதாரண பாமர மக்கள் முதல், நாட்டை ஆளும் அரசன் வரையிலும் கடைப்பிடிக்க வேண்டியனவான பல அறக்கருத்துக்கள் நூல் எங்கணும் விரவியுள்ளன. இதனைப் படித்து இதன் சுவையை இரசித்தால் தான் பல அறிஞரும் பலவாறாகப் போற்றியது மட்டுமன்றிப் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக மானம் பற்றிக் கூறுமிடத்து,

"குளவி பிணியின்றி வாழ்தல் இனிது
மானம் போனபின் உயிர்வாழாமை முன்னினிது"
என்பதற்கு இலக்கணம் வகுத்தாற்போல,
"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்று மானத்தின் சிறப்பை நயம்பட எடுத்து விளக்கியதிலிருந்து இதன் இலக்கியச் சுவை நன்கு புலனாவதைக் காணலாம். இது மட்டுமல்ல கம்பராமாயணமும் திருக்குறளும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமும் உலகம் போற்றும் உத்தம தமிழ் நூல்களன்றோ. இதனால்தான் பாரதியும்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவனைப் போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"

என்கிறார் பாரதியார். எனவே பல புதுமைகள் கண்ட கம்பனின் கம்பராமாயணத்தை எடுத்து நோக்குவோம்.

கம்பராமாயணத்திலே இராம, இராவண யுத்தம் நிகழ்கிறது. இதன்போது ஒரு சந்தர்ப்பத்தில் இராமன் முன்னே இராவணன் கூனிக்குறுகி ஆயுதம் எதுவும் அற்ற நிலையில் நிராயுதபாணியாக நிற்கிறான். அவ்வேளை இராமன் கூறுகின்றான்,

"இன்று போய்ப் போர்க்கு நாளை வா"

காரணம் என்ன? யுத்த தர்மம் மேலோங்கி நிற்கிறது. இதனால் தான் கோசல நாட்டின் வள்ளல் அவ்விதம் கூறினான். இதைவிட இராமன் காட்டிலிருந்த வேளை அங்குசென்ற பரதனைக் கண்ட இராமன் அவனைத் தழுவினான். இதனை,

"உயிர்த்து அழுகண் நீர் அருவி மார்பு இடை
உயாஉறத் திருவுளம் உருகப் புல்லினான்
நியாயம் அத்தனைக்கும் ஓர்நிலையம் ஆயினான்
தயாமுதல் அறத்தினைத் தழுவி என்னவே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் காட்டுகிறார் கம்பர். பரதனைக் கண்ட இராமனின் மனம் கசிந்து உருகிறது. இவ்வாறு கசிந்து உருகியதால் எழுந்த கண்ணீரானது, நயனங்களின் வழியாக வழிந்து பரதனின் நிண்டு சடா முடியையே நனைக்கிறது. அப்போது பரதனும் தன் கண்ணீரால் இராமனின் விந்தார பாதங்களை அபிஷேகம் செய்கிறான் என்பன போன்ற இன்னோரன்ன கருத்துக்கள் இந்நூலில் விரவியுள்ளதால் இலக்கியச்சுவையும் அழகியல் உணர்வும் புலப்படுவதை நோக்க முடிகிறது.

சிலப்பதிகார இலக்கியத்தை எடுத்து நோக்கின், முப்பெருந் தத்துவங்களுக்கு இருப்பிடமாய் அமைந்த இது மூன்று என்ற சொல்லிற்கு முதலிடம் கொடுப்பதால் மும்மைக் காப்பியம் என்று சிறப்பிக்கப்படுகிறது. இதில் இன்பம், துன்பம், வீரம் என்னும் முச்சுவைகள் இணைந்து இளையோடி இருப்பதைக் காணலாம். ஓரிடத்தில் கண்ணகியின் தோற்றத்தினை இளங்கோ அடிகள் குறிப்பிடும்போது,

"மெய்யிற் பொடியும் விரித்த கருங் குழலும்
கையிற் றனிச்சிலம்பும் கண்ணீரும் - வையகோன்
கண்டளவே தோற்றான் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்"

என்கிறார். இங்கே கண்ணகியின் நிலை தெளிவுபடுத்தப்படுகிறது. இவளது தோற்றப் பொலிவினைக் கண்டு பாண்டிய மன்னன் உயிர்துறந்தான். வெளித்தோற்றத்தால் மட்டுமல்ல, அகத்திலும் தன்னை உணர்ந்து கொண்டான் பாண்டியன். இதனால் தான்,

"கெடுக என் ஆயுள்"

என்று கூறியதுமே அவனது சொல்லுக்கு உயிர் கட்டுப்படுத்தப்பட்டது. அதனால் உடலைவிட்டு நீங்கியது. அரசியல் பிழைத்தவனுக்கு அறமே கூற்றாய் வந்துநின்றது, போன்ற கருத்துக்கள் யாவும் இலக்கியத்தரம் மிக்கதாக அமைந்திருப்பதைக் காணலாம்.

இயற்கை நெறிக்காலமான சங்க கால இலக் கியங்களில் ஒன்றான குறுந்தொகையில் இறையனார் பின்வருமாறு பாடியிருக்கிறார்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழியுமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ யறியும் பூவே"

தலைவிமீது ஆராக்காதல் கொண்ட தலைவன் சீவிமுடித்துச் சிங்காரித்துச் செல்கின்ற தலைவியைக் கண்டுவிட்டான். அவளது கூந்தலிலிருந்து நறுமணம் வீசுகிறது. இதனால் அவனுக்கொரு சந்தேகம் எழுகிறது. அதாவது தலைவியின் கூந்தலின் மணமானது இயற்கையானதா? அல்லது செயற்கையானதா? என அறியும் பொருட்டு அங்கே சென்றுகொண்டிருந்த வண்டினை நோக்கிக் கூறுகின்றான். பலபல பூக்களிலுள்ள பூந்தாதுக்களை ஆராய்ந்து உண்ணும் வாழ்க்கை யினையும் அழகிய இறகுகளையும் உடைய வண்டே, நான் விரும்புவதை அறிந்து முகமன் கூறாமல், "நீ உண்மையாக அறிந்த செய்தியைக் கூறுவாயாக. ஏழ்பிறப்பும் என்னோடு பழகிப் பண்பட்ட அன்பினையும், மயில்போன்ற சாயலினையும், நெருங்கிய பல்லொழுங்கினையுமுடைய இவளது கூந்தல் போன்று உன்னால் அறியப்பட்ட மலர்களில் நறுமணம் மிக்க மலர் ஏதாவது உண்டா? சொல்லுவாயாக." என்று தலைவன் கூறுகிறான். இங்கே காதல் உணர்வானது வெளிப்படுத்தப்பட்டிருப்பதோடு இலக்கியச் சுவையும் தெளிவாக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

குறுந்தொகையில் இன்னோரிடத்தில், தலைவனானவன் தலைவியை நோக்கிக் கூறுவதாக செம்புலப் பெயனீரார் பின்வருமாறு சிறப்புறப் பாடி அமைத்திருக்கிறார்.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே"

தலைவன் தலைவியை நோக்கிக் கூறுகிறான், "எனது தாயும் உனது தாயும் ஒருவருக்கொருவர் என்ன உறவுடையர் ஆவர்? என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறை உறவினர் ஆவர்? யானும் நீயும் இப்போது அறிந்தோமேயல்லாது முன்பு எவ்வாற்றால் ஒருவரையொருவர் அறிந்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோம்? இம் மூவகையாலும் தொடர்பில லோம் ஆகவும், செந்நிலத்திற் பெய்யப்பட்ட மழை, அந்நிலத்தோடே ஒன்றாகக் கலந்தாற் போன்று அன்புடைய நெஞ்சங்களானவை தாமாகவே கலந்து ஒன்றுபட்டன. எனவே இந்த உறவு ஊழால் நிகழ்ந்தது. ஆதலின் யாம் பிரிவோமல்லோம்" என்று தேற்றினான் தலைவன். இங்கே ஒத்த தலைவனும் தலைவியும் தம்முட் கூடுங்காலத்தே தோன்று வதான காதலுணர்வு இணைந்து இளை யோடி இருப்பதால் இவ் இலக்கியத்தில் காதற்சுவை வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

தமிழ் இலக்கியங்களிலே குறிப்பிடத்தக்க ஓர் இலக்கியமாகக் 'கலிங்கத்துப்பரணி' கணிக் கப்படுகிறது. இது, "ஆயிரம் யானையை அமரிடை வென்ற" வீரன்மேல் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு முதலிய உறுப்புக் களை அமைத்து, அவனுடைய பல்வகைச் சிறப்புக்களையும் பலமுகமாகப் புறப்பொருள மைதி தோன்ற கலித்தாழிசையாற் பாடப்படு வது பரணி என்பர். கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் முதலாம் குலோத் துங்கன் எனப்படும் சோழப்பேரரசன். அவன் ஆணைப்படி அமைச்சனும் படைத் தலைவ னுமான கருணாகரத்தொண்டமான், திறை கொடாதிருந்த கலிங்க நாட்டின் மேல் படை யெடுத்து வெற்றி கொண்ட போர்ச் செய்தி களையும் வெற்றிச்சிறப்பையும் அவனது பிறகீர்த்திச் சிறப்புக்களையும், பரணி நாளிலே போர்க்காலத்திலே பேய்கள் கூடி நிணக்கூழ் அட்டு, உண்டு களித்து ஆடிப்பாடிய வேளை, காளிக்குக்கூழி கூறுவதாய் அமைந்தது. கற் பனை வளமும் சொல்லணி, பொருளணி நலன்களும் மிக்குடைய தாய் மிளிர்வது. இதனையே பரணிக்கோர் சயங் கொண்டான் பின்வருமாறு எடுத்தியம்புகிறார்.

"வற்றியபேய் வாயுலர்ந்து வறள்நாக்கை
நீட்டுவபோல்
முற்றியநீள் மரப்பொதும்பின் முதுபாம்பு புறப்படுமே"

மிகவும் மெலிந்த பேய்கள் தண்ணீர்த் தாகத்தால் ஈரம் உலர்ந்து அதனால் வறண்ட நாக்கை நீட்டுவனபோன்று, முற்றி வறண்ட நீண்ட மரப் பொந்திலே, பெரிய பாம்புகள் தலை நீட்டிப் புறப்படும் என்று பாலையின் கொடிய வெம்மைதனை மிகச் சிறப்பாக மனதில் பதியும் வண்ணம் பல்வேறு தற் குறிப்பேற்ற அணிவடிவங்களைப் பயன்படுத்தி இருப்பது இலக்கியச் சுவையின்பாற்பட்ட ஒன்றாகவே அமைந்திருக்கிறது.

சோழர் காலமான பொற்காலத்தில் எழுச்சி பெற்ற இலக்கியமான சீவகசிந்தா மணியினை எடுத்து நோக்கின் அதிலே, சீவகனே தன்னிகரில் லார் தலைவனாகத் திகழ்வதால் அவனைப்பற்றிய கருத்துக்கள் இக் காப்பியத்தில் சிறப்புற்று இருந்தாலும் துன்பம், சோகம் போன்ற பண்புகளும் இணைந்து இளையோடி இருக்கின்றன. சீவகன் சுடுகாட்டிலே பிறந்தவேளை அவன் தாய் அடைந்த துன்பத்தைப் திருத்தக்க தேவர் சிறப்பிக்கும்போது,

"வெவ்வாய் ஓரி முழுவாக விழுந்தார் ஈமம்
விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்டின் உயர் அணங்கின்
நுணங்கிப்பேயாட
எவ்வாறிருந்தும் கூகைகுழறிப் பாராட்ட
இவ்வாறாகிப் பிறப்பதுதான் மன்னர்க்கியல்பா
வேந்தே"

என அத்தாய் புலம்புவதாகக் காட்டப் பட்டிருக்கும் பாங்கு துன்பச்சுமையின் எல் லையை வெளிப்படுத்துவதாயுள்ளது.

எனவே மேற்கூறிய இலக்கியச் சான் றாதாரங்களை வைத்து நோக்குமிடத்து சமு தாயத்தின் நிலைக்கண்ணாடியான இலக்கி யங்கள் பல்வேறு சுவை பொருந்தியனவாக அமைந்திருந்த அதே நேரம் அழகியல் உணர்வினையும் மிகத் துல்லியமாகத் தெளிவுபடுத்துவதாகவே அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

*நி. நிலாஜினி*
ஆண்டு 13 கலைப்பிரிவு (2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்திரக் கலையில் சித்திபெற

*திரு. க. ரட்ணேஸ்வரன்*
விரிவுரையாளர்,
கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்

ஓவியக் கலையானது எமது பாரம்பரியமான ஒரு கலை வடிவமாக இருந்த போதும் அதனை ஏற்றிப் போற்றி வளர்ப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் மிக மிக அரிதான நடைமுறைகளே எமது சமூகத்தில் இன்று காணப்படுகின்றது. ஆய்வியலாளர்களால் உலக முதல் மொழி எனக் கருதப்படும் இவ் ஓவியக் கலையானது பாட்சாலைகளில்கூட ஒரு இரண்டாம் தர நெறியாகவே கணிக்கப்படுவது கவலைக்குரியதாகும்.

புகைப்படக் கருவியின் வருகையால் ஓவியக் கலையில் பின்னடைவு ஏற்பட்டதென கருதமுடியாது. மேலை நாடுகளில் ஓவியக் கலையில் மதிப்பும், ரசனையும் மேலோங்கி நிற்கிறது. அங்கு ஓவியங்கள் பல பெறுமதியான விலைகளுக்கு விற்கப்படுகின்றன. போற்றப்படுகின்றன. இப்படிப்பட்ட மேலை நாட்டில்தான் புகைப்படக் கருவியின் கண்டுபிடிப்புகளும் வளர்ச்சியும் சமகாலத்தில் நடந்தேறுகின்றது. அங்கு ஓவியக் கலையில் வீழ்ச்சி ஏற்பட வில்லையே! கணப்பொழுதில் சொற்ப உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடிய புகைப்படங்கள் ஓவியங்களுடன் ஒப்பிட முடியாதவை.

இன்று பாடசாலைகளில் சித்திரக்கலைப் பாடமானது வெறும் பரீட்சையை இலக்காகக் கொண்டே கற்பிக்கப்படுகின்றது. நகரப் பகுதிப் பாடசாலைகளில் இரண்டாம் தர பாடநெறியாகக் கூட சித்திரக் கலையை நோக்குவதில்லை. இதற்கு பல காரணங்கள் உண்டு. இதனாலேயே தான் 9D எடுக்கும் மாணவர்கள் சித்திரப் பெறுபேற்றில் F எடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பரீட்சை நோக்கில் க.பொ.த.சாதாரண சித்திரக் கலையானது மிகவும் இலகுவாக சித்தியடையக்கூடிய பாடமாகும். எழுத்தறிவு, வாசிப்பறிவு அற்ற மாணவர்கள் கூட சித்திரக் கலைப் பரீட்சையில் சித்தியடைய வாய்ப்பு இருக்கிறது. பரீட்சை வினாத்தாள் பகுதி I அறிமுறையில் சில கடினத் தன்மை இருந்தாலும் பகுதி II, III இல் திறமைச் சித்தி (C) பெறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. கீழ்வரும் தரவுகளை அவதானிக்கும் போது பல உண்மைகளை நீங்கள் அறியலாம்.

சாதாரண தரப் பரீட்சையில் கலை அறிமுறைத் தேர்வாக பகுதி I காணப்படும். மொத்தம் 40 வினாக்களை கொண்டிருக்கும். ஒவ்வொரு புள்ளி வீதம் 40 புள்ளிகள் இதற்கு வழங்கப்படும். இலங்கை சித்திர, சிற்ப, கட்டிடக் கலைகள் சம்மந்தமாக 80% வினாக்களும் இந்தியா, மேற்கத்தேயம் சம்மந்தமாக 20% வினாக்களும் கூடுதலான பௌத்த மதம் சார்ந்த வினாக்களாக இது அமையும்.

பகுதி II பொருட்கூட்ட வரைதல் செயல் முறையாகும். இதற்கு 30 புள்ளிகள் வழங்கப்படும். இயற்கை, செயற்கைப் பொருட்களின் அவதானமும் கற்றுக் கொள்ளலும் இதன் திறன் வளர்ச்சியாக கருதப்படும். இதில் சுயாதீன ரேகை வெளிப்பாட்டில் ஒரு ஆக்கமும் வர்ணத்தால் பூரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்கப்பட்ட ஒரு ஆக்கமும் எதிர்பார்க்கப் படும். பின்வரும் 6 அம்சங்களை கருத்திற் கொண்டு ஒவ்வொன்றிற்கும் முறையே 5 புள்ளிகள் வீதம் 30 புள்ளிகள் வழங்கப் படும். அவ் அம்சங்கள் வருமாறு:

1. இரேகைகளினால் நிருமாணித்த ஆக் கத்திற்கு
2. பரப்பிற்கு (கடதாசிக்கு) பொருத்தமான ஒருங்கிணைப்பு
3. அளவு பரிமாணம், தூரநோக்கு வெளிப் படுத்தல்
4. கருத்துடன் வர்ண உபயோகமும் முப் பரிமாண வெளிப்பாடும்
5. பின்னணி, முன் தளம் வெளிப்பாட்டுத் தன்மை
6. சித்திரத் திறனும் பூரணப்பாடும்.

மேற்படி வினாத்தாள் மதிப்பீட்டின்போது மேற்குறித்த 6 விடயத்தில் ஒவ்வொன்றிலும் மாணவனது வெளிப்பாடுகள் அரிதாக இருப் பினும் ஆகக் குறைந்தது ஒரு புள்ளியாவது வழங்க வேண்டிய தேவை இருப்பதன் மூலம் 6 புள்ளிகள் (மாணவனது முயற் சிக்கு) நிச்சயம் கிடைக்கும். மேற்குறித்த ஆறு விடயத்தையும் கவனத்திற் கொண் டால் முழுமையான புள்ளிகளைப் பெறலாம். இவ்வடிப்படையே பகுதி III இற்கும் கைக் கொள்ளப்படும்.

பகுதி III இல் கருத்து வெளிப்பாடு (வர்ணப் பட ஆக்கம்) அல்லது ஆக்க அலங்காரமென ஒவ்வொன்றிலும் முறையே ஆறு, ஆறு வினாக்களாக மொத்தம் 12 வினாக்கள் தரப்பட்டிருக்கும். இவற்றுள் ஏதா வது ஒரு ஆக்கத்தை மட்டுமே மாணவன் வெளிப்படுத்த வேண்டும். இதற்கு 30 புள்ளிகளாகும்.

சுற்றாடலில் அன்றாடம் காணக் கிடைக்கும் நிகழ்வுகளின் உயர்ந்த வெளிப் பாடுகளே கருத்து வெளிப்பாட்டுச் சித்திரத் தில் எதிர்பார்க்கப்படும். இது மாணவரிடம் ஆக்க, நயத்தில் திறனை ஊக்குவிப்பதாக அமைகின்றது. இதற்கு பின்வரும் 5 விட யங்களை கருத்திற் கொண்டே புள்ளி வழங்கப்படுகிறது.

1. தொனிப்பொருளுக்கு பொருத்தமான சூழ லும் அமைப்பும்
2. மனித உருவங்களின் பலதரப்பட்ட வெளிப்பாடு
3. கருத்திற்கு ஏற்ப இயற்கை ஆக்கப் பண்பும் வெற்றியும்
4. வர்ணத்தைக் கையாளும் திறன்
5. பூரணப்பாட்டின் சிறப்பு

மேற்படி பகுதி ரசனைமிக்க படைப்பாக வும் மதிப்பீட்டுப் பெறுமதியை உயர்த்தக் கூடியதாகவும் (அலங்காரப்பட ஆக்கத்திலும் விட) காணப்படுகின்றது. ஆயினும் 95% மாணவர்கள் இப்பகுதிக்குள் செல்வதில்லை.

ஆக்க அலங்காரப் பகுதியே அநேக மாணவர்கள் (95%) தேர்ந்தெடுக்கின்றனர். இதனையும் கூட சரியான முறையில் வெளிப்படுத்த முடியாமல் கடினப்படுகிறார்கள். அன்றாடத் தேவைகளுக்கு ஆக்கபூர்வமான அலங்காரத்தை திட்டமிடுதலும் அலங்கரித் தலும் இதன் திறனாகக் கொள்ளப்படுகின் றது. இதன் மதிப்பீட்டு முறைகள் 5 விட யங்களில் ஒவ்வொன்றும் 6 புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

1. தலைப்பிற்கு பொருத்தமான ஆக்க நிர் மாணிப்பு
2. நுட்ப முறையை கருத்துடன் உப யோகித்தல்
3. இரேகை, வடிவமைப்புகள் பொருத்தப் பாடு
4. பொருத்தமான வர்ணத் தெரிவு
5. பூரணப்பாட்டின் சிறப்பு

பெரும்பாண்மையான மாணவர்கள் அலங்காரப் பகுதியை தேர்ந்தெடுப்பதால் இதைப்பற்றி சற்று விரிவாக நோக்கலாம். மிகவும் சுலபமான முறையில் அலங்காரப் பட ஆக்கத்தை ஆக்கிக் கொள்ளலாம். இவற்றிற்கு தாராளமாக கருவிகளை உப யோகிக்கலாம். சில பழைய, புதிய அலங் காரங்களை மீண்டும் மீண்டும் வரைந்து பழகிக்கொள்ள வேண்டும். அவற்றையே பரீட்சைக்கும் பலவழிகளாலும் பயன்படுத்த முடியும்.

உதாரணமாக நாகமலர், பலாப்பொத்தி, சவடி ஆகிய வடிவங்களை மாணவர்கள் வரை பயிற்சியில் பழகியிருந்தால் அவற்றை வெவ்வேறு அங்கார ஆக்கத்திற்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்பதை கீழுள்ள படங் கள் தெளிவுபடுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












வட்டம்




கரையலங்காரம்



தட்டம்



மேற்காட்டப்பட்டவை சித்திரக்கலை பரீட்சைக்குரிய சில தகவல்கள். மனிதனது அழகியல் உணர்விற்கும் ஆத்மீக வளர்ச்சிக் கும் பேருதவியாக இருக்கும் ஓவியக் கலை யானது இக்கணனி யுகத்திலும் எவ்வாறு கால்பதித்து, மிளிரப் போகிறது என்பதை நாளைய சந்ததியின் கலை நடப்பு களைப் பொறுத்துத்தான் . . .




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை தவிர்ப்போம்

புலன் மயக்கும், நலன் பறிக்கும், நோயை வளர்க்கும், சாவை அழைக்கும் மதுவைத் தேடாதீர்! தீண்டாதீர்! இதயநோய் புற்றுநோய்க்கு அடுத்தபடியாக இன்று மனித னைக்கொன்று வரும் மிகக் கொடிய நோய் மது குடித்தலாகும். அமெரிக்க மருத்துவக் கழகம் மதுக்குடியை ஓர் நோய் என 1956ம் ஆண்டு அறிவித்துள்ளது. டாக்டர் கெல்லர் மற்றும் எப்பரான் "தீரா மதுக்குடியை" மனித னது உடல் மற்றும் மனநிலையை பீடிக்கும் ஓர் பயங்கரமான வியாதி என்று கூறியுள் ளார்கள். இந்தக் கொடிய நோய்க்கு இன்று உலகில் 6 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் பலியாகி வருகின்றனர்.

குறிப்பாக மேலைய நாடுகளையே தாக்கிவந்த இந்நோய் இன்று நமது நாட்டை யும் பீடிக்கத் தொடங்கிவிட்டது. தமிழ் நாட்டில் இன்று 35 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்களை இந்நோய் தாக்கியுள்ளது. குடி நோய் ஓர் தனிமனிதனை மட்டும் தாக்கும் நோயல்ல. அவரது குடும்பத்தையும் அவர் வாழும் சமுதாயத்தையும் பாதிக்கும் ஓர் நோயாகும். குடிநோயால் நாள்தோறும் எண் ணற்ற போக்குவரத்து விபத்துக்கள் ஏற்பட்டு நாட்டில் உற்பத்திப் பாதிப்பு ஏற்படுகிறது.

பிரான்சு நாட்டில் 40 முதல் 60 சதவீத சாலை விபத்திற்குக் குடிநோய் தான் காரணமெனக் கண்டறிந்துள்ளனர். குடி நோயின் பிடியில் சிக்கித் தவிக்கும் தலை வர்களால் சில நாடுகள் கூட ஆட்டம் கண்டுள்ளன. எனவே இக்கொடிய நோயின் தீவிரத்தை அறிவது மிகவும் அவசியமாகும். குடியால் நல்லறம் எனப் போற்றப்பட்ட இல்லறம் உடைந்து எண்ணற்ற பெண்கள் மடிகின்றனர்.

எண்ணற்ற குழந்தைகள் மதுக்குடி யால் பீடிக்கப்பட்டுள்ள தமது பெற்றோரின் கொடுமைகளைத் தாங்க இயலாமல் அநாதை ஆசிரமம், அரசினர் விடுதி, அண்டை ஊர் எனப் படையெடுக்கின்றனர். நல்ல குடும்பத்துப் பெற்றோர்கள் கூட காடு மேடு எனப் பல இடங்களில் அலைந்து குடி நோயால் தாக்கப்படாத வாலிபன் கிடைப்பது அரிது எனக் கண்டு, தற்கால வாலிபர்களில் குறைந்த அளவில் குடிகார ராக இருப்பவரைத் தேர்ந்தெடுத்து அவரை வரதட்சனை கொடுத்து விலைக்கு வாங்கி, தனது அருமை மகளைக் கைப்பிடித்துக் கொடுத்தால்கூட அவரும் விரைவில் "தீவிரக் குடியராக" மாறி விடுவதால் எண் ணற்ற இளம் பெண்கள் கசக்கப்பட்ட ரோஜாக்களாக கண்ணீரோடு கல்லறையை நோக்கி தகப்பன் வீட்டை நோக்கி ஓடு வதை நாம் அன்றாடம் பார்த்து வருகிறோம்.

"கல்லானாலும் கணவன் புல்லானா லும் புருஷன்" என்ற நிலை பிறழாது வாழ்ந் தாலும் பெண்களுக்கு குடிப்பவர் தரும் பரிசு அடி, உதை, அவமானம், நிந்தை மற்றும் மரணமுந்தான். குடிப்பவர் தனது குழந்தை களால், மனைவியால், மற்றவர்களால் பாவி என முத்திரை குத்தப்பட்டு எல்லோ ராலும் வெறுத்து ஒதுக்கித் தள்ளப்படும் எட்டிக் காயாக மாறிவிடுகிறார். மரணக் குழியை நோக்கி ஓடுகிறார்.

குடிப்பவரை மரணம் பீடிக்க மனைவி தனிமையாக்கப்படுகிறாள். இதனால் அவ மானமும், பழிச்சொல்லும் அவளைத் தாக்கு கிறது. பல இளவயது விதவைகள் எதிர் நீச்சல் போடமுடியாமல் தவறான வழியைத் தெரிந்துகொள்கின்றனர். முந்தைய கணவ னின் குழந்தைகள் அலட்சியப்படுத்தப்படு கின்றனர். எனவே குடிப்பவர் இதை சிந்தித் துப் பார்த்து தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். இவர். இவ்வாறு குடியால் குடிப் பவர் மட்டுமல்லாது அவர் மனைவி, மக்கள் பெற்றோர், உடன் பிறப்புக்கள் மற்றும் அவர் வாழும் சமுதாயமும் பாதிக்கப்படுகிறது.

பணக்காரன் முதல் பரம ஏழை வரை, ஆசிரியர் முதல் மாணவர் வரை, சமுதாயத் தில் எல்லா நிலை மனிதர்களும் குடிநோ யால் பாதிக்கப்படுகிறார்கள். சம உரிமை கோரும் பெண்கள் கூட குடிநோயை சம மாகப் பெறுவதில் இன்று இறங்கியுள்ளனர். மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும் ஆண் களில் 25 முதல் 45 சதவீதமும் பெண் களில் 5 முதல் 8 சதவீதமும் குடிநோயால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடிக்கப்பட்டுள்ளனர் என பிரான்சு நாட்டின் ஆய்வு ஒன்று கூறுகிறது.

நமது நாட்டிலும் சமுதாயத்தின் மேல் மட்டம் மற்றும் அடிமட்டத்தில் உள்ள குடும்பப் பெண்களை இக்கொடிய நோய் அதிகமாகத் தாக்கி வருகிறது. நமது நாட்டில் கல்லூரி மாணவிகள் குறிப்பாக தொழில்சார்பு கல்விக் கூடங்களில் பயிலும் பெண்களில் 3 சத வீதம் பேர் குடிநோயால் தாக்கப்பட்டுள்ளனர் என ஓர் புள்ளி விபரம் கூறுகிறது. விலை மாதர்களில் 80 சதவீதம் பேர் குடிப்பவர்கள் என ஆய்வு கூறுகிறது. இறைவன் வாழும் ஆலயமாகிய இந்த மனித உடல் இன்று குடியால் சல்லடையாக்கப்பட்டு நச்சு செறி வூட்டம் நிறைந்ததாக மாறிவருகிறது. இறை வனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் ஏன் இன்று இந்த அமளிபண்ணும் மது பானத்தால் தன்னைச் சூடாக்கும்படி தரித் திருந்து, அக்கிரமம் செய்து, அகங்காரியாகி, துன்மார்க்கனாக மாறி மரணத்தை நோக்கி ஓடவேண்டும். ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில் லாத காயங்கள்? யாருக்கு இரத்தம் கலங் கிய கண்கள்? மதுபானம் இருக்கும் இடத் தில் தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுபவர்களுக்கும் தானே! இது விரியனைப் போல் தீண்டும் எனப் பலமுறை குருக்களால் ஆலயங்களில் எச்சரிக்கை கொடுக்கப்படும் எண்ணற்ற மாந்தர் இந்த அழிவுப்பாதையை நோக்கி ஓடுகின்றனர்.

பல வகைப்பட்ட மதுபானங்கள் மது குடிப்பது மிகவும் பழங்காலத்திலிருந்தே பழக் கத்திலிருந்து வந்திருக்கிறது எனத் திரு முறை கூறுகிறது. ஆனால் இன்று மதுக் குடி வரம்பு மீறி மனிதனது பண்பை மாற்றி ஒழுக்கத்தையும் நற்குணங்களையும் அழித்து சமுதாயத்தில் ஓர் கொடிய நோயாக மாறி வருவது வேதனை தருவதாகும். உற்சாக பானமாக உபயோகிக்கத் தொடங்குகின்ற னர். ஆனால் அது உயிர்குடிக்கும் பான மாக மாறிவிடுகிறது. மதுபானம் அற்ககோல் கலந்த ஒரு போதைப்பொருளாகும். இதில் எத்னதல் அற்ககோல் உள்ளது. பழங்கள் கரும்புச்சாறு, பதநீர், சர்க்கரைக் கரைசல் போன்ற பொருள்களிலிருந்தும் அரிசி, பார்லி, மால்ட், உருளைக்கிழங்கு போன்ற மாவுப் பொருள்களிலிருந்தும் தயாரிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களின் கரைசலில் ஈஸ்ட் எனப்படும் நுண்ணுயிர் வினைபுரிந்து நொதித்தல் நடைபெற்று அற்ககோல் கலவையாக மாற்றுகிறது. இந்த எத்னதல் அற்ககோல்தான் மதுபானத்திலுள்ள தீமை பயக்கும் பொருளாகும். இதைத் தவிர இன்று கிராமப் புறங்களில் பயன்படுத் தப்படும் சாராயத்தைத் தயாரிக்கப் பலவகை யான உயிர்கொல்லும் பொருட்களும் சேர்க் கப்படுவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். அதாவது வெல்லப் பழங்கள் பெரும்பாலும் அழுகிய பழங்கள், நவச்சாரம், பழைய பற்றரிக் கட்டைகளை உடைத்து எடுக்கப் படும் பொடி நிலத்திற்குப் பயன்படும் யூரியா உப்பு, கடுக்காய், கருவை—வேலம்பட்டை மற்றும் சில பட்டைகள் முதலியன.

சிலவேளைகளில் போதை மாத்திரை பொடிகளையும் மற்றும் சில பொருட்களை யும் சேர்க்கின்றனர். பற்றரியில் உள்ள காரி யம் எவ்வளவு கொடிய நஞ்சு என்பதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட பொருட்களி லிருந்து உற்பத்தி செய்யப்படும் சாராயத்தில் 50 முதல் 60 சதவீதம் வரை அற்ககோல் உள்ளது. மேலும் பனை, தென்னையி லிருந்து பெறப்படும் கள்ளில் 4 முதல் 5 சதவீதம் வரை அற்ககோல் அடங்கியிருக் கின்றது.

பீர் என்ற மதுவில் 2.5சதவீதம் அற்க கோல் இருக்கின்றது. இதைத்தவிர விஸ்கி, ரம், ஜின், பிராந்தியில் 40—60 சதவீதம் வைனில் 6—18 சதவீதமும் அற்ககோல் இருக்கின்றது. அற்ககோல் ஓர் சக்தி ஊட் டப்பட்ட திரவமாகும். 1கிறாம் அற்ககோலில் 7கிலோ கலோரி சக்தியுள்ளது. சில சில நண்பர்கள் பீர் ஆகியவை பாதுகாப்பா னவை என எண்ணுகின்றனர். நிச்சயமாக அவ்வாறு நினைப்பது தவறு. பீர்கள் அருந் துவர்கள் ஒரே நேரத்தில் 1லீட்டர் எளிதாகக் குடிப்பர். இது கிட்டத்தட்ட 7 லீட்டர் பிராந் திக்குச் சமமாகும். எனவே கள்ளும், பீரும் அதிகமாக அருந்தும்போது மற்ற பானங்களி லிருந்து பெறப்படும் அற்ககோலின் அளவை எட்டி விடுகிறது. எனவே கள்தானே, பீர் தானே என எண்ணிக் குடிக்காதீர்கள் ஆபத்து நிச்சயம் உண்டு.

அருந்தும் அற்ககோலில் 20 சதவீதம் இரைப்பையிலும் 80 சதவீதம் சிறுகுடலிலும் உறிஞ்சப்பட்டு இரத்தத்துடன் கலந்து உட லின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. அற்ககோல் கல்லீரலில் உடைக்கப் பட்டு ஆக்சிகரணம் அடைந்து கரியமில வாயு நீர் மற்றும் சக்தியாக வெளிப்படுகிறது. ஆண்களை விட பெண்களை அற்ககோல் நஞ்சு அதிகமாகத் தாக்குகிறது. மனிதன் உட்கொள்ளும் அற்ககோலின் அளவைப் பொறுத்தே அவனது செல்கள் மாறுகின் றன. உதாரணமாக மனிதனின் இரத்தத்தில் அற்ககோல் அளவு 0.02 சதவீதத்திற்கு மேல் சென்றால் வேதனை நாட்கள் தொடங்கிவிட்டன எனக் கூறலாம். கல்லீரல் 1 மணி நேரத்தில் 0.1 முதல் 0.15 கிராம் அற்ககோலை ஆக்சிகரணம் அடையச் செய்யும் இந்த அளவு அதிகரிக்கும்போது கல்லீரலில் நஞ்சு சரியாக முறிக்கப்படாது ஆபத்தை உண்டு பண்ணும்.

மனிதன் அருந்தும் அற்ககோலில் 10 சதவீதமே சுவாசித்தல், சிறுநீர், வியர்வை வழியாக வெளியேற்றப்படுகிறது. எஞ்சியுள்ள 90 சதவீதம் உடலிலேயே இருந்து விடு கிறது. மலம் வழியாக அற்ககோல் வெளி யேற்றப்படாது. உணவு மண்டலம் என்பது உண்ணும் உணவுப் பொருட்களை அரைத்து ஜீரணிக்கச் செய்யும் பகுதியாகும். இதில் வாய், நாக்கு, வாய்க்குழி, தொண்டை, உணவுக் குழல், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல், மலத்துவாரம் போன்ற பகுதிகளும், பொருட்களைச் சேக ரித்து வைப்பதற்குத் தேவையான நொதி போன்றவைகளைச் சுரக்கும் சுரப்பிகளாகிய கல்லீரல், கணையம் போன்றவைகளும் அடங்கும்.

அருந்தப்படும் அற்ககோல் வாய், நாக்கு, தொண்டை ஆகிய பகுதிகளில் நாளடைவில் புற்று நோயை ஏற்படுத்தக் கூடும். நாக்கு வரட்சி, நாக்குத் தடித்தல், பற்கள் விழுதல் தொண்டை எரிச்சல், தொண்டை அழற்சி பொதுவாகக் குடிப்பவர் கள் அனைவருக்கும் தோன்றும். இதைத் தவிர தொண்டை உணவுக்குழல், இரைப்பை மற்றும் சிறுகுடலின் உட்புறத்திலுள்ள மிருது வான அடுக்கு அடுக்கப்பட்ட புண்கள் உரு வாகின்றன. இந்தப் புண்கள் இறுதியில் இரைப்பையில் ஓட்டை கூடப் போட்டுவிடும். இந்தப் புண்கள் Peritoritis எனப்படும்.

நாம் அன்றாடம் முகச்சவரம் செய்த பின் தடவும் அற்ககோல் கலந்த லோவுன் எந்த அளவிற்கு எரிச்சலையும், அரிப்பை யும் உண்டுபண்ணுகிறதோ, அதைவிடப் பலமடங்கு அதிகமாகக் குடிப்பவரது வயிற் றுப் பகுதியில் எரிச்சல், வலி, நமைச்சல் உண்டாகும். சிறிதளவு அற்ககோல் பசியைத் தூண்டவல்லது என பயன்படுத்தப்படும் போதும்கூட பெரிதளவு இரைப்பை நீர் சுரக் கப்பட்டு அது இரைப்பையின் கோழை அடுக்கை அரிக்கிறது. குடல்வாழ் நுண் ணுயிர்கள் கொல்லப்பட்டு வாயுத்தொல்லை ஏற்படுகிறது. வெறும் வயிற்றில் மது அருந் துபவர்களில் 100 சதவீதம் பேர் பலவித உணவு மண்டல உபாதைகளால் அன்றாடம் துடிக்கின்றனர்.

இரைப்பை மற்றும் குடலில் இரத்தக் கசிவு, உறைவு ஏற்பட்டு மலம்கூட இரத்தம் கலந்த கறுப்பு நிறத்தில் இருக்கும். அற்க கோல் மேலும் பசியின்மை, வாய்குமட்டல், வாந்தி, அஜீரணம், தூக்கத்தன்மை போன்ற தீங்குகளை உண்டுபண்ணி உண்ணும் அளவையும் குறைக்க வைத்துவிடும். குடிப் பவர்கள் குடல் புண்ணின் வலிதாங்க முடி யாமல் துடிப்பதைக் காணலாம். இதைத் தவிர அற்ககோல் மனிதனுக்கு மிகவும் தேவையான சில வைட்டமின்கள் முன் சிறுகுடல் வழியாக உறிஞ்சப்படுவதைத் தடுக் கிறது. வயிற்றில் பெரிதாக வீக்கத்தை உண்டாக்கும்.

எடை குறைவதோடல்லாது உணவு மண்ட லத்தில் கடுமையான புற்றுநோயைக் கூட இப்போதை உண்டாக்கும் என கண்ட றியப்பட்டுள்ளது. தவிர அதிகமான உணவுப் பொருளை அற்ககோலுடன் சேர்த்துச் சாப் பிடும்போது முகம் வீங்கி உடல் பெருத்துக் காணப்படும். மனிதனுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய வரப்பிரசாதம் கல்லீரல் எனப்படும் உறுப்பாகும். இது செரிமானத்திற்குத் தேவை யான பித்த நீரைச் சுரப்பதோடு நில்லாமல் உடலினுள் வரும் நச்சுப் பொருட்களின் நச்சை முறிக்கும் ஒரு தொழிற்கூடமாகும். கல்லீரல் ஒரு பெரிய கருஞ் சிவப்பு நிறச் சுரப்பி இது வயிற்றறையின் மேற்பகுதியில் வலது பக்கத்தில் உதரவிதானத்தின் கீழ் இடம் பெற்றுள்ளது. இச்சுரப்பி இரு கதுப்புக் களை உடையது.

இந்தக் கதுப்புக்களில் எண்ணற்ற அறைகள் இருக்கின்றன. இந்த அறைகள் சுரக்கும் பித்த நீரைப் பல சிறிய நாளங்கள் சேகரித்து இரு பெரிய கல்லீரல் நாளங்களை யடைந்து இறுதியில் ஒரு பொது நாளத்தின் மூலம் முன் சிறுகுடலை அடைகிறது. அற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல் அருந்துவதால் பெரும் பாதிப்பை அடைவது கல்லீரலின் அறைகளும் அவை சுரக்கும் பித்தநீருமாகும். பொதுவாக கல்லீரலின் அறைகள் அழிந்தாலும் மீண்டும் மீட்சி அடையக்கூடியதுதான். ஆனால் அது அற்ககோலைத் தாங்கும் சக்திக்கு அதிகமாக அற்ககோல் சேர்ந்தால் நிரந்தர அழிவையே அடைகிறது.

கூடுதலாக இப்போதை அருந்துதல் அபிவிருத்தியடைந்த நாடுகளிலேயே காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த அமெரிக்கா, ஜப்பான், ரசியா, கனடா போன்ற நாடுகளில் இலங்கை மக்கள் பிளேன் ரீ குடித்துக்களை தீர்ப்பதுபோல மதுவை அருந்திக் களையைத் தீர்ப்பார்கள். தங்கள் விற்பனையைப் பெருக்குவதற்காக மதுபான சாலைகளில் கவரக் கூடிய விளம்பரங்களை முன்னாலே இடுவார்கள். இவ்விளம்பரங்களுக்கு மயங்காதீர்கள். ஒரு தடவைகூட சிறிதளவு பருகிப்பார்ப்போம் எனப் பருகினால் அவ் மதுவைத் தொடர்ந்து அருந்தத்தான் சொல்லும்.

ஆகையால் ஒரு துளி கூடப் பருக முயலாதீர்கள். இவ் மதுவை அருந்துவதால் எவர் பெரியவர்கள் எவர் சிறியவர்கள் எவர்களுடன் எவ்வாறு கதைக்கவேண்டும் என்று தெரியாமல் ஒழுக்கங்கள் கெட்டு, இவ் மது இவர்களை தீய வார்த்தைகளை எல்லாம் புலம்ப வைக்கிறது. இதனால் உங்களைச் சமுதாயம் மதிக்காது, உங்கள் உறவினர்கள் கூட உங்களைப் பார்த்து உறவினர் என பிறருக்குச் சொல்ல வெட்கப்படுவார்கள். உங்கள் சமுதாயத்தில் உள்ள மக்கள் உங்களைக் கண்டாலும் காணாதவர் போலப் போவார்கள் ஆகையால் மதுவை அருந்தாதீர்கள்.

இவ் மது உங்கள் உயிரை அணு அணுவாகக் கொல்கிறது. நீங்கள் ஒரு நண்பனை அணுகும் போது நல்ல ஒழுக்கமுள்ளவனுடன் அணுகவேண்டும். எங்கள் நாட்டில் இப்போது பழைய இரும்புத் துண்டுகளையும், மரப்பட்டைகளையும் போன்ற பல தீய பொருட்கள் இட்டு கசிப்பு என்னும் மதுவைக் காய்ச்சுகிறார்கள். ஆனால் இவ் கசிப்பு காச்சுபவர்களை இராணுவத்தினர் கண்டுபிடித்து அவர்களுக்குக் கடும் தண்டனை வழங்குகின்றார்கள். குடிப்பவர் தனது உடல் முழுவதும் பெற்றோலை ஊற்றி விட்டுத் தன்னை மாய்க்க தீக்குச்சி பற்ற வைக்கும் அளவிற்கு தயாராக உள்ள நிலையோடு ஒப்பிடலாம்.

குடிப்பவர் எவ்வளவுதான் வருத்தத்தை மாற்ற விரும்பினாலும் அவரது நோயைக் குணப்படுத்த முடியாது. எனவே ஆரம்பத்தில் குடியை விடுவது சாலச் சிறந்தது. உங்களது உயிரைக் குடிக்கும், புலன் பறிக்கும், நலன் பறிக்கும் நோயை வளர்க்கும் இவ் மதுவை அருந்தாதீர்கள். சூரியனைக் கண்ட பனி எவ்வாறு இல்லாமற் போனது போல இக்கட்டுரையில் இருக்கும் நல்ல கருத்துத்துக்களைப் பார்த்து உடனடியாகவே குடியை நிறுத்துங்கள். ஒழுக்கம் உள்ளவராகவும், சமுதாயம் மதிக்கக் கூடியவராகவும் வாழவேண்டும் என்றால் இன்றிலிருந்தே இவ் மதுவை அருந்தாதீர்கள்.

ஞானசுந்தரம் ஐங்கரன்
12 கலைப்பிரிவு (2002)

## வாழ்க்கையில் மூன்று

| | |
|---|---|
| மதிக்க வேண்டியது | – முதுமை, மதம், சட்டம் |
| விரும்ப வேண்டியது | – தூய்மை, நேர்மை, கடினஉழைப்பு |
| பாராட்ட வேண்டியது | – அழகு, அறிவு, குணம் |
| வைத்துக்கொள்ள வேண்டியது | – அஞ்சாமை, உற்சாகம், திருப்தி |
| காப்பாற்ற வேண்டியது | – செல்வாக்கு, நட்பு, பற்று |
| விலக்க வேண்டியது | – புகைத்தல், மது அருந்தல், சூது |
| கட்டுப்படுத்த வேண்டியது | – நாக்கு, உணர்ச்சி, இச்சை |
| கவனிக்க வேண்டியது | – பேச்சு, நடத்தை, செயல் |
| ஒழிக்க வேண்டியது | – சோம்பல், பொய், புறங்கூறல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதைபந்தாட்டம் ஒரு நோக்கு



திரு. இரா. வாசுதேவன்
ஆசிரியர்.விசேட பயிற்சி கணிதம்

இன்றைய உலகில் மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்ட விளையாட்டுக்களில் தலையானது உதைபந்தாட்டம் என்றால் மிகையாகாது. இக்கால உதைபந்தாட்டம் ஏறக்குறைய 135ஆண்டு வயதுடையது. எனினும் 4000 ஆண்டுகளுக்கு முன்பே இது சீனாவில் தோற்றம் பெற்றுவிட்டதாகச் சான்றுகள் உள்ளன. எனினும் நவீன உதைபந்தாட்டத்தின் (Modern Soccer) பிறப்பிடம் இங்கிலாந்தே ஆகும். இங்கிலாந்து என்ற தொட்டிலில் வளர்ந்த பிள்ளைதான் இன்றைய உதைபந்தாட்டம்.

1904ல் பிரான்ஸின் தலைநகரான பாரிசில் கூடிய ஏழு நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் டென்மார்க், ஒல்லாந்து, சுவிற்சிலாந்து ஆகியவை கூடி "அனைத்துலக உதைபந்தாட்டச் சங்கத்தை" (Federation of International Foot ball Association) அமைத்தன. இதுவே F.I.F.A என அழைக்கப்பட்டு உலகின் உதைபந்தாட்டம் தொடர்பான சகல விடயங்களையும் கவனித்து வருகிறது. இதன் ஓர் அங்கமே உலக உதைப்ந்தாட்ட மத்தியஸ்தர் சம்மேளனம். F.I.F.A யின் முதலாவது உலகக்கிண்ணப்போட்டி 1930ல் உருகுவேயில் நடைபெற்றது. 1930ல் இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் உருவானது. இதைப்போல் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் 1943ல் ஸ்தாபிக்கப்பட்டது.

இனி உதைபந்தாட்டம் ஆடும் முறை பற்றிச் சற்று நோக்குவோம். உதைபந்தாட்ட ஆடுகளமானது 120m நீளமும் 90m அகலமுமுள்ள செவ்வக வடிவானது. இதில் 11 வீரர்களால் ஒவ்வொரு நிலைகளும் குறிக்கப்படும். அவையாவன:

1. பேற்றுக்காவலன் (Goal Keeper)
2. வலது பின்னணி (Right back)
3. மையப் பின்னணி (Centre back)
4. இடது பின்னணி (Left back)
5. இடது அரை (Left half)
6. வலது பின்னணி (Right half)
7. மைய அரை (Centre half)
8. வலது சிறகு (Right wing)
9. இடது சிறகு (Left wing)
10. மைய முன்னணி (Centre Foward)
11. வலது / இடது உள் (Right / Left in)

இவர்களை விட இரு பதில் (Substitutes) வீரர்கள் ஆட்டத்தின்போது அனுமதிக்கப்படுவர். ஆட்டம் ஆரம்பித்திலிருந்து முடியும்வரை ஆட்டம் சார்பான சகல தீர்ப்புக்களுக்கும் பொறுப்பு வகிப்பவர் மத்தியஸ்தரே (Referee) இவரிற்கு உதவியாக இரு பக்க நடுவர்கள் (Lines men) கடமையாற்றுவர். இவர்கள் யாவரும் F.I.F.A யின் அங்கத்தவர்களாக இருத்தல் சிறப்பு.

சர்வதேச வழக்கில் ஆட்ட நேரங்கள் 45நிமி – 5நிமி – 45நிமி ஆகும். ஆட்டம் சமநிலையில் முடியுமாயின் சமநிலை தவிர்ப்புக்காக மேலதிகமாக தலா 5 நிமிடங்கள் வழங்கப்படும். இக் காலப் பகுதியில் யாதாயினும் ஒரு அணி கோல் அடித்தவுடன் (Golden goal) ஆட்டம் முடிவுக்கு வரும். இக்காலப்பகுதியிலும் சமநிலை தொடருமாயின் சமநிலை தவிர்ப்பு நேரடி உதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படும் (Direct Kicks) உதைபந்தானது கோள உருவாகவும் தோல் அல்லது அனுமதிக்கப்பட்ட மூலகங்களால் ஆக்கப்பட்டிருக்கும். இதன் சுற்றளவு 0.68m–0.71m உம் எடை 396g–453g உம் ஆகும். பந்தானது காலால் உதைக்கப்பட்டோ, தலையால் முட்டப்பட்டோ அல்லது கைகள், புயங்கள் தவிர்ந்த முண்டப்பகுதியில் பட்ட நிலையில் பேற்றுக் கம்பங்களுக்கிடையிலும் குறுக்குச் சட்டத்திற்குக் கீழும் பேற்றுக் கோட்டைத் தாண்டும் போது கோள் (goal) பெறப்படும்.

இன்று சர்வதேச ரீதியாக பல நாடுகள் உதைபந்தாட்டம் ஆடிவந்தாலும் பிரேசில் நாடே உதைபந்தாட்டத்தின் முடிசூடா மன்னனாகத் திகழ்கிறது. உலகிலேயே அதி கூடிய பேற்றுக்களை (goals) போட்டவீரரான பேலே (Pele) பிரேசில் நாட்டின் முடி சூடா மன்னனாக மக்களால் போற்றப்படுகிறார். இன்று பிரேசில் நாட்டு வீரர்களான றொமாறியோ, றிவால்டா, டொனால்டோ போன்றோர் சர்வதேச ரீதியில் மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்டவர்களாவர். பிரேசிலை அடுத்து பிரான்ஸ், ஜேர்மனி, ஆர்ஜன்டீனா, இத்தாலி, உருகுவே, இங்கிலாந்து போன்ற நாடுகள் பலம் வாய்ந்த உதைபந்தாட்ட அணிகளை தம்மகத்தே கொண்டுள்ளன. F.I.F.A யின் முன்னாள் தலைவர் Dr.Havelong "உதைபந்தாட்டம் ஒரு உலக மொழி, இது உலக மக்களை ஒன்றிணைக்கும் உறுதியான பாலமாக அமைகிறது" எனக் கூறுவது ஒரு மறுக்கமுடியாத நிதர்சனம்.

### ஆடுகள அமைவும் ஆட்ட வீரர்களின் நிலைகளும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் யாழ் ஜெய்ப்பூரின் ஆரம்பமும் விருத்தியும்

ஜெய்ப்பூர் பாதத்திட்ட முறையானது எமது தாய்த்திரு நாட்டிலுள்ள உடல் ஊன முற்ற மக்களுக்கு மறு வாழ்வளிக்கும் வண் ணம் கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தனித் துவம் வாய்ந்த திட்டமாகும். இத்திட்டத்தை செயற்படுத்தத் தொடங்கும் முன்னதாக எமது நாட்டிலுள்ள உடல் ஊனமுற்ற மக்கள் மருத்துவ, சமூக, பொருளாதார உளவியற் பிரச்சனைகளை எதிர்நோக்கும் அபாக்கிய வான்களாக இருந்தனர். ஊடல் ஊனமுற்ற வர்களில் வெளிநாட்டு மருத்துவமனை களுக்குச் சென்று ஒரு செயற்கை உறுப் பைப் பொருத்தக்கூடிய நிதி வசதி படைத்த அல்லது ஒரு செயற்கை உறுப்பினை இங்கு தருவித்து அதனைப் பொருத்து வதற்கேற்ற வசதிகளுடைய ஒரு மருத்துவ நிறுவனத்துக்குச் சென்று அதனை பொருத் துவித்துக் கொள்ளும் பொருளாதார வசதி களுடைய உயர்மட்டத்தைச் சேர்ந்த ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோர் தமது இல் லங்களில் ஒரு துயரமான வாழ்க்கையை வாழ்நதுவந்தனர் அல்லது இரண்டு ஊன்று கோல்களின் உதவியுடன் தத்தித் தத்திச் சென்றனர்.

பொருளாதார வசதியுடைய சிலர் செயற்கை உறுப்பொன்றை பெறுவதற்கு அரசாங்க மருத்துவமனைகளின் உடற்குறை மருத்துவ கூறுகளில் தம்மைப் பதிவு செய்து விட்டு செயற்கை உறுப்புக் கிடைக்கும்வரை சக்கர நாற்காலியின் உதவியுடன் நடமாடினர். இலங்கையில் செயற்கை உறுப்பு தயாரிக் கும் பணி மந்தகதியிலேயே நடைபெற்று வந்தது தயாரித்து அளிக்கப்பட்ட செயற்கை யுறுப்பின் கிரயம் மிக அதிகமாக விருத் தமையால் சாதாரண மக்களால் அதனை வாங்க முடியாமல் இருந்தது. இவை எல்லாவறுக்கும் மேலாக அச் செயற்கை யுறுப்பின் மிகப் பெரிய குறைபாடு அது மூன்றாம் உலக நாடுகளில் வசிக்கும் அங்கவீனர்களின் அன்றாட வேகளுக்குப் பொருத்தமில்லாததாக அமைந்தமையேயாகும். மேல் நாட்டவரின் தொழில் நுட்பத்தையும் பொருள்களையும் இங்கும் பயன்படுத்தியே அவற்றை தயாரித்த தால் அது மேலை நாட்டிற் தயாரிக்கப்படும் உறுப்பையொத்த ஒன்றாகவே இருந்தது.

இக்கால கட்டத்தில் இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் சாவாய் மான்சிங் மருத்துவ மனையைச் சேர்ந்த புகழ் பூத்த அறுவை வைத்திய நிபுணர் பேராசிரியர் "பிரமொட் கரன் செத்தி" அவர்களால் "ஜெய்ப்பூர் பாதம்" கண்டுபிடிக்கப்பட்டது. இக் கண்டுபிடிப் பானது இறப்பர் பாதத் தயாரிப்பில் ஓர் அரிய சாதனையாகப் போற்றப்பட்டதுடன் அபிவிருத்தி அடையும் நாட்டிலுள்ள உடல் ஊனமுற்றவர்க்கு மிகப் பொருத்தமான பாத மாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. அப்பாதத்தின் எளிமை நீண்ட காலம் உழைக்கும் தன்மை இயற்கையோடு ஒத்த தன்மை, நீர் புகாத்தன்மை, பயிற்சி பெற்ற உள்ளூர்ப் பணியாளரால் உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கக்கூடிய தான இலகுவான எளிய தொழில்நுட்பம் அதனைப் பொருத்துபவர்கள் எப்போதும் எச்சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தக் கூடியதாக வுள்ளமை என்பன காரணமாக அது மூன் றாம் உலக நாடுகளில் உள்ள மேலைத் தேய தகைமை பெற்ற மருத்துவர்களைக் கூட கவர்ந்துள்ளது. அவர்கள் உடல் ஊன முற்ற தமது நோயாளர்களுக்கும் அவற்றைப் பொருத்த நாடினர்.

சர்வதேச மானிட உதவித்திட்ட முறை யைச் (International Human Assistance Programme) சேர்ந்த திரு. ஸ்ரீபன் எவ் வில்பர் என்பவர் கம்பகா மாவட்டத்திலுள்ள உடல் ஊனமுற்றவர்களின் நன்மை கருதி இத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு திருமதி போல் பெரேரா (கொழும்பு ஜெய்ப்பூர் பாதத் திட்டத்தின் முகாமை சபையின் அன்றைய தலைவி) அவர்களுக்கு 1983 ஜீன் மாதம் கூறியதையடுத்து இலங்கையில் ஜெய்ப்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதத்திட்டத்தைச் செயற்படுத்துவது சாத்திய மாகியது. அத்தகையவொரு பாரிய திட்ட முறையைச் செயற்படுத்தி நடத்துவதற்கு ஏற்ற அமைப்பு கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கமேயாகுமென அவர் கருதி யமையால் அத்திட்டத்தை மேற்கொள்ளு மாறு அவர் இச்சங்கத்தை கேட்டுக்கொண் டார். அல்லாமலும் உடற் குறைபாடுடைய வர் துன்பங்களை நீக்குவதாகிய மிகவுயர்ந்த மானிட சேவையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள அமைப்பாக இச்சங்கம் விளங்கியது.

திருமதி ஸ்வர்ணா பர்டினன்ட் என்ப வர் இத்திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்து பயன்தரச் செய்ய நம்பிக்கைகளுக்கும் ஏமாற்றங்களுக்கிடையேயும் மிகவும் கடுமை யாக உழைத்தார். அவரது விடாமுயற்சியே இந்த திட்டம் வெற்றிகரமாக வளர்ந்து உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் செயற் படச் செய்தது. இலங்கையில் செயற்படுத்தப் பட்ட ஜெய்ப்பூர் பாதத்திட்டம் வெற்றியளிக் கும் என்பதை 1985 ஆகஸ்ட் மாதத்தில் முதன் முதலாகப் பூரணமான ஜெய்ப்பூர் உறுப்பு தயாரிக்கப்பட்டு முதன்முதலாக வீதி விபத்தில் பாதிக்கப்பட்ட "சிறிலால் சிறிகுமர" எனும் இளைஞனுக்குப் பொருத்தப்பட்டதி லிருந்து தெளிவாகிறது. இத்திட்டத்தில் ஈடு பட்ட அனைவருக்கும் தமது கனவு நன வாகியது பற்றி மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்பட்டது.

வடக்கில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட பரிதாப நிலையை கண்ட நோராட் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் நிறுவனம் நிறுவு வதற்கு தன்னால் ஆன உதவிகளை கொழும்புத் தேவைக்குதவும் நண்பர்கள் சங்கத்திற்கு உதவியது. அத்துடன் 250 000 ரூபாவையும் அன்பளிப்பாக வழங்கி தனது ஒத்துழைப்பையும் உச்ச ஆதரவையும் வழங் கியது. இதன் பொருட்டு 1987ம் ஆண்டு ஜூலை மாதம் சுண்டிக்குளி பழைய பூங்கா வீதியில் ஜெய்ப்பூரின் யாழ் கிளையானது உத்தியோகபூர்வமாக மிகவும் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

யாழ் ஜெய்ப்பூர் நிறுவனமானது ஆரம் பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை திருப்திகர மாக முன்னெறி வருவதுடன் அது நிறுவப் பட்டதன் நோக்கத்தினையும் நிறைவேற்றி வைக்கின்றது. இவ்வாறு அது தனது இலங்கைநோக்கி வீறுநடை போடுகின்றது.

*சி.சத்தியசங்கர்*
**தரம் 13 கலைப்பிரிவு 2001**

## அமர நீதிகள்

* பொருளுள்ளபோது தியாகம், அதிகாரத்தில் சகிப்புத் தன்மை, துன்பத்தில் தைரியம், ஒழுக்கத்தில் மனிதாபி மானம் என்பனவே பெரியவர்களின் இலட்சிய வாழ்வாகும்.

* மரங்களை வெட்டினாலும் தழைவிடுகின்றன. சந்திரன் தேய்ந்தாலும் மீள வளருகின்றது. செல்வம் குறைந்தாலும் அறிவாளிகள் அழுவதில்லை.

* நல்வர்கள் வறுமை வந்தபோதிலும் தம்மியல்பு குன்று வதில்லை. பனிக்கட்டி வெயில் வந்தபோது உருமாறி னாலும் குளிர்ச்சி குறைவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக அன்புடன் கிறிஸ்துவின் பணியில்:

## பனிமூடிய பாதையில் ஒரு பயணம்

நேபாளத்திலிருந்து திபெத்துக்குப்போகும் பாதை ஆபத்து நிறைந்தது. உயரச்செல்லச் செல்ல சாலையின் அகலம் குறைந்து கொண்டே செல்லும். ஒரு பக்கம் உயர்ந்த மலை மறுபக்கம் கிடுகிடு பள்ளத்தாக்கு. இவ் இரண்டின் மத்தியில் தான் எவரும் நடந்து போக வேண்டும். பாதை உயர மானதால் எப்பொழுதுமே அம்மலையில் பனி நிறைந்திருக்கும். பனிப்புயல் காற்றுக்கள் வீசுவது, சர்வசாதாரணமான ஒன்று. இத்தனை ஆபத்துக்கள் அப்பாதையில் இருப்பினும் அது ஒரு நேர்பாதையாகவும், தூரம் குறுகியதாகவும் இருக்கின்ற காரணத்தினால் அநேகர் ஆபத்தைப் பொருட்படுத்தாது அப் பாதையில் பிரயாணம் செய்வதுண்டு.

அது ஒரு கோடைகாலம். பனிபெய்து கொண்டு தான் இருக்கிறது. இப்பாதை வழியாக இரண்டு மனிதர்கள் நடந்துபோய்க் கொண்டிருக்கின்றனர். ஒருவன் தனது வியாபாரத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருப்பவன். குளிர் பாதிக்காத வாறு ஏற்ற அனலூட்டும் விசேட உடையையும் ஏற்ற சப்பாத்தையும் அணிந்து கொண்டி ருந்தான். மற்ற பிரயாணியோ, ஓர் ஏழை தேவ ஊழியர். காவி அங்கி தரித்தவராக போட்டிருந்த மெல்லிய உடுப் போடு செருப்புமின்றி அவனுடன் நடந்துவந் தார். இவர்தான் சாது சுந்தர் சிங் என்று அறியப்பட்ட பெரியதொரு கர்த்தருடைய தாசர்.

வழியிலே அவ்வியாபாரியுடன் இயேசுவை பற்றியும் அவர் தியாக அன்பையும், தன்னைக் காட்டிலும் மற்றவர்களிடம் அன்பு கூறவேண்டிய அவசியத்தைப் பற்றியும் அவ் வியாபாரியுடன் பேசிக் கொண்டு வந்தார். இதைக்கேட்ட வியாபாரியோ அதை ஒத்துக் கொள்ளாமல் மனிதன் இவ்வுலகத்தில் தனக்குத்தானே வாழ்ந்தால் மாத்திரமே எதையும் பெறமுடியும் என இறுமாப்பாய் பதிலளித்தான். இவர்கள் இருவரும் இன்னும் கொஞ்சத் தூரமே நடக்க அவர்கள் முன்னிலையில் பனிமேடு ஒன்றைக்கண்டு அதைக் கொஞ்சம் நீக்கிப் பார்க்க, அதற்குள்ளே ஒரு மனிதன் நினைவிழந்து கிடப்பதைக் கண்டனர்.

சுந்தர் சிங் இவ் ஆளை தூக்கும்படிக்கு வியாபாரியை உதவிக்கு அழைத்தார். ஆனால் அவ் வியாபாரி "இந்த உதவியைச் செய்வதால் யாதொரு பயனுமில்லை. எப்படியும் அவன் சாகப் போகிறவன். அவனோடு நேரம் செலவழித்தால் இருட்டடைவதற்கு முன் நாம் சேரவேண்டிய கிராமத்திற்கு சேரமுடியாமல் போய்விடும். ஆகவே, உமது கிறிஸ்தவ கோட்பாடுகளைச் சற்று தள்ளி வைத்துவிட்டு நாம் முன்னோக்கிப் போகலாம். எப்படியும் அதைத்தான் நான் செய்யப்போகிறேன்." எனக் கூறிக்கொண்டே அவன் போய்விட்டான்.

சுந்தர் சிங் விழுந்து கிடந்த மனிதனைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு நடக்க ஆரம்பித்தார். போக்கின் வேகம் குறைந்தது. ஆகிலும் பழுவான மனிதனைத் தூக்கிச்சுமந்த காரணத்தால் சுந்தர் சிங் உடல் உஷ்ணம் அதிகரிக்க உஷ்ணத்தின் காரணத்தால் இவர் தோளில் இருந்த மனிதனுக்கு நினைவு திரும்பியது. சற்று நேரத்திற்குப் பின்பு சுந்தர் சிங்கின் கரங்களைப் பிடித்தவனாக அவனும் நடக்க ஆரம்பித்தான்.

இருவருமாகச் சேரவேண்டிய கிராமத்தின் எல்லையை அடைந்தபோது பாதையில் குளிரினால் விறைத்துக்கிடந்த ஒரு மனிதன் பாதையில் பனியினால் பாதி மூடப்பட்டவனாக இருக்கக் கண்டனர். அவனைப் புரட்டிப்பார்க்க, சில மணிநேரத்திற்கு முன்னதாக சுந்தரைவிட்டுத் தன்னுயிரைக் காக்கும் படிக்காக முன்பே ஓடிவந்த வியாபாரிதான் எனக் கண்டுபிடித்தனர். குளிர் தாங்க முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமல் தவித்து வந்தவன் விறைத்து விழுந் தான். விழுந்து இறந்தான். ஆகிலும் விழுந்து கிடந்தனைத்தோளில் சுமந்துவர இருவரும் அனல் அடைந்தவர்களாய் சுகத்துடன் வந்து சேர்ந்தனர்.

இவர் தெய்வத்திடம் அன்புகூர்ந்து தன்னுயிர்க்கே ஆபத்து உண்டு என்று அறிந்தும் விழுந்து கிடந்த மனிதரைச் சுமந்து வந்தார். இவரது அன்பின் சேவை உள்ளத்தைத் தொடவில்லையா? இந் நிலைக்கு மாத்திரம் நாம் காணும் மனு வர்க்கம் வந்துவிடுமாயின், நாம் இன்றைக்கு காணும் குழப்ப நிலை நீங்கி, நிரந்தர சந்தோஷம், சமாதானம் ஒருவருக்கொருவர் அன்பு அக்கறை நிலவுவதைக் காணக் கூடும்.

செ. தேவராஜ்
12 கலைப்பிரிவு (2002)

# கவிதை உலகில் பாரதி பற்றிய ஒரு கண்ணோட்டம்

பாரத நாடு அடிமை இருளில் மூழ்கி சுதந்திரக் காற்றினைச் சுவாசிக்க முடியாது அல்லற்பட்டு அன்னிய ஆதிக்க வெறிக்கு உட்பட்ட நிலையில் தமிழ்க் கவிதை இலக் கியம் நலிவடைந்து கொண்டிருந்தவேளை கவிதை வானில் ஒரு வெண்ணிலாவாக பாரதி தோற்றம் பெற்றிருந்தார். இப்பாரதியின் தோற்றத்திற்கு முன் ஆங்கிலம் படித்த மத்திய தர வர்க்கத்தின் மகுடங்களாக விளங்கிய மரபுக் கவிஞர்கள் இலக்கணத்தினால் வரம் புகள் சமைத்து அவற்றின் மத்தியில் தம் கவிதைகளை அமைத்து கற்றோர்க்கு மாத் திரமே கவிதை என்ற நிலைப்பாட்டில் பண்ணைக்காரர்களையும், ஜமீன் குடும்பங் களையும், உயர் வர்க்கங்களையும் கருப் பொருளாகக் கொண்டு கவிதை சமைத் திருந்தார்கள். இவ்வாறான மரபு நிலைக் கவிஞர்களான பூண்டி, அலங்கநாத முனிவர், வெள்ளைக்கால் சுப்பிரமணியம், சூரியநாரா யண சாஸ்திரியர் சோம சுந்தர பாரதி போன் றோர் அமைந்திருக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் தோற்றம் பெற்ற பாரதி இம்மரபுநிலை போக்குக்கள் யாவற்றையும் கவிழ்த்துக் கொட்டி விட்டு படித்த மக்கள் மாத்திர மன்றி பாமர மக்க ளும் கவிதையைப் படித்துச் சுவைக்கலாம், என்ற எண்ணக்கருவூலத்தை மக்கள் மத்தி யில் பரப்பிக் கொண்ட அதேநேரம் தன் கவிதை மொழிநடையாக பேச்சு வழக்குத் தமிழையும் கவிதைப் பாத்திரங்களாக ஏழை எளிய மக்களை அக்கவிதைப் பொருளாகக் கொண்டும் அவ் ஏழை எளிய மக்களது பிரச்சனைகளையும் சாதி வேறுபாடுகளை யும் உயர்வு தாழ்வுகளையும் நோக்குவதுடன் மக்கள் மனதை ஒட்டிச் செல்லும் வகை யில் பாரதி தன் கவிதைகளை அமைத்துக் கொண்டபோது அக்கவிதைகள் மக்கள் மனதை தொட்டுச் செல்லவே பாரதி புது மைக் கவி என்றும், புரட்சிக் கவி என்றும் வரகவி என்றும், தீர்க்கதரிசனக் கவி என் றும், மக்கள் கவி என்றும் பலவாறு புகழா ரம் சூட்டி பாராட்டியதன் பயனாக 20ம் நூற் றாண்டில் ஓர் திருப்பு முனைவாக பாரதியும் அவர் தம் கவிதையும் அமைந்திருந்தன.

பாரதியினது கவிதைகள் பன்முகப் பார்வை கொண்டனவாக அமைந்திருக்கின் றது. அதாவது பாரதி சக்திப் பிரியனாக அமைந்திருந்தமையால் அவரது ஆரம்பர கவிதைகள் சக்தி வழிபாட்டோடு ஆரம்பித் தாலும் தேசிய உணர்வு, நாட்டுப்பற்று, சுதந்திர தாகம் என்பன பாரதியின் உள்ளத் தில் ஆழமாக பதிந்திருந்தமையால் அவ் உணர்வை மக்களோடு பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் சமத்துவத்தையும் தூண்டும் வகையில் தேசிய கவிதைகளை அதிகம் வெளிப்படுத்தியிருந்தார்.

"எல்லோரும் ஒரு குலம்
எல்லோரும் ஒரு இனம்
எல்லோரும் ஓர் நிறை
எல்லோரும் இன்னாட்டு மன்னர்கள்"

என்ற இக் கவிதைத் தொகுதி மேற் கூறிய பண்பை தெளிவுபடுத்தி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இந்திய மக்களின் ஒருமைப் பாட்டை தன் கவிதைப் பரப்பினால் சுவாசிக்கச் செய்த பெருமைக்குரியவராக அமைந்திருக்கின்றார்

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
என்று மடியும் இவ் அடிமையின் மோகம்"

என்ற அவரது சுதந்திர எழுச்சிக் கவிதை அவரை ஓர் தேசிய கவிஞனாக மட்டுமல்லாது பாரதநாடு முழுவதும் அறிமுகப் படுத்திக் கொண்ட கவிதைத்தொகுதியாக அமைந்து விளங்குகின்றது.

தேசிய சிந்தனையையும், சுதந்திர உணர்வையும் தன் கவிதைமூலம் வளர்த்துக்கொண்ட பாரதி தான் பிறந்து தவழ்ந்து விளையாடிய மண்ணை தன் கவிதை மூலம் நேசிக்கத் தவறவில்லை. தமிழ் நாட்டின் மீதும் தான் பிறந்த மண்ணின் மீதும் கொண்ட பற்றினை வெளிப்படுத்திக் காட்டும் போது

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
தேன் வந்து பாயுது காதினிலே
தந்தையர் நாடென்னும் பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்ற கவிதை மேற்கூறிய பாரதியினது உணர்வினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வாறே தன் தாய் மொழியின் மீது கொண்ட பற்றினை வெளிப் படுத்தும்போது பல மொழிகளோடு ஒப்பிட்டு தாய் மொழியின் இனிமையை சிறப்பிக்கும் போது

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதான மொழி எங்கும் காணோம்."

கவிதைத் தொகுதி அவரது மொழிப் பற்றினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு கூறிய பாரதி பெண் அடிமை, சாதி வேறுபாடு, மூடப்பழக்கங்கள் என்பன தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்ட பாரதி இவற்றுக் கெல்லாம் சாவுமணி அடித்திருப்பதைக் காணமுடிகிறது. ஆண் இனவாதமானது பெண்களை அடிமைப்படுத்தி வீட்டிலே பூட்டி வைத்து விந்தை செய்த மனிதர்கள் தலை கவிழ்ந்தார்கள் என்றும் ஆணுக்குப் பெண் சரி நிகர் சமம் என்ற வகையில்

"சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் ஆளவும்
பாரினில் பெண்கள் பிறந்து வந்தார் எனக் கும்மியடி"

என கும்மியடிப் பாடல் மூலமும்

"தில்லி துரக்கியர் செய்த குற்றமடி
திரை மறைவில் பெண்கள் முகம் மறைத்தல்"

என்றும்

"வீட்டினில் பெண்களை பூட்டி வைத்த
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்றும் பெண் விடுதலைக்கான கருத்தை வெளிப்படுத்தி சமுதாய விழிப் புணர்ச்சியைத் தூண்டியவராக பாரதி அமைந்து விளங்குகின்றார். சாதி வறுபாடு என்பது சமூக முன்னேற்றத்தின் தடைக்கல் என்பதை நன்கு அறிந்து கொண்ட பாரதி அச்சாதி வேறுபாடுகள் தகர்க்கப்பட்டு சமூக விடுதலை காண வேண்டும் என்ற உயரிய நோக்கின் அடிப்படையில் தன் கவிதை இலக்கியத்தை அமைத்துக் கொள்ளும் போது,

"சாதிகள் இல்லையடி பாப்பா உயர்ச்சி தாழ்ச்சி
கொள்ளல் வெறும் பாவம்
சாதிகள் சொல்வார் முகத்தில்
காறி உமிழ்ந்து விடடி - பாப்பா"

பாப்பாப் பாட்டிலும்

"நாலு குலங்கள் அமைத்தால் நாசமுறப்புரிந்தனர்
மூட மனிதர்
சீலம் அறிவு கருமம் சிறந்தவர் குலத்தினில்
சிறந்தனவாம்"

என கண்ணன் பாட்டிலும் சாதி வேறு பாடுகள் தவிர்க்கப்படவேண்டும் எனக் கூறினார். இவ்வாறு தேசிய ஒருமைப்பாட்டினையும் சமூக விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் கவிதை புனைந்து பாரதி எதிர்கால சமுதாயமானது நன்னிலைப்படுத்தப்பட்ட உறுதி கொண்ட நெஞ்சுடனும் ஒளி படைத்த கண்ணுடனும். உருவாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கின் அடிப்படையில் குழந்தைகளுக்கான தேசிய சிந்தனைகளை தூண்டும் கவிதை இலக்கியங்களை படைக்கத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்காலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - நீ
ஒரு குழந்தையையும் வையாதே பாப்பா
காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு
இதனை வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"

இத்தகைய இக்கவிதை இலக்கியங்கள் இளைய தலைமுறையினரை பயன்படுத்தும் நேரிய சிந்தனைக் கவிதைகளாக அமைந்து விளங்குகின்றன. இத்தகைய போக்கும் தன்மையும் பாரதியினுடைய கவிதைத் தொகுதியின் பிரதிபலிப்பாக அமைந்து விளங்குகிறது. இவ்வாறு பாரதி 20ம் நூற்றாண்டு கவிதை இலக்கியத்திற்கு ஓர் திருப்புமுனையாக அமைந்துள்ள அதே நேரம் பின்வந்த கவிஞர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த பெருமைக்குரியவராக அமைந்து விளங்குகின்றார்

*குணரட்ணம் சுபாஷங்கர்*
12 கலைப்பிரிவு (2002)



# நூலகங்களின் வரலாறும் விரிவாக்கமும்

*திரு. பா. பிறேமரஞ்சித்*
தொண்டர் ஆசிரியர்

நூல் என்பது இழை மெல்லிய கயிறு எனவும் பொருள்படும். இத்தகைய நூல்கள் சேகரித்து வைக்கும் இடமே நூலகம், படிப்பகம், வாசிகசாலை என்று பல்வேறு விதமாகக் கூறப்பட்டு வருகின்றது.

நூலகங்கள் இன்று நேற்று உருவாகியன அல்ல களிமண் எழுத்துக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டதற்கான வரலாற்று ஆதாரங்கள் காணப்படுகின்றன. பாபிலோன் நகரில் இத்தகைய மண்ணாலான குறிப்புக்கள் ஏராளம் உள்ளன. இவை கி.மு.5000 ஆண்டுகள் வரை பழமை மிக்கன. மரப்பட்டை, மாட்டுத் தோல், ஓலைச் சுவடிகள், கோரைப்புற்கள், மரப்பலகை போன்றவற்றினாலும் நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கி.மு.1400இல் எகிப்தை ஆண்ட ரமேஸஸ் என்ற மன்னரிடம் பெரிய நூலகம் இருந்ததிற்கான சான்றுகள் உள்ளன. கி.மு 5ம் நூற்றாண்டில் ஏதென்ஸ் நாடு எகிப்தின் மீது படையெடுத்தபோது அங்கு கோயில்களிலும் அரண்மனைகளிலும் பல்லாயிரம் நூல்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

உலகில் முதலாவது நூலகம் ஐக்கிய அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் 1754ம் ஆண்டில் உருவாகியது. இலங்கையில் முதல் நவீன நூலகம் 19ம் நூற்றாண்டில் கொழும்பில் உருவாக்கப்பட்டது. 1813இல் இராணுவத்தினரின் பாவனையின் பொருட்டு யுனைட்ரெற் சேவிஸ் நூலகமும் 1824ல் கொழும்பு நூலகமும் 1829இல் சட்டத்தரணிகள் பாவனைக்காகப் பெட்டக நூலகமும் ஆரம்பிக்கப்பட்டன. பல்வேறு சிக்கல்கள் காரணமாக இந்த நூலகங்கள் கொழும்பு பொது நூலகம் என்ற பெயரில் 1925 இல் இயங்கத் தொடங்கின.

1842ல் யாழ்ப்பாணத்திலே பொது நூலகம் ஆரம்பமாகியது. அப்போது சட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணிகளே பெரும்பாலும் பயன்படுத்தினர். அதன்பின் 1938ல் பொது நூலக அமைப்பு உருவாகி பொதுமக்கள் பாவனைக்கு பயன் படுத்தப்பட்டன. தெற்காசியாவிலே மிகப்பெரிய பயனுள்ளதாகத் திகழ்ந்த யாழ் பொதுநூல கத்தின் பயன்பாடு அளவிடத்தக்கதல்ல. இத்தகைய நூலகம் 1981ல் எரியூட்டப்பட் டமை யாவரும் அறிந்ததே. 1945ல் இல வசக் கலிவித் திட்டத்தைத் தொடர்ந்தும் 1960ஆம் ஆண்டு நூலகம் தொடர்பான சட்ட மூலத்தை தொடர்ந்தும் பல்வேறு இடங் களில் நூலகங்கள் இயங்கத் தொடங்கின. 1967ன் பின் அநேக பாடசாலைகளில் உருவாக்கப்பட்ட நூலகங்கள் இன்று அனைத்துக் கிராமங்கள், பாடசாலைகள் தோறும் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணி கொண்ட நூலகங்களின் விரிவாக்கம் பற்றி நோக்குவோம். வரலாற்றைக் கொண்ட நூல கங்களின் செயற்பாட்டை விரிவுபடுத்த வேண்டியது வாசகர்களின் கடமையாகும். இன்றைய பொது நூலக அமைப்பு பொது வான நோக்கில் கலாச்சார மையங்களாக வும் தகவல் நிலையங்களாகவும் மாறி எமது சமூக மக்களின் அன்றாட வாழ்வில் இன்றி யமையாத ஓர் அம்சமாக மிளிரவேண்டும். இதற்குப் பல விரிவாக்க சேவைகளை எமது நூலகங்களின் வசதிக்கேற்ப மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில் நடமாடும் நூலகசேவை மூலம் நூலகத்தை நாடி வர முடியாத வாசகர்களை நாடி நூல்களை எடுத்துச் செல்ல முடிகிறது. வசதிமிக்க மத்திய கிராம நூலகங்களை, கிளைகளை அமைக்கப் போதிய நிதி வசதியற்ற வேளை களில் இத்தகைய நடமாடும் நூலக சேவை களை ஏற்படுத்தலாம். இதனால் கிராமப் புறங்கள் மட்டுமன்றி சிறைச்சாலைகள், வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், அநாதை இல்லங்கள் போன்றவற்றிற்கும் நூலக சேவையினை விஸ்தரிக்கலாம்.

ஒரு நூலகம் மக்களுக்குச் சேவை யாற்றுவதையே அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு உதவுவதையே குறிக்கோளாகக் கொண்டது. இதன் சேவைக்கு செலவிடப் படும் நிதி அதிகமானது மீளவும் பணப் பெறுமதியில் பெறமுடியாதது. நூலகத்தினை நடாத்தும் நிறுவனத்தைப் பொறுத்த வரை யில் நூலக சேவைகளுக்குச் செலவிடும் பணம் வரவில்லாத செலவாகவே கருதப்படு கிறது. இந்நிலையில் ஒரு நூலகம் தனது வளர்ச்சிக்குத் தேவையான நிதியின் கணிச மான ஒரு தொகைப் பெற்றுக்கொள்ள ஏது வாக வருமானத்தை ஈட்டும் முயற்சிகளில் இறங்குவது அவசியம்.

நூலகம் ஒரு வளரும் ஸ்தாபனம் என் பது நூலகவியலின் அடிப்படை விதிகளில் ஒன்று. அது நாளாந்தம் ஒவ்வொரு சஞ்சி கையைப் பெறும்போது வளர்கிறது. புதிய அங்கத்தவர் ஒருவர் சேரும் போது வளர் கிறது. புதிய வளர்ச்சியின் விகிதத்தில் அதன் செலவினங்களும் அதிகரிக்கும் என்பதனை நினைவில் இருத்தல் வேண்டும். வளர்ந்து வரும் செலவினத்தின் ஒரு பகுதியையாவது நாம் மீள உழைக்காவிட்டால் நூலகத்தின் வளர்ச்சி பாதிக்கப்படும். எனவே நாம் நூலக வளங்களைச் சந்தைப்படுத்தல் பற்றிய சில சிந்தனைகளை மேற்கொள்ள வேண்டும். வாசகர்களின் சந்தாப் பணத்தால் மட்டும் ஒரு நூலகத்தை நடத்த முடியாது சிறு நூலகங் களின் குறுகிய கால நன்கொடைகளால் நீண்டகாலம் நிலைத்துச் சேவையாற்ற முடி யாது. எமது அடிப்படை நோக்கத்திற்கு குந்தகம் விளைவிக்காத வகையில் இத் தகைய வருவாய் ஈட்டும் முயற்சிகளில் நூலகங்கள் இறங்கவேண்டும்.

இத்துறையில் ஈடுபட்டு நூலகவியலின் வளர்ச்சிக்குத் தங்களால் ஆன பங்களிப்பை இலங்கையில் நல்கி இத்துறையையும் வளர்த்து நல்ல சமூகத்தையும் வளர்த் தெடுக்க வேண்டுமென்பதே அத்துறை சார்ந்தவர்களின் எதிர்பார்ப்பாகும்.

நல்ல நண்பன் செய்வதைவிட பன் மடங்கு நன்மைகளை நல்ல நூல்கள் செய்கின்றன. எமது அறிவை மட்டுமல்ல ஆளுமையை வாழ்வை நெறிப்படுத்திச் சீர்செய்ய சிறந்த நூலகப் பயன்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ மன்றம் - ஒளிவிழா 2000

பேராயர் கலாநிதி அ. ஜெபநேசன் அவர்கள் மங்கள விளக்கேற்றல்



## உயர்தர மன்ற மதியபோசன விருந்து - 1995

முதன்மை விருந்தினர் அருட்திரு டி.ஜே. அம்பலவாணர் அவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கணக்கீட்டு நியமம் 03

# நிதிக்கூற்றுக்களை சமூகப்படுத்தல் அல்லது வெளிப்படுத்தல்

கணக்கீட்டு நியமம் 03 கணக்கீட்டு கொள்கைகளை சமூகப்படுத்தல் கணக்கீட்டு நியமம் 15 நடைமுறைச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல். இவ்விரண்டு நியமங்களையும் ஒன்றுபடுத்தியே கணக்கீட்டு நியமம் 03 ஆனது நிதிக் கூற்றுக்களை சமூகப்படுத்தல் அல்லது வெளிப்படுத்தல் ஆகும். இந்நியமமானது ஏப்பிரல் மாதம் 01ந் திகதி 1999ம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டது. இக்கணக்கீட்டு நியமத்தின் நோக்கம் குறிப்பிட்ட நிறுவனத்தின் கடந்த கால நிதிக்கூற்றுக்களையும் இதேபோன்ற நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களையும் ஒப்பிடத் தக்க வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களைக் கூறுவதாகும். பொதுப் பயன்பாட்டிற்கான நிதிக்கூற்றுக்களின் நோக்கங்கள் ஆவன:

(i) நிதி நிலமையை வெளிப்படுத்தும் தகவல்களை வழங்குதல்.

(ii) செயற்பாடுகள் காசசைவு போன்றவற்றைக் காட்டும் தகவல்களை வழங்குதல்

(iii) முகாமை வளங்களைப் பயன்படுத்திய விதத்தை காட்டக்கூடிய வகையில் நிதி அறிக்கையில் பின்வருவனவற்றை உள்ளடக்கிய தகவல்கள் வழங்குதல். சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை, வருமானச்செலவு, காசு அசைவு

(iv) இதைப் பயன்படுத்துவோர் எதிர்கால காசு அசைவையும் அது கிடைக்கும் காலத்தையும் நிச்சயத் தன்மையையும் அறியும் தகவல்களை வழங்குதல்.

இந்நிதிக்கூற்றுக்களுக்கு பொறுப்பானவர்கள் இயக்குனர் அல்லது இயக்குனர்களுடன் சேர்ந்து நிறுவனத்திற்கு பொறுப்பாக இருப்பவர்கள். இந்நிதிக்கூற்றில் ஐந்தொகை, வருமானக்கூற்று என்பன அடங்கும். அத்துடன் காசுப் பாய்ச்சல் கூற்று கணக்கீட்டு எடுகோள்களும் விளக்கக் குறிப்புக்களும், உரிமையாண்மையின் அனைத்து மாற்றங்களும் என்பனவற்றில் ஒன்றைக் காட்டும். கணக்கீட்டு நியமம் 3இன்படி கணக்கீட்டுக் கொள்கை என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களாவன:

(i) முகாமையே தனக்குத் தேவையான கொள்கைகளைத் தேர்ந்தெடுக்கும்போது பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.
   - (அ) வெளியீட்டைப் பாவிப்போர் முடிவெடுக்கத்தக்க தகவல்களை வழங்கக்கூடியதாக இருக்க வேண்டும்.
   - (ஆ) நம்பத் தகுந்த தகவல்களாக இருக்க வேண்டும்.

(ii) பக்கச் சார்பில்லாது இருத்தல் வேண்டும்.

(iii) புத்திசாதுரியமாக இருத்தல் வேண்டும்.

(iv) சகலவிதத்திலும் பூரணமானதாக இருத்தல் வேண்டும்.

தொடர்ந்து செல்லல் என்பது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது முகாமை நிறுவனம் தொடர்ந்து செல்லும் என்ற மதிப்பீட்டுடன் செய்தல் வேண்டும். தேவையற்ற சந்தர்ப்பத்தில் கலைத்தலின் போதும், வியாபாரத்தை நிறுத்தும்போதும், வேறுமாற்றுவழி இல்லாத போதும் இது கடைப்பிடிக்கவேண்டியது இல்லை.

அட்டுறு முறையில் கணக்கீடு என்பது காசுப் பாய்ச்சல் கூற்றைத் தவிர அனைத்து நிதிக்கூற்றும் இந்த அடிப்படையிலேயே தயாரிக்கப்படவேண்டும். கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளும் எப்போது நடைபெற்றதோ அக்காலத்திலேயே பதிவுக்குட்பட வேண்டும்.

சமூகப்படுத்தலிலுள்ள மாறாத்தன்மை என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களாவன: நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தலும் ஒழுங்குபடுத்தலும் தொடர்ந்து ஒரே மாதிரியாக இருத்தல் வேண்டும். நடைமுறையில் பாரிய மாற்றம் இருத்தல், இம்மாற்றத்தால் நிதிக்கூற்றை சிறந்தமுறையில் வெளிப்படுத்த முடியுமாக இருத்தல் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் மூலம் மாற்றம் ஏற்பட்டிருத்தல் போன்ற சந்தர்ப்பத்தில் இது கடைப்பிடிக்க வேண்டியது இல்லை.

முக்கியத்துவ கூட்டுக்கள் என்பதன் கீழ் குறிப்பிட்ட விடயங்களாவன ஒவ்வொரு முக்கியமான விடயங்களும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டும்.

ஈடுசெய்தல் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களும் ஈடுசெய்ய முடியாதவை. ஆனால் வருமானங்களும் செலவுகளும் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஈடுசெய்ய முடியும்.

(i) இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் வேண்டுதல் / அனுமதி.
(ii) ஒரு வகையான கொடுக்கல் வாங்கல் மூலம் கிடைக்கும் வருமானம் / நட்டம்.

ஒப்பீட்டுத் தகவல் என்பது சகல எண் தகவல்களும் கடந்த காலத்திற்குரிய தகவல்களுடன் வெளிப்படுத்தப்படவேண்டும்.

கணக்கீட்டு நியமம் 3ன்படி நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்படவேண்டிய சில விடயங்களாவன:

(i) நிறுவனத்தின் பெயர்.
(ii) கூட்டுநிறுவனத்தின் நிதிக்கூற்றோ அல்லது தனிப்பட்ட நிறுவனத்தின் நிதிக்கூற்றோ.
(iii) ஐந்தொகைத் திகதி.
(iv) எப்பணப் பெறுமதி.
(v) எந்தளவில் மட்டம் தட்டப்பட்டுள்ளது.

அறிக்கையிடற்காலம் என்பது குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரு முறையேனும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டும். திகதி மாற்றம் ஏற்படின் அது வெளிப்படுத்தப்படவேண்டும்.

நடைமுறை / நடைமுறை அல்லா வேறுபடுதல் என்பதன் கீழ் ஒவ்வொரு நிறுவனமும் தமது நிலமையை அடிப்படையாகக் கொண்டே நடைமுறை / நடைமுறையல்லாச் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பவற்றை வெளிப்படுத்தவேண்டும்.

நடைமுறைச்சொத்து என்பதன் கீழ்க் குறிப்பிடப்பட்டவை நிறுவனத்தின் வழமையான தொழிற்பாட்டு வட்டத்தில் நேரக்கூடியவை அல்லது விற்கக் கூடியவை அல்லது நிறுவனத்தேவைக்குப் பயன் படுத்தவேண்டியவை, ஐந்தொகை திகதியில் இருந்து 12 மாதத்திற்குள் தேறக்கூடியவை, பாவனையில் எதுவித தடையும் இல்லாது காசும் காசுக்குச் சமமான சொத்துக்களும் ஆகும். ஏனைய சொத்துக்கள் எல்லாம் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ஆகும்.

நடைமுறைப்பொறுப்பு என்பதன்கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்களாவன நிறுவனத்தின் வழமையான தொழிற்பாட்டு வட்டத்தில் செலுத்த வேண்டியவை, ஐந்தொகை திகதியில் இருந்து 12 மாதத்திற்குள் அனைத்தும் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் ஆகும்.

*ச. கனேசியா*
**12 வர்த்தகப்பிரிவு (2002)**

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவை யாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருக்கோயிலின் இசைக்கலை

*திருமதி. சிவசக்தி சோமநாதன்*
ஆசிரியர் B.A. Dip in Edu.

எமது பண்பாட்டின் நிலைக்களமாக விளங்குபவை திருக்கோயில்கள். எனவே அவை காலங்காலமாக பண்பாட்டின் உறை விடமாகவும் சமய வாழ்வின் கேந்திரமாக வும் இருந்து மனித வாழ்க்கையை வளம் படுத்துகின்றன. இந்த வகையிலே தான் பன்னெடுங்காலமாக கலைகள் சமயத்துடன் இணைந்து வளர்ந்து வந்துள்ளன. கலை களை இருபெரும் பிரிவாக வகைப்படுத்த முடிகிறது. அவையாவன:

(i) நுண்கலைகள்

(ii) நுண்கலை சாராதவை

எனப் பிரித்து அவற்றில் நுண்கலை களாக கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் போன்றவற்றையும் நுண் கலை சாராதனவையாக மருந்து மந்திரம், விளையாட்டு போன்றவற்றுடன் ஏனைய கைவினைக் கலைகளும் உள்ளடக்கப்படு கின்றது. நுண்கலை சாராத கைவினைக் கலைகளில் பார்த்துச் செய்யும் பயிற்சி முக்கியத்துவம் பெறுகிறதே ஒழிய கற்ப னைக்கோ, சிந்தனைக்கோ இடமில்லை என்பர். எனினும் சில கைவினை கலைப் படைப்புக்கள் நுட்பமானதாகும். உதாரணமாக ஆபரணம் போன்றவற்றைக் கூறலாம்.

நுண்கலைகள் வேதாகமப்படி கோயில் கள் அமைக்கப்பட்டதன் பின் கலைகளின் நிலைக்களமாகக் கோயில்கள் திகழ்ந்தன. எனவே கோயில்கள் சமயத்தையும், உணர் வினையும், அறிவினையும் புகட்டும் நிலை யங்களாக மட்டுமன்றி கவின்கலை மையங் களாகவும் மிளிரலாயின. கோயிலமைப்பு அதில் இடம்பெறும் சிறப்பும் சிற்பம், ஓவி யம், கிரியைகள் முதலியவற்றிலே இசை பெரும் முக்கியத்துவம் வாய்ந்தாக அமைந் துள்ளது.

கோயிலிற்குடி கொண்டிருக்கும் இறை வனே கலைப்பிரியனாகவும், கலைப்புலவ னாகவும், கலை ஞானியாகவும், கலையின் இருப்பிடமாகவும் காட்சியளிக்கின்றான். இதற்கு இறைவன் பான பத்திரனுக்காக இசை பாடியதும், கண்ணன் மாயக்குழல் இசைத்து மயங்கவைப்பதும் சரஸ்வதிதேவி வீணை மீட்டி இருப்பதும் தட்சணாமூர்த்தி வீணை மீட்டுவதும், ஏன் இராவணன் சாமகானம் பாடியதும் இசைக்குள்ள இறைத் தன்னையை எடுத்தியம்பும் சாதனங்களாகும்.

இதைவிட மலரினாலும் மனத்தினாலும் வழிபடுதல் போன்று இசையினாலும் சிறப் பாக வழிபடப்பட்டது. இங்கு இறைவன் சுந் தரரை "செந்தமிழ் பாடு என்றார் தூமரை பாடும் வாயால்" என்று வேதம் வேண்டாம் தமிழ்ப்பாட்டு ஆகிய அர்ச்சனைப் பாட்டே ஆகும். ஆதலால் நம்மை செந்தமிழ் பாடு என்றார் தூமரைபாடும் வாயால் என்ற அடி புலப்படுத்துகின்றது. அது மட்டுமல்ல சம்பந்தப் பெருமானை ஏழிசையால் இசைப் பயனாய் என்றும் அப்பர் பொருமான் நிலை பெறுமாறு என்று தொடங்கிப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி எனவும் இசை யின் பெருமையை விளக்குகதின்றார். அது மட்டமல்ல சாம்பூவோடு தூயமறந்தறியேன் தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன் எனவும் பாவை பாடிய வாயால் ஒரு கோவைபாடு என மாணிக்க வாசகரும் பாடுவதை நாம் அறிகின்றோம். அதை விட "ஆடிப்பாடி அண்ணாமலை தொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே" எனவும் பாடுவதையும் அறியமுடிகின்றது. இங்கே பன்னிரு திருமுறைகளும் எமக்கு இசைக் கலையின் சிறப்பினைக் காட்டி நிற்கின்றது.

வேதங்களிலே நான் சாமவேதமாக உள்ளேன் என்றது இறைவன் இசைப் பிரியன் என்பதைக் காட்டி நிற்கின்றது. ஏன் அருணகிரிநாதர் திருவண்ணாமலைக் கோபு ரத்தில் ஏறிக்குதிக்கும் போது முருகன் அவரை ஏந்தி அவருக்கு பாடல் அடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொடுத்தமை இசையார்வத்தை ஊட்டும் செயலாகும். அத்துடன் அந்த ஓசையுடன் பாட முத்தித்தரு பத்தித் திரு நகை என்ற அடியையும் எடுத்துக் கொடுத் துள்ளார்.

வாய் பேசமுடியாத குமர குருபரை தேவியின் அருளாட்சியால் இறைவியை பாடுவதே பணி எனக் கொண்ட குருபரன் "பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற்பனு வலும் யான்" என சிறப்பித்துப் பாடுவதை அறியமுடிகின்றது. அது மட்டுமல்ல அபிராமிப் பட்டரும் அந்தாதி பாடத்தொடங்கி எழுபத்தி எட்டுப் பாடல்களைப்பாடி முடிய அம்மன் கருணைப் பாடல்களைப் பாடி முடித்தமையும் பாடலின் சிறப்பினை இசைக்குக்காட்டி நிற் கின்றது.

வைணவ சமயத்தின் கதாநாயகனா கிய நாராயமூர்த்தி கூட இசைப்பிரியனாக இருந்து நாரதரே வைகுண்டம் யோகியரின் இதயம் சூரியன் ஆகியவற்றிலன்றி எங்கு எனது பக்தர்கள் பாடுகின்றனரோ அங்கு நான் இருக்கின்றேன். என திருமால் கூறிய தாக நாரதீயப் புராணம் கூறுகின்றது. "கர்நாடக சங்கீத சாத்திர ஞானமுசுரூப்ப் சௌக்கியதமே மனஸர்" என நாதோ பாசனையினை சகரீதோ பாசனையினை நன்கு மேம்படுத்தியுள்ள மையை அறிய முடிகின்றது.

திருஞான சம்பந்தர் அம்மையாரின் பால் குடித்து ஞானம் பெற்றுப் பாடல் பாடி யமையால் அவரையே குருவாகக் கொண்டி ருந்த பட்டிணத்தார், சேக்கிழார், அருணகிரி நாதர், தாயுமானவர், இராமலிங்க அடிகள் போன்றோர் இவருடைய திரநெறிய தமிழில் திளைத்தனர். அதிலும் இராமலிங்க அடிகள் இவரது சிறப்பை தேன்படிக்கும் அமுதாம் உள் திருப்பாட்டை தினந்தோறும் நான் படிக்கும் போது எனை நானனிறியேன் நாவொன்றோ என நான் பாடி உருகி உள்ளமை சம்பந்தரின் செந்தமிழ்ப் பாட்டினை அம்மை அப்பர் இரசிக்க விளைந்த சிறப்பு நோக்கற்பாலதாகும்.

அடுத்து கோயில்களில் நடைபெறும் நித்திய நைமித்திய கிரியைகளில் கூட பாடலின் சிறப்பினை நாம் காணமுடிகின்றது. அங்கே சைவத்திரு முறைகள் பண்ணோடு பாடும் மரபு இன்றும் இருந்து வருகின்றது. இதிலே பஞ்சபுராணம் எனப்படும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்தும் பஞ்சபுரா ணங்கள் என அழைக்கப்பட்டன. இவற்று டன் பின்னர் எழுதப்பட்ட திருப்புகழ், வாழ்த்து போன்றனவும் பாடப்படுவதை நாம் நோக்கக் கூடியதாக உள்ளது.

கோயில்களில் இடம்பெறும் நைமித் திய கிரியைகளிலே குறிப்பாக துவரோகணம் (கொடியேற்றத் திருவிழா) வஜா வரணம் (கொடியிறக்கற் திருவிழா) ஆகியவற்றில் இடம் பெறும் நவசக்திக் கிரியைகள் குறிப் பிடற்பாலன. கொடியேற்றம் தொடக்கம் கிரி யைகளிலே சகல இடையூறுகளையும் நீக்கு பவரும் தானத்திற்கு தலைவனுமான கண பதிக்கு சமர்ப்பிக்கப்படும் தாளம், இராகம், நிருத்தம், பண், வாத்தியம் என்பன குறிப் பிடற்பாலன.

அவையாவன:

தாளம் — கணபதி தாளம்
இராகம் — வருளம்
நிருத்தம் — சமபாதம்
வாத்தியம் — சமபுடம்

என்பனவாகும். இது போலவே நவசந் தியப் பண்ணும் இடம் பெறும் அவையான:

பிரமசந்தி — இந்திர சந்தி, அக்கினி சந்திர நிரு சந்தி, வரணசந்தி, வாயுசந்தி, குபேர சந்தி, ஈசானசந்தி என்பனவாகும். இவைக்கும் பண்கள் வகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது. இதைவிட விசேடக் கிரிகைகளில் ஆடல் பாடல் இடம் பெற வேண்டும் எனப் பத்ததிகள் கூறுகின்றன.

எனவே மேற்குறிப்பிட்ட அம்சங்களை நோக்குகின்றபோது கைலாசபதியின் கோட் பாட்டிற்கு இணங்க "கலை கலைக்காகவே கலை மக்களுக்காகவே" என்ற கூற்றைச் சிரமேற்கொண்டு கலைகளை ஆலயத்துடன் சேர்ந்து பாடசாலைகள், பொது நிறுவ னங்கள், மட ஆலயங்கள் போன்றனவும் கலைக் கண்களைத் திறக்க வழிகாட்ட வேண்டும். இங்கு கலையின் ஒரு பகுதியா கிய இசைக்கலை மனித மனங்களை செம்மைப்படுத்தியும் அறிவையும், திறனை யும் பெற வழிகாட்ட வேண்டும். அத்து டன் ஆன்றோர் அணிமொழி களுக்கேற்ப நாம் இசை இன்பமே நிலை இன்பம் என எண்ணி எமது பொழுதினை இறை இன் பம் நிலைக்க அருள் இன்பம் செழிக்க வருங்கால சந்ததி தளைக்க வழிகாட்டி களாக இருந்து வளம் பெற செய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்புரிமைப் பொறியியலும் அதன் பிரயோகங்களும்

21ம் நூற்றாண்டில் பல்வேறு துறைகளில் விஞ்ஞானமானது வியத்தகு பல சாதனைகளைப் படைத்து வருகின்றது. அந்த வகையில் பிறப்புரிமைப் பொறியியலிலும் தனது சாதனைகளைப் புரிந்து வருகின்றது. அதாவது அங்கிகள் யாவற்றினதும் கட்டமைப்பினதும் தொழிற்பாட்டினதும் அடிப்படையலகு கலமாகும். கலத்தில் கலச் செயற்பாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்துகின்ற கரு உள்ளது. கருவில் பிறப்புரிமைப் பதார்த்தமாகவும், நிறமூர்த்தங்களின் பிரதான கூறாகவும் அங்கிகள் அனைத்திலும் DNA காணப்படுகின்றது. ஒவ்வொரு நிறமூர்த்தத்திலும் ஓர் குறித்த இரட்டை விரிபரப்புச் சுருளுள்ள DNA காணப்படும். DNA மூலக் கூறு ஒன்றில் அநேக பரம்பரையலகுகள் நேர்கோட்டிற்குரியதாகப் பிணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பரம்பரையலகும் நைதரசன் காரத்தொடர் ஒழுங்கிற்கேற்ப மற்றையதில் இருந்து வேறுபடுகிறது. இவ் நைதரசன் காரத்தொடர் ஒழுங்கிற்கேற்ப பிறப்புரிமைப் பரிபாசையானது வேறுபடுகிறது. இதற்கேற்ப அமினோவமிலங்களின் வகைகள் தீர்மானிக்கப்பட்டு புரதத்தொகுப்பு நிகழ்கின்றது. DNA யிலுள்ள பிறப்புரிமைப் பரிபாசையும் — புரதத் தொகுப்பு நிகழ்கின்ற பொறிமுறையும் எல்லா அங்கிகளுக்கும் பொதுவானவையாகும். பொறியியல் என்பது புதிதாக ஒன்றை நிர்மாணிப்பது போல் பிறப்புரிமைப் பொறியியல் ஆனது ஒரு அங்கியின் DNAன் ஒரு பகுதியை இன்னுமோர் அங்கியின் DNA யில் பிரதியீடு செய்தல். எனினும் இத் தொழில்நுட்பமானது சிக்கல் வாய்ந்ததும் உயர் தொழில் நுட்பமும் கொண்டதாகும்.

இதனால் ஒரு அங்கியின் DNA இன்னும் ஓர் அங்கியின் கலத்தினுட் புகுத்தப்பட்டாலும் அதன் செயற்பாடு அதாவது அதனால் உருவாக்கப்படும் புரதவகை வழமை போலவே இருக்கும். இதனால் ஒரு அங்கியின் பரம்பரையலகுகளை வேறோர் அங்கியினுட் புகுத்தவும், இப்பரம்பரை அலகுகளிற்குரிய இயல்புகளை விரும்பியவாறு மாற்றியமைத்துக் கொள்வதில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளார்கள். இம்மீளச் சேர்த்தல் DNA தொழில்நுட்பம் தொடர்பான முக்கிய படிவுகளாவன:

1. அங்கியின் DNA ஆனது வேறாக்கப்படல் வேண்டும்.
2. Restriction endonuclease நொதியங்களைப் பயன்படுத்தி DNA மூலக்கூறானது குறித்த இடங்களில் வெட்டப்படும்.
3. பக்றீரியாவின் குழியவுருவில் காணப்படுகின்ற நிறமூர்த்த DNA தவிர்ந்த ஏனைய சிறிய வட்டவுருவானது DNA ஆகிய plasmid ஆனது இதே போன்று வெட்டப்படும்.
4. வெட்டப்பட்ட DNA மூலக்கூறும் Plasmid உம் DNA – ligase நொதியம் மூலம் இணைக்கப்படும்.
5. இவ்வாறு இணைக்கப்பட்ட DNA மூலக்கூறானது மீளச்சேர்க்கையடைந்த DNA எனப்படும்.
6. இது உயிருள்ள கலங்களினுட் செலுத்தப்படும்.

இத்தொழில்நுட்பம் மூலம் விவசாயம், மருத்துவம், தொழிற்சாலை போன்ற பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

விவசாயத்துறையில் பிறப்புரிமைப் பொறியியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரும்பத்தக்க இயல்புகளுக்குரிய புதிய பரம்பரையலகுகளை உட்புகுத்தி புதிய தாவர விலங்கினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை Transgenic Organisms எனப்படுகின்றன. இவ்வாறு உருவாக்கப்பட்ட Transgenic plants ஆக தக்காளி, உருளைக்கிழங்கு, புகையிலை, நெல் என்பனவும் Transgenic animals ஆக முயல், செம்மறியாடு போன்றனவும் காணப்படுகின்றன.

இவ்வாறு உருவாக்கப்படும் Transgenic Organisms ஆல் பின்வரும் நம்மைகள் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உற்பத்திப் பொருட்களினளவை அதிகரிக்கக் கூடியதாக இருத்தல்.
2. உணவினது போசணைப் பெறுமானத்தை அதிகரிக்கச் செய்யலாம்.
3. ஒளித்தொகுப்பு தாக்கப் பாதையின் வினைத் திறனைக் கூட்டலாம்.
4. நோய்களிற்கு எதிர்ப்புச் சக்தியுள்ள உயிரினங்களை உருவாக்கலாம்.
உதாரணமாக: பங்கசு வித்திகளைக் கொல்லும் gramicidin-s என்னும் நுண்ணுயிர்க் கொல்லிக்குரிய பரம்பரையலகை Bacillus brevis லிருந்து பிரித்தெடுத்து தாவரங்களினுட் புகுத்தி தாவரங்களை fungus லிருந்து பாதுகாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.
5. அங்கிகளின் வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கச் செய்தல்.
6. நெற்பீடைகளிற்கு எதிரான பரம்பரையலகை Bacillys thurigens லிருந்து பிரித்தெடுத்து Agrobacterium ஐப் பாவித்து நெற்பயிரினுள் இளைய வளர்ப்பூடாகச் செலுத்துவதன் மூலம் பீடை நாசினிகளுக்கும், களை நாசினிகளுக்கும் எதிர்ப்புத் தன்மையுள்ள தாவர இனங்களைத் தோற்றுவித்தல்.
7. நைதரசன் பதித்துதலிற்குரிய பரம்பரையலகை தாவரங்களிற்குட் புகுத்துவதன் மூலமாக நைதரசன் பதிக்கும் வினைத் திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

மற்றும் சோளம், சோயா, அவரை போன்ற தாவர வேர்களில் வாழும் Pseudomoras florescents இனுள் Bacillus Thurigins பக்றீரியாவில் காணப்படும் Black cut worm ஐக் கொல்லும் பரம்பரையலகைப் பிரித்தெடுத்து செலுத்துவதன் மூலம் மேற்கூறிய தாவரங்களைப் பாதிக்கும் Black cut worm கட்டுப்படுத்தப்படுகிறது. இத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இவை தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்டு விவசாயத்தில் உயிரியற் கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படுகின்றன.

அமைலேசுகள், புரொட்டியேசுக்கள், சுக்கி ரேசுக்கள், பெக்ரினேசுக்கள், ரெனின் போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழிற் துறையில் பல்வேறு தேவைகளிற்கும் பயன்படுத்தப்படுகின்ற நொதியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

4 வகை ஐதரோக் காபன்களையும் நீர்ப் பகுப்புச்செய்து அழிக்கக்கூடிய பரம்பரையலகுகளை ஒன்றிணைத்து உருவாக்கிய Plasmid ஐக் கொண்ட Pseudomonas என்று பக்றீரியாவின் புதிய பேதமானது பெற்றோலிய அனுசேபத்தை மேற்கொள்ளக்கூடிய தன்மையைப் பெறுகிறது. இவ் வகையான Bacteria கடலில் சிந்தப்படும் எண்ணெயை அகற்றப் பயன்படுத்தப்படுகிறது.

மற்றும் மருத்துவத்துறையில் E.Coli யினுள் Virus ஐ எதிர்க்கும் Interferon இற்குரிய பரம்பரையலகுகள் செலுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட பக்றீரியாக்கள் பெருக்கம் அடைய விடப்பட்டு அதிகளவு Interferon பெறப்பட்டு Virus ற்கெதிரான மருத்துவத்தில் பயன்படுகிறது.

Humulin வளர்ச்சி ஓமோன் போன்ற சில வகையான ஓமோன்களையும் vaccine, antibody போன்றவற்றையும் Antihaemophelic factors போன்றவற்றையும் உற்பத்தி செய்து மருத்துவத்தில் பயன்படுத்த முடியும்.

இது மட்டுமன்றி சமதானி பொஸ்பரசினால் குறிப்பிடப்பட்ட தனித்த இழை கொண்ட சிறிய DNA துண்டானது Gene Probe எனப்படுகிறது. இது தரப்பட்ட மாதிரி ஒன்றிலுள்ள DNA ஐ இனம்காண உதவும். இதன் மூலம் உடலிழையங்களிலும், குருதி மாதிரிகளிலும் காணப்படுகின்ற bacteria, virus, protozoa போன்றவற்றை இனங்காண முடியும். அத்துடன் பிறப்புரிமை ரேகைப்பதிவில் பயன்படுத்தப்படும் மற்றும் முதிர்வு மூலவுருவின் DNA ஐப் பகுப்பாய்வு செய்து பிறப்புரிமைக் குறைபாட்டு நோய்களை இனம் காண உதவும்.

பிறப்புரிமை ரேகைப்பதிவு, கொலை, பாலியல் வல்லுறவு போன்றவற்றிற்குரிய குற்றவாளிகளைக் இனம் கண்டறிவதற்கும், சரியான வம்சாவளியை இனம் கண்டறிவதற்கும் உதவுகின்றது.

இன்று உலகில் பெருகிவரும் சனத்தொகைக்குத் தேவையான விவசாய, மருத்துவத் தேவைகளிற்கேற்ப பிறப்புரிமைப் பொறியியல் உபயோகிக்கப்படுவதுடன் இனி வருங்காலங்களில் சுகதேகியான மனித சமுதாயம் ஒன்றை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் என நம்பப்படுகிறது.

*குயிலினி கமலசிங்கம்*
**1998 க.பொ.த. (சா.த)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- 1999 -

உயர்தர மாணவர் ஒன்றிய மதியபோசன விருந்தின்போது முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. த. கந்தசாமி அவர்கள் உரையாற்றுகிறார்.



வணிக தாரகை வெளியீட்டின் போது பழைய மாணவன் வங்கி முகாமையாளர் திரு. க. கமலசேகரம் மங்கள விளக்கேற்றல்



ஆரம்பப் பிரிவு செயற்பாட்டு அறை திறப்பு விழாவின் போது ஆசிரியர்களும், மாணவர் களும்.



விஞ்ஞான ஆய்வுகூடத்தில் பகுதித் தலைவர் திருமதி ச. இரத்தினசிங்கத்துடன் ஆய்வில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் திரு. க. கனகேஸ்வரன், திரு. கே. சோமாஸ்கந்த மூர்த்தியுடன் மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றமுறும் கல்வியின் நோக்கங்கள் ஒரு கல்வியியல் கண்ணோட்டம்

செல்வி. சுகந்தினி சுப்பிரமணியம்
விரிவுரையாளர் (B.A. Dip.in Edu)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

சமுதாய வளர்ச்சி மாற்றங்கள் பற்றியும் அதனூடாகக் கல்வியின் தேவைகள் நோக்கங்களின் அகல் விரி ஆழமான கருத்தியல் உள்ளடக்கங்களிலும் உலகளாவிய ரீதியில் பெரு மாற்றங்களும் அபிவிருத்திகளும் ஏற்பட்டு வருகின்றன. இம்மாற்றங்கள் கல்வியியல் புதிய செல் நெறிகளில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. சுய முன்னேற்றம், திறன் ஆகியவற்றை அடைவதற்கு பக்குவப்படுத்தும் செயல்முறை நோக்கமாகவே கல்வியுள்ளது. இன்றைய சிக்கலான ஆற்றல் மிகுந்த தகவல், அறிவு, ஆற்றல்கள், நம்பிக்கைகள், மனப்பாங்குகளை அடைய வைக்க கல்வியின் நோக்கங்களே வழிகாட்டி வருகின்றன.

இடையீடு இன்றி மாற்றங்களுக்கு உள்ளாதல் உலக சமூகத்தின் இன்றைய நிலையாக இருக்கும் வேளை, தகவல் தொழில்நுட்பம் (Information Techonology) கணனி உதவியுடன் பல் பரிமான முகாமைத்துவ ரீதியான மாற்றமுறும் கல்வி விருத்தி நோக்கங்கள் இன்று வேண்டப்படுகின்றன. முகாமைத்துவத்துக்கான தகவல் முறைமை (Management Information System) எல்லாக் கல்வித் துறைகளுக்கும் அவசிய தேவையாகவுள்ளது. இதனூடு சமூக—பொருளாதார—கலாச்சார, உலகமயமாதல், பின் நவீனத்துவம், கலை இலக்கிய கல்வி விமர்சனவியல்கள், கல்வி மயமாதல் (Educationalisation) போன்ற எண்ணக் கருக்களினூடாகக் கல்வியின் புதிய விழிப்புடன் கூடிய நோக்கங்கள் மேலும் தெளிவுபடுத்தப் பட வேண்டியுள்ளது.

ஆரம்ப காலங்களில் சமூக விரிகை அதற்கே உரித்தான இயல்புகளை அடிப்படையாகக்கொண்டு தோன்றியது. முறைசார் கல்வி தோன்றியவுடன் அது சமூகத்தின் இயக்கத் தன்மையை நெறிப்படுத்தும் பிரதான சக்தியாக மாற்றடைந்தது. சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு அமையச் சென்று சமூக சமநிலைத் தன்மையைக் காக்கும் வண்ணம் சமூகச் சக்தியாக மாறிவரும் கல்வியின் நோக்கங்கள் தொழிற்பட வேண்டியதாயிற்று. மிக விரைவான ஓட்டத்தில் ஈடுபட்டுள்ள சமூகத்துடன் சரி சமனாகப் பயணஞ் செய்வதற்கும் தனியொருவருக்கு உதவும நோக்கங்களைக் கல்வியினூடு வழங்க வேண்டியுள்ளது.

கல்வி முறைகளில் காணப்படும் ஒருமைப்பாடுகளை (Uniformity) குறைத்து விரைவான சமூக மாற்றங்களுக்கு ஏற்ப பல்வகையான பயிற்சி நெறிகளை அறிமுகம் செய்யும் (Diversification of Education) போக்கிற்கு தனித்து நூற் கல்வி அல்லது தொழில்சார் கல்வி என்ற நிலை தவிர்க்கப்பட்டு சகல விதமான கல்வித் திறன்களையும் கணனிக் கல்வி, வர்த்தக விஞ்ஞான சமூகவியல், சர்வதேசிய மொழிகள், தொழிற்பயிற்சிகள் என்பவற்றின் பாவனைகளையும் மாணவர்களுக்கு ஒருங்கே வழங்குகின்ற புதிய போக்குகள் மாற்றமுறும் கல்வியின் நோக்கங்களாகவுள்ளன. பாரம்பரியமான கல்வியின் தத்துவார்த்த இலட்சியவாத, பண்பாட்டுவாத, இயற்கைவாத, சமவுடமைவாத கருத்தியல்களின் பிழைகள் திருத்தப்பட்டு பின் நவீனத்துவ நோக்கியல் அணுகுமுறைகளிலும் கல்வியின் மாற்றமுறும் நோக்கியல்கள் தற்போது எடுத்தாளப்பட்டு வருகின்றன.

## புதிய சூழல் கல்வி

இன்றைய நவீன சமுதாயப் புதிய சூழல் கல்வியின் நோக்கமானது ஒருவரைத் தன்நிலை அறியும் தகமையை உடையவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளிரத் துணை போகவேண்டும். இதனூடு ஒருவர் தன்னிறைவு உடையவராக விருத்தி யடைந்து தனக்கு உதவுவதுடன் தன்னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்திற்கும் அதன் ஒரு அங்கத்தவராக இருந்து உதவிபுரிய வேண் டும். இவர் தனது பணிகளை மற்றவர்க ளுக்கு ஆற்றுவதில் செயற்றிறன், உணர்வு, பலம் பொருந்திய குணம் ஆகியவற்றை உடையவராக அமைவதோடு சகலரினதும் உரிமைகளைப் பேணுவதிற் சமுதாய முதிர் விடமாய்ச் செயலாற்றி சூழல் நிலைமை களுக்கு ஏற்ப வலுவடையச் செய்யலாம். இதற்குக் கற்கக் கற்றல் தேர்ச்சியினூடான கல்வியின் நோக்க வடிவங்களை மேலும் அபிவிருத்தியடையச் செய்ய வேண்டியுள்ளது.

கற்க கற்றல் தேர்ச்சித் தகமைகள் விரைவாக மாறுகின்ற, சிக்கலான, நெருக் கடியான உலகொன்றின் இயல்பிலிருந்து நேரடியாகவே உருவாகின்றன. ஒருவர் எத னைக் கற்றாலும் அக்கல்வி காலத்திற் கேற்பப் புதுப்பிக்கப்பட்டாலும் மீளாயப் படலும் அவசியமாகும். இதற்கு ஒருவர் தம் அவ தானத்தைப் பேணுவதில் விழிப்புணர்வும், நுண்ணுவர்வும் திறமையும் உடையவராய் இருப்பதோடு ஒரு குறித்த நிலைமையில் அவசியமாகின்ற விடாமுயற்சியுடன் கவனிப் பதற்கு விருப்பமுடையவராகவும் இருத்தல் வேண்டும். வாழ்க்கை முழுவதும் "கற்கக் கற்றல்" கல்வி நோக்கத்தின் அடிப்படைத் தத்துவம் இதுவாகவேயுள்ளது. சுயகற்றலுக் கான வெளிப்பாடுகளுடன் புரட்சிகரமான தகவல் வெளிப்பாடும் இத்தகைய கற்ற லுக்கு அவசியமாகின்றன.

இவ்வாறாக மாற்றமுறும் கல்வியின் நோக்கமானது ஒன்றில் மற்றொன்று தங்கி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுடன் பகிர்ந்து கொள்ளுதல், பிராந்திய—தேசிய—சர்வதேச மனோபாவ உணர்வினையும் விருத்தியடை யச் செய்ய வழிகாட்ட வேண்டும். சாதி—சமய—பொருளாதார, தனிப்பட்ட விடயங் களைக் கருதாது ஒற்றுமை, நடுநிலைமை என்பவற்றைத் தோற்றுவிக்கும் விசாலமான தோற்றம் பரந்த அடிப்படையிலான பின் விளைவுகளைக் கல்வி உருவாக்க வேண் டும் என்பதற்காக மாற்றமுறும் கல்வியின் நோக்கங்களின் தெளிவுக்காக யுனெஸ்கோ நிறுவனத்தினால் அண்மையில் வெளியிடப் பட்ட 21ம் நூற்றாண்டுக்கான கல்வியின் நோக்கம் பற்றிய அனைத்துலக ஆணைக் குழு (ஜெகின் டெவோர்ஸ் — தலைவர்) தனி நபர்களையும் சமூகத்தையும் 21ம் நூற்றாண் டுக்காகத் தயாரிக்கையில் பின்வரும் நான்கு விடயங்கள் தொடர்பாக கல்வி நிறைவேற்ற வேண்டும் என்கிறது.

1) அறிந்து கொள்வதற்காகக் கற்றல்
2) குறிப்பிட்ட ஒன்றை ஆக்குவதற்காகக் கற்றல்
3) இணைந்து வாழ்வதற்காகக் கற்றல்
4) ஆவதற்காகக் கற்றல்

என்பவையாக உள்ளன. இவற்றினூ டாக வினைத்திறன் பொருந்திய வாழ்க்கை மாற்றங்கள், அபிவிருத்திக்காகக் கல்வியைப் பயன்படுத்த வேண்டும்.

## விமர்சனமும் அபிவிருத்தியும்

இன்றைய மாற்றமுறும் கல்வியின் நோக்கங்களை அடைய பாடசாலைக் கல்வி முறையே பெரும்பாலான நாடுகளில் மைய மாகவுள்ளது. துரிதமாக விருத்தியடையும் சமூகத்தில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய திறமைகளைக் கொண்ட தகவல்களை நிறைய வைத்துள்ள விவேகமுடைய பிரஜைகளைத் தோற்றுவிப் பதே பாடசாலைகளின் பிரதான பொறுப் பாகும். சமூகம் இதற்காகப் பாடசாலைகள் மீது நம்பிக்கைகளையும் வைத்துள்ளது. பாடசாலைகளிலிருந்து தோற்றுவிக்கப்படும் தனியாள் சமூகத் தேவைகளுடன் பொருந் தாதவாறு நிராகரிக்கப்பட்ட தனியாள்களாக மாறுவார்கள் எனின் அப் பாடசாலையின் ஊடாக சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் நிறை வேற்றப்படுவதில்லை. தற்போது பாடசாலை கள் சமூகத்தினால் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை ஆற்றாத ஒரு நிறுவனமாக மாறி வருகின்றனவென விமர்சிக்கும் நிலை யும் தோன்றியுள்ளது. பாடசாலைகள் அந்த சமூகம் அவர்கள் அந்த பாடசாலை போன்ற நவீன போக்குகளில் மாணவர்களின் கவ னம் ஈர்க்கப்பட்டுள்ளது.

எனவே மாற்றமடைந்துவரும் சமூகத் திற்கு இசைவானதாக கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு நிறுவனமாகப் பாடசாலை களைக் கட்டி எழுப்ப மாற்றமுறும் கல்வி யின் நோக்கங்களில் மிகக்கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

பாடசாலையானது ஒரு சமூகத்தின் மாதிரி அல்லது குறுக்குவெட்டு என்ற வகை யில் சமூகத்தின் ஒவ்வொரு மாற்றமும் பாடசாலையினால் உணரப்படுதல் வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். அவ்வாறான சமூக மாற்றங்களுக்கு அமைய பாடசாலைக் கலைத் திட்டங்கள், கணிப்பீடு, முகாமைத்துவம், கற்பித்தல் முறைகள், உபகரணங்கள், புத்தாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப் பிடலாம். இந்நோக்கிலேயே இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்த அமுலாக்கமும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி தேசிய குறிக்கோள்கள் குறிப்பிடப்பட்டு அபிவிருத்தி யின் மேலமைப்பு வினைத்திறனுடன் தொடர் வதற்கு அடிப்படையான ஓர் அடித்தளம் இருத்தல் வேண்டும். கல்வியின் புதிய நோக்கங்களை அடைவதற்கான முன் நிபந் தனையாக உள்ள ஐந்து தேர்ச்சிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தொடர்பாடல், சூழல், ஒழுக்காறு, ஓய்வு நேரம், கற்கக் கற்றல்) இவற்றினூடாக மாற்றமுறும் சமு தாயத்திற்கேற்ப கல்வியின் நோக்கங்கள் (Aims) குறிக்கோள்களை (Objectives) அடை விக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய தேவைகள், தனியாள் தேவைகள், சமூகத் தேவைகள், சர்வதேச அபிவிருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்டே கல்வி யின் நோக்கங்களைப் பல நாடுகளும் அமைத்துக் கொண்டுள்ளன.

இங்கு அபிவிருத்தி என்பது வளர்ச்சி யுடன் கூடவே மாற்றமடைதலாகும். இம் மாற்றம் சமூக—கலாசார—பொருளாதார ரீதி யில் இடம்பெறுவதுடன் அளவறி — பண்பறி முறையிலும் ஏற்படுத்த வேண்டும். இவ் வகையில் பௌதீக அபிவிருத்தியுடன் உள — ஆன்மீக அபிவிருத்திக்கு அச்சாணியாகக் கல்வியின் நோக்கங்களே அமைகின்றன. வாழ் நாட் கல்வி, ஆயுட்காலக் கல்வி, கல்விமையச் சமூகம், தொடர்கல்வி என்ற வகையில் மாற்றமுறும் சமூகத்திற்கு ஏற்ப கல்வியின் நோக்கங்களும் மாற்றமும் எழுச்சி அடைபவையாகவே உள்ளன.

# ENGLISH LITERATURE AND ITS IMPORTANCE

Literature is composed of works which by reason of their subject matter and their mode of treating are of general human interest. It's very form and the pleasure which is derived from it should be regarded as essential. It differs from a treatise. A piece of literature imparts knowledge and also yields aesthetic satisfaction by the manner in which it handles its theme. Literature brings forth its lasting and deep human significance. It grows directly out of life. It is a vital record of what men have seen in life, what they have experienced of it, what they have thought and felt about those aspects of it which have the most immediate and enduring interest for all of us. It is fundamentally an expression of life, through the medium of language. Literature lives by virtue of the life, which it embodies. It is the impulses of men which have given birth to the various forms of literary expression.

The great impulses behind literature may be grouped under four heads:

1. Our desire for self expression.
2. Our interest in people and their doings
3. Our interest in the world of reality in which we live and the world of imagination in which we conjure into existence.
4. Our love of form.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Literature deals with the great drama of human life and action – men and women, their lives, motives, passions, relationships etc. Man is a social animal, and by nature he cannot keep his experiences, observations, ideas, emotions, fancies to himself and under stress of a constant desire to impart them to those about him. By so doing, he blends expression with artistic creation.

The first three impulses continually merge together in life and so they will merge together in literature, thus resulting in the divisions of literature viz. The lyric poem, the epic, drama, descriptive essays etc. expressing writer's emotions.

We must not consider the impulses which produce literature but also the subjects with which it deals. Looking at literature there are five classes of production:-

1. The literature of purely personal experience.
2. Of the common life of man as man.
3. Of the social world under all its different aspects.
4. The literature which treats of nature and
5. The literature which treats of literature of art.

The classification of literature are as follows:-

First is the literature of self expression which includes the different kinds of lyric poetry, the poetry of meditation and argument and the elegy, the essay and treatise where these are written from, the personal point of view and also the literature of artistic and literary criticism.

Secondly, we have the literature in which the writer, instead of going down into himself, goes out of himself into the world of external human life and activity, and this includes history and biography, ballad and the epic, the romance in verse and prose, the novel drama.

Thirdly is the literature of description.

A literary piece has four elements in it.

a) There is the intellectual element – the thought which he expresses in his work.
b) There is the emotional element – the feeling which the subject arouses in him, and which in turn he desires to stimulate in us.
c) There is the element of imagination, which is really the faculty of strong and intense vision, and by the exercise of which he quickens a similar power of vision in ourselves.

These elements combine to furnish the substance and the life of literature. And the fourth element in literature the technical or the element of composition and style.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The important branches of literature are poetry, prose fiction and drama.

Poetry is essentially a particular kind of art, and that it arises only when the poetic qualities of imagination and feeling are embodied in a certain form of expression. That form is, of course regularly rhythmical language or metre. It is suggestive and when we look at them critically and compare them with one another, certain disturbing facts in them become clear. They are almost disturbing in their variety because the subject is approached from many different points of view.

As regards poetry poets have different points of view. For instance Johnson says it is and art of writing pleasure with truth by calling imagination to the help or reason. Carlyle says it is musical thought. Maculay means the art of employing words in such a manner as to produce an illusion on the imagination. Wordsworth's view is that it is the breath and finer spirit of all knowledge. According to Edgar Poe, it is "the rhythmic creation of beauty".

Therefore, it becomes necessary for us to cultivate the poetic sense by having daily exercise on imagination in sympathetic contact in the great poetry.

Prose fiction is the other branch of literature. In any historical study of literary forms, the drama takes precedence of the novel. Here, we will reverse the chronological order and deal with the novel first. The novel owes its existence to the interest which men and women everywhere and at all times have taken all in the great panorama of human passion and action. This interest has always been one of the most general and most powerful of the impulses behind literature, and it has thus given rise, according to changing social and artistic circumstances, to various modes of expressions – here to epic, and there to drama to ballet and now to romance. Marian Crawford happily phrased it a "Pocket theatre" containing within itself not only the plot and actors, but also costume, scenery and all accessories of a dramatic representation. The novel has largely displaced the drama, as it has displaced other vehicles for the expression of our common interest in human life and has established itself as the principal literary form of our complex and many sided modern world. Prose is the loosest form of literary art. It is a familiar fact that anyone can write a novel with a certain amount of leisure and patience.

The other division of literature is drama. The novel and drama are compounded of the same elements. It is a specific form of literary art. The drama is designed for representation by



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

actors who impersonate the characters of its story and among whom the narrative and the dialogue are distributed. A play is intended in Aristotle's phrase for "a single heaving". As the physical endurance of the spectator is limited, relative brevity should be the practical law of dramatic being. A dramatist is compelled to work within a much more confined space, compress his materials to select the most important incidents and situations and concentrate his attention upon these. The drama is the most rigorous form of literary art. A good ;plot really rests upon character. Dialogue then becomes an essential adjunct to action, or even an integral part of it, the story moving beneath the talk and being, stage by stage elucidated by it. Like all other kinds of literature the drama has to be judged on the broad basis of its moral power and value.

The truth remains that – the value of English literature is immeasurable and we should penetrate deep into it and equip ourselves with this ocean of knowledge.

*Y. Thivakar*
G.C.E. O/L (1998)

# சரியான பிறப்பு நிறையே சுகவாழ்விற்கு வழி

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றார் தமிழ் வளர்த்த எங்கள் ஔவைப் பாட்டி இந்த உலகத்திலே எத்தனையோ பிறவிகள் இருந்தாலும் மானிடப் பிறவி என்பது கிடைத்தற்கரிய பேறு என்பதே அவரது கருத்தாகும். இதனையே சிவபுராணத்திலும் புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகி பல்மிருகமாகி பறவையாய் பாம்பாய் கல்லாய் மனிதராய் என குறிப்பிடப்படுகின்றது. உயிர்கள் இவ்வுலகத்தில் எடுக்கும் எல்லா பிறவிகளிலும் மேலானது இந்த மனிதப் பிறப்பு. ஔவையார் தொடர்ந்து கூறுகையில் 'அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கி பிறத்தலரிது' என்கிறார். மனிதராய் பிறந்தால் மட்டுமே போதாது குறைபாடுகளற்ற ஒரு நிறைவான மனிதனாக பிறப்பது பெரும் பேறு என்கின்றார். இந்த பெரும் பேற்றை அளிக்கவல்ல கடவுள் இவ்வுலகத்தில் தாயும் தந்தையும் தான் என்றால் அது மிகையாகாது.

ஒரு உயிர் இப் பூமியிலே உதயமாவதற்கு காரணமானவர்கள் நிச்சயமாக ஒரு தாயும் தந்தையும்தான். இல்லையில்லை ஒரு ஆணும் பெண்ணும் என்பதே சரியானது. ஏனெனில் ஒரு உயிரை இவ்வுலகத்திற்கு ஈன்று கொடுத்த பின்னரே அவர்களுக்கு தாய் தந்தை என்ற பெரும் பட்டம் அளிக்கப்படுகின்றது. உயிரை இவ்வுலகத்திற்கு அளிப்பதற்கு தனது விந்தை தந்தவர் என்றபடியால் அவர் தந்தையெனவும் அதை ஏற்று ஒரு கருவை தன் வயிற்றில் தாங்கியவள் என்பதால் தாய் எனவும் அவர்கள் அழைக்கப்படுகின்றனர். விந்தை கொடுத்ததோடு தன் கடமை முடிந்தது என நினைக்கும் தந்தைமார்கள் தான் இப்போது பெருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வருகின்றனர். அக்கருவை தாங்கு பவளை தான் தாங்க வேண்டும் என நினைக்கும் ஆண்களை விரல் விட்டு எண்ணலாம். காரணம் ஆயிரம் சொல்வார் கள் ஆனால் அதனால் பாதிப்படைவது முற்றுமுழுதாக அந்த குழந்தையே தான் என்றால் அது மிகையாகாது. எமது இலக் கியங்களை எடுத்தாராய்ந்தால் அதில் ஒரு கதை வருகின்றது. அதாவது ஒரு அரசி யின் வயிற்றில் அவளது குழந்தை இருக் கும்போது அரசிக்கு போர் உபாயங்களை கற்பிக்கின்றார் ஒரு முனிவர். இக்குழந்தை அதனை தனது தாயாரின் கருவில் இருந்து கேட்டு பின் பிறந்து வளர்ந்து பெரியவனாகி தனது எதிரிகளை அப்போர் உபாயங்களை பயன்படுத்தி வெல்கின்றான்.

எனவே தாயின் கருவில் இருக்கும் போதே ஒரு குழந்தை புறச் சூழலில் நடப் பவற்றை தன்னுடைய தாயின் புலனாங்கங் கள் மூலம் அறிந்து கொள்கின்றது. அது அன்றைய காலக் கதை. இன்றைய விஞ் ஞான யுகத்தினை பார்த்தால் அங்கேயும் இதேதான் சொல்லப்படுகின்றது. தாயாருக்கு ஏற்படும் ஒவ்வொரு சிறிய மாற்றங்களையும் கருவிலிருக்கும் குழந்தை மிக துல்லியமாக அறிந்து கொள்ளுகின்றது என விஞ்ஞானி கள் ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளனர். தாயார் கவலைப்படுகையில் அந்த உணர்வு பிள்ளைகளைப் பாதிக்கின்றது. அதேபோல் தாயார் மகிழ்ச்சியுடன் இருக்கையில் அந்த உணர்வும் பிள்ளையை மகிழ்விக்கின்றது. இதற்கு சான்றாக ஒரு சம்பவத்தை கூறலாம். 1985இல் ஒரு கர்ப்பிணி தாயார் சுயஸ் கால்வாயூடு பயணம் செய்கையில் தவறுத லாக கடலில் விழுந்து விட்டார். அவரை பெரும் சிரமப்பட்டு காப்பாற்றினர். அவரோடு பயணம் செய்தவர்கள் இவ் நிகழ்ச்சியால் அத்தாயார் மிகவும் பயந்து மனநிலை பாதிப்படைந்து இருந்தார். சில மாதங்களுக்கு பின் பிறந்த அவரது குழந்தை தண்ணீரைக் கண்டாலே பயந்து அலறியது. குளிப்பாட்ட நீரைக் கொண்டு வந்தால் பிள்ளை அதனைக் கண்டு பயந்து மறுத்தது.

இதனை அவதானித்த வைத்தியர்கள செய்த ஆராய்ச்சியில் தாய்க்கு நடந்த அந்த விபத்து கருவிலிருந்த சிசுவை பாதித்தது என முடிவெடுத்தனர். இவர்கள் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்ததை நம் ஊர் பாட்டிகள் ஆராயாமலே சொல்வார்களே. கர்ப்பிணி தாய்மாரை அடிக்கடி கந்தசஷ்டி கவசம் (சைவர்) கேட்க சொல்வார்கள். ஏனெனில் பிறக்கும் குழந்தை இசையில் ஆர்வம் உடையனவாயும் நல்ல சமயப்பற்று உள்ள னவாகவும் இருப்பான் என்று கூறுவார்கள். இதில் உண்மை இல்லாது இல்லை. எனவேதான் கர்ப்பிணிகளை மாலை வேளை களில் கடற்கரை தோட்ட வெளிகளில் உலாவவிடுவார்கள். இதனால் தாயாருக்கு உடற்பயிற்சியாக அமைவதுடன் மன அமை தியையும் ஏற்படுத்துகின்றது. இதனால் பிறக் கும் குழந்தையும் நல்ல மனநிலையுடன் இருக்கும். எனவேதான் தந்தைமார் தம் பிள்ளைகளின் அன்பு அக்கறை உடைய வர்கள் எனின் கவனித்துக்கொள்ள வேண் டும். இல்லாவிடின் வெள்ளம் வந்த பின் அணை போட்ட கதையாகத்தான் போகும்.

ஒவ்வொரு கருவுற்ற தாயும் தனது சுக நலத்தை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும். நல்ல சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும். தனது பழக்கங் களை ஒரு அட்டவணைப் படுத்தி தினசரி அதன்படி ஒழுகுதல் வேண்டும். இப்போதெல் லாம் எமது நாட்டில் இளம் சந்ததியினரை உயிர்ப்புள்ளவர்களாக்க வேண்டும். அவர் களை ஆரோக்கியமாணவர்களாக்க வேண் டும் என்பதற்காக அரசாங்கம் தாய் — சேய் பராமரிப்பு நிலையங்களை ஊர்கள் தோறும் நிறுவி தாய் சேய் உடல் நலங்களை சிறப் பான முறைகளில் பராமரிக்கின்றனர். ஒவ் வொரு மாதமும் ஒரு நாளில் கர்ப்பிணி களின் உடல் நலம் சோதிக்கப்படுகின்றது. அவர்களது உடல் நிறை இரத்த அழுத்தம் குருதியினளவு என்பன அளவிடப்படுகின் றது. கிரமமாக அவர்களுக்கு நோய்களுக் கான தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. எனவே சகல கர்ப்பிணி தாய்மார்களும் இந்த நிலையங்களுக்குச் சென்று இவற்றை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். தமக் காக இல்லாவிடினும் தம் மூலம் உலகத் திற்கு வரும் உயிர்களுக்காகவாவது செய்ய வேண்டும்.

சாதாரணமாக ஒரு குழந்தை பிறக்கும் போது அண்ணளவாக 3½ கிலோகிராம் உடையதாக இருக்கவேண்டும். இந் நிறைக்கு குறைந்தால் பிள்ளை கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கவேண்டும் என்பார்கள். உண்மையில் கண்ணாடி பெட்டிக்குள் வைப் பதற்கு காரணம் யாதெனில் பிள்ளை இலகு வாக தொற்றலுக்கு உள்ளாகிவிடும் என்ப தால் ஆகும். அண்மைக் காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் இவ்வாறு நிறை குறைந்த பிள்ளைகள் கணிசமான அளவு அதிகரித்து வருகின்றது. இப் பிள்ளைகள் தொடர்ந்தும் ஆரோக்கியத்துடன் இருப்பார்கள் எனின் அது ஐயமே. இவ்வாறு குழந்தைகள் பிறப்பதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படினும் தயாரின் ஆரோக்கியக் குறைவே இதற்கான பிரதான காரணமாகும். எனவே, வெள்ளம் வந்தபின் அவதிப்படுவதைவிட வருமுன் காப்பது எவ்வளவோ மேல்.

தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்பார்கள். எனவே தாய் எவ்வாறு உற்சாகமாய் ஆரோக்கியமாய் இருக்கின்றாரோ அதே போல் பிள்ளையும் இருக்கும். எனவே தாயார் சோம்பலாக இருக்கக்கூடாது. சில இடங்களில் கர்ப்பிணி பெண்களை அறவே வேலையைச் செய்ய அனுமதிப்பதில்லை. ஏதோ நோயாளியைப் பராமரிப்பது போல பராமரிக்கின்றனர். அது தவறு குழந்தை பிறக்கச் சில வாரங்களுக்கு முன் வரைக்கும் தனது தேவைகளை தனது வேலைகளை தானே செய்வதற்கு அனுமதிக் வேண்டும். அப் போதுதான் தாய்க்கு ஒரு மனநிறைவும் மனத் துணிவும் வளரும். கர்ப்பிணித்தாய் என்பதற்காக அளவுக்கதிகமாக உணவை கொடுக்கின்றார்கள். இது முற்றிலும் தவறு இதனால் தாயின் நிறை கூடி இரத்த அமுத்தம் போன்றவை கூட வாய்ப்புண்டு.

உடல் நிறை கூடுதல் பிரசவகாலத்தில் சிரமத்தை கொடுக்கும் இன்னுமொரு விடயம் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் உண்டு. எமது நாட்டு பெண்கள் மது அருந்துவது மிகக்குறைவு. எனினும் பிரசவ காலத்தில் கட்டாயமாக மது அருந்த வைப்பது இன்று பாரம்பரியமாகி விட்டது. குழந்தை பெற்ற தாயாருக்கு பசியை ஏற்படுத்த மது தேவை என்ற நம்பிக்கை ஆழமாக வேரூன்றி உள்ளது உண்மைக்கு புறம்பான இந்நடவடிக்கையில் பெண்கள் பலர் மதுவுக்கு அடிமையாகி விடுகின்றனர். வெளி நாடுகளில் பெண்கள் சாதாரணமாக மது அருந்துவார்கள். ஒரு பெண் கர்ப்பவதியாக உள்ளபோது குறிப்பாக முதல் மூன்று மாதம் மது அருந்துவது குழந்தையை மோசமாக பாதிக்கின்றது என நிரூபிக்கப்பட்டு உள்ளது. தாயின் குருதியில் இருந்து குழந்தையின் உடலை அடையும் மது குழந்தையின் விருத்தியை பாதிக்கின்றது. இதனால் குழந்தை வளர்ச்சி குறைந்ததாகவும் அங்க குறைபாடு உள்ளதாகவும் மூளை விருத்தி அற்றதாகவும் அதிகம் நோய் வாய்ப்படும் தன்மை உடைய தாய் பிறக்கும். குழந்தை பெற்ற பின் அருந்தும் மது தாய்ப்பாலின் ஊடாக குழந்தைக்கும் கிடைக்கின்றது. இதனால் பிறந்தவுடன் மது அருந்தும் பெருமை குழந்தைக்கு கிடைக்கும்.

இவ்வாறு குழந்தைக்கு சேரும் மது சிறிதளவாக இருந்தாலும் அது அக்குழந்தையின் தசை இயக்கங்களை அவை மீதுள்ள மூளையின் கட்டுப்பாடுகளை பாதிக்கும். மகப்பேற்றுக் காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ மதுவின் பாவனையை விலத்தி வைப்பதே தாய் சேய் நலனுக்கு உகந்த தென விஞ்ஞான உலகத்தினால் நிரூபிக்கப்பட்டு உள்ளது.

மேலும் தாயார் கல்வியறிவு உள்ளவராக இருத்தல் அவர்கள் பல நல்ல வழிகளை கடைப்பிடித்து நடப்பதனால் குழந்தையானது நல் ஆரோக்கியம் உடையதாய் வளர்கின்றது. சில தாய்மார் மூட நம்பிக்கைகளுக்கு கட்டுப்பட்டு தமது குழந்தைகளுக்கு தாமே துன்பம் தேடி தருபவர்களாக அமைந்து விடுகின்றனர். தாய்க்கு ஏற்படும் நோயால் அவளது கருவில் உள்ள குழந்தை பாதிக்கப்பட்டு தாயாருக்கு செங்கன்மாரி, மலேரியா போன்ற நோய்களுக்கு கர்ப்பிணிகள் என்ற காரணத்தால் சில ஊர்களில் நாட்டு வைத்தியம் செய்யப்படுகின்றது. இது முற்றிலும் தவறாகும். கர்ப்பவதிகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு உடனுக்குடன் வைத்தியரை நாடி அதற்குரிய பரிகாரம் செய்யப்பட வேண்டும். மேலும் அதிகமாக மாத்திரைகள் பாவிப்பதை கர்ப்பவதிகள் குறைக்க வேண்டும். 1960களில் அதிகமாக எந்த நோய்க்கும் பனடோல், டிஸ்பிரின் என்பன பாவிக்கப்பட்டன. விளைவு? 1960களில் பிறந்த குழந்தைகள் அங்கவீனர்களாயும் நிறை குறைந்ததாயும் இருந்தது அவதானிக்கப்பட்டது.

மேலும் பெண்கள் வேலை பார்க்கும் நேரம் வந்துவிட்ட இக்காலத்தில் பொதுவாக எல்லா பெண்களுமே வேலை பார்க்கச் செல்கின்றனர். இவர்கள் கருத்தரிக்கையில் தம்மை சரியாக கவனிப்பதில்லை. மேலும் பிரசவ காலங்களில் மட்டுமே இவர்களுக்கு விடுமுறை கிடைக்கும். ஏனைய காலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இவர்கள் ஏனையோரைப் போலவே சரியான நேரத்தில் வேலைக்குச் செல்ல வேண்டும். எனவே, இவர்களே வீட்டு வேலைகள் யாவற்றையும் செய்து முடித்து அவசர அவசரமாக வேலைக்குச் செல்ல வேண்டும். இந்த லட்சணத்தில் இவர்கள் தமது போசாக்கை உணவைக் கவனிப்பார்களா? கவனிக்கத்தான் முடியுமா? எனவே இக்கால கட்டத்திலாவது ஆண்கள் அவர்களை ஆதரவுடன் கவனிக்க வேண்டும். இல்லாதுவிடின் பிறக்கும் குழந்தை நிறை குறைந்ததாகவும் ஆரோக்கியம் குறைந்ததாகவும் காண வாய்ப்பு உண்டு.

இவற்றில் இருந்து புரிகின்றது. ஒரு குழந்தையானது ஆரோக்கியமானதாக வளர்ப்பது அவ்வளவு சிரமமான காரியமில்லை. எனவே தான் ஒரு குழந்தை பிறக்கும் போது சரியான நிறையில் பிறப்பது அத்தியாவசியமானது. இத்துடன் முடிந்ததா? குழந்தை பிறந்த பின் அதனை சரியான முறையில் பராமரிக்கவும் வேண்டும். எனவே குழந்தை பிறந்தவுடன் கட்டாயமாக கொடுக்க வேண்டிய முதல் உணவு தாய்ப்பால் தான். ஒரு குழந்தைக்கு தாய் பாலுக்கு ஈடான சத்துள்ள சுகாதாரமான உணவு உலகெங்கிலும் தேடினாலும் கிடையாது. இயற்கையே ஒரு குழந்தைக்கு தேவையான சத்து சுத்தம் அனைத்தையும் கணக்கிட்டு அதன் தாயிடம் கொடுத்து உள்ளது. தாய்ப்பாலானது இலகுவில் பெறக்கூடிய மலிவான இயற்கையான நிறை உணவு. இது எல்லா போசாக்கும் நிறைந்தது. ஆட்டுப்பால் பசுப்பால் என்பவற்றில் ஒப்பீட்டளவில் விற்றமின்களின் அளவு மிக்க குறைவாகும்.

தாய்ப் பாலில் நச்சு கிருமிகளை ஒழித்துக் கட்டும் கெரோ பொரின் என்னும் சேர்வையும் மூளை வளர்ச்சிக்கு உதவும் சிலிஸ்டைன் போன்றவையும் தாய்ப்பாலில் அதிகம் உண்டு. மேலும் தாய்ப்பால் தொற்றற்றது. அதனைவிட தாய்ப்பால் பருகி வளர்ந்த குழந்தைகளுக்கும் புட்டிப்பாலில் வளர்ந்த குழந்தைகளுக்கும் வேறுபாடு இருப்பதாக உளவியல் வல்லுனர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர். பாதுகாப்பு, அன்பு பாசம் போன்ற உணர்வுகள் தாய்ப்பாலை அருந்தும் குழந்தைகளிடையே காணப்படுவதுடன் அதிக தன்னம்பிக்கை உடையவராக காணப்படுகின்றனர். அன்பு, பாசம், தன்னம்பிக்கை இல்லாவர்களை மனிதர் என்று கருதமுடியாது. இவர்கள் காகிதப் பூ போன்றவர்கள். கண்ணைப் பறிக்கும் நிறங்களில் காணப்படினும் மனதை மயக்கும் வாசனையற்ற இம் மலர்களால் என்ன பயன்? எனவே, தாய்ப் பாலை அருந்தும் குழந்தைகளே இந்நாட்டை நாளை பாசத்துடனும் நேச பற்றுடனும் வளர்த்தெடுப்பார்கள் என் பதில் ஐயமில்லை.

எனவே இத்தகைய சிறப்பை உணர்ந்து தாய் மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்ட ஆரம்பித்தால் வளமுள்ள பலமான சந்ததியினரை உருவாக்கலாம் அல்லவா? எனவே குழந்தைகளுக்கு இயற்கையான சுதந்திரம் மறுக்கப்பட எந்த தாயும் அனுமதிக்கக் கூடாது. ஒரு குழந்தையின் எதிர் காலத்தை நல்ல காலமாக அமைய செய்வது தாய்ப் பாலூட்டலே என்றால் அது மிகையாகாது.

எனவே தமக்காக இல்லாவிட்டாலும் தம்முடைய குழந்தையின் நலனை உத்தேசித்து தாயார் கருவுற்றிருக்கும் காலங்களில் நல்ல போசாக்கு சுத்தம் உடற்பயிற்சி என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டும். இதனை இவர்கள் செய்கின்றார்களா எனக் கண்காணிப்பது தந்தைமார்களின் கடமை. சிலர் இதற்கு பதிலாக நன்றாக குடித்துவிட்டு மனைவியை கர்ப்பிணி என பொருட்படுத்தாது பல்வேறு விதங்களில் துன்புறுத்துவார்கள். இவர்கள் செய்யக்கூடிய மிகப்பெரிய உதவி ஒன்றில் குடியைவிட வேண்டும் அல்லது குடித்தனத்தைவிட வேண்டும். மேலும் கருவுற்ற காலத்தில் தமது மன நிலையை இயன்றளவு சாந்திப்படுத்தி வைத்திருக்கவேண்டும். நல்ல அறிவு சந்தோஷம் மன அமைதி தரும் செயல்களில் ஈடுபட வேண்டும். எனவே இவற்றையெல்லாம் சின்ன விடயம் தானே என விட்டுவிடாது ஒவ்வொன்றையும் சிறப்பாக கடைப்பிடித்து அனுசரித்தால் நல்ல தேகாரோக்கியம் உள்ள குழந்தைகளை இந்நாட்டுக்கு ஈன்று தருவார்கள் என்பதில் ஐயமில்லை.

'இன்றைய தாய்மாரின் போசாக்கு
நாளைய சிறார்களின் நல்வாழ்க்கை'

*இ. ஐங்கரன்*
க.பொ.த (சா.த)-1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரும் சைவமும்

"குனித்து புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மானிலத்தே

என்று சமய குரவரில் ஒருவரான அப்பர் சுவாமிகளால் சிவனைப் போற்றப்படுகிறது. சிவனை முழுமுதற் கடவுளாக கொண்ட சமயம் எமது சைவ சமயம். சிந்துவெளி நாகரிகக் காலத்திற்கும் அதற்கு முற்பட்ட காலத்திலேயும் துரிதமாக வளர்ச்சியடைந்த சைவசமயம் தென்கிழக்காசிய நாடுகளில் பரந்து விரிந்து காணப்பட்டது. அக்காலம் தொடக்கம் ஆத்மீக நெறியென்றால் சைவம்தான். விவேகா னந்த சுவாமிகள் கூறியது போல எக்கட்டுப் பாடும் அற்று சுதந்திரமாக தழைத்து ஓங்கி வளர்ந்து வருகின்ற கால கட்டத்தில் போர்த்துக்கேயருடைய வருகை சைவத்திற்கு சாவு மணி அடிக்குமோ என்று ஏங்க வேண்டிய காலமாக இருந்தது. இருள் மேகம் சைவத்தை சூழ்ந்துகொண்டது. அம் மேகத்திற்கு இலங்கையின் சென்னியாம் யாழ்ப்பாணமும் சிக்கிக் கொண்டது. ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்காகவும் உத்தியோக மோகத்திற்காகவும் படித்த சைவர்கள் பலரும் கிறிஸ்தவ சமயத்தை தளுவும் சூழல் ஏற்பட்டது.

இந்த சமயத்தில் நல்லையம்பதி பெற்ற தவப் புதல்வர் நாவலர் பீற்றர் பார்சிவல் பாதிரியாரிடம் ஆங்கிலக் கல்வியைக் கற்றுக் கொண்டே சைவத்தை இருள் மேகத்தில் இருந்து ஒளி உலகத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டார்.

"என்செய்வோம் என்செய்வோமென்று
இரங்கிய குடிகளெல்லாம் – முன்
செய்தீவினை என்றெண்ணி முறைமுறை
கொடுபோய் முற்ற தின்செயல்
ஒன்றும் தோரதிருக்கு நாளிவர் நாளெய்த
புன்செயல் ஈங்குநாமும் புரிவது தகாது போலும்"

என்று சைவ மக்கள் எல்லாம் அங்கலாய்து அஞ்சி நடுங்கி பதுங்கிப் பரிதவித்திருந்த காலத்தில் ஞான பண்டிதன் ஞான சூரியன் சைவத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற சிந்தையை தனதாக்கினார். 12 வயதில் ஆங்கிலக் கல்வியைக் கற்று தேர்ச்சி பெற்ற நாவலர் மேலும் விசேடமாக தமிழ்க்கல்வியை தமிழில் பாண்டித்தியம் பெற்ற சரவணமுத்து, சேனாதிராஜ முதலியாரிடம் தமிழைக் கற்றார். ஆங்கிலக் கல்வியைக் கற்று பாண்டித்தியம் பெற்ற இவர் ஆங்கில ஆசிரியராகவும் தமிழாசிரியராகவும் வேதனம் பெறாமல் தொண்டாற்றி ஏழைச் சிறுவர்களிற்காக அரும்பாடுபட்டு உழைத்தார். யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சமயத்திற்கு குடிபெயரக் காரணம் வறுமையே என்பதை உணர்ந்து கஞ்சித்தொட்டி தர்மம், பிடியரிசி போன்ற திட்டங்களை உருவாக்கி கல்வியில் நாட்டம் இல் லாத சிறுவர்களிற்கு பசிப்பிணியைப் போக்கி கல்வியில் ஈடுபடச் செய்ய வேண்டும் எனச் சிந்தித்தார், செயற்படுத்தினார்.

திண்ணைப் பாடசாலைகள் மூலம் செவி வழிக்கல்வியை ஊட்டினார். இந்த இடத்தில்தான் நாவலர் பெருமானின் மூளையில் ஓர் உதைப்பு ஏற்பட்டது. அதாவது எல்லாவற்றையும் உரைநடையில் எழுதிக் கொடுக்கவேண்டும் என்பது இவற்றிக்கெல்லாம் என்ன செய்யலாம் என்று எண்ணிய அவர் சிந்தனை தமிழகப் பயணமாக செயற்பட்டது. இன்றைய யாழ் மத்திய கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராசிரியராக கடமையாற்றி மிஷனரிமார்களின் வேண்டுகோட்படி விவிலிய நூலை மொழி பெயர்த்து பாதிரிமாரின் மதப்பிரசாரத்தின் வேகத்தைக் கண்டு வெகுண்டு சைவமும் தமிழும் தாழ்வடைவது கண்டு வருந்தி சைவசமய பாதுகாவலனாய் புறப்பட்டார் தமிழகம்.

சிதம்பரத்திலுள்ள தீட்சகர்கள் சிவ தீட்சை இன்றி பூசை நடாத்தி சிவாகம நிந்தனை செய்தனர். அத்தீட்சிதர்கள் ஆடு வெட்டி வேள்வி செய்ய எண்ணியதை தடுத்தார். அவர் அவர்களது கோபத்தையும் பொருட்படுத்தவில்லை. திருவிழாக் காலங்களில் வாணங்கள் கொளுத்துவதன் தீமைகள் வேலாயுதத்தை நாட்டி விக்கிரகங்களை நாட்டாமல் விடுதல், கோயிலிற்கு தேர் என்றும் விழாக்கள் என்றும் மக்களிடம் பொருள் சேகரித்து ஐந்தொகைக் கணக்குகள் காட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாமல் இருத்தல், கோவில்களில் விலை மாதர்களைக் கொண்டு நடனம் செய்வித்தல், குருக்கள்மார் கோயில் பண்டங்களை அபகரித்தல் போன்ற தீயபழக்கங்களை அம்பலப்படுத்தி தமிழகத்தில் உள்ள அனைத்து சைவக் கோவில்களையும் வரன்முறை தவறாது வழிபட வழிவகுத்துக் கொடுத்தார். இவற்றை வன்மையாக எதிர்த்த தீட்சிதர்மார்களை பொருட்படுத்தாது இவற்றிற்கும் கூட நூல்களை எழுதி வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தின் பயனே அவர் தமிழகத்தில் நிறுவிய 1வது அச்சியந்திரசாலை ஆகும்.

1860ம் ஆண்டு தமிழ் நாட்டில் சென்னை பிரதான வீதியில் நாவலர் வித்தியானுபாலன அச்சுக்கூடத்தை நிறுவினார். இவரது ஆத்மீக நண்பனான சதாசிவம்பிள்ளை நூல்களை அச்சிட்டு வெளியிட உதவினார். தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறளையும் பரிமேலழகர் எழுதிய உரையையும் நாவலர் வசனமமைத்துக் கொடுக்க பிள்ளையவர்கள் அச்சேற்றினார். தமிழகத்தில் அச்சாகிய பிரதிகள் "வசன நடை கைவந்த வல்லாளர்" என்று புகழுடன் போற்றித் துதிக்க வழிவகுத்தது. இதனைத் தொடர்ந்து பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராணம், திருமுருகாற்றுப்படை உரை, கோயிற் புராண உரை, இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, தொல்காப்பியர் சொல்லதிகாரம் போன்ற அரும் பெரும் நூல்களை எல்லாம் அரிய செந்தமிழ் நடையில் அழகுற அமைத்து அச்சுப் பதித்து அரங்கேற்றி அறியாமையிற் கிடந்த சைவப் பெருமக்களை எல்லாம் இருள்நீக்கி ஒளிபெறச் செய்தார். இது மட்டுமா? மறைந்து கொண்டிருந்த இலக்கண சமய இலக்கிய நூல்களையெல்லாம் பதிப்பித்து பெரும்புகழ் படைத்தார். இதுமட்டுமா Madras பைபிள் சங்கம், அமெரிக்க மிஷன் Madras போன்ற சங்கங்களிலே 1850ம் ஆண்டு இவர் இருந்துகொண்டு ஆங்கில விவிலிய நூல்களை மொழி பெயர்த்துக் கொடுத்து பாராட்டைப் பெற்றதோடு இந்த நடையை வைத்துக்கொண்டே சைவமக்களை கவரும் விதத்தில் சைவதமிழ் நூல்களை வெளியிட்டு சென்னையிலேயே பாதிரிமாரின் கண்டனத்திற்கெதிராக எதிர்க் கண்டனம் விடுத்தார் நாவலரின் பேனாமுனை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தமிழகம் எங்கும் முனைந்து நின்றது.

திருவாடுதுறை ஆதீனத்தின் தலைவர் சுப்பிர மணியம் தீட்சிதர் அவர்கள் ஆறுமுக நாவலருடைய கருத்தாழம் மிக்க சொற்பொழிவுகளையும் பேச்சுத்திறனையும் கருத்துக்களை வெளிப்படுத்தும் பாங்கினையும் கங்கு "Best Orater" என்ற பட்டத்தை யும் சூட்டி சைவத்தின் உதயத்திற்கு ஒளிவிளக்கு போன்றவர் என்றும் பாராட்டியுள்ளார்.

தமிழகத்தில் இதுமட்டுமா அவர் செய்த சேவை. யாழ்ப்பாணத்தில் பிறந்த நாவலர் சிதம்பரத்தில் ஒரு சைவப் பாடசாலையை நிறுவியுள்ளார். இதற்கான பணத்தை 1862ம் ஆண்டு வண்ணார் பண்ணை வித்தியாலயத்தில் வைத்து பெரும் தொகையைச் சேர்த்தார் என்றால் அவருடைய சேவையின் மகத்துவத்தை சிறியோனாகிய நான் என் எழுத்துக்களில் வடிக்கத் தேவையில்லை. 1846—1855 வரை நாவலர் பெருமான் "Morning Star" என்ற பத்திரிகையை நடாத்தி பல விடயங்களையும் மக்கள் அறிந்துகொள்ள வைத்தார். இது மட்டுமல்லாமல் திருத்தொண்டர் புண்ணிய சபை போன்றவற்றின் மூலமாக சைவப் பிள்ளைகளை அழைத்துப் பிரசங்கங்கள் தேவார திருவாசக புராண படலங்களை ஓதுவித்தல் போன்றவற்றை எல்லாம் செய்து யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி சேரிகள் தோறும் சென்று சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். இதனாலன்றோ சி. வை. தாமோதரம்பிள்ளை

"நல்லை நகராறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே – எல்லவரும்
ஏத்து புராண ஆகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை"

என்கிறார். அதேபோல் சிவசம்பு புலவர்

"ஆரூரன் இல்லை புகலியர்கோனில்லை அப்பனில்லை
நேருமாணிக்க வாசகனில்லை திசையளந்த
பேருறு மாறுமுகநாவலன் இல்லை பின் இங் கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தை போதிக்க நீர்மையரே "

என்கிறார். அதேபோல் நாவலன் புகழ் பாட எம் நாவில் வார்த்தை இல்லை என்றால் மிகையாகாது.

செ. அர்ஜனா
(1999) க.பொ.த.(சா.த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெமோறியல் அன்னைக்கு

மெமோறியல் அன்னையே
உன்னைத் தலை வணங்குகிறேன்
ஆண்டு ஒன்று தொடக்கம் பத்துவரை
உன் மடியில் தவழ்கிறேன்

அன்னையே உன்னைப்
புகழ்கிறேன் ஏனெனில்
எப்பொழுதுமே என்னை
உன் குழந்தை என மதிக்கிறாய்

அன்னையே எங்கள்
அதிபரையும் துதிக்கிறேன்
ஏனெனில் அவன் உன் தலைமகன்
ஆசான்களையும் மதிக்கிறேன்
ஏனெனில் அவர்கள் உன் உடன்பிறப்புக்கள்

அன்னையே உன் புகழ்
மேலும் வளரும்! என் ஆசிகள்!
நீயும் நீடுழி காலம் வாழ
வாழ்த்துகிறேன் அன்னையே!!

க. சோபனா
(2000) க.பொ.த(சா.த)

## ஆறுகளின் பழைய பெயர்கள்

| ஆறுகள் | பழைய பெயர்கள் |
|---|---|
| மல்வத்து ஓயா | கதம்ப நதி |
| கலா ஓயா | கோணநதி |
| தெதுறு ஓயா | ஜஜ்ஜர நதி |
| களனி கங்கை | கல்யாணி நதி |
| மகாவலி கங்கை | கங்கா நதி |
| அம்பன் கங்கை | காரகங்கை |
| மாணிக்க கங்கை | கப்பற் கங்கை நதி |
| கிரிந்தி ஓயா | கருந்தி நதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**- 1994 -**

மெமோறியல் மலர் 5ஐ பிரதிக் கல்விப் பணிப் பாளர் திரு. கோ. ச. வேலாயுதம் அவர்களிடம் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பெறுகின்றார்.



**- 1994 -**

மெமோறியல் மலர் 5ஐ வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெ. இருதய நாதரிடம் முன்னாள் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலர் அமரர் திரு. வரதராஜா பெறுகின்றார்.



பாடசாலை நடன கூடத்தை அமரர் சட்டத்தரணி சி. இராஜேந்திரா அவர்கள் திறந்து வைக்கும் காட்சி



ஓய்வுபெற்ற கனிஷ்ட பிரிவு உப அதிபர் திரு. பா. சபாரத்தினம் அவர்களிடம் ஆசி பெறும் மாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு முற்றத்திலுள்ள வேப்பமரத்தின் சுயசரிதை

காற்றின் கிளைகளை ஆட்டி இலைகளின் சிலிர்சிலிர்ப்பில் பெருமூச்சு ஒன்றை எறிந்தது அந்த முற்றத்து வேப்பமரம். அவ் வேப்ப மரத்தின் நிழலில் படுத்துக்கொண்டு அசைபோட்டுக் கொண்டு இருந்த பசு மாடொன்று "என்ன வேப்பமரமண்ணா பெருமூச்சு பலமாயிருக்கிறது? ஏதாவது முக்கிய செய்தி உண்டா?" எனக் கேட்டது. அதற்கு வேப்பமரம் "முக்கிய செய்தியா எனக்கு முடிவுகாலம் வந்துவிட்டது இனி உனக்கு என் நிழல்கூடப் பயன்படாது" என்று கவலையுடன் மொழிந்தது. பசு மாடு திடுக்கிட்டு "என்னண்ணா சொல்லுகிறாய்?" என்றது. ஆம் தம்பி நான் சொல்வது உண்மைதான் இன்னும் சிறிது நேரத்தில் இந்த வீட்டுக்காரன் தான் கட்டும் புது வீட்டுக்கான கதவு நிலைகள் செய்வதற்காக என்னைத் தறிக்கத் தீர்மானித்துவிட்டார். நேற்று மர வேலை செய்யும் ஆசாரியை அழைத்து வந்து என்னை அவனுக்குக் காட்டினான். அவ்வாசாரியும் நான் நூறு வயதைக் கடந்து விட்டவன் என்றும் என்னில் சிறந்த பலகைகளும் தீராந்திகளும் அறுத்துக்கொள்ளலாம் என்றும் கூறினான். அதனைக் கேட்டு மகிழ்ந்த வீட்டுக்காரன் இன்று என்னைத் தறித்து வீழ்த்துவதாகவும் அதற்கான ஆட்களை அழைத்து வரவும் சென்றுவிட்டான். தம்பி அதை நினைக்க நினைக்க கவலையாய் இருக்கிறது. எனினும் நான் வெட்டி விழுமுன் என் கதையைச் சொல்கிறேன் கேள் என்று கூறித் தனது சுயசரிதையினை வேப்பமரம் கூறத்தொடங்கியது.

நான் நினைக்கிறேன் அப்போது இலங்கையை பிரிட்டிஷ்காரர் ஆட்சி செய்து கொண்டிருந்த காலம் இந்தப் பகுதிகளெல்லாம் பற்றைக் காடாகக் கிடந்தது. இங்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுசிறு குடிசை வீடுகள் காணப்பட்டன. சனங்கள் மிகவும் குறைவு அந்தக் காலத்தில்தான் எனது தாய் மரத்திலிருந்து விழ்ந்த பழத்திலிருந்து நான் பிறந்தேன். என்னைப்போல் பல நூற்றுக்கணக்கான கன்றுகள் தாய் மரத்தைச் சுற்றிப் பிறந்தோம். அக்காலத்தில் வேப்பம் விதை சேரிப்போரும் சிறுவர்கள் சிலரும் நாங்கள் இருந்த பக்கம் வருவார்கள் அவர்கள் எங்களை மிதிப்பார்கள். எங்களில் சிலரை சிறுவர்கள் பிடுங்கி வீசினார்கள் நான் இத்தகைய அழிவுகளிற்கு உட்படாது தப்பிப்பிழைத்து வளர்ந்து வந்தேன் எனக்கு நினைவிருக்கிறது.

எனக்கு அப்போது இருபது வயது இருக்கும் கம்பீரமாக வளர்ந்திருந்தேன். அப்போது தான் இந்த வீட்டுக்காரனின் தந்தை வாலிபனாக இங்கு குடியிருக்க வந்தான். நாங்கள் இருந்த பகுதியை துப்புரவு செய்து தனது நாற்சார் வீட்டைக் கட்ட ஆரம்பித்தார். அவர் வசதியான ஒரு தனவந்தர். தான் கட்டடிய வீட்டிற்கு வேண்டிய மரங்களைப் பெறுவதற்காக எனது தாயாரையும் இன்னும் சிலரையும் தறித்தார். அங்கிருந்த பற்றைகள் அனைத்தும் அகற்றப்பட்டதும். நான் மட்டுமே தனி ஒருவனாக விடப்பட்டேன். என்னுடன் இருந்த உடன்பிறப்புகள் எல்லோரையும் இழந்தது எனக்குக் கவலையாக இருந்தது. ஆயினும் சிறிது காலத்துக்குள் அவற்றையெல்லாம் மறந்து கம்பீரமாக வளர்ந்து உறுதியும் உயரமும் பெற்று கிளைகள் பரப்பி நின்றேன். இவ்வாறு பல ஆண்டுகள் உருண்டோடின. என் வீட்டுக்காரன் முதுமை அடைந்து இறந்தான். அவன் இறந்த பின்னர் அவனது நான்கு பிள்ளைகளும் நான் இருந்த காணித் துண்டை நான்காகப் பிரித்துக் கொண்டனர். மூத்தவனுக்கு வீட்டோடு இருந்த துண்டு சென்றது. மற்ற மூவரில் ஒருவர் தான் இப்போது நான் இருக்கும் நிலத்துக்கு சொந்தக்காரன்.

அவன் அதனது காணியில் நான் இருப்பதைப் பிறரிடம் பெருமையாகக் கூறிக் கொள்வான். அந்தப் பகுதியிலே என்னைப் போல பெரியவர்கள் இல்லை என்றும் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதி மிக உயர்ந்தது என்றுங் கூறிக் கொள்வான். ஆனால் இன்று எனது உறுதி யும் பருமனும் எனக்கே கேடாகிவிட்டது. அதோ கோடாரிகள், கயிறுகள், வாள்கள் சகிதம் ஆட்கள் வருகின்றார்கள் என்று கூறி மௌனமானது வேப்பமரம். அசைபோட்டுக் கொண்டு கதை கேட்டுக்கொண்டிருந்த பசு வின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

*க. பிரதீபா*
2000 க.பொ.த.(சா.த)

# கணக்குப் பதிவியலும் கணக்கியலும்

கணக்கு பதிவியல் என்றால் வியாபார நிறுவனங்களில் நாளாந்தம் நடைபெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களை பூரண இரட்டைப் பதிவு கோட்பாட்டுக்கிணங்க கணக்கேடுகளில் பதிவு செய்கின்ற முறைமை எனப்படும். இக் கணக்குப் பதிவியலை மேற்கொள்பவர் கணக்குப் பதிவாளர் என அழைக்கப்படு கின்றனர்.

இக்கணக்கு பதிவியல் மூலம் வியா பார நிறுவனங்களில் நடைபெறும் ஒரு நிகழ் வினால் பெறப்படுபவை யாவும் வரவாகும். இழக்கப்படுபவை யாவும் செலவாகவும் கணக்கேடுகளில் பதிவு செய்கின்ற முறைமை இரட்டைப் பதிவு எனப்படுகிறது. இவ் இரட்டைப் பதிவு கோட்பாடானது இத்தாலி நாட்டைச் சேர்ந்த Luca Facioli என்பவரால் 1494ம் ஆண்டு அறிமுகப்படுத் தப்பட்டது ஆகும். இவ் இரட்டைப் பதிவு கோட்பாட்டின் விளைவுகள் ஆவன:

(1) சொத்துக்கள் யாவும் வரவு மீதி
(2) செலவீனங்கள் யாவும் வரவு மீதி
(3) பொறுப்புக்கள் யாவும் செலவு மீதி
(4) வருமானங்கள் யாவும் செலவு மீதி

இக் கணக்கீட்டின் காலப்பகுதி பொது வாக 12 மாதங்களாகும். (1 வருஷம்) அத்தோடு இக்கணக்குப் பதிவியலின் நோக் கங்கள் என்னவென்றால் வருமானங்கள் செலவீனங்களின் மூலங்களை அறியமுடிதல். இலாபங்களை அல்லது நட்டங்களை அறிந்துகொள்ள முடிதல். இரண்டு காலப் பகுதியில் குறித்த நிறுவனம் தமது நடவடிக் கைகளை கட்டுப்படுத்த முடிதல். கடந்த காலங்களில் ஏற்பட்ட பிழை தவறுகளை எதிர்காலத்தில் ஏற்படாது தவிர்த்துக் கொள்ளமுடிதல். போட்டி நிறுவனங்களுடன் ஒப்பீடுகளை மேற்கொள்ளமுடிதல். அரசாங் கம் வரி அறவீடுகளை மேற்கொள்வதற்கு இலகுவாக்கப்படுதல். இக்கணக்கு பதிவிய லில் உரிமையாளர், முகாமையாளர், கடன் கொடுத்தோர், எதிர்கால முதலீட்டாளர்கள், தொழிற்சங்கங்கள், வருமான வரி திணைக் களம், ஊழியர்கள் என்போர் அக்கறை உடையோராக கருதப்படுகின் றனர். அடுத்து கணக்கியல் என்றால் கணக்குப் பதிவியல் மூலம் பெறப்பட்ட விடயங்களைக் கொண்டு அந்நிறுவனத்தின் பெறுபேறுகளை யும் (இலாபம் அல்லது நட்டம்) நிதி நிலமை களையும் வெளிப்படுத்துவதான ஒரு செயற் பாடே கணக்கியல் எனப்படும்.

அமெரிக்க பட்டைய கணக்கறிஞர் நிறுவனத்தினால் கூறப்பட்டுள்ளபடி நிறுவ னங்களில் நடைபெறும் நிதிசார்ந்த நிகழ்வு களை இனங்காணுதல், பதிவு செய்தல், வகைப்படுத்தல், பொழிப்புரை செய்தல், பகுப் பாய்வு செய்தல், வியாக்கியானம் கூறல் ஆகிய தொழிற்பாடுகளை உள்ளடக்கியதே கணக்கியல் எனப்படுகிறது. இத்தொழிற்பாட் டில் ஈடுபடுபவரே கணக்காளர் (Accountant) எனப்படுகிறார்.

*கு. நிந்துனா*
2000 க.பொ.த(சா.த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Prevention of Diseases

Prevention is better than cure is often the motto of Doctors. Diseases are mostly due to malnutrition and infection.

The problem of malnutrition can be minimised through adult education classes and constant instruction in schools. In – structions through television and radio programmes will help a great deal.

A variety of micro organisms enter the body system and disorganise the body. This results in death of the victim. These microbes enter the body mostly through contaminated air, water and physical contacts. A person already infected with a microbe is often the source of infection.

Precautionary steps on a big scale have to be taken to avoid infection. Water is often contaminated with germs and it is therefore necessary to drink boiled water. This will help prevent diseases like cholera, and typhoid.

*R. Thanuja*
(2000) G.C.E. O/L

# கற்றறிந்தேன் நற்சாரணியம்

(1999 சேர் பேடன் பவுல் தின கவிதைப் போட்டி
பாடசாலை மட்டம் முதலாம் இடம்)

ஆற்றல் அறிவினை மேம்படுத்தி
ஆளும் மனிதனை ஆட்படுத்தி
தேற்றும் சாரணியக் கொள்கைவழி – சென்று
தேறிடு வோமோ மாணவர்நாம்

நம்பத் தகுந்தவன் சாரணியன் – உயர்
நட்பு மரியாதை கொண்டவனாம்!
அம்பு வில்லின் பகை விட்டெறிந்து – நல்
அன்பும் மகிழ்ச்சியும் கொண்டவனாம்.

சிந்தனை சொல், செயல் தூயவனாம்!
சிக்கனமான சகோதரனாம்.
விந்தைப் பிராணியின் தேழனுமாம் – அவன்
வீரிய தைரியம் உடையவனாம்.

பற்றும் உறுதியும் கொண்டவனாம்
பக்குவமாய் ஒத்து உழைப்பவனாம்
என்றும் மனமகிழ்வுடையவனாம் – அவன்
நம்பும் கரங்களைக் கொண்டவனாம்

எங்கள்பேடன் பவுலின் கொள்கைவழி – சென்று
உத்தமராகவே திகழ்ந்திடுவோம்
கற்றறிந்தேன் நற்சாரணியம் – நான்
காணும் கவி உயர்வானவனே!

*ஜெ. பரணீதரசர்மா*
(2000) க.பொ.த (சா.த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித தேவைகள்

மனித வாழ்வின் ஆரம்ப நாட்களில் வர்த்தக செயற்பாடுகள் காணப்படவில்லை. ஆனால் சுயதேவைப் பூர்த்தி முறையில் மனித தேவைகள் நிறைவு செய்யப்பட்டன. இம்மனித தேவைகள் வரையறை அற்றதாக காணப்படுகின்றன. எச்சந்தர்ப்பத்திலும் எவ் வளவிலும் இத்தேவைகள் ஏற்பட்டுக் கொள்ளமுடியும். பரந்த பண்பாடு தொடர்பு களின் நாகரீக வளர்ச்சி பொருளாதார முன் னேற்றம் போன்ற காரணிகளால் மனித தேவைகள் வரையறை அற்றனவாக மாறி வருகின்றன.

மனிதனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பொருட்களும் சேவைகளும் பயன்படுகின்றன. மனிதனது அடிப்படைத் தேவைகளாவன உடை, உணவு, வீடு, கல்வி, சுகாதாரம் என்பனவாகும். மனிதனது தேவைகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் அலகுகள் நிறு வனங்கள் அல்லது அமைப்புகள் என அழைக்கப்படும். நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் மூன்று வகைப்படும். அவை யாவன: தனியார்துறை, கூட்டுறவுத்துறை, அரசதுறை அல்லது பொதுத்துறை என்பன வாகும். தனியார்துறை சார்ந்த நிறுவனங்கள் தனியுரிமை நிறுவனம், பங்குடமை நிறுவனம், தனியார் கம்பனி, பொதுக்கம்பனி என்பன வாகும். கூட்டுறவுத்துறை சார்ந்த நிறுவ னங்கள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம், உற்பத்தியாளன் கூட்டுறவுச் சங்கம், கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கம் என்பனவாகும். பொதுத்துறை அல்லது அரசதுறை சார்ந்த நிறுவனங்கள் வணிகக் கூட்டுத்தாபனம், சேவைக் கூட்டுத்தாபனம், கைத்தொழில் கூட்டுத்தாபனம் என்பனவாகும்.

மனிதனது மனோநிலையும் உற்பத்தித் திறனும் விருத்தி அடையும்போது அவனது தேவைகளும் அதிகரிக்கின்றன. இன்றைய மனிதனின் தேவை எவ்வளவு தூரம் விரி வடைந்திருப்பதைப் பார்த்தால் உதாரணமாக முதலில் பசியைப் போக்க விவசாயம் செய்ய வேண்டும். விவசாயம் செய்ய உழவு இயந் திரம், களைகொல்லி, பசளை, இயந் திரங்கள் போன்றவற்றின் சேவை அவ சியம். பின்பு சமையல் செய்யவேண்டிய அடுப்பு சட்டிபானை போன்ற பொருட்களை கடையில் வாங்க வேண்டும். இவை மட்டு மல்லாது மனிதனுக்கு திருடர் பயத்தால் பாதுகாப்புப் படை அவசியம். தூர இடங் களுக்கு உறவினர்களுடன் தொடர்புகொள்ள தபாற் சேவை, தொலைபேசி சேவை அவ சியம். தூர இடங்களுக்கு பிரயாணம் செய்ய புகையிரதசேவை விமானசேவை போன்றன அவசியம். வருத்தம் வந்தால் மனிதன் மருந்தெடுப்பதற்காக வைத்தியசாலை அவசி யம். இப்படியாக மனிதனின் தேவைகள் எண்ணில் அடங்காதவை. இன்னும் மனித னின் தேவைகள் அடிக்கடி பெருகிக் கொண்டே செல்லும்.

மனித தேவைகளை இரண்டு வகைப் படுத்தலாம். ஒன்று அடிப்படைத் தேவை. மற்றது ஆடம் பரத்தேவை போன்றன. அடிப் படைத் தேவையாவன உடை, உணவு, வீடு, கல்வி, சுகாதாரம் என்பன. ஆடம் பரத் தேவையாவன தொலைக்காட்டி, வானொலி, கார் போன்றனவாகும். அடிப் படைத் தேவைகளையும் ஆடம்பரத் தேவை களையும் நிறைவு செய்யும்போது மனித வாழ்க்கையை தரம் உயர்த்தி வாழலாம். இம்மனித தேவைகளை நிறைவு செய்வ தற்கு பயன்படுத்தும் பண்டங்களை இரண்டு வகைப்படுத்தலாம். அவையாவன: இயற் கைப்பண்டம், பொருளாதாரப்பண்டம் என்பன. மனித தேவைக்கு இன்றியமையாததும் அருமையாக இன்றி அளவுக்கு அதிகமாகக் கிடைப்பதும் விலைபெறாததும் அதாவது உற்பத்தி செலவீனங்களுக்கு அமையச்செலவு இல்லாததுமான பொருட்கள் இலவசப்பண்டம் எனப்படும். உதாரணமாக காற்று சூரியஒளி, மழைநீர் போன்றவற்றைக் கூறலாம். அருமையாக கிடைப்பதும் மனித முயற்சியால் ஆக்கப்படுவதும் விலை பெறுவதும் அமை யச் செலவு கொண்டதும் அத்தோடு மனித தேவையை நிறைவேற்றும் பண்டம் பொரு ளாதாரப் பண்டம் எனப்படும். உதாரணமாக பேனா, புத்தகம், பென்சில் போன்றனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித தேவைகளை நிறைவுசெய்ய பின்வரும் முறைகளைப் பின்பற்றினர். அவை யாவன: சுய தேவைப் பூர்த்தி, பண்ட மாற்று முறை, பணப் பரிமாற்றல் முறையில் சந்தையிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்தல். ஏனையோரின் சொத்துக்களை சுரண்டுதல் பிச்சை எடுத்தல் போன்றன வாகும். மனித தேவையைப் பூர்த்தியாக்க கூடியவையே மூலவளங்கள் எனப்படும். மூல வளங்களை பயன்படுத்தியே உற்பத்தி யானது மேற்கொள்ளப்பட்டு மனித தேவை கள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. உற்பத்தியானது மனித தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே உருவாக்கப்படுகின்றது. இதனாலே மனித தேவையை மனிதன் தானே குறைத்துக்கொள்ள வேண்டும்.

*க. சுபாசினி*
(2000) க.பொ.த.(சா.த)

# How I Spent My Last Term Holidays

During the last term holidays I went to Mannar. My brother, Jegan and I went to our uncle's place at Adampan in Mannar. We started on the $8^{th}$ of April and reached Adampan on the $9^{th}$. My uncle aunt and their children, were very happy to see us there. The very next day, uncle Chandran took us and their children to the famous Thirukeetheeswaran Temple. We had a bath at palaavi river and went to pray at the temple. The next day, we' were taken to places like Arippu, where we saw the ancient Allirani Kottai from there, we went to Vangalai and when we reached home it was 7p.m. The follwing day, uncle took us to Maruchikaddi and Mullikulam. On the way we saw beautiful tanks with lotus and also animals like elephants, bears and wild boar. We had a lovely time. During our stay there we went to Talaimannar Pier, Giant's Tank, Periya Murippu and lots of other places.

On the whole, we enjoyed our holiday to the full and also came to know new places and things. In fact, we are thinkingj of going there during our next term holiday's too.

*T. Rajes Kanna*
(2000) G.C.E. O/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்துணியின் சுயசரிதை

சென்ற கிழமை நான் எனது மாமனார் வீடு சென்றிருந்தேன். அன்று காலை வீட்டின் பின் வளவிற்கு தற்செயலாகச் சென்றேன். வளவில் ஓர் மூலையில் குப்பைகள் குவிக்கப்பட்டிருந்தன. மாமனார் வீட்டிற்குச் சென்று காலம் பலவாதலால் வளவின் பின்புறத்தே நின்றபடி சுற்றும் முற்றும் பார்த்தேன். அந்தவேளை ஏதோ ஒரு முனகல்ச் சத்தம் வந்தது. சத்தம் வந்த திசையினை அவதானித்துக்கொண்டு அவ் விடத்தே விரைந்தேன். அப்பொழுது குப்பைக் குள் அரைவாசி மூடப்பட்ட நிலையில் மண் படிந்ததாக ஓர் பழந்துணி என்னைக் கிட்ட வரும்படி அழைத்தது.

அதன் அழைப்பை ஏற்று அருகில் சென்றதும் கண்ணீர் விட்டு தன்னுடைய சோக வரலாற்றினை சொல்கிறேன். கேள் என்றதும் அவ்விடத்தே சற்றுப் பொறுமை யுடன் அமர்ந்து அது கூறுவதைக் கேட்க ஆரம்பித்தேன்.

பாரத புண்ணிய பூமியிலே கோயம்புத் தூர் என்னும் இடத்திலுள்ள பருத்தித் தோட் டம் ஒன்றில் அன்று நான் ஒரு பூவாக மலர்ந்தேன். பூ காயாகி முத்திப் பஞ்சைக் கொண்ட சருகாக இருந்தேன் என்போன்ற பலரும் அவ்வாறு காணப்பட்டனர்.

ஒருநாள் காலை இருவர் வந்து அத் தோட்டத்தில் காணப்பட்ட என்னையும் என் போன்ற நிலையிலிருந்த பலரையும் பறித்து எடுத்தனர். வேறோர் இடத்திற்கு அனுப்பப் பட்டு சில நாட்களின் பின்னர் வெய்யிலில் காயவிட்டு என்னை அடித்து வெண் பஞ்சாக்கினர். அப்போது நான் பட்ட வேதனைகள் தான் எவ்வளவு?

பஞ்சாக்கப்பட்ட நாம் மூடையில் போடப் பட்டு வேறோர் இடத்திற்கு அனுப்பப்பட் டோம். அப்போதுதான் எமக்கு நிம்மதி என் றிருந்த வேளையில் திடீரென ஒரு நாள் எம்மை எடுத்துக் காய வைத்தார்கள். இந்த இடத்தில் இயந்திரங்கள் பலவும் தொழிலாற்றிக் கொண்டிருந்தன. இதைக் கண்ட எமக்கு ஒருவித பயமும் பீதியும் ஏற்பட்டன. சற்று நேரத்தின் பின்னர் எம்மை எடுத்துச் சென்று அந்த இயந்திரங்களி னூடாக துன்புறுத்தி அழகான நீண்ட பல நூல்கள் ஆக்கினர்.

அதே இடத்திலுள்ள வேறோர் இயந் திரங்களுக்கு எடுத்துச் சென்று நூல் போன் றிருந்த என்னையும் என்போன்ற பலரையும் நீண்ட அழகிய வெண் துணியாக்கினர். பின் தக்க சாயம் இட்டு பலவர்ணங்கள் பூசி என்னை அழகுபடுத்தி பாரிய அணிச்சுற்றா கச்சுற்றி ஓரிடத்திற்கு அனுப்பிவைத்தார்கள். என்னுடைய அழகினை நினைக்கும் போது எனக்கெல்லாம் ஒரு பெருமை அழகின் பெருமையோடிருந்த எம்மை ஒரு நாள் ஒரு புடவை விற்பனை நிலையத்திற்கு அனுப்பி வைத்தாகள். அந்நிலையத்தில் சுற்றாகச் சுற்றப்பட்டு கடையின் வாயிலில் ஒரு புறத்தே அழகாக அடுக்கி வைத்தார்கள் அந்தக் கடைக்கு வருபவர் பலரும் பல உடுபுடவைகளை வாங்கிச் செல்வார். என்னைக் காலையில் தூக்கி வெளியே வைப்பதும், மாலையில் தூக்கி உள்ளே வைப்பதுமாகப் பல காலங் கழித்தேன். அது விற்பனை நிலையமாதலால் என்னையும் யாரோ ஒருவன் வாங்கத்தான் போகிறான் என்ற முடிவிற்கு வந்தேன்.

அவ்வாறு அந்தக் கடையிலிருந்த என்னை ஓர் அழகான பெருமானார் வந்து சுமாராக 500/- செலுத்திப் பெற்றுக்கொண்டு வீடு சென்றார். அந்த வீட்டிற்குச் சென்ற தும் ஐந்தும் பெண்கள் என்னைக் கண்ட துமே அப்பா இது எனக்கு உது எனக்கு எனச் சிறிது நேரம் சண்டையிட்டார்கள். ஐயோ! என்னுயிர்போய் விடும் போல் இருந்தது. ஒருவாறாக நான் தமிழினி என்ப வளுக்குச் சொந்த மானேன் எனக் கூறப் பட்டு தையல் கடைக்கு அவரின் அழகிற்கு ஓர் அழகான சட்டையாக்கப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வீடு வந்து சேர்ந்ததும் என்னைப் பத்திரமாகப் பெட்டியில் வைப்பாள். எங்காவது திருமணவீடு, பிறந்ததின வீடு, கோவில் திருவிழா போன்ற ஆடம்பர நிகழ்வுகளிற்கு மாத்திரமே என்னை அணிந்து செல்வாள். இதனால் அவரிட மிருந்த என்போன்ற ஏனையோருக்கும் கூட ஒரு பொறாமை.

அவளினால் உண்மையாகவே அன்பு செலுத்தப்பட்டு வந்த நான் அவரின் அழகைப் பேணுவதில் என்னால் இயன்ற வரை உதவி புரிவேன். இவ்வாறு சிறிது காலம் செல்ல சாதாரணமாகவே என் அழகு குறையத் தொடங் கியதாயிற்று சில நாட்களின் பின்னர் எனது முதுகுப் பகுதி யில் ஓர் சிறு துவாரம் அதனைக் கண்ட துமே அன்றைக்கு என்மீது சற்று வெறுப்பு. அந்த சிறு துவாரத்தை மூடித்தைத்தாள் பிற்பாடு நாட்கள் செல்லச் செல்ல எனது உடல்நிலை காரணமாக வேறு பல துவா ரங்கள் ஏற்பட்டது.

இதனால் அவளால் கழிக்கப்பட்ட நிலையில் வீட்டு வேலைக்கு நான் அணியப்பட்டேன். அவ்வாறு சில நாட்கள் செல்ல எனது உடல் அங்கங்கள் கிழியக் கிழிய பழந்துணி எனப்பட்டு அடுப்பில் சட்டி இறக்கவும் விளக்குத் துடைக்கவும் பாவிக் கப்பட்டேன் அன்றிருந்த நிலையை நினைக் கும்போது இவ்வுலகின் மீது ஒரு வெறுப்பு இவ்வாறு கவலையுடன் வாழ்ந்த நாளை, ஒருவருக்கும் உதவாத நிலையினை எனக்கு அழித்து குப்பைக்குள் அகப்பட்டேன் இவ் வாறு குப்பையில் பல நாள் இருக்கும்போது இந்த வீட்டின் மருமகளான உன்னைச் சந்தித்தேன் என்று கூறி முடித்தது. நான் மிக்க கவலையுடன் வீடு சென்றேன்.

ஜெ.மிரோஜினி
2001 க.பொ.த.(சா.த)

## வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான வீதி ஒழுங்குமுறைகள்

- துவிச்சக்கர வண்டியில் செல்வதற்கு முதல் அதன் பிறேக், பெல் என்பவற்றை அவதானிக்கவும்.
- வீதியில் துவிச்சக்கரவண்டியில் செல்லும்போது வீதியின் இடது பக்கமாக செல்லவும். வீதிக்கு இடையூறாகும்படி துவிச்சக்கர வண்டியில் மாறும்போது ஒன்றாகச் செல்வதை நிறுத்தவும்.
- ஒருவர் பின் ஒருவராகச் செல்லவும்
- ஒழுங்கையில் இருந்து பிரதான வீதிகளுக்கு செல்லும்போது பிரதான வீதியில் செல்லும் வாகனங்களுக்கு முதல் இடம் கொடுத்து பிரதான வீதிக்குச் செல்லவும்.
- வீதியில் செல்லும் போது இடது பக்கமாகவும் வலது பக்கமாகவும் பார்த்து திரும்பும் போது தவறாது சைகை காட்டுங்கள்.
- துவிச்சக்கர வண்டியில் செல்லும்போது கதைத்துக்கொண்டு செல்வதோ அல்லது மற்றய ஓட்டியின்கையை அல்லது வாகனத்தைப் பிடித்துக்கொண்டு செல்லாதீர்கள்.
- வீதியில் செல்லும் போது பக்கமாகச் செல்லவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கூட்டுக் குடும்ப வாழ்வு முதியோர் வாழ்வைச் சிறப்பிக்கும்

திரு. செ. றெக்ஸ் அருள்நேசன்
(பழைய மாணவன்)
விளையாட்டு அலுவலர் - விடத்தல்தீவு மன்னார்

மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் உலகிலே சிறப்பாக வாழ்வதற்கே விரும்புகின்றனர். அதிலும் நவநாகரீக உலகில் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கமைய ஒன்றுபட்டு வாழ்ந்த குடும்பம் அனைத்தும் இன்று சின்னாபின்னம் அடைந்து தனிமரமாகவும் தனிக் குடித்தனமாகவும் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறது. இதனால் பெரிதும் பாதிக்கப்படுவோர் பெரியோரும் சிறியோரும் ஆகும். இந்த நிலை என்று மாறுமென்று நாம் அனைவரும் அங்கலாய்த்துக் கொண்டு இருக்கிறோம். எமது நாட்டில் ஏற்பட்ட பூசல்களும் பிணக்குகளும் எம்மவர் மத்தியில் பரந்து விரிந்து தாண்டவம் ஆடுகின்றது. இதனால் இடப்பெயர்வு, ஊரை விட்டு வேறு நாடு செல்பவர், பணம் சம்பாதிப்போர் என பல்வேறு ரகத்தினர் தோற்றம் பெறுகின்றனர். இதனால் மனித வாழ்வு சின்னாபின்னப் படுத்தப்பட்டு குடும்ப வாழ்வில் தனிமை நிலைக்கிறது.

ஆனால் ஆரம்பகால மக்கள் கூட்டுக் குடும்பங்களாக அதாவது பெற்றோர், பிள்ளைகள், முதியோர், உற்றார், உறவினர் எல்லோரும் சேர்ந்து "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பது போல திரண்ட கொடிகளாக வாழ்க்கை நடாத்தினார்கள். இதனால் குடும்ப அங்கத்தவர் ஒருவர் மேல் ஒருவர் மிகுந்த பாசம் உடையவர்களாக இருந்தனர். முதியோர்ருடைய செயற்பாடுகள், கொள்கைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கம் போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய வாழ்க்கை அனுபவங்களை தம்முடன் பகிர்ந்து தாமும் அவர்களுடைய வழியில் வாழ்க்கை நடாத்தினர். அதாவது பாரம்பரிய கூட்டுக்குடும்ப வாழ்வில் முதியோரை புறக்கணிக்காமல், அவர்களுடைய மனம் நோகாமல் அவர்களின் சொல், செயலை மதித்து "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்பதை மதித்து நடந்தனர். இவ்வாறான குடும்ப வாழ்க்கையில் முதியோரைப் பராமரிப்பது பெரிய சிரமாக காணப்படவில்லை. ஏனெனில் ஒருவர் இல்லாத இடத்து இன்னொருவர் முதியோரின் கடமைகளை செய்தனர். இதனால் கூட்டுக்குடும்ப வாழ்வு முதியோரின் வாழ்வை சிறப்பித்து கொண்டிருந்தது.

21ம் நூற்றாண்டு இளம் தலைமுறையினர் பெரும்பாலானோர் முதியோரை பெரும் சுமையாக கருதி அவர்களை புறக்கணித்து வாழ்கின்றனர். இதனால் முதியோரின் இன்றைய நிலையை சற்று நோக்குவோம் ஆயின் அது ஒரு வேதனையான வாழ்க்கையாக இருக்கும். அக்கால குடும்ப வாழ்வில் பரஸ்பர ஒற்றுமை சமூக வாழ்வில் நிலைக்கலனாய் இருந்தது. அது இன்று புறக்கணிக்கப்பட்டது. தனிமைப்படுத்தும் தனிக் குடித்தனம் நிலை கொண்டுள்ளது. ஆனால் கூட்டுக்குடும்ப வாழ்வில் குடும்ப பொறுப்புகள் அனைத்தும் பகிர்ந்து காணப்பட்டது. இன்றைய தனிக் குடும்ப வாழ்வில் குடும்ப பொறுப்புகள் எல்லாம் ஒருவரையே சாருகிறது. இதனால் அவர்கள் முதியோரின் பாராமரிப்பில் பெரிதும் கவனம் செலுத்துவது இல்லை. அதாவது "நாமிருவர் நமக்கிருவர்" என்று வாழ்கின்றபோது முதியோரை பேணிக் காப்பது எப்படி? இதனைவிட எங்கள் நாட்டில் மக்களுடைய வாழ்க்கை யாதெனில் நாடுநகர் இழந்து, ஊர் இழந்து, பொருள் பண்டங்களை இழந்து வேறு நாடுகளில் சென்று தங்கி வாழ்கின்றனர். இந்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் முதியோரையும் கூட்டிச் சென்று அவ விடத்து சூழ்நிலைக்கேற்ப பேணிக்காப்பது எப்படி?

வேறுநாட்டு காலநிலை பழக்கவழக்கம் பண்பாடு நாகரீகம் என்பது எமது முதியோரி டையே ஒன்றுபட்டு வராத செயற்பாடாக உள்ளது. இதனால் அவர்களை பிறந்த நாட்டில் விட்டுவிட்டு மற்றவர்கள் எங்கு சென்றாலும் தப்பித்துக்கொண்டு வாழ்கின் றனர். இதனால் முதியோர் அடக்கி ஒடுக் கப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர். இதனால் முதியோரின் நிலை இன்று கவலைக்கிட மாக இருக்கின்றது. அதாவது பெற்ற பிள்ளைகள் உடன் பிறந்த சகோதரரையும், உற்றார் உறவினர், எல்லோரையும் பிரிந்து இங்கிருந்து வனவாசம் செய்ய வேண்டிய நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர். முதியோர் துன்புறுத்தப்படுகின்ற நிலையை வாயளவில் மட்டும் கதைத்துக் கொள்கிறார்களே தவிர நடைமுறைக்கு பொருத்தமான செயற்பாடுகள் ஒன்றும் காணப்படவில்லை. கூட்டுக்குடும்ப வாழ்வில் மக்களிடையே காணப்பட்ட கடமை, கண்ணியம், ஒழுக்கம், அன்பு, பணிவு போன்றன இன்றைய தனிக் குடும்ப வாழ் வில் காசு கொடுத்து பெற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளது. இந்த நிலை என்று மாறும் என நாம் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆரம்ப காலத்தில் மூத்தோருடைய வார்த்தைக்கு கட்டுப்பட்டு நடந்தனர். அவர் கள் எதனைச் சொன்னாலும் மறுத்துப் பேசாமல் அதனை ஏற்று நடந்தனர். ஆனால் இன்று அவர்களுடைய கருத்தை செவிமடுத்து கேட்டு அதன்படி ஒழுகுபவர் கள் அருமையாகவே உள்ளனர். இதனை சினிமா உலகும் கண்டுள்ளது. "பட்டப்படிப்பு படித்து வந்தாலும் பாட்டி சொல்லை தட்டாதே" கிழவிக்கு அறிவு என்ற வசனங்களால் முதியோரின் உயர் நிலையை எடுத்துக் காட்டுகின்றது. "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்கிது தம்பி" என்று பைந்தமிழ் பாவலன் ஒருவன் பாடியிருக்கி றான். இப்படியாக நாட்டின் நல்ல இளம் தலைமுறையினர் உருவாக வேண்டும் என்று அதிகம் அங்கலாய்ப்போர் இவ்முதி யோரே ஆவர். தம்முடைய பரம்பரை நல்ல ஸ்தானத்தில் இருக்க வேண்டும் என விரும்புபவர்கள். இதற்காக எதனையும் செய்ய துணிவர்.

ஆரம்ப காலங்களில் மக்கள் ஆண், பெண் என்ற பாகுபாட்டில் உழைக்கும் வர்க்க மாக ஆண்களே கருதப்பட்டனர். ஆனால் இன்றைய பொருளாதாரத்தில் ஆணும் பெண் ணும் சேர்நது உழைத்தால் தான் குடும்பம் வாழமுடியும் என்ற நிலை இருப்பதால் தனிக் குடும்பமாக வாழும் மக்கள் முதி யோரை வீட்டில்விட்டு ஆணும் பெண்ணும் உழைக்கச் செல்கின்றனர். இப்படியான நிலையில் முதியோரை பாதுகாப்பது எப்படி? ஆனால் பாரம்பரிய கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் ஒருவர் இல்லாத இடத்தில் இன்னொருவர் அவரை பராமரித்தனர். அதாவது பிள்ளை வேலைக்குச் சென்றால் மருமகளும், மருமகள் வேலைக்குச் சென் றால் பிள்ளையுமாக குடும்ப வாழ்வு காணப் பட்டது. மேலும் கூட்டுக் குடும்ப வாழ்வில் முதியோர் தம்முடைய பேரப்பிள்ளை, பூட்டப் பிள்ளை போன்ற சின்னஞ் சிரார்க்கு நல்ல இலக்கிய கதைகள், நற்சிந்தனைகள் தெய்வ வழிபாடு என்பன பற்றிக் கூறி அவர்களை நல்வழிப்படுத்தி வாழ வைத்தனர். ஆனால் இன்று இந்நிலைமை அருகிச் சென்று காணப்படுகிறது.

சின்ன வயதில் இருந்தே நாம் "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்ற முதுமொழியை கற்று வருகிறோம். ஆனால் இன்று அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல் என்று கூறிவரு கின்றோம். ஏனெனில் இன்றைய உலகில் ஆடம்பர வாழ்க்கைக்கு எமது பெற்றோர் அதாவது முதியோர் தடையாக இருக்கி றார்கள். இதனால் அவர்களது வாழ்வு சஞ்சலத்திற்கு உள்ளாகின்றது. இப்படியான இழிவான வாழ்க்கையை முதியோர் இன்று வாழ்ந்து கொண்டிருப்பதைக்கண்டு அரசா னது பல முதியோர் இல்லங்களை அமைத்து முதியோரை பராமரித்து வருகி றது. இதனால் சில முதியோர் இன்று சந்தோஷமாக இருக்கின்றார்கள்.

"ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட" தாய் தந்தையரை தனிக்க விட்டு வாழ்வது எவ் வளவு கீழ்த்தரமான செயலாகும். இதனால் போலும் ஆண்டிற்கு ஒருமுறை தைப் பொங்கல் கொண்டாடுவது போல ஒக்டோபர் 1ம் திகதி முதியோர் தினத்தை கொண்டாடி அவர்களுக்கு மாலை சூட்டி, புகழாரம் சூட்டு கின்றனர். இது வெறும் கண்துடைப்பாகும். ஏனெனில் எமது வாழ்க்கைக்குத் தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான ஒளி உணவு என்பவற்றை நாள் தோறும் தன்னை உருக்கி எமக்குத் தருகிற வன் சூரியன். அவனுக்கு நாம் தைமாதம் 1ம் திகதி தைப்பொங்கல் கொண்டாடி நன்றி செலுத்துகின்றோம். அதே போல "முந்தி தவம் கிடந்து முன்னூறு நாள் சுமந்து அந்தி பகலாய் வந்தித்து எம்மை பெற்ற தாய்க்கும் எம்மைச் சான்றோன் ஆக்கிய தந்தைக்கும் நன்றி செலுத்துவதற்காக ஒக் டோபர் 1ம் திகதி முதியோர் தினம் கொண் டாடி அவர்களுக்கு புகழாரம் சூட்டுகின்றனர். இவ்வாறு ஒருநாள் மாலை சூட்டி கௌர விப்பதிலும் பார்க்க கூட்டுக்குடும்ப வாழ்வில் முதியோருக்கு எவ்வாறு உரிமை கொடுத்து பாராட்டினார்களோ அதேபோல நாமும் அவர் களை பல்வேறு இடங்களில் உரிமை கொடுத்து பாராட்ட வேண்டும். உதாரண மாக வைத்தியசாலை, போக்குவரத்து இடங் கள் போன்றவற்றில் அவர்களுக்கு முன்னு ரிமை கொடுத்தால் போதுமானது. ஆனால் இன்று "காவோலை விழ குருத்தோலை சிரிப்பது போல" எங்கு சென்றாலும் முதி யோரிக்கு நக்கலும் பகிடியுமே கூடிக் காணப் படுகிறது.

எனவே தான் பாரம்பரிய கூட்டுக் குடும்ப வாழ்வு முதியோர் வாழ்வை சிறப் பிக்கும் எனக் கூறுகின்றனர். ஏனெனில் அக்கால முதியோரின் வாழ்க்கையில் குடும் பத்தில் சம அந்தஸ்து காணப்பட்டது அவர் களது வாழ்க்கை சுதந்திர வாழ்க்கையாக காணப்பட்டது. அவர்களின் சொற்கள், செயற் பாடுகளை மதித்து அதற்கு கட்டுபட்டு வாழ்ந்தனர். பண்டைய காலத்தில் முதி யோரை பராமரிப்பது பெரிய சிரமமாக காணப்படவில்லை. அக்காலத்தில் குடும்பங் கள் ஒற்றுமையாகவும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை உடைய வர்களாகவும் சமூக ஒற்றுமை உள்ளவர் களாகவும் குடும்ப பற்று உடையவர்களாக "எள்ளையும் ஏழாக பங்கிட்டு உண்ணும்" பழக்கம் உடையவர்களாக காணப்பட்டமை யால் அக்கால முதியோர் வாழ்க்கை அதா வது பாரம்பரியக் கூட்டுக் குடும்ப வாழ்வு முதியோரின் வாழ்வைச் சிறப்பித்துக்கொண்டு இருந்தது. இப்படியான கூட்டுக்குடும்ப வாழ்வு இன்று காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது. எனவேதான் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்ந்து முதியோரை பராமரிப் பது ஒரு பெரும் முதிசமாக கருதாது நாமும் முதுமை அடைவோம் என்ற நம்பிக்கையில் பண்டைய காலம் போலும் வாழ்ந்து முதி யோரின் வாழ்வைச் சிறப்பிப்போம்.

# விவசாயத்தில் பூச்சிகளின் பாகுபாடும் பயிர்களில் அவை ஏற்படுத்தும் சேதமும்

பூச்சிகளின் வாழ்க்கை வட்டம் முட்டை யில் இருந்து ஆரம்பமாகின்றது. இவை பூரணமான அல்லது பூரணமற்ற உருமாற் றமடைந்து நிறையுடலிப் பருவத்தை எடுத்து மீண்டும் முட்டைகளை இட்டு வாழ்க்கை வட்டத்தை தொடர்கின்றன. பூரணமற்ற உரு மாற்றத்தின்போது முட்டை → அணங்கு → நிறையுடலி என்னும் படிகளை தத்திகளிலும் மூட்டைப் பூச்சிகளிலும் தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது. பூரணமான உருமாற்றம் அடைபவை முட்டை → குடம்பி → கூட்டுப் புழு → நிறைவுடலி ஆகிய பருவங்களை காண்பிக்கின்றன. இவற்றைத் தவிர சோடிக் கால்களின் எண்ணிக்கையைக் கொண்டும் வேறுபடுத்தலாம். மூன்று சோடிக் கால் களைக் கொண்டவை (பூச்சி வகுப்பு) அல்லது நான்கு சோடிக் கால்களைக் கொண்டவை (சிற்றுண்ணி) எனப் பாகுபடுத் தலாம். மூன்று சோடிக் கால்களைக்கொண்ட பூச்சி வகுப்பில் உள்ளவற்றை பின்வருமாறு பிரிக்கலாம்.

(1) திரிப்ஸ் குடும்பத்தில் (பனிப் பூச்சிக் குடும்பம்) உள்ளன. அராவி குத்தியுறிஞ் சும் வாயுறுப்பைக்கொண்ட பூரணமற்ற உருமாற்றம் அடைபவை. இவை நீண்ட மெலிந்த உடலமைப்புடன் மயிர் போன்ற இறக்கைகளை உடையன. பனிப்பூச்சி கள், கறுப்பு, சிவப்பு, பச்சை போன்ற நிறங்களில் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : வெண்காயத்தில் சேதம் ஏற்படுத்தும் திரிப்ஸ் தபாக்கி நெல்லில் சேதம் ஏற்படுத்தும் திரிப்ஸ் ஒனேற்சே

(2) மூட்டைப் பூச்சிக் குடும்பத்தில் (கெமிப்ரெறா) அடங்குபவை குத்தியுறிஞ்சும் வாயுறுப்புடன், நச்சுத் தன்மையான உமிழ்நீரைக் கொண்டதுடன் துர்நாற்றம் வீசும் தன்மை உடையன. பூரணமற்ற உருமாற்றம் உடையவையாக காணப்படும்.

உதாரணம் : நெல்லின் பாற் பருவத்தில் பெரும் சேதம் ஏற்படுத்தும் நெல் மூட்டைப் பூச்சி (லெப்ரோ கோரைசொ வெரிக்கோனிஸ்) நிகாரா விரிடுலா எனப்படும் ஐங்கோண மூட்டைப் பூச்சி

(3) தத்திக் குடும்பத்தில் (கெமிப்ரொறா) குத்தியுறிஞ்சும் வாயுறுப்பை உடைய தத்திகள், செதில் பூச்சிகள், வெண் மூட்டுப்பூச்சிகள், அழுக் கணவன் ஆகிய சிறிய பூச்சிகள் அடங்கும். இங்கு கன்னிப் பிறப்பும் நடைபெறுகின்றது.

உதாரணம் : நெல்லில் கபில நிற இலைத் தத்தி, மரவள்ளியில் செதில் பூச்சி, அன்னாசியில் வெண் மூட்டுப்பூச்சி, மிளகாய் குருமண் நோய் காவியில் ஒன்றாகிய வெண் ஈ அவரைக் குடும்பத் தாவரத்தில் — அழுக் கணவன் தாக்கம்

(4) வண்டு, நீள்மூஞ்சி வண்டுக் குடும்பத்தில் (கோலியொப்ரறா) கடித்து உண்ணும் வாயுறுப்பைக் கொண்ட பூரண உருமாற்றம் உடைய பூச்சிகள் காணப்படும். இவற்றின் முன் சோடி இறக்கைகள் தடித்த கவசமாகக் காணப்பட பின் சோடி இறக்கைகள் பறக்க உதவும்.

உதாரணம் : வாழையில் வேர், தண்டுகளைத் துளைக்கும் நீள்மூஞ்சி வண்டுகள், பூசணிக் குடும்பப் பயிரில் எபிலக்கணா, ஔலகோ போரா வண்டு

(5) கறையான் குடும்பம் (ரெமிரிடே) கடித்து உண்ணும் வாயுறுப்புடன் பூரண உருமாற்றம் உடைய சமுதாயமாக வாழும் தன்மை உடையவை. நீர்ப் பற்றாக் குறை ஏற்படும் வேளைகளில் மரங்களையும் தாக்கும். மண்ணிலும் உக்கிய மரப் பட்டைகளிலும் காணப்படும்.

(6) எறும்பு, தேனிக் குடும்பத்தில் (கைமொனொப்ரரா) உறிஞ்சும் அல்லது கடிக்கும் வாயுறுப்பைக் கொண்ட சமுதாயமாக வாழும் பூச்சிகள் காணப்படும். இவை பூரண உருமாற்றம் கொண்டவை. இறக்கைகள் கண்ணாடி போன்றன. நெஞ்சுக்கும் வயிற்றுக்கும் இடையில் தெளிவான சுருக்கம் உண்டு. சூலிடைப்படுத்தி காணப்படும்.

(7) ஈக்கள், மிட்ஜ் குடும்பம் பூரண உருமாற்றம் உடையவை. ஈக்கள் ஒத்தியுறுஞ்சும் வாயுறுப்பையும் மிட்ஜ்கள் குத்தியுறுஞ்சும் வாயுறுப்பையும கொண்டவை. 2 சோடி இறக்கைகள் காணப்பட்ட போதிலும் ஒரு சோடி பறப்பதற்கும் மற்றயவை சமநிலைப்படுத்தியாகவும் தொழிற்படும்.

உதாரணம்:— நெல்லில் வெங்காயத்தாள் போன்ற குருத்தை ஏற்படுத்தும் கொப்புள ஈ (கோல் மிட்ஜ்) பூசணிக் குடும்பப் பயிரில் பழ ஈயின் தாக்கம் (டாக்கஸ் குக் கபிற்றா)

(8) வண்ணாத்திப் பூச்சி / அந்துக் குடும்பத்தில் (லெபிடொப்ரொறா) பூரண உருமாற்றம் கொண்ட குடம்பிகள் வெட்டும் வாயுறுப்பையும் நிறையுடலிகள் உறிஞ்சும் வாயுறுப்பையும் கொண்டவை. நிறையுடலியின் உடலிலும், இறக்கையிலும் நிறமுள்ள செதில் போன்ற அமைப்பு உண்டு. வண்ணாத்திப் பூச்சிகள் பகலில் பறப்பதுடன் ஓய்வு எடுக்கும்போது இறக்கைகள் நிலைக்குத்தாகவும் சுருண்ட நீண்ட வாயுறுப்பையும் உடையன. சித்திரசு பயிரில் தாக்கத்தை ஏற்படுத்தும் வண்ணாத்திப் பூச்சிகளில் (பப்பிலியோ பொலைற்றஸ்) இவற்றைக் காணலாம். அந்துகள் இரவில் பறக்கும் கிடையான இறக்கைகளை கொண்ட குறுகிய வாயுறுப்பு உடையவை.

நெல் மஞ்சள் சந்துக் குத்தி (ரைப்போசா இன் சேற்றுலஸ்) அரிசி அந்து, கோவா டயமன் அந்து போன்றவற்றில் காணலாம்.

(9) சிற்றுண்ணி வகுப்பு அல்லது அக்கரிடே குடும்பத்தில் குத்தியுறிஞ்சும் வாயுறுப்பு உடையன இளம் பருவத்தில் மூன்று சோடிக் கால்கள் இருப்பினும் முதிரும் போது நான்கு சோடிக் கால்கள் காணப்படும். தலை, நெஞ்சு, வயிறு எனப் பிரிக்க முடியாத வகையில் உடலமைப்பைக் கொண்டவை. பெருவாரியாக சிற்றுண்ணிகள் அவரைப் பயிர்களையும் மிளகாய், வெண்டி, கத்தரி போன்றனவற்றையும் தாக்குவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பயிர்களில் பூச்சி பீடைகள் சேதங்கள் :

பூச்சிகள் தமது தேவைக்கு ஏற்பவும் வாயுறுப்புக்கு ஏற்பவும் பயிர்களில் இருந்து போசனையைப் பெறுகின்றன. சில தமது வாழ்க்கை வட்டத்தின் பகுதிகளை தாவரங்களில் கழிப்பதுடன் பெரும் சேதங்களை முதிர்ந்த பூச்சிகளைவிட குடம்பிகளே உண்டு பண்ணும். பூச்சிகள் தமது போசனைக்காக தாவரத்தின் பல்வேறு பகுதிகளை உண்கின்றன.

குத்தி உறிஞ்சும் வாய் உறுப்புகளை உடைய பூச்சிகள் தாவரங்களின் இழையங்களை குத்தி அதில் இருந்து சாறுகளைப் பெறுகின்றன. இதனால் காயங்கள் ஏற்பட தாவர வளர்ச்சி பாதிக்கப்படும். சில குத்தி உறிஞ்சும்போது அவற்றின் வாய் உறுப்பிலிருந்து வெளிப்படும். நச்சுத் தன்மையால் வளர்ச்சியில் மாற்றத்தையும் வேறு பாதிப்புக்களையும் ஏற்படுத்தும். இக் காயங்களின் ஊடாக வேறு நோய்களைத் தொற்ற வைக்கக்கூடிய வைரசு, பங்கசுகள் உட்செல்வதால் இரண்டாவது தொற்றலும் ஏற்படலாம்.

கடித்து உண்ணும் வகைகள் பொதுவாக மென்மையான இலைகளைக் கடித்து உண்கின்றன. இதனால் இலைத் தொகுதியின் அளவு குறைக்கப்பட்டு விளைவு பாதிக்கப்படலாம். சில சந்தர்ப்பங்களில் குடம்பிகள் கூட இலைகளை அரித்து உண்பதால் நரம்புகள் மட்டும் பன்னாடை போன்று காணப்படும். சிலவகை குடம்பிகள் பச்சையத்தை மட்டும் உண்பதால் மெல்லிய தாள் (ரிசூ) போன்றும் இலைத் தொகுதி காணப்படும். கோவாப் பயிரில் இதை இலகுவில் கண்டு கொள்ளலாம்.

இலைகளைத் துளைத்துண்ணும் வகைகள் சுரங்கம் அறுப்பான்கள் எனப்படும தென்னையின் (புரோமிகோத்திக்கா குமிங்கி) இலைகளில் சுரங்கம் அமைப்பவையும் சித்திரசுப் பயிர்களில் இலையின் மேற்றோலின் கீழ் சுரங்கம் அமைப்பவையும் இலைத் தொகுதியில் பெரும் தேசத்தை உண்டு பண்ணுகின்றன. அண்மைக் காலத்தில் தென்னையில் சுரங்கம் அறுக்கும் வண்டுகளின் சேதத்தை கட்டுப்படுத்த உயிரியல் முறைக் கட்டுப்பாட்டு முறைக்காக வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒட்டுண்ணிகளை (டிமோக்கியா யவானிக்கா) அறிமுகம் செய்தனர். எனவே இதிலிருந்து இலைச் சுரங்கம் அறுப்பவைகள் எவ்வளவு பாரிய சேதத்தை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. தளிர், தண்டுப் பகுதிகளை துளைத்து சேதம் செய்கின்றன. சில பூச்சிகளின் குடம்பிகள் நெல், சோளம், இறுங்கு போன்றவற்றின் நடுக் குருத்தை சேதம் செய்வதால் பயிர் வளர்ச்சி தடைப்பட்டு விளைவு பாதிக்கப்படும். கத்தரி, போஞ்சி, வெண்டி போன்ற பயிர்களின் காய்களை துளைத்து சேதம் செய்வதால் விளைவு பாதிக்கப்படுவதுடன் சந்தைமானமும் சேமிப்புத் திறனும் குறைக்கப்படும். தண்டுகளைத் துளைப்பதால் கொப்புகள் வாடுதல் போன்றன ஏற்படும். பொதுவாக கத்தரி போன்ற பயிர்களில் இலகுவில் காணக்கூடியதாக உள்ளது.

கறையான் போன்றன மண்ணின் கீழுள்ள தாவரப் பகுதிகளை உண்கின்றன. இதனால் வேர்ப் பகுதிகள் பாதிக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் நில மட்டத்துடன் தாவரம் முறியவும் கூடும். தாக்கப்பட்ட பகுதியின் ஊடாக பங்கசு, வைரசுகள் உட் செல்வதால் இரண்டாம் தொற்று ஏற்பட்டு தாவரம் நோயினால் பாதிக்கப்படும். சேமிக்கப்பட்ட தாவர விளைபொருட்களாகிய பருப்பு வகைகள், தானியங்கள், கிழங்குகள் முதலிய வற்றை அரித்து உண்ணும் வண்டுகள் அதிக அளவில் உள்ளன இவற்றின் சேதத்தால் சேமிப்புப்பொருளின் தரம் குறைவதுடன் சேமிப்புக்காலம் குறைக்கப்பட்டு நிறைக் குறைவும் ஏற்படும். இதனால் நுகர்வோருக்கு வெறுப்புத்தன்மையை ஏற்படுத்துவதுடன் பொருளாதார வீழ்ச்சியும் ஏற்படும்.


பொதுவாக பூச்சிகள் பெருக்கம் அடைவது மிகவும் வேகமாக காணப்படுவதால் அவை பயிர்களில் சேதம் ஏற்படுத்தமுன்பு எடுக்கக் கூடிய தடைமுறைகளை கையாளல் நன்று. தாக்கம் ஏற்பட்டு விட்டால் உடனடியாகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பூச்சிகளை வினைத்திறனாக கட்டுப்படுத்த அவற்றின் சேதங்களையும் அமைப்புக்களையும், வாழ்க்கை வட்டத்தையும் அறிந்து ஒருங்கு இணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்தல் நன்மை தரும்.

செ. சுரேஸ்
தரம் 11B-1999

இக் கட்டுரைக்கான தகவல்கள் விவசாய விஞ்ஞான ஆசிரியர் இடமிருந்து பெறப்பட்டன ஆசிரியருக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2001 இல் மெய்வல்லுநர் போட்டியின் போது பிரதம விருந்தினர் கல்வித் திணைக்கள பொறியியலாளர் திரு. ஜீ. சிவபாலன் அவர்கள்.



2001 இல் மெய்வல்லுநர் போட்டியின் போது சிறப்பு விருந்தினர் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரு. அன்ரன் ஜோன்சன் அவர்கள்.



ஆசிரியர் தினத்தின்போது ஆசிரியர்கள் உறவுகள் நாடகத்தில் தோன்றும் காட்சி - 1998



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் தொண்டர் சேவையில் ஈடுபட்டு இருக்கும் மாணவர் [illegible].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் நாட்டின் விண்மீன்கள்

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பெண்களைப் பெருமைப்படுத்திக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இயம்பியுள்ளார். "பெண் பிறப்பே பெருமை மிக்க பிறப்பாகும்" இன்று சகல துறைகளிலும் பெண்களே விண்மீன்களாகத் திகழ்கின்றார்கள். உலகளாவிய நாடுகளிலும் பெண்களின் சேவையானது அளப்பரியதாக் காணப்படுகின்றது.

பெண்களிடம் அன்பு, கருணை, பொறுமை போன்ற தாய்மைக்குரிய பண்புகள் குடிகொள்கின்றன. இதன்மூலம் பெண்ணானவள் சாத்வீக குணமுடையவளாகத் திகழ்கிறாள். ஒரு தாயானவள் குழந்தையைப் பத்து மாதம் சுமந்து பிரசவிக்கிறாள் என்றாள் அவள் பொறுமையுடைய வளாகக் காணப்படுகின்றாள். சாத்வீகமுடைய பெண்களே சகல துறைகளிலும் மிளிர்கிறார்கள் என்றால் மிகையாகாது.

"தற்காத்து தற்கொண்டாற் பேணி தகைச்
சான்றுச் சொற்காத்து சோர்விலாள் பெண்"

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற் கிணங்க ஒரு பெண்ணானவள் தன்னையும் காத்து, தன்னை மணந்து கொண்டவனையும் காத்து, மனையறங்களிலே தளர்ச்சியற்றவளாகக் காணப்படுகின்றாள். இவ்வாறான பெண்களே கற்புக்கரசியாக திகழ்கின்றனர்.

சீதை, கண்ணகி, சாவித்திரி போன்றோரே சங்க காலத்தில் கற்புக்கரசியாகத் திகழ்ந்தவர்கள். சீதையானவள் இராவணனது கைவசம் இருக்கும்போது கற்புத்தவறாதவாறு நடக்கின்றாள். கண்ணகியானவள் தனது கணவன் இறந்த செய்தியைக் கேட்டு வெஞ்சினங் கொண்டு மதுரை மாநகரையே தீக்கிரையாக்கினாள். சாவித்திரி தனது கணவனது உயிரைக் காலன் கவர்ந்து சென்றபோது காலனுடன் வாதிட்டு உயிரை மீட்டவள் ஆவாள். திருவள்ளுவருடைய மனைவியான வாசுகியும் சிறந்த கற்புக்கரசியாக விளங்கினாள். கற்புக்கரசிகள் வாழ்வதனாலேயே நாடானது செழிப்புற்று வளர்ச்சியடைகிறது.

வீரத்தாயின் வரலாற்றைப் புறநானூறு என்னும் நூலிலிருந்து பெரிதுங் காணலாம். போரிலே தனது கணவன் இறந்தபோதும் சிறியவனான ஒரேயொரு மகனைக்கூட இன் முகத்துடன் வீரத் தாயானவள் போருக்கு அனுப்புகிறாள். அங்கே புற முதுகு காட்டி ஓடக்கூடாது எதிரியுடன் நேருக்கு நேர்நின்று போர்புரிய வேண்டுமென்று கூறி வழியனுப்புகிறாள் அவ்வேளையில் மகனும் கணவனும் நெஞ்சிலே காயம்பட்டு இறக்கும்போது வீர இறும்பூது எய்துகிறாள்.

தமிழர் வாழ்விலே சங்க காலத்தில் பெண்கள் சமவுரிமையுடன் வாழ்ந்து வந்தனர். இதற்குச் சங்க காலத்தில் வாழ்ந்த பெண் புலவர்கள் சான்று பகர்வர். காக்கை பாடினியார், ஆண்டாள் அம்மையார், ஒளையார் போன்றோரே சங்க காலத்துப் பெண்கள் ஆவார். நீதி நெறிகளை வாழவைத்தவர் ஒளவையர்; சைவ உலகிற்குப் புத்துயிர் கொடுத்தவர். மங்கையர்க்கரசியார்; வைணவ உலகிற்கு வாழ்வு அளித்தவர் ஆண்டாள் அம்மையார்; இவ்வாறு சங்க காலம் தொடக்கம் பெண்கள் விண்மீன்களாக மிளிர்கின்றனர்.

பாரதி கவிதை வடிவில் பெண்ணை வடித்து, புதுமைப் பெண்ணைக் கற்பனை கண்டார். இருபத்தோராம் நூற்றாண்டைச் சற்று நோக்குவோமானால் பாரதியார் கண்ட கனவானது இன்றைய காலத்தில் நனவாகி விட்டது. பாரதி கண்ட புதுமைப் பெண்கள் பலர் உருவாகிவிட்டனர்; சிலர் உருவாகிக் கொண்டு இருக்கின்றனர் என்றால் ஐயமில்லை.

ஆணுக்குப் பெண் தாழ்ந்தவள் என்ற நிலை சமுதாயத்தில் பரவலாக முன்னைய காலத்தில் காணப்பட்டது. ஆணுக்கு பெண் சரிநிகராக இடைக் காலத்தில் திகழ்ந்தாள். ஆனால் இன்றைய கால கட்டத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைவிட பெண்ணே சிறந்து மிளிர்கிறாள். இன்று பெண்கள் இல்லாத துறையே இல்லை எனக் கூறலாம். மண்ணிலிருந்து பெண்ணாணவள் விண்ணுக்கும் பிரவேசித்து விட்டாள்.

இவ்வாறு சகல வழிகளிலும் முன்னேறும் பெண்களே எதிர்கால வாழ்விற்கு ஒளியூட்டிகள். வாழ்க்கை என்னும் பரம்பரத்தை வளமாக நடத்திச் செல்ல வல்லவர்கள். இத்தகைய பெண்களே இன்று நாட்டின் விண்மீன்களாகத் திகழ்கின்றார்கள் என்றால் மிகையாகாது.

*கி. விக்கினேஸ்வரி*
தரம் 9A

2001மகளிர் தினக் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றது

# Father of Scouting

Baden Powell, Lord (1857-1941), founded the Boy Scout movement. His experiences as a soldier in the British Army convinced him that British boys needed more physical training and experience in outdoor life. He started the Boy Scouts in England in 1907. With his sister, Agnes Baden Powell, he organised the Girl Guides in England two years later.

Baden Powell wrote a number of books on Scouting and on military campaigns. Robert Stephenson Smyth Baden Powell was born in London, and attended Charterhouse School. He joined the British Army in 1876, and served in India, Afghanistan, and South Africa.

During the Second Anglo-Boer War (1899-1902), his defence of Mafikeng, in spite of famine and sickness in his ranks, earned Baden Powell promotion to the rank of major general.

Scouting is a world wide movement. Scouts belong to many different cultures, religions and races. Every four years Scouts from many nations meet in a "World Jamboree", to exchange ideas and experiences.

The Original Promise and Law were laid down by Baden Powell. The Scout promise is: On my honour I promise that I will do my best:

1. To do my duty to God and the King for God and my Country;
2. To help other people at all times.
3. To obey the Scout Law.

The Original Law is:

1. A Scout's honour is to be trusted.
2. A Scout is loyal.
3. A Scout's duty is to be useful and to help others.
4. A Scout is a friend to all and a brother to every other Scout.
5. A Scout is courteous.
6. A Scout is a friend to animals.
7. A Scout obeys orders from his parents, Patrol Leader, or Scoutmaster without questions.
8. A Scout smiles and whistles under all difficulties.
9. A Scout is thrift.
10. A Scout is clean in thought, word and deed.


***B. Ajanthan***
Grade 9A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்த சிரேஷ்ட மாணவ தலைவர்கள்

## 1998



செல்வன் க. விசுவநாதன்



செல்வி ச. சோவியா

## 1999



செல்வன் சி. சுபாகரன்



செல்வி சி. தயாமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் நினைவில் சில நிமிடங்கள்

ஒவ்வொரு வரிகளிலும் ஒவ்வொரு நினைவிருக்கும்
எந்தவொரு எழுத்தினிலும் பழையன கலந்திருக்கும்
தன்னிகரிலா தமிழதனில் கவி புனைய ஆசைகள்
இன்னிசை நம் நாட்டினிலே வெடி குண்டின் ஓசைகள்

நம் நாட்டு இயற்கையதை அளவோடு கூறுகின்றேன்
உள் மனதில் வந்தவற்றை பேனாவால் வரைகின்றேன்
ஏன் இந்த ஏக்கமென யாருமே வினவிவிட
ஏர் பிடித்த வீரமென நானே கூறுகின்றேன்.

கற்பனை சுரந்தது கவியொன்று பிறந்தது
அற்புதக் கோலம் கண்டு எத்தனை
இனிமைகள் இங்கில்லைத் தனிமைகள்
அர்த்தங்கள் ஆயிரம் உண்டு ரசித்தே பாருங்கள்

மழை முகிலும் இயற்கை வானவில்லும் இயற்கை
அலை கடலும் இயற்கை மீன்துள்ளிப் பாய்வதுவும் இயற்கை
காட்டு மரமும் இயற்கை செடி கொடியும் இயற்கை
மறைவான குகைகள் மலைசாரல் தொடர்கள் எல்லாமே இயற்கை

தென்னை இளங்கீற்றும் தென்றல் எனும் காற்றும்
கொள்ளை அழகுபார்த்து கோடி முத்தம் தருமே
வண்ண முகில்கள் திரண்டு அது வகையாக இருண்டு
அமுத மழை அள்ளித் தருமே அழகாக இங்கு.

மருத நில வெளிகள் பசுமையின் ரகசியங்கள்
செங்கதிரவன் செங்கதிரால் செங்கதிரின் இலட்சணங்கள்
செங்கதிரை அடுக்கி வைத்தால் மலைத் தொடர்கள்போல் வருமே
செழுமை இந்த நாட்டிலிது நெல்லென்பது புரிகிறதா?

கற்பதருப் பனைகளும் கற்பான பெண்களும்
பயிர் செழித்து வந்ததுவும் பார் நன்மை பெற்றதுவும்
நீர் பொழியும் நம் நாட்டில் நிலம் எழுதும் கவி வரிகள்
பறைசாற்று கின்றதே கடந்த கால இயலமைதியினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானில் இருந்து நிலா தரையில்வரவே உலா
கண் சிமிட்டிச் சிரிக்கிறதே நம் நாட்டை ரசிப்பதற்கே
மலராக வாழ்ந்தால் மனதிலே மென்மை
மலர்களுக்கும் வாழ்க்கை உண்டு மென்மையாக மட்டும்

மலர் போன்ற இதயமதை அரத்தாலே அடித்தால்
மரமாகவும் மாறிவிட்டால் அது மனிதகுல மல்ல
மலராக வாழ்ந்தால் மனதினிலே அமைதி
மலராக வாழ்ந்தால் நாட்டினிலே செழுமை

இயற்கை அன்னையிவள் காதுகள் பழுதாம்
செயற்கைக் குண்டைப்போடாது நிறுத்துக
கண்கெட்ட கயவரால் கண்ணதுவும் சிறுபழுது
சினிமாவை நிறுத்திவிட்டால் மாணவரும் இயல்பாவார்.

*செ. ஜெயமதி*
தரம் 9C

# விஞ்ஞான உலகம்

இன்றைய உலகம் விஞ்ஞான வெளிச் சத்திலே விடிந்து கொண்டிருக்கின்றது. பொறி நுட்பவியல் உணர்த்தும் தெறி அழுத்தி தொழில் நடத்தும் உலகம். காலை வேளை காளையூட்டி களனி உழுத காலம் கடந்து போய்க் கொண்டிருக்கின்றது. நெல் வயலும் இயந்திரம் கண்ட உலகம் இது.

மனிதன் தன் வெற்றுக் கைகளைக் கொண்டு வேலைகள் சிலவற்றைச் செய்த ஆதி நிலைக்கும் இன்றைய பொறிநுட்ப விஞ்ஞான நிலைக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம். உடல் வலுவையே மட்டும் நம்பியிருந்த மனித சமுதாயம் தமது ஆராய்ச்சியின் பேறாக இயந்திர வலுவைக் கண்டுபிடித்தது. இதனால் பாரிய வேலை களை இலகுவாகவும் விரைவாகவும் செய்ய முடிகிறது.

பாய் விரித்துக் கப்பல் ஓட்டியவர்கள், கட்டுமரத்திலேயே கடலில் தொழில் செய்த வர்கள் விசைப் படகுகளில் விரைகிறார்கள். காற்றாடி ஆலை அமைத்து தொழில் செய்த வர்கள் பாரிய இயந்திரங்களை உபயோகிக்கி றார்கள். காலங்கடந்த காலத்தே கானகத்தில் புதை உண்ட பாரியமரஞ் செடிகளில் எச்சமிச் சங்கள் இரசாயன மாறுதல் எய்தி உரு வான திரவங்கள்தான் பெற்றோல் மண் ணெண்ணெய் இவற்றின் பயன்பாட்டால் இன்று போக்குவரத்துத்துறை அயராத வளர்ச்சி கண்டுள்ளது.

நீரோட்ட இயக்கம் மின்சக்தியாக மாறி இன்று எத்தனையோ சாதனைகளுக்கு அடி கோலி இருப்பதை நாம் காணலாம். இந்த மின்சக்தி மூலம் வீடு வெளிச்சம் பெறுகிறது. இது மட்டுமல்ல போக்குவரத்து சாதனங்கள் கூட இயங்குவதை நாம் காண்கின்றோம். மருத்துவத் துறையில் புதிய கண்டுபிடிப்புக் கள் சத்திர சிகிச்சையின் நுணுக்கங்கள் போன்றவற்றின் துரித முன்னேற்றத்துக்கு உறுதுணையாக அமைவது விஞ்ஞானமே. உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிவகுத்து நாட் டின் முன்னேற்றத்துக்கு ஊன்றுகோலாகவும் அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கத்திற்கு மட்டுமல்ல அழிவுக்கும் இந்த விஞ்ஞான வளர்ச்சி பயன்படுவதை பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. அஞ்சத்தக்க அணுவாயுதங்கள் உயிர்களை யும் மக்களது மனத்தையும் பறித்தெடுக்கின் றது. இந்த அணுவாயுதம் போரினால் விளையும் படுநாச விஷ வாயுக்கள் காற்றா லும் நீராலும் மண்ணாலும் வித்தாலும் உல கத்தின் மூலை முடுக்குகளுக்கும் இனிப் பிறக்கப் போகும் தலைமுறைகளுக்கும் எட்டும். எனவே அழிவுக்குப் பயன்படும் விஞ் ஞானம் விரும்பத்தக்கதல்ல. விஞ்ஞான வளர்ச்சி மனிதனுக்கு முன் னேற்றத்தினை தந்தபோதும்கூட அணுவாயுத உற்பத்தி மனித சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாக அமை கின்றது.

சே. ஜென்சிகா
தரம் 9 B

# கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம்

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று',

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க ஈழத்தின் சென்னியாம் யாழ்ப்பாணத்தில் சோமசுந்தரப் புலவர் வாழ்ந்த நவாலியில் 1892ம் ஆண்டு அவ தரித்தார் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம். யாழ்ப்பாணத்திலேயே முதன்முதல் இலண்டன் மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தி எய்தி, தான் கல்வி பயின்ற பாடசாலையான மானிப் பாய் இந்துக் கல்லூரியில் 19வது அகவை யிலேயே ஆசிரியராக நியமனம் பெற்றார். Inter Arts பரீட்சை, யாழ்ப்பாணத்திலேயே இலண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் முதலாவது தமிழராக சித்தியெய்தி தான் பிறந்த மண்ணுக்கு பெருமை தேடிக்கொடுத் தார். கல்வி டிப்ளோமாவிலும் தேர்ச்சி பெற்ற இவர் யாழ்/இந்துக் கல்லூரியில் உதவி யாசிரியராக இருந்து பின் மீன்பாடும் மட்டு நகரில் பிறந்த பேராசான், பெருந்துறவி விபு லானந்தருக்கு அடுத்ததாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்தார். முப்பது வருடங்கள் அதிபராக இருந்து சமு தாயத்தில் விழிப்புணர்வைத் தோற்றுவித்த செம்மல் வீரசிங்கம்.

'Life is no resting but a moving
Let thy Life be deed on deed.'

என்ற கிரேக்க தத்துவவியலாளியின் கொள்கையை தலைமேற்கொண்டு மக்க ளின் சமூக, பொருளாதார துறையை முன னேற்றுவதிலேயே அரும்பாடுபட்டு உழைத் தார். (வை. எம். சூசியே சன்ஸ்) அதாவது இளைஞர் கழகங்களை உருவாக்கி, மனித விழுமியங்களையம், மனித முயற்சியையும் இளைஞர் மூலமாக விரிவுபடுத்த தலைப் பட்டார். நாட்டின் கைத்தொழிலை ஊக்கு விக்க கைப்பணிப் பொருட்காட்சிகளை பாட சாலையிலும் வெளியிலும் காட்சிக்கு வைத்து வழிப்படுத்தினார். இந்த காலத்தில் நல் லொழுக்க இயக்கங்களில் கூடிய ஈடுபாடு காட்டி அயராத உழைப்பால் யாழ்ப்பாணத் தில் தவறனைகளே இல்லாமல் செய்தார்.

1939ல் யாழ் மாவட்ட கூட்டுறவு வங்கி அமைக்க காரணமாக இருந்த இவர் 1933ல் தனது வாழ்க்கைத் துணைவி நல்லம்மாவை இழந்து தனி மனிதனாக இருந்து மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என தன்னை அர்ப்பணித்தார். 1937ல் வடபகுதி ஐக்கிய மேற் பார்வைச் சபையை உருவாக்கி, இறக்கும் வரை 26 வருடங்கள் தலைவராக தெரிவு செய்யப் பட்டு சேவை செய்தார். 1945ல் முதன் முதல் ஐக்கிய தீபத்தை வெளியிட்டார். கூட்டுறவுக் கல்வி விரிவாக்கத்துக்கென கோப்பிரேற்றர் என ஆங்கிலத்தில் கூறப் படும் "கூட்டுறவாளர்" என்ற நூலை வெளி யிட்டு தியாகங்கள் செய்து கூட்டுறவை வளர்க்க கூட்டுறவாளர் வரவேண்டும் என்ற சிந்தனையை தூண்டினார். 1950ம் ஆண்டு கூட்டுறவு தத்துவங்களும் செயற்பாடுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவ கோட்பாடுகளின் முக்கியத் துவம் தலைமைத்துவ பொறுப்பாளர், பொறுப்பை ஏற்கும்போது வருமானம், பதவி, பொழுதுபோக்கு, அந்தஸ்து, பிறர் மீது ஆதிக்கம் செலுத்துதல் போன்றவற்றுக்கு முதன்மை கொடுக்காது மக்களின் நன்மைக் காக சாதனை படைக்க வேண்டும் என்று எழுத்து வடிவில் பிரசாரம் செய்தார். 1953ல் பயிற்சிக்காக கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பித்து சிறந்த பயிற்சி பெறச் செய்தார். 1947ல் வட்டுக்கோட்டை பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோற்றாலும் விடா முயற்சியுடன் மக்களுக்காக இவர் செய்த சேவை 1952ல் போட்டியிட்டு வெல்ல வைத்தது. தென் இலங்கை மக்களாலும் மதிக்கப்பட்ட இவர் வகுப்புவாதமின்றி தேசிய ரீதியில் செயல்பட்டார்.

கூட்டுறவுக்காகவும் பாமர மக்களுக்காகவும், கல்விக்காகவும் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தார். இவருடைய தேசப்பற்று ஒரு வகையில் மட்டுமல்ல, ஒரு வகுப்பினருக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கு மட்டுமல்ல நாடளாவிய ரீதியில் பரந்து காணப்பட்டது. உண்மையான சனநாயகத்துக்கு இனத்துவேசம் முட்டுக்கட்டை என்பதை உணர்ந்து Co-operator Par Excellence என்பதற்கிணங்க சிறந்த கூட்டுறவாளராகத் திகழ்ந்தார். 1957ல் இலங்கை கூட்டுறவு சங்க சம்மேளனத்தின் தலைவராக இருந்து இலங்கைத் தமிழருக்கு பெருமை தேடிக் கொடுத்தார். good Pragmatist நல்ல செயல் வீரனாக இருந்து சேவை செய்ததினால்தான் இவருக்கு பிரித்தானிய அரசாங்கம் கௌரவ பட்டத்தைக் கொடுத்து பெருமைப்படுத்தினார்கள். இவருடைய சேவையை மெச்சி யாழ் மக்கள் யாழ் முத்த வெளிக்கு பக்கத்தில் வீரசிங்கம் மண்டபத்தைக் கட்டினர். தொழில்நுட்பக்கல்வியின் அவசியம், இரண்டாவது மொழி ஆங்கிலம், தாய்மொழிக் கல்வி என்பவற்றையும் கூட்டுறவு வாழ்க்கையுடன் இணைத்து உலகுக்கு அன்பளித்த உத்தமன் வீர சிங்கம் 05.12.64ல் இறைபதம் அடைந்தாலும், கூட்டுறவுத் தந்தையாக மக்கள் மனதில் பதிந்துள்ளார் என்பது வெள்ளிடை மலை.

'கூட்டுறவே நாட்டுயர்வென்ற குறிக்கோள் தாங்கி
குவலயமெங்கும் ஆயிரமாயிரம் பணிகளாற்றி
நாட்டுக்குழைத்தே நாவன்மைச் சிறப்பால்
நாட்டு அரசியல் வாதிகளை ஆளுமை செய்த
சிங்கமே
உமை வாழ்த்தி விடை பெறுகின்றேன்.'

நன்றி

*யோ. தனுஜன்*
தரம் 9 A

மாவட்ட கூட்டறவு போட்டியில்
முதலிடம் பெற்ற பேச்சு-1998

# பூந்தோட்டம்

சின்னஞ் சிறிய பூந்தோட்டம்
சிறிய நல்ல பூந்தோட்டம்
பென்னம் பெரிய பூக்களால்
பெரிதும் எம்மை மயக்குமாம்

வண்ண வண்ணப் பூக்களை – நீ
வகை வகையாய் அள்ளித்தந்து – எம்
கன்னங்கரிய விழியினை
கருத்தில் காண வைப்பாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நிறங்களில் இருந்தாலும்
எம் கண்ணுக்கழகு தந்திடுமே
சொன்ன செயலை கேட்டிடுமே
செய்யமனம் வந்திடுமே

உண்ண உணவு தருவது போல்
என் மனதில் உன்னழகை
கன்னங்கரிய விழியினால்
கண்டு மகிழ வைத்தாயே!

*வி. ஞானசிங்கம்*
தரம் 9 A

# கடமையும் கட்டுப்பாடும்

கடமையைச் செய். பலனை எதிர் பாராதே என்பது நாம் அறிந்தவாக்கு. நாம் ஒவ்வொருவரும் நமது கடமையைச் செய்ய வேண்டும். கடமை சரிவர இருந்தால் பலன் தானாகவே வந்து சேரும். எமது சமுதாய அமைப்புமுறை ஒருவருடைய கடமையோடு முடிவதில்லை. மற்றவருடைய கடமையும் சேரும்போது தான் முழுமை அடைகிறது. ஒருவன் தனது கடமையைச் செய்வதில் அலட்சியமும் தாமதமும் செய்வதால் அது அவனுக்கு மட்டுமல்ல அவனைச் சார்ந்த சமூகத்துக்கும் துன்பத்தைத் தரும்.

மனிதன் தனது கடமைகளை உணர்ந்து ஒழுகும் போதுதான் வாழ்வின் பற்பல கோணங்களைக் காணுகின்றான் என மகாத்மா காந்தி கூறியுள்ளார். எமது கடமை களைச் சரிவரச் செய்யும் போது பல விதமான அனுபங்களையும் உட்பொருள் களையும் அறியமுடிகிறது. ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளை உதாசீனம் செய் தால் நாடு கூட அல்லற்பட நேரிடும். தீய ஒழுக்கங்களுடன் ஒத்துழையாமல் நமக்குரிய நல்ல கடமைகளைச் செய்ய வேண்டும்.

இவற்றைச் செய்யும்போது கட்டுப்பாடு அவசியம். வேலி இல்லாத பயிர் விலங்கு களால் அழிக்கப்பட்டு வீணாகிறது. அது போல கட்டுப்பாடு இல்லாத கடமை கொண்ட வாழ்வு பாழாகிவிடும். கட்டுப்பாடு என்பது சந்தையிலே வாங்கக்கூடிய பொரு ளல்ல. நாமே நமது உள்ளத்திலே விதைத்து பயிர் செய்து அறுவடை செய்கின்ற அரிய பொருளாகும்.

இளமை முதற்கொண்டு கட்டுப்பாட்டு டன் எமது கடமைகளை செய்து வர வேண்டும். இவ்வாறு செய்தால் எமக்கும் எம்மைச் சார்ந்தவர்களுக்கும் எமது நாட்டுக் கும் பயனள்ளவர்களாக வாழமுடியும். இத் தகையோரின் வாழ்வு இம்மைக்கும் மறு மைக்கும் நீடிக்கும்.

மாணவர்களாகிய நாங்கள் எமது பாடங்களை கருத்தோடு கற்று தாய், தந்தை, குரு, பெரியோர் சொற்கேட்டு நடத்தல் வேண்டும். பாடசாலையில் மட்டுமல்ல சமு தாயத்திலும் எமது கடமைகளையும் பொறுப் பையும் உணர்ந்து பிரதிபலன் கருதாது கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். இவ் வாறு நாம் ஒவ்வொருவரும் நமது கடமை யைச் சரிவரச் செய்தால் நாட்டிலே புரட்சி இருக்காது. பூசல் இருக்காது. பசி இருக் காது. பிணி இருக்காது. கடமை என்பது தெய்வீகத்தின் கட்டளை என உணர்ந்து நாம் செயற்பட வேண்டும்.

*இ. சிந்துஜா*
தரம் 9 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சை புகினும் கற்கை நன்றே

"பிச்சை புகினும் கற்கை நன்று" என்பது ஒரு முதுமை மொழியாகும். முதுமை மொழியில் அடங்கிய பொருளின் தன்மையை நோக்கின் கல்வியே எல்லாச் செல்வங்களிலும் மகத்தானது என்ற உண்மையை நாம் தெட்டத் தெளிவாக உணரக் கூடியதாகவுள்ளது. மனிதனது அடிப்படைத் தேவைகள் எனும் போது உணவு, உடை, உறையுள் என்ற முக்கியமான மூன்றுமாகும். இதைவிட மேலானதும் பெறுமதியுள்ளதும் அழிவில்லாததுமான பொருள் கல்வியே ஆகும்.

கல்வி மனிதனின் மாபெரும் கொடையாகும். அக்கல்வியை அழியவிடாமல் அக்கல்வியைப் பின்பற்றியவன் அறிஞனாகவோ, அறிவாளியாகவோ, புரட்சியாளனாகவோ இவ்வுலகில் பல வண்ணங்களில் அவனது பிரதி விம்பங்கள் வெளிப்படுகின்றன.

இயற்கைச் சூழலில் வாழும் நாம் அன்றாடம் பல தேவைகளுக்காகப் போராடுகின்றோம். அவற்றில் முக்கியமான இடத்தை உணவு வகிக்கின்றது. உணவிடம் போராடிய மக்கள் குழுவில் ஒரு பிரிவினர் செல்வந்தராகவும் மறுபிரிவினர் வறியவராகவும் விளங்குகின்றார்கள். இவ்விரு குழுவினருக்கும் பொதுவாக விளங்குவது கல்வியே. அதாவது நாம் வறியவராக இருந்தால் என்ன? இருந்து உணவை உண்டால் என்ன? கல்வியைக் கற்கவேண்டிய வயதில் கல் என்பதுதான் இங்கே வலியுறுத்தப்படுகின்றது. இதையே நாம் ஔவையார், வள்ளுவர், இளங்கோ எனப் புலவர் வரிசையில் இடம் பெறுவோர். திரும்பத் திரும்ப பாடியுள்ளார்கள்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து". இளம் பராயத்தில் நாம் கற்கின்ற கல்வியானது வாழைப்பழத்தில் ஊசி ஏறுவது போல எமது உள்ளத்தில் தெளிவாகப் பதிந்துவிடும். ஆனால் முதுமையிற் கற்கும் கல்வியோ சுவரில் ஆணி அறைவது போன்று. எமது உள்ளத்தில் பதிவது சிரமமாக இருக்கும். எனவே நாம் பராயத்திலே கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்றுப் புலமை பெற்று விளங்க வேண்டும். அதாவது இளமையிற் கற்கும் கல்வியானது மனதில் அச்சாணி போல் ஊன்றிவிடும். இதனாற் கல்வியை இளம் வயதில் நாம் விரும்பிப் படித்தால் அது எமது வாழ்க்கையில் பெரியதொரு கோடிப்பயனை அனுபவிக்கத் தள்ளிவிடும்.

நாம் வாழும் சமதாயத்தை நோக்கின் அல்லது இப்பரந்துபட்ட உலகை எடுப்பின் அங்கே சாட்சி அளிப்பின் யாவும் மாயம், பொருள் என நாம் சில வினாடிகளில் உணரக் கூடியதாகவுள்ளது. பணம், பொருள், யாக்கை யாவும் ஒரு சில நிமிடங்களில் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும். ஆனால் கல்வியோ மலையானது. இது நிலையானது. நீராலோ, நெருப்பாலோ, காற் றாலோ அழிந்து விட முடியாது அது அழியாப்பொருள் கலைக் களஞ்சியம். அக்கல்வியைப் பின்பற்றிய மனிதன் ஒரு முழு மனிதனாவான் ஒருவன் இப்பிறப்பிலே பெற்ற கல்வியானது அவனது இவ்வுலக வாழ்வுக்கு உதவுவதோடு மாத்திரம் நின்றுவிடாது. அவனது ஏழேழு பிறப்பிற்கும் தொடர்ந்து சென்று உதவுகின்றது. இப்பிறப்பில் கற்பதற்கு வசதியோ வாய்ப்போ இல்லாத சிலர் மிக வறுமையான குடும்பத்தில் பிறந்து இருந்தாலும்கூட கற்றோரும் மற்றோரும் வியக்கத்தக்க வகையில் பேரறிஞர்களாக விளங்குகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இவர்கள் முற்பிறப்பிலே பெற்ற கல்வி ஆகும்.

*சி. சுகிர்தன்*
தரம் 9 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர் உரிமைப் பாதுகாப்பு நிதியம் நாடகப் போட்டி வலிகாமம் கல்வி வலயம் 2ம் இடம்-
**என்னை நானாக** நாடகத்தில் ஒரு காட்சி - 2001
நெறியாள்கை: நாடக கலாவித்தகர் சி. சிவராஜன்

**ஆசிரியர் தினத்தில்** ஆசிரியர் கீதம் இசைக்கும் ஆசிரியர் குழாம்





கொழும்பு சென்று கருத்தரங்கில் கலந்து கொண்ட இன்ரறக் கழக உறுப்பினர்களுடன் பாடசாலை அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்களும் பொறுப்பாசியருள் ஒருவரான செல்வி சி. சிற்றம்பலம் அவர்களும் - 1995.

ஞானசிகாமணி அன்னப்பா அறிவாலயம் திறப்பு விழாவின் போது நூலக அபிவிருத்திக் குழுவினர் - 1998




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports are necessary in School Life

"A sound mind in a healthy body" should be the motto of all children. Sports activity helps to keep their minds fresh and alert and also keep themselves physically fit. Team games help to develop a spirit of co-operation and healthy competition, and to pick out natural leaders amongst children. Taking part in meets and games inspires a sense of loyalty to one's school and it also help in teaching younger children to be unselfish and make friends. We should all take part in sports and there by build a race of strong, healthy and good-looking people.

*Mas. A. Dinoshan*
Grade 8C

# A Parrot's Story

I am a parrot. Now I live in a cage. I am a pet to a little boy. He named me as Geetha. He likes me very much. How I came to this cage, is an interesting story.

One day I was sitting on a mango tree eating a mango. A boy saw me. He took a small stone and threw it at me. I was wounded a little and fell down and the boy came and took me to his home and put me in this cage.

My master gives me fruit and vegetables every day. He teaches me how to tell my name. Sometimes I talk to him because if I don't talk, my master will be unhappy. I am always sad and I like to be freed out of this cage and fly away with my friends happily, in the sky.

*E. Delogine*
Grade 8C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையின் சிறப்பு

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் இசை உன்னத இடத்தை வகிக்கின்றது. எல்லா உயிரினங்களையும் இசைவிப்பதனால் இசை எனப்படுகின்றது.

மனிதன் பிறந்த நாள் முதல் இறக்கும் வரை தனது வாழ்நாள் முழுவதும் இசையுடன் தொடர்புடையவனாக வாழ்கிறான்.

குழந்தை அழும் பொழுது பெற்ற தாயானவள் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டுகிறாள். தாலாட்டும் போது "ஆராரோ ஆரிவரோ ஆரடித்து நீயழு தாய்" என்று பாடுகிறாள். தாலாட்டு இசையைக் கேட்ட குழந்தையின் அழுகை நின்று விடுகிறது எனவே இசை குழந்தையின் அழுகையைப் போக்குகிறது.

சிறுவர்களாகிய நாம் பாடசாலையில் கல்வி கற்கும்போது எண்ணையும் எழுத்தையும் மட்டும் கற்பதால் ஏற்படும் மனச் சோர்வை நீக்க இசை உதவுகிறது. பாடசாலை விழாக்களின் போது இசை தான் முன்னணி வகிக்கிறது. அதாவது எந்த விழாவானாலும் பாடசாலைக் கொடி, பாடசாலைக் கீதம் இசைக்க ஏற்றி வைக்கப்படுகிறது. எனவே விழாக்கள் யாவும் இனிமையான இசையுடனேயே ஆரம்பிக்கின்றன. இதுமட்டுமா உலக நாடுகள் யாவற்றிலும் தத்தமது நாட்டுக்குரிய தேசிய கீதம் இசைத்தே வைபவங்கள் தொடங்கப்படுகின்றன. எனவே உலகத்தில் இசையின் முக்கியத்துவம் புலனாகிறது.

உலக மக்கள் அனைவரதும் பொதுவான சடங்குகள், சமயச் சடங்குகள் அனைத்திலும் இசையே முன்னணி வகிக்கிறது. உதாரணமாக இந்து சயத்தவரது சடங்குகளான திருமண வைபவம் அபரக் கிரியையான மரணச்சடங்கு போன்றவற்றை எடுத்து நோக்கும்போது இசையே முன்னணி வகிக்கிறது. திருமண வைபவத்தில் மங்கள இசையான நாதஸ்வர இசை முழங்கப்படுகிறது. ஊஞ்சல் பாடல், ஆரத்திப் பாடல், நலுங்குப் பாடல் போன்ற பாடல்கள் இசைக்கப்படுவது வழக்கம்.

மரணச் சடங்கின் போது தொன்று தொட்டு ஒப்பாரி பாடப்பட்டு வருகிறது. அபரக்கிரியையின் போது சுண்ணமிடிப்புப் பாடல் பாடப்படுகிறது. தேவார திருமுறைகள், சிவபுராணம் போன்றவை பாடப்படுகின்றதும் வழமை இதுபோன்றே ஏனைய சமயத்தவரது சடங்குகளிலும் இசை முன்னணி வகிக்கின்றது.

கிராமிய மக்களின் வாழ்க்கையில் இசையின் பிரயோகம் அளப்பரியதாய் உள்ளது. கிராமிய மக்கள் தொழில் செய்யும் போது களைப்புத் தெரியாது உற்சாகமாக இருப்பதற்கு தாம் செய்யும் தொழிலுக்கேற்ப பாடல்களை ஆக்கி தாமாகவே மெட்டமைத்துப் பாடுகிறார்கள். இசைக்கு அடி நாதமே நாட்டார் பாடல்கள் என நூல்கள் கூறுகின்றன.

மக்கள் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயல்பு இன்பமான வேளையில் இசைபாடியோ இசை பாடக் கேட்டோ மகிழ்வது போல துன்பமான வேளையிலும் இசை பாடியோ, இசை பாடக் கேட்டோ மகிழ்ச்சியை வரவழைக்கின்றனர். தாமாகப் பாட குரல்வளம் இல்லாதவர் இசைக் கச்சேரி, வானொலி இசை போன்றவற்றைக் கேட்டு இன்புறுவர்.

மேற் குறித்த விடயங்களை நோக்கும் போது மக்கள் வாழ்க்கையில் இசை இன்றியமையாத இடத்தை வகிக்கிறது என்று கூறினால் மிகையாகாது.

ஜெ. வைஷணவி
தரம் 8 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையைப் போற்றுவோம்

பத்து மாதம் சுமந்து தாலாட்டிச் சீராட்டிப் பாலூட்டி எம்மைப் பெற்றெடுப்பவள் தாயே ஆவார். இந்த உலகத்தில் அம்மா என்று அழைக்காத உயிர் இல்லை. தாய் இரக்கம், கருணை, பொறுமை உடையவர். பகலிரவு விழித்திருந்து எம்மைப் பெற்றெடுக்கின்றார். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கொன்றை வேந்தனில் ஒளவைப் பிராட்டியார் சிறப்பித்துக் கூறுகின்றார். நாம் பிறந்தவுடன் அன்னையைத்தான் முதலில் பார்க்கின்றோம். நாம் பிறந்த நாட்டைத் தாய் நாடு என்கின்றோம். நாம் பேசும் மொழியைத் தாய் மொழி என்கின்றோம. இவ்வாறெல்லாம் தாய்க்கு முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இத்தகைய தாய் போற்றப்பட வேண்டும்.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்தற்கமைய தாயே சிறந்த தெய்வம் ஆவார். "பால் நினைந்தூட்டும் தாயினும் சால" என்ற திருவாசகப் பாடலில் திரு மணி வாசகர் சிறப்பித்துக் கூறியுள்ளார். குழந்தையை நினைத்தவுடன் பால் சுரக்கின்றது. "தாயோடு அறு சுவைப்போம்" என்பதற்கமைய தாய் எமக்குத் தேவையான உணவுகளை ஆக்கித்தருகின்றார். "அள்ளிப் பொருளைக்கொட்டி அழிவு செய்தபோதும் பிள்ளைத் தனத்தில் செய்தான் என பொறுத்தாள்" தாய் எம்மை பாடசாலைக்குச் செல்லவைக்கிறார். நாம் நல்ல பிரஜையாக வர வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருப்பார்.

இவ்வுலகில் காணப்படும் மாயையிலிருந்து நம்மைப் பிரித்துக் காக்கும் தாயாக அன்னை பராசக்தி விளங்குகின்றார். இதனையே மாணிக்கவாசகரும் திருவெம்பாவை பாடலிலே அழகாக "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத்திறம் பாடி" எனப் பாடியுள்ளார். தாயின் ஆசியுடன் ஒரு செயலைச் செய்தால் அச்செயல் இடையூறு இன்றி நிறைவு பெறும். ஒரு நாட்டின் பெருமையும் மக்களின் சிறப்பும் தாயின் சிறப்பிலே தங்கியுள்ளது. அன்பின் ஊற்றாகவும் அணைக்கும் தெய்வமாகவும் விளங்குபவர் தாய் ஆவார். வணக்கம், அறிவு, பொறை, நல்லோர் இணக்கம், வறியோர்க்கு ஈயும் இரக்கம், நிறைந்த கற்பு ஆகிய குணநலன்களைக் கொண்டு தாயானவள் விளங்குகின்றார்.

சமூக உருவாக்கத்தில் தாய்மார்களின் பங்கு இன்றியமையாததாகும். குழந்தையைப் பெற்றெடுத்து, இச் சமூகத்திற்கு வழங்கும் பெண்ணின் பணி மிக மிக முக்கியத்துவம் வகிக்கின்றது. அக்குழந்தையே வருங்கால சந்ததியினரின் எல்லாவித வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக விளங்குமானால், அவளது பங்கான சமூக உருவாக்கத்தில் பூரணத்துவம் அடைகின்றது. தற்காலத்தில் தாய்க் குலம் பாரிய முன்னேற்றப் பாதைகளை வகுத்து முன்னேறிக் கொண்டிருப்பதனால் மிகவும் போற்றப்பட்டு வருகின்றது.

வீட்டுக்குள் முடங்கி இருந்த தாய்க் குலம் இப்போது அந்தக் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்து ஆணுக்கும் சமமாக சமூகத்தில் பங்களிக்கத் தொடங்கியதான் மூலம், நாகரிகத்தை விரிவுபடுத்தியதோடு சமூக மேம்பாட்டின் வளர்ச்சிக்கும் உருவகம் கொடுத்தனர் என்றால் மிகையாகாது. மேலும், சமூகத்தில் நாகரிக விழுமியங்களில் தொடங்கி பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானத் துறைகள் ஈறாக சகல அம்சங்களிலும் தாய்க்குலம் தனது முத்திரையைப் பதித்து உயர்ந்துவருவது இன்று யதார்த்தமாகிவிட்டது. குழந்தையாக இருந்தபோது எம்மை வழிநடத்தி சமூகத்திற்கு தந்தவள் ஒரு பெண். இந்த வகையில் சமூக உயிர்ப்புக்கு உயிர் கொடுத்து வழிகாட்டியாக இருப்பவள் தாயே ஆவார். அத்தகைய தாயை நாம் போற்றுதல் வேண்டும். குடும்பம் தொடங்கி குவலயம் வரை சேவைக்கு விளக்கமாகத் திகழ்பவள் தாயே ஆவார்.

சமூக, சமய, சேவை இன்று அதிசயிக்கத்தக்க அளவு உயர்ந்து நிற்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையரின் பங்கு முக்கியமாக உள்ளது. இதற்கு உதாரணமாக அன்னை திரேசாவைக் குறிப்பிடலாம். ஒதுக்கப்பட்ட நோயாளர்கள், கைவிடப்பட்ட வயோதிபர்கள், இன்னும் அங்கவீனர்கள், ஏழைகள் என்று அனைவருக்கும் உலகம் முழுவதும் சுற்றித் திரிந்து சேவைபுரிந்து தரணியில் உயர்ந்தவர் அன்னை திரேசா ஆவார்.

இப்படிப் பல்வேறு துறைகளிலும் முன்னேறிய தாய்க்குலத்தைப் போற்றவேண்டும். இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்த நாம் தாய்மையைப் போற்றக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம் என்றால் மிகையாகாது.

*கி. பிரதீபன்*
தரம் 7A

# Our Food

Food is very essential to all of us. Without food no living thing can exist in this world. Our growth depends on the type of food we eat. If we eat good and nutritious food we can grow up to be healthy and strong. We must always have a balanced diet that is our food containing all the nutrients in the right proportions. The important nutrients are carbohydrates, proteins, fats, mineral salts and vitamins. In keeping with the proverb "Health is Wealth", we should plan our food in such a way so as to lead a healthy, happy and long life.

***Miss. S. Sivatharani***
Grade 6A [2000]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா, பிதா, குரு, தெய்வ
ஆசி நிகழ்வு



பரிசளிப்பு விழா - 1998
முதன்மை விருந்தினர் கலாநிதி க. குணராஜா அவர்கள்



பரதநாட்டிய நிகழ்வு - 1995
மாணவன் சி. ராஜபேட்




மெய்வல்லுநர் போட்டி - 1995
தசைநார் பயிற்சி கண்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்பப் பிரிவு அதிபரின் உள்ளத்திலிருந்து . . .

க. சிவநேசன்
ஆரம்பப் பிரிவு அதிபர்

ஒரு மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு உறுதி யான அத்திவாரம் இடுகின்ற பணி ஆரம் பக்கல்வி நிலையங்களுக்கே உரியது. அந்த வகையில் மெமோறியல் அன்னையின் ஆரம்பப் பிரிவு தனது பணியை சிறப்பாக ஆற்றி வருகின்றது. விசேடமாக 1968ஆம் ஆண்டு தொடக்கம் எமது ஆரம்பக்கல்விக்கு தனித்து ஒரு பிரிவுத் தலைவர் நியமிக்கப் பட்டு (அதிபர் வகுப்பு 5) அவரின் கீழ் திட்டமிட்ட கல்விச் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. அந்த வரிசையில் ஆரம்பப் பிரிவு அதிபர்கள் திரு. எஸ். சுப்பிரமணிய ஐயர், திரு. கா. தெய்வேந்திரராசா, திரு. என். செபமாலை, திரு. க. திருநாவுக்கரசு, திரு. வே. தேவதாஸன், திரு. ஏ. ஜீ. பெனாண்டோ, திருமதி. ஆர். வல்லிபுரம் ஆகி யோரை அடுத்து எட்டாவது ஆரம்பப்பிரிவு அதிபராக நான் பொறுப்பேற்றேன். சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஆரம்பப் பிரிவில் இணைந்து கொள்வர். கட்டிட, தளபாட, ஆசிரிய ஆளணி வசதிக ளற்ற நிலையிலும் சிரமங்கள் மத்தியில் மாணவர்களது கல்வி விருத்தி செய்யப் பட்டது. இத்தகைய சூழ்நிலையிலும் நிறை வான கல்வியைப் பெற்ற மாணவர்கள் ஐந்தாம் தரம் முடிய வேறு பாடசாலையை நாடும் துர்ப்பாக்கியநிலை அக்காலங்களில் இருந்தது குறிப்பிடத்தக்கது. நாளடைவில் இந்நிலை மாறி புலமைப் பரிசில் பரீட்சை யில் முதன்மை நிலை பெற்ற மாணவர்கள் கூட தொடர்ந்தும் எமது பாடசாலையில் இடைநிலை கல்வியைத் தொடரும் சூழ் நிலை ஏற்பட்டமை எமக்கு புதிய உத்வேகத் தைத் தந்தது. நாளடைவில் எமது ஆரம்பப் பிரிவு செயற்பாடுகள் மாகாண கல்விப்பணிப் பாளர்களின் பாராட்டுப் பெறும் அளவுக்கு வளர்ச்சி பெற்றமை மகிழ்ச்சி தருகின்றது. தொடர்ந்தும் எமது ஆரம்பப் பிரிவு சிறப்பாக தன் கல்விப் பணியை நிறைவேற்றும் என உறுதி கூறுவதோடு இத்தகைய நிலைக்கு ஒத்துழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி வளம் பெற வாழ்த்துகிறேன்.

மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை தற்போது இருக்கின்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாளான 12-06-1946ம் திகதி மதிப்பார்ந்த அதிபர் திரு அழகரட்ணம் அவர்கள் 1946ம் ஆண்டு சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் பதிந்தவிடயம்

12/6/46 The School entered its new premises today. Dedication service was held by Rev. S. Selvaratnam.

Welaysekaran
H. Master



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மா



அம்மா எங்கள் அம்மா
அருமையான அம்மா
ஆசையாக எம்மை
அரவணைக்கும் அம்மா

இளமையில் கல்வி நாம் வளர்க்க
ஈடில்லாது தாம் உழைத்து எம்மை
உண்மை அன்பு பாசம்
உயர்த்த வைக்கும் அம்மா

ஊக்கத்தோடு எம்மை விளையாட வைக்கும் அம்மா
எம்மைக் காக்க உயர்த்த அவரும்
ஏங்கித் தவிக்கும் அம்மா
ஐயம் போக்கி எம்மை வளர்க்கும் அம்மா

ஒற்றுமையாக ஊரோடு ஒன்றி இணைய வைப்பார்
ஓங்காரமாகவே நாம் வாழ
கல்வி அதனை வளர்ப்பார்
ஔவை போல பெரும் புகழை – நாம்
அடைய அவரும் உழைப்பார் அம்மா

*சி. பிரணவன்*
தரம் 5A

# தந்தைகள்

I. கேத்திர கணிதத்தின் தந்தை யார்?
II. பொருளாதார சாஸ்திரத்தின் தந்தை யார்?
III. வரலாற்றின் தந்தை யார்?
IV. இரசாயணத்தின் தந்தை யார்?
V. நகைச் சுவையின் தந்தை யார்?
VI. சாரணியத்தின் தந்தை யார்?
VII. தத்துவத்தின் தந்தை யார்?

I. யுக்ளிட்
II. அடம்ஸ்மித்
III. ஹெரோடிட்டஸ்
IV. ரொபேர்ட் பொய்ல்ஸ்
V. அரிஸ்டோ ஃ பேன்ஸ்
VI. பேடன் பவுல்
VII. சாக்கிரட்டிஸ்

*சி. ரகுராஜ்*
தரம் 5 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Pet

1. I have a pet.
2. It's a pretty little cat.
3. It's name is Kitty.
4. I feed it every day with milk and meet.
5. I play with it in the garden.
6. It has a bushy tail.
7. It is a month old.
8. It's colour is white.
9. I like my Kitty.



*S. Prathusha*
Grade 5 A

# Uses of Trees

Trees are the best gift to man. They help man in many ways. We extract valuable medicines from the roots and leaves of plats. We build houses with its timber. We make carts and boats from its wood. We also make doors and furniture items from its timber. We get firewood from trees. They give us shade and bring rain. They make the air fresh. Trees give us many kinds of food. So trees are very useful to us and it is our duty to look after them.

*M. Thulashi*
Grade 5 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட கனவு

இரவு வேளையில் நான் படித்துவிட்டு மேசையில் உறங்கி விட்டேன். யாரோ என்னை வந்து கூப்பிடுவது போல எனக்குத் தெரிகிறது ஆனால் அவரை நான் முன் பின் பார்த்ததே இல்லை. அவர் கோலாகல உடை அணிந்து காணப்பட்டார். எனக்கென்றால் ஒரே பயமாக இருந்தது பசியும் வயிற்றைக் கிள்ளுகிறது. தாகம் நாவையும் வரட்டுகின்றது. என்னுயிர் போய்விடும் போலத் தோன்றுகின்றது. என்ன அதிசயம்! அவர் கையிலே பல பல வகையான விருப்பமான உணவுப் பண்டங்களை வைத்திருந்தார். அதைக் கண்டதுமே என் பயம் எல்லாம் போய்விட்டது. என் வாய் ஊறுகிறது. அந்தப் பழங்களில் எனக்கு விருப்பமானவற்றை நான் எடுத்து உண்டு மகிழ்ந்தேன். அவர் அளித்த உணவுகள் தேவலோகத்து அமிர்தம் போல் எனக்கு இருந்தது. நான் உண்ட பழங்கள் எல்லாம் மிருக வடிவம் எடுத்து என்னைச் சுற்றி வந்தன. அப்போதுதான் நான் அம்மா ஐயோ என்று அலறிக் கொண்டு கண் விழிக்கின்றேன். நான் கண்டது கனவு என உணர்கிறேன்.

*சி. றகிசாயினி*
தரம் 5 B


# எனது பூந்தோட்டம்

எனது பூந்தோட்டம் அழகானது
பூக்கள் என்றும் பூக்குமாம்

பூக்களின் மணம் வீசுமாம்
நாங்கள் பார்க்கும் பொழுது
கண்ணைப் பறிக்கும் பூக்களாம்

நாங்கள் பார்க்கும் பொழுது
நாடகம் ஆடும் பூக்களாம்
நான் அதற்கு நாள்தோறும்
நீர் விட்டு வளர்ப்பேன்

நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமாக
வாட்டமின்றி மலர்ச்சியுடன்
செழித்து வளரும் பூக்களாம்



*இ. சுரேஸ்குமார்*
தரம் 4 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது குடை

வட்ட வட்டக் குடையாம்
நாங்கள் விரிக்கும் குடையாம்
மழையில் எம்மைக் காக்கும்
மஞ்சள் நிறக் குடையாம்

வண்ண வண்ணக் குடையாம்
வடிவான குடையாம்
நாங்கள் சுருக்கும் குடையாம்
நான் விரும்பும் குடையாம்

வெயிலில் எம்மைக் காக்குமாம்
நல்ல பட்டுக் குடையாம்

*பா. வசிகரன்*
தரம் 4 A

# பூனைக்குட்டி

சின்னச் சின்ன பூனைக்குட்டி
சிறிய வெள்ளைப் பூனைக்குட்டி
துள்ளி ஓடும் பூனைக்குட்டி
சோம்பல் இல்லாப் பூனைக்குட்டி

பாலைக் குடிக்கும் பூனைக்குட்டி
பத்மா வீட்டு பூனைக்குட்டி
கள்ளமான பூனைக்குட்டி
வாலை வாலை ஆட்டும் குட்டி

கண்ணை கண்ணை முழுசும் குட்டி
கபடமில்லா வெள்ளைக் குட்டி
பதுங்கி பதுங்கி ஓடும் குட்டி
எலியை எலியை பிடிக்கும் குட்டி

*ஜெ. மாதங்கி*
தரம் 4 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைக் காட்சி

1. காலையில் சூரியன் கிழக்குவானில் உதயமாவான்.
2. காலையில் சேவல் கூவும்
3. காலையில் பறவைகள் தம் இருப்பிடத்தை விட்டு உணவு தேடி பறந்து செல்லும்.
4. நாட்டின் முதுகெலும்பு போன்ற விவசாயிகள் வயலுக்குச் செல்வர்.
5. காலையில் சிறுவர்கள் நித்திரை விட்டெழுவார்கள்.
6. சிறுவர் சீருடை அணிந்து பாடசாலை செல்வர்.
7. வண்ண வண்ண பூக்கள் தம் இதழ்களை விரித்து நறுமணம் வீசும்.
8. காலையில் பல காட்சிகளைக் காணலாம்.

*க. உஷாயினி*
தரம் 4A

# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

எம்மைப் பெற்று அன்புடன் வளர்ப்பவர்கள் தாயும் தந்தையும் ஆவர். அதனால் "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" எனச் சான்றோர் போற்றுகின்றனர். தாய் எம்மைப் பெற்று அன்புடன் வளர்க்கிறாள். தந்தை நாம் சுகமாக வாழ அல்லும் பகலும் பாடுபட்டு உழைக்கிறார். எமது நல்வாழ்வுக்காக உழைக்கும் இவர்களே எமது கண்கண்ட தெய்வங்களாகும்.

*சி. உதயசங்கர்*
தரம் 4 A

# தோசை

அம்மா சுட்ட தோசை
அருமையான தோசை
தின்னத் தின்ன ஆசை
சிறகடிக்கும் ஆசை


உழுந்து அரிசி கலந்து
உயர் வாய்ச் சுட்ட தோசை
எண்ணெய் வீட்டுச் சுட்ட
முறுவலான தோசை

பள்ளி செல்லும் போது
கொண்டு செல்லும் தேசை
பள்ளித் தோழர் உடனே
பகிர்ந்து உண்ணும் தோசை

*த. பாமினி*
தரம் 4 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை ஸ்தாபகரின் பூட்டனார் திரு. ஸ்கொட் மெமோறியல் மலர் 4ஐ இங்கிலாந்தில் பெறும் அரிய காட்சி.



பாடசாலை ஒழுக்காற்றுக் குழுவால் ஒழுங்குசெய்யப்பட்ட சின்னம் சூட்டும் நிகழ்வின் போது சிரேஷ்ட மாணவ தலைவர்கள் பொறுப்புக்களை ஒப்படைக்கும் நிகழ்வு.



1999ல் மணிவிழாவில் ஓய்வுபெற்ற அதிபர் சைவப்புலவர் சு. ஐயாத்துரை அவர்கள் நெறியாள்கை செய்த **இராவணேசன்** நாடகத்தில் நடிகர்களும் நெறியாளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Self

1. I'm a girl.
2. My name is Kajaluxsi.
3. I'm in grade four B.
4. My sister's name is Jaso.
5. My school's name is J/Manipay Memorial English School.
6. My friend's name is Edveena.
7. I'am nine years old.
8. I want to be a doctor one day.

*S. Kajaluxsi*
Grade 4 B

# MY PET

1. My pet is a parrot.
2. My pet's name is Rani
3. It's colour is green.
4. It is a beautiful bird.
5. My pet speaks very well.

*S. Kasthuri*
Grade 4 A

***"Education is an instrument for conserving, transmitting and renewing culture"***

*- Prof. M. O. C. Jeffreys -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடையின் சுயசரிதை

நான் ஒரு அழகான குடை. எனது வரலாறு பற்றி கூறுகிறேன். அனைவரும் கேட்டுக் கொள்ளுங்கள். என்னை ஒரு அழகான குடையாக செய்வதற்கு பல பொருட்கள் தேவைப்பட்டன. அதை ஒவ்வொன்றாக தயார் செய்து கொண்டனர். அதில் எனது சேலையினை கொழும்பில் உள்ள ஒரு அழகான கடையில் வாங்கினார்கள். அவ் துணியானது பல வகையான நிறங்களில் காணப்பட்டிருந்தது. பின் அடுத்த அங்கங்க ளான கம்பி, பிடி போன்றவற்றை பொருத்தி என்னை ஒரு அழகான குடையாக செய் தார்கள் அதனோடு என்னை மட்டுமல்லா மல் எனது சகோதரர்கள் நண்பர்கள் போன்றவர்களையும் செய்தனர். பெரிய பெரிய கடைக்காரர்கள் என்னையும் எனது சகோதரர்களையும் பெரும் தொகுதியான பணம் கொடுத்து வாங்கினார்கள். பின் என்னை தூக்கி கடையில் தொங்கவிட்டனர். அப்பொழுது ஒருவர் வந்து இந்தக்குடை யின் பெயர் என்னவென்று கேட்க இது தான் பஞ்சவர்ணக்குடை என்றார்கள் உடனே அவர் என்னை விரித்து பார்த்து ஆகா என்ன அழகான குடை என்று கூறி விலைக்கு வாங்கி வீட்டிற்கு போகும்வழியில் வெயிலிற்காக பிடித்துக் கொண்டு போனார். அப்போது எனது உடல் வெப்பத்தால் துடி துடித்தது. இவ்வாறு என்னை மழைக்கும் வெயிலுக்கும் பிடித்துச் சென்றனர். பளிச் சென்று இருந்த எனது மேனி மங்கிப் போனது என்னை கொண்டு போகும் பொழுது பலமான காற்றடித்தது. நான் அதை தாங்க முடியாமல் முறிந்தும் கிளிஞ் சும் போனேன் அவர் என்னை ஒரு குப்பைக் கிடங்கில் போட்டு வைத்தார். என்ன அழகாக வளர்ந்த என்னை இப்போ கிடங்கில் போட்டு விட்டார்கள் எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. இத்துடன் எனது சோக கதையினை முடிக்கிறேன்.

*அ. ஜோயல்*
தரம் 4B

# துள்ளி எழுந்திரு தம்பி

துள்ளி எழுந்திரு தம்பி
தூக்கம் கலைத்திடு தம்பி
பள்ளிக்கு சென்றிடு தம்பி
பண்பாய் இருந்திடு தம்பி
கல்வியில் சிறந்திட தம்பி
களவை மறந்திடு தம்பி
நல்ல குணமதை பெற்றிட
நன் நண்பரை தேர்ந்தெடு தம்பி
கடமைகள் பல புரிந்திடு தம்பி
பாரினில் வல்லவனாய் வந்திடு தம்பி
எல்லாவற்றையும் பெற்றுத்தர
எம் இறைவனை வணங்கிடுவாய் தம்பி

*எ. எட்வீனா*
தரம் 4B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுளகளவு வெற்றிலை

கண்ணன் இரவுபன்னிரண்டு மணிவரை படித்துக் கொண்டிருந்தான். தூக்கம் வர வில்லை. தோட்டத்தில் உலாவி வரச் சென்றான். உலாவிக் கொண்டிருக்கும்போது சிறு சத்தம் கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். என்ன அதிசயம் அவனது அருகில் வெள்ளைக் குட்டி யானை ஒன்று நின்றது. கண்ணன் ஆச்சரியத்துடன் நீ எங்கு இருந்து வருகிறாய் எனக் கேட்டான். அவ் யானையும் நான் தேவலோகத்தில் இருந்து வருகிறேன். அங்குள்ள பொருட்கள் எல்லாம் இங்குள்ள பொருட்களைவிடப் பல மடங்கு பெரியன என்று கூறியது. உங்கள் தோட்டத்திலுள்ள வெற்றிலையைப் பார் அது உனது கையளவு. ஆனால் அங்குள்ள வெற்றிலை சுளகளவு என்று கூறியது. உடனே கண்ணனுக்கு அங்கு போக வேண் டும் போல இருந்தது. கண்ணனும் தனது ஆசையைக் கூறினான். யானை இந்த விடயத்தை வேறு ஒருவருக்கும் கூறக் கூடாது. நாளை பன்னிரண்டு மணிக்கு இவ் விடத்தில் வா கூட்டிக்கொண்டு போகிறேன் எனக் கூறிச் சென்றது. கண்ணனால் இரகசியத்தை வைத்திருக்க முடியவில்லை. தனது வீட்டில் அம்மா, அப்பா, தங்கை, பாட்டி எல்லோருக்கும் கூறினான். அவர் களும் தேவலோகத்திற்குப் போக ஆசைப்பட் டனர். இரவு பன்னிரண்டு மணி ஆனது. குட்டி யானையும் வந்தது. யானையை கண்ணன் பிடிக்க தொடர்ந்து அம்மா, அப்பா, தங்கை, பாட்டி எல்லோரும் பிடித் துக் கொண்டிருந்தனர். இடையில் பாட்டி "கண்ணா வெற்றிலை எந்தளவு" எனக் கேட்டார். கண்ணன் இரண்டு கையையும் விரித்து சுளகளவு என விரித்துக் காட்டி னான். உடனே பூமியில் எல்லோரும் தொப் என விழுந்தனர்.

*ம. பதுரஷன்*
தரம் 3A

# விகடத் துணுக்குகள்

①
ராஜா : ஏன் சுதந்திர தின விழாவில் கொடியேற்றுகிறார்கள்.
ரகு : இன ஒற்றுமையை வெளிப்படுத்த
ராஜா : இல்லை அதற்கு ஏறத் தெரியாது.

②
குமார் : தாய்ப் பூனை தனது குட்டியை காணவில்லை என்றால் பொலிஸ் நிலையத்திற்குப் போய் என்ன சொல்லும்.
சிவா : என் குட்டியைக் கண்டுபிடித்துத் தாருங்கள் என்று சொல்லும்.
குமார் : பாவம் அதற்குத் தமிழா தெரியும். மியாவ், மியாவ் என்று கத்தும்

③
ரவி : புதிய நூற்றாண்டில் உலகம் எப்படி இருக்கும்?
முரளி : உருண்டையாக இருக்கும்.

④
முதியவர் : தம்பி! வீட்டில் அப்பா இருக்கிறாரா?
தீபன் : இல்லை வெளியில் போய் விட்டார்.
முதியவர் : உள்ளே இருமிச் சத்தம் கேட்கிறது
தீபன் : இது எங்கள் வீடில்லையே

*ச. குலவேணி*
தரம் 3A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் சிறுவர் நாடகம் நடித்ததால்

மாணவர்களுக்கு முன்னால் துணிந்து பேசு வோம். நன்கு பாடுவோம் எங்களுடன் படிக் கின்ற மாணவர்களுடன் சகோதரர்களாகப் பழகுவோம். ஒற்றுமையாக இருக்கின்றோம். நாடகம் நடிப்பதால் சந்தோசமாக இருக்கின் றோம். இப்பொழுது ஆசிரியர் சொல்வதைக் கவனமாகக் கேட்டுச் செயல்பட முடிகிறது. ஓய்வு நேரத்தில் நாடகம் நடிப்பது நல்ல முன்னேற்றத்தைத் தரும்.

*சி. சிவராகவன்*
தரம் 3A

# பொன் அள்ளிய பொன்னப்பன்

## (சிறுகதை)

பொன்னப்பன் என்று ஓர் இளைஞன் இருந் தான். அவன் எப்படியாவது பொருள் சேர்க்க வேண்டும் என்ற விருப்புடன் ஒரு மந்திர வாதியை நாடி உபாயங் கேட்டான். "ஊர்க் கோடியிலுள்ள புளிய மரத்தில் ஏறித் தனித் திரு! விழித்திரு! பொன் கிடைக்கும்" என்று மந்திரவாதி சொன்னார்.

அன்று அமாவாசை இருட்டு பொன்னப்பன் புளிய மரத்தில் ஏறித் தனித்திருந்தான். விழித்திருந்தான். பொழுது சாயத் தொடங் கியது பெரிய மரக்கொப்பு ஒன்றில் அமர்ந்து கொண்டு விழாமல் இருக்க இன்னொரு கொப்பை கெட்டியாக கையால் பிடித்துக் கொண்டிருந்தான். நேரம் நள்ளிரவாகிக் கொண்டிருந்தது. இரண்டு கள்வர்கள் அந்தப் புளியமரத்தின் கீழ் வந்து உட்கார்ந்து கொண்டு தாங்கள் திருடிய பொருட்களாகிய பொன்னையும் மணியையும் பங்கிடத் தொடங் கினார்கள். இவரிற்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அதனால் மீண்டும் மீண்டும் பங்கீடு செய்துகொண்டிருந்தார்கள். மரக் கொப்பின் மேலிருந்த பொன்னனுக்கு கடும் நித்திரை வந்தது. கண்ணயர்ந்து விட்டான். மரக்கொப்பிலே பிடித்திருந்த கை நழுவியது. மரத்திலிருந்து தொப்பென்று ஒரு கள் வனது முதுகின் மேல் விழுந்தான். "ஐயோ பூதம்" என்று கத்திக் கொண்டு இரு கள்வர்களும் பொன்னையும் மணியை யும் விட்டுவிட்டு ஓட்டமெடுக்கத் தொடங்கி னார்கள். பொன்னப்பன் அவ்வளவு பொன் னையும் மணியையும் அள்ளிக் கொண்டு மகிழ்ச்சியோடு வீட்டிற்குப் போனான்.

*சி. லனுஜா*
தரம் 3B

**அன்பு தருவதும் அன்பைப் பெறுவதும் மனித வாழ்வில்**
**பெரும் பேறுகள் எல்லோருக்கும் கொடுத்து வைப்பதில்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல பழக்கங்கள்

- மாணவர்களாகிய நாம் நல்ல பழக்கங்களை பின்பற்றுதல் வேண்டும்.
- பணிவுடன் பேசுதல் வேண்டும்.
- அம்மா, அப்பா, பெரியோர் சொற்படி நடத்தல் வேண்டும்.
- ஆசிரியர் சொல்கேட்டு நடத்தல் வேண்டும்.
- உண்மை பேசுதல் வேண்டும்.
- உயிர்களிடத்தில் கருணை காட்டுதல் வேண்டும்.
- ஏழைகளுக்கு இரங்குதல் வேண்டும்.
- ஊக்கமுடன் கல்வி கற்று உயர்தல் வேண்டும்.
- சுத்தம் பேணுதல் வேண்டும்.
- முதியோருக்கு உதவி செய்தல் வேண்டும்.
- எல்லோருடனும் ஒற்றுமையாக வாழவேண்டும்.
- இன்சொல் பேசி இன்முகத்துடன் இருத்தல் வேண்டும்.

சு. ஜெயவாகினி
தரம் 3B

# My mother

My mother's name is Kamala.
My mother is a beautiful lady.
My mother helps us to study.
My mother cooks tasty food.
My mother teaches us good habits.
I like my mother very much.

*D. Dabithira*
Grade 3 A

# Occupations

A farmer works in a farm.
A doctor works in a hospital.
A teacher works in a school.
A policeman works in a police station.
A baker works in a bakery and my father works in a bank.

*S. Jasintha*
Grade 3B




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்

வீட்டை நன்கு காக்கும்
விரும்பிச் சோற்றை உண்ணும்
கோழி ஆட்டைத் துரத்தி
அனைத்தையும் காத்து நிற்கும்

வாலை வாலை ஆட்டும்
வளர்த்த பாசம் காட்டும்
காலைக் காலை நக்கும்
கனிவு வரப் பார்க்கும்



அதுவே என்ன மிருகமாம்
அது உனக்கு தெரியாதா
அதுவே நன்றியுள்ள நாயாம்

டா. ஜொனதன் பிரகாஸ்
தரம் 2A

# செல்லப் பிராணி

எனது செல்லப் பிராணியின் பெயர் சுவீற்றி. அவளின் நிறம் கொக்குப் போன்றது. மேனியோ பஞ்சுமெத்தை போன்றது. அதன் வதனமோ மதி போன்றது. அவளின் கண்களோ கயல் மீன்கள் போன்றது. அவளின் பாதங்கள் பூப் போன்றது. அவள் விரும்பி உண்ணுவதோ பால். ஆனால் அவளைக் கண்டால் என் வீட்டு எலிகளுக்கோ நடுக்கம். சுவீற்றி சுத்தத்தில் நீர் போன்றவள். எனினும் நான் சொல்வதை எல்லாம் செய்வாள் என்பதோடு விடிவதில் இருந்து உறங்குவது வரை என் கூடவே இருப்பாள். நான் செல்லுமுன் தான் நின்று வழி அனுப்புவாள். நான் பள்ளியால் வீடு திரும்பும்வரை பாதிவழியில் என் வருகைக்காக காத்து நிற்பாள். அவள் யார் தெரியுமா? அவளே எனது செல்லச் சுவீற்றிப் பூனை.

சி. தர்ஷிகா
தரம் 2A

# நான் யார்?

1. எனது பெயர் சந்திரராசா கிரிஷாந்.
2. நான் மானிப்பாய்க் கிராமத்தில் வசிக்கிறேன்.
3. எனது வயது ஏழு ஆகும்.
4. நான் இரண்டாந்தரத்தில் கல்வி கற்கின்றேன்.
5. நான் படிக்கும் பாடசாலையின் பெயர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
6. நான் ஆசிரியர் சொற்படி நடப்பேன்.
7. நான் எதிர்காலத்தில் ஒரு ஆசிரியராக வருவேன்.

ச. கிரிஷாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெமோறியலின் இரு வரலாற்று நிகழ்வுகள் ஒரே நாளில்...

1-1-1961 - மிஷனரிமாரிடமிருந்து மெமோறியலை இலங்கை அரசு சுவீகரித்தது.

1-1-1961 - அதிபர் திரு. எஸ். வீ. அழகரத்தினம் அவர்கள் ஓய்வுபெற்று புதிய அதிபர் திரு. ஜே. வீ. தம்பிநாயகம் அவர்களிடம் பாடசாலையைக் கையளித்தது.

இரண்டு நிகழ்வுகளுக்கும் அன்றைய பேராயர் எஸ். குலேந்திரன் அவர்கள் நடுநாயகமாக விளங்கினார்.



படத்தில் காணப்படுவோர்

<u>(இ-வ) அமர்ந்திருப்போர்:-</u> திருமதிகள் செ. தேவநேசன், ஏ.ஆர். ஜெயநாயகம், செ. அன்னபூரணம், எஸ். தம்பிநாயகம், திரு. ஜே.வி. தம்பிநாயகம், பேராயர் அருட்திரு எஸ். குலேந்திரன், திரு. எஸ். வீ. அழகரத்தினம், திருமதிகள் எஸ். குலேந்திரன், எம். மேதர், ஏ. லோறன்ஸ், எஸ். சேனாதிராசா.

<u>முன்வரிசையில் நிற்போர்:-</u> திருவாளர்கள் எஸ். பாலசிங்கம், வீ. தருமசீலன், எல். ர. யோசப், என். பொன்னையா, ஜி. அன்னப்பா, செல்விகள் எஸ். பொன்னையா, அ. அருள்மலர், பு. சோதிமுத்து, க. சின்னத்தம்பி, திருவாளர்கள் எம். யேக்கப், த. திருநாவுக்கரசு, ஆர். சி. செல்லையா

<u>இறுதி வரிசையில் நிற்போர்:-</u> திருவாளர்கள் எஸ். இராசையா (காவலாளி) ஏ. ஜி. யோசப்பு, டீ. ரீ. வாட்ஸ்வோந், ஜீ. மயில்வாகனம், தி. க. முத்துச்சாமி, ஜி. என். இராசசிங்கம், எஸ். சின்னத்தம்பி, பண்டிதர் மு. கதிரவேற்பிள்ளை, கா. சின்னத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அம்மா

எனது அம்மாவின் பெயர் திருமதி வி. கண நாதன். நான் எனது அம்மாவை நேசிக் கின்றேன். அவர் என்னை பெற்று பாலூட்டி சீராட்டி கண்ணை இமை காப்பது போல் காத்து வருகின்றார். எனது கல்வியில் மிகவும் அக்கறை காட்டி வருகின்றார். எனது தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்து தருகின்றார். எனவே நான் எனது அம்மாவை தெய்வமாக போற்றுகின்றேன்.

*க. விந்துஜா*
தரம் 2B

# My Ambition

*I am Thanuya.*

*Now I am in Grade two.*

*I want to be a doctor.*

*One day I will be a Surgeon.*

*I will work in my land.*

*I will serve my people.*

***M. Thanuya***
Grade 2A

# எனது பாடசாலை


எனது பாடசாலை யாழ் மானியப்பதிக் கிரா மத்தில் அமைந்துள்ளது. எனது பாடசாலை யின் பெயர் யாழ்/ மானிப்பாய் மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை. இங்கு தரம் ஒன்றில் இருந்து தரம் பதின்மூன்றுவரை வகுப்புக் கள் உண்டு. இங்கு விளையாட்டு மைதா னம், நடேசர் ஆலயம் என்பன உண்டு. இங்கு 1500 வரையிலான மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இங்கு 40க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின் றனர். எமது பாடசாலையின் மேற்பிரிவு அதிபரின் பெயர் திரு. அ. மு. அருணாசலம். ஆரம்பப் பிரிவு அதிபரின் பெயர் திரு க. சிவனேசன். நான் இப்பாடசாலையில் தரம் இரண்டில் கல்வி பயிலுகின்றேன்.

*வி. லூட்ஸ் ஜெனிஸ்ரா*
தரம் 2A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ



வட்ட வட்டப் பூ

வடிவான பூ

வண்ண வண்ணப் பூ

வண்டு உறங்கும் பூ

த. பிரசாந்
தரம் 1A

# எனது பாடசாலை

1. எனது பாடசாலையின் பெயர் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆகும்.
2. இங்கு தரம் ஒன்று தொடக்கம் தரம் பதின்மூன்று வரையான வகுப்புக்கள் உள்ளன.
3. எனது பாடசாலை அதிபரின் பெயர் திரு. அ. மு. அருணாசலம்.
4. எனது வகுப்பாசிரியரின் பெயர் திருமதி சு. அருள்வதனன்.
5. எனது பாடசாலையில் அழகர், ஸ்கொட், பேஜ், பிக்னல் என நான்கு இல்லங்கள் உண்டு.

அ. டலக்ஷனா
தரம் 1A

# மாம்பழம்

*வட்ட வட்ட மாம்பழம்*

*வடிவான மாம்பழம்*

*சிவப்பு மஞ்சள் மாம்பழம்*

*விலாட் விலாட் மாம்பழம்*

பா. தமிழினி
தரம் 1B

# எண்கள்

*ஐந்திலே ஒன்று போனால்*
*கட்டில் கால்கள் நான்கு*
*நான்கினிலே ஒன்று போனால்*
*தேங்காய் கண்கள் மூன்று*
*கோழிக் கால்கள் இரண்டு*

*இரண்டினில் ஒன்று போனால்*
*முகத்தில் ஒரு மூக்கு*
*ஒன்றினிலே ஒன்று போனால்*
*ஒன்றும் இல்லை அப்பா*

ஸ்ரீ. பவித்திரா
தரம் 1A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்ற அறிக்கைகள்

## J/ Manipay Memorial English school Dramatic Society
## யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# நாடகமன்றம்

| | |
|---|---|
| அதிபர்/காப்பாளர் | : திரு. அ.மு. அருணாசலம் |
| துணைக்காப்பாளர் /பொருளாளர் | : திரு. சி. சிவராஜன் |
| தலைவர் | : செல்வன். கு. சசிக்குமார் |
| உப தலைவர் | : செல்வன். அ. அற்புதராஜா |
| செயலாளர் | : செல்வி. நா. விவிதா |
| உப செயலாளர் | : செல்வி. சி. கலாமதி |

நாடகத்துறையினூடாக ஒருவருடைய ஆளமையை நன்கு விருத்தியடையச் செய்ய முடியும். இது மனிதனின் கற்பனை ஆற்றலை மேலும் வளர்த்துச் செல்லும் இதனூடாக அவன் ஆத்ம திருப்தி அடைகின்றான். சந்தோஷமான மனநிம்மதியைத் தன்னகத்தே வரவழைத்துச் கொள்பவர்கள் நீண்ட ஆயுள்கொண்ட மனிதராக வாழ முடியும். தலைமைத்துவம் என்ற பண்பு தானாகவே உருவாகத் தொடங்கும். இந்த உன்னத பணிகளை தன்னகத்தே கொண்ட நாடகக்கலையை மானிப்பாய் மெமோறியல் மாணவர்கள் நன்கு பற்றிப் பிடித்துள்ளமையை அவர்களது நாளாந்த செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. எமது மாணவர்களது செயற்பாடுகளை மெமோறியல் மலர்—5 இன் ஊடாக 1994ம் ஆண்டு வரையான செயற்பாடுகளை காண்கின்றோம். தொடர்ந்துவரும் செயற்பாடுகளை இந்த நாடகமன்ற அறிக்கை கூறிநிற்கின்றது.

எமது நாடக மன்றத்தின் ஊடாக வருடாவருடம் இல்லங்களுக்கிடையான தனி நடிப்பு சிறுவர்,வளர்ந்தவர்களுக்கான நாடகப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடைபெறுகின்றது. வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் தமிழ்மொழித்திறன் போட்டிகளில் நாடகத துறையில் மாணவர்கள் பங்குகொண்டு சாதனைகளை நிலைநாட்டுவது குறிப்பிடத்தக்கது. விபரங்கள் ஆவணப் பதிவாகப் பேணப்படவேண்டியன.

| ஆண்டு | நாடகத்தின் பெயர்/வகை | கிடைத்த இடம் |
|---|---|---|
| 1995 | கூனியின் சபதம் — வரலாற்றுநாடகம் | கோட்டம் 2ம் இடம் |
| 1996 | இடப்பெயர்வு | |
| 1997 | அப்பூதியடிகள்—புராண இதிகாசநாடகம் | சண்டிலிப்பாய் கோட்டம், வலயம் 1ம்இடம்<br>மாகாண மட்டம் 3ம்இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 சூடாமணி — புராண இதிகாசநாடகம் சண்டிலிப்பாய் கோட்டம் 1ம்இடம்
வலயம் 3ம் இடம்

1999 புலவர்க்கு ஈர்ந்த பரிசு — வரலாற்றுநாடகம் சண்டிலிப்பாய் உடுவில் கோட்டம் 1ம்இடம்

2000 நாடகம் மேடையேற்றப்படவில்லை

1999ம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் சமாதானத்தை வலியுறுத்தி நடாத்திய நாடகப் போட்டியில் "எங்கள் குருதி சிவப்பு" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. வலிகாமம் கல்விவலயத்தில் 1ம் இடத்தையும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் 1ம் இடத்தையும் பெற்று மூவாயிரம் ரூபா பரிசினைப் பெற்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

2000ம் ஆண்டு பாடசாலை ஒளி விழாவின்போது காணிக்கை என்ற கிறிஸ்தவநாடகம் அழகரட்ணம் அரங்கில் மேடையேற்றப்பட்டது. கிறிஸ்தவ மன்றத்தின் விசேட பாராட்டு நாடகமன்றத்துக்கு உரமூட்டியது இதனால் தொடர்ந்து 2001ம் ஆண்டு சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு நிதியத்தினால் சிறுவர் உரிமைகள் தொடர்பாக நடாத்தப் பட்ட நாடகப்போட்டியில் வலிகாமம் வலயத்தில் 2ம் இடத்தை எமது பாடசாலை பெற்றுக் கொண்டமையைப் பெருமையுடன் கூற வேண்டியுள்ளது.

நடிப்புடன் நின்றுவிடாது எமது மன்ற உறுப்பினரான க.பொ.த. உயர்தரவகுப்பில் நாடகமும் அரங்கியலையும் ஒரு பாடமாகக் கற்ற மாணவன் செல்வன் கு. சசிக்குமார் 2000ம் ஆண்டு நடைபெற்ற தமிழ் மொழித் திறன் போட்டியில் நாடகப் பிரதியாக்கத்தில் சண்டிலிப்பாய் கோட்டம். வலிகாமம் கல்வி வலயம், யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமை அறிவியல் ரீதியாக எமது பாடத்துறையின் வளர்ச்சியைக் காட்டுகிறது. இம்மன்றத்தின் ஓங்கிய செயற்பாட்டின் காரணமாக 1999ம் ஆண்டு செல்வி. ந. குமுதா, 2000ம் ஆண்டு செல்வன் கு. சசிக்குமார் ஆகிய மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் "A" தரத்தை நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தில் பெற்று இன்று பல்கலைக்கழகம் புகுந்தமை எமது மன்றத்தின் செயற்பாட்டுடன் கூடிய கல்வியறிவை வளர்த்தமையே என்று கூறுவதில் பெருமையடைகின்றோம்.

எமது மன்றத்தின் விசேட செயற்பாடாக யாழ்ப்பாணம் வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்கு இலவசமாகப் பயிற்றப்படும் மாணவர்கள் தோற்றி சித்தி பெற்று தமது அறிவை விருத்தி செய்கின்றனர். இந்த செயற்பாட்டின் காரணமாக 2000ம் ஆண்டு வரை தரம் 5ல் ஒரு மாணவியும், தரம் 4இல் 3 மாணவர்களுக்கும் தரம் 3இல் 16 மாணவர்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றமை மகிழ்ச்சி தருகின்றது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் வருடாவருடம் நடாத்தப்படும் தனிநடிப்புப் போட்டியில் எமது மாணவர்கள் பங்குபற்றி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெறுகின்றனர்.

**எமது மன்ற அங்கத்தவர் செயல்முறை வேலைகளில் ஈடுபட்டதன் காரணமாக தமது அறிவை விருத்திசெய்து க.பொ.த. (உ.த)ப் பரீட்சையில் பெற்ற புள்ளிவிபரங்களையும் இங்குதருவது மன்றச்செயற்பாட்டை துல்லியமாகக் காட்ட உதவும் என நம்புகின்றோம்.**

| பெறுபேறு | — | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|---|---|---|
| A | - | - | - | - | - | 01 | 01 |
| B | - | - | - | 01 | 02 | 01 | - |
| C | - | 01 | - | 03 | 13 | 09 | 02 |
| S | - | - | 02 | 07 | 04 | 03 | 01 |
| F | - | - | - | 01 | 01 | - | - |
| விண்ணப்பித்தோர் | | 01 | 05 | 15 | 27 | 18 | 06 |
| விகிதம் | | 100% | 100% | 91.6% | 95% | 100% | 100% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மன்ற உறுப்பினர்கள் தமிழ்மொழித் திறன் போட்டியில் இசை நாடகப் போட்டியிலும் பங்குபற்றி சாதனைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

1998 பக்த நந்தனார்
1999 பக்த நந்தனார்
2000 அரிச்சந்திர மயானகாண்டம்

இசை நாடகங்களை மேடையேற்றுவதில் அயராது உழைத்துவரும் ஆசிரியர்கள் திருமதி. வி. ஜெ. பை. மூர்த்தி, திரு. சொ. ஜெயவீரசிங்கம், திரு. கு. சோமஸ் கந்தமூர்த்தி ஆகியோர் நன்றிக்குரியவர்கள்.

03.10.1999, 04.10.1999 ஆகிய திகதிகளில் பாரிய அளவில் நிதிசேகரிக்கும் நோக்குடன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து நாடகவிழா ஒன்றை பாடசாலையில் இருதினங்கள் நடாத்தியது. இதன் பயனாக ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் ரூபா சேகரிக்கப்பட்டது. இந்த நிதியாலும் தலா ஐம்பதினாயிரம் ரூபா நாடக மன்றம், பழைய மாணவர் சங்கத்துக்கு நிரந்தர வைப்பில் இடப்பட்டது. இது ஒரு பெரும் சாதனை என்றே குறிப்பிட வேண்டும். நாடகமன்றம் ஒரு திறந்த வெளி அரங்கை அமைக்கவேண்டும் என முயற்சி எடுத்தது. ஆனால் பாடசாலைக்கு ஐந்து பரப்பு காணியைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை 1999ம் ஆண்டு ஏற்பட்டது. நிதி போதாமையால் பாடசாலை நிர்வாகம் துன்பப்பட்டவேளை எமது மன்றம் பெருமனதுடன் ஐம்பதினாயிரம் ரூபாவை காணிக்கொள்வனவுக்கு வழங்கியது. அந்த வட்டிப்பணம் நாடக மன்ற கணக்கிலக்கம் 12775 இலங்கைவங்கி மானிப்பாய் கிளையின் சேமிப்புப் புத்தகத்தில் வைப்பில் இடப்பட்டது இது ஒரு வரலாற்றுக் குறிப்பு ஆகும். திருமறைக் கலாமன்றம் போன்ற நிறுவனங்களில் நடைபெறும் நாடகப்பயிற்சிப் பட்டறைகள் எமது மாணவர்கள் கலந்து தமது அறிவை மேலும் விருத்தி செய்கின்றனர். வருடாவருடம் நடைபெறும் இல்லங்களுக்கு இடையேயான நாடகப்போட்டிகளில் வெற்றியீட்டிய இல்லங்கள் குறிப்பிடவேண்டியுள்ளது.

**இல்லங்களுக்கு இடையே நடைபெற்ற நாடகப் போட்டிகளின் பெறுபேறுகளும் இல்லங்களின் நிலையும்**

| | பிரிவு | நாடகங்கள் | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|
| 1998 | கனிஷ்ட பிரிவு | கூடிவாழ்ந்த கூடு | அழகர் | | |
| | | ஒற்றுமையின் வெற்றி | | பிகனல் | |
| | | சாயம் வெழுத்த நரியார் | | | ஸ்கொட் |
| | சிரேஷ்ட பிரிவு | தாயுமானார் நாயுமானர் | பிகனல் | | |
| | | மழை | | அழகர் | |
| | | நட்பின் வெற்றி | | | ஸ்கொட் |
| 1999 | கனிஷ்ட பிரிவு | புத்தியுள்ள தொப்பிக்காரன் | ஸ்கொட் | | |
| | | எம்மைக் காப்பவர் | | அழகர் | |
| | | முன்னொரு காலத்திலே | | | பிகனல் |
| | சிரேஷ்ட பிரிவு | புழுவாய் மரமாகி | ஸ்கொட் | | |
| | | மாதொருபாகம் | | பேஜ் | |
| | | கற்பூர தீபம் | | | பிகனல் |
| 2000 | கனிஷ்ட பிரிவு | வேடனும் புறாக்களும் | பிக்னல் | | |
| | | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | | பேஜ் | |
| | | மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் | | | அழகர் |
| | சிரேஷ்ட பிரிவு | முகமற்ற மனிதர் | அழகர் | | |
| | | மானிடச் சிக்கல் | | பேஜ் | |
| | | நீளும் பாலை | | | ஸ்கொட் |
| 2001 | கனிஷ்ட பிரிவு | அடாது செய்தார் | அழகர் | | |
| | | கெடுவான் கேடு நினைப்பான் | | பேஜ் | |
| | | ஒற்றுமையே பலம் | | | பிக்னல் |
| | சிரேஷ்ட பிரிவு | மனமே தூங்காதே | அழகர் | | |
| | | எங்கள் குருதி சிவப்பு | | பிக்னல் | |
| | | இப்போதைக்கு ஏதுவழி | | | பேஜ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாடக மன்றத்தின் ஊடாக இல்லங்கட்கு இடையே வருடா வருடம் நடைபெறும் நாடகப்போட்டிகள் ஊடாக மாணவர் திறன்கள், வெளிக் கொணரப்பட்டுள்ளன. பல சிரமங்கள் மத்தியில் முன்னின்று உழைக்கும் இல்ல ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், நடுவர்களாக கடமையாற்றி உதவும் கலைஞர் பெருமக்களுக்கும் நாடக மன்றம் நன்றி உடையது. தொடர்ந்தும் இச் செய்ற்பாடுகட்கு உங்கள் ஆக்கபூர்வமான உதவியை நாடுவோம்.

எம்மால் இயன்றவரை எமது மன்றத்தின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதுடன் தகவல்களை இம்மலர் வாயிலாக வெளிப்படுத்த வாய்ப்பளித்த அதிபர் அவர்கட்கும் எமது மன்றம் சிறப்பாக செயற்பட என்றும் தயங்காது ஆலோசனை வழங்கும் அதிபர் திரு. அ. ம. அரணாசலம் அவர்கட்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் நன்றி கூறி எல்லாம் வல்ல நடராஜப் பெருமானைத் துதித்து நிறைவு செய்கின்றோம்.

*சி.சிவராஜன்*
*மன்றத் துணைக் காப்பாளர்*

# J/ Manipay Memorial English school Scout Association

## யா/ மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப்பாடசாலை

## சாரணர் குழு

**Principal** : Mr. A. M. Arunasalam

**Group Scout Leader** : Mr. S. Sivarajan

"தயாராய் இரு" என்பது எமது மகுட வாக்கியம் பல தசாப்தங்கள் மெமோறியல் சாரணர்அணி அகில இலங்கையிலேயே கொடிகட்டிப் பறந்த காலம் 6—10—1997இல் இருந்து இச் சாரணச் செயற்பாடுகளை முன்னேடுக்கும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளல், பயிற்சி வழங்கல், சின்னம் சூட்டுதல் என தற்போது நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டே போகின்றது. தற்போது நாற்பத்து ஆறு சாரணச் சிறார்கள் எமது அணியை அலங்கரிக்கின்றனர். எமது பணியிலே முதலுதவி, சமுதாய சேவை, சாரணியத்தின் ஊடாக மாணவர் திறன் விருத்தி, சிரமதானம், பொதுச்சேவை என்பவற்றுடன் பாடசாலை சார்பான நிகழ்வுகளின் போது தேவைகளுக்கேற்ப சாரணர்கள் கடமைகளைச் சரிவரச்செய்து பலரின் பாராட்டுக்களைப் பெறுகின்றனர்.

### பரிசுகளும் சாதனைகளும்

1997ற்குப் பின்பு இதுவரை மூன்று காங்கேசன்துறை மாவட்ட சாரணர் பாசறை விழா நிகழவைச் சந்தித்து இருக்கின்றோம். எமது சாரணர் அணி சிறப்பாகப் பாசறை வர்சத்தில் பங்குகொண்டு சாதனைகளை நிலைநாட்டியுள்ளது.

1998ம் ஆண்டு காங்கேசன்துறை மாவட்ட பாசறை வாசத்தில் பல முன்னணிப் பாடசாலைகளுடன் போட்டியிட்டுத் தீப்பாசறை நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இதற்காக சுற்றுக் கேடயம் வழங்கப்பட்டது.

1998ம் ஆண்டு அணிநடை பாசறை அமைப்பு, ஆவணங்களைப்பேணல் ஆகிய போட்டிகளிலும் பங்குபற்றி கிடைத்த புள்ளிகளின் அடிப்படையில் காங்கேசன்துறை மாவட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் இடத்தை எமது அணி பெற்றுக்கொண்டது. எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியின் முயற்சியினால் 1999ம் ஆண்டு நடாத்தப்பட்ட வருடாந்த சாணர் பாசறை விழாவில் [09/07/1999 – 11/07/99] மீண்டும் தீப்பாசறை நிகழ்வில் முதலாம் இடத்தை எமது அணி பெற்று பலரின் பாராட்டுக் களைப் பெற்றது. அவ்வருடம் ஆவணங் களைப் பேணல் 2ம் இடம், சமூக சேவை 2ம் இடம், அணிநடை ஆகியவற்றிலும் வெற்றிபெற்று புள்ளி அடிப்படையில் நாலாம் இடத்தை எமது பாடசாலை அணி பெற்றுக் கொண்டது. அத்துடன் "BEST LOG BOOK" பேணியமைக்காக சாரணத் தலைவர் சி. சிவராஜனுக்கு 2ம் இடம் கிடைத்தது. தொடர்ந்து 2000 ம் ஆண்டு நடைபெற்ற வருடாந்த தீப்பாசறை நிகழ்வில் இரண்டாம் இடம், சமூகசேவை முதலாம் இடம், ஆவ ணங்கள் பேணல் முதலாம் இடம், அணி நடை மூன்றாம் இடம் ஆகியவற்றைப் பெற்று காங்கேசன்துறை மாவட்டப் பாட சாலைகளில் புள்ளிஅடிப்படையில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத் தக்கது. படிப்படியாக எமது அணிவளர்ச்சி யடைந்து வருவதை இவ்விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

22.02.1999 முதல் பாடசாலை மட்டத் தில் சேர் பேடன்பவுல் தின சாரணியவிழா எமது பாடசாலையில் நடைபெறுகின்றது. இவ்வேளையில் பேடன்பவுல் நினைவு உரை யுடன், கலைநிகழ்களும், சாரணர்களுக் கிடையே நடாத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி வாழ்த்து அட்டைதயாரித்தல் போன்ற போட்டி களும் வெற்றி பெற்ற சாரணர், சாரணியர் களுக்கு சான்றிதழும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. இவ்வேளையில் எமது பாடசாலைச் சாரணர், சாரணியர், குருளைச் சாரணியர் சிறுதோழியர் இணைந்து செயற் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேபோல் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத் தால் நடாத்தப்படும் மாவட்ட நிலைப் போட்டி யில் (உலக சாரணர் நாள்) 1998ம் ஆண்டு எமது பாடசாலை நடிப்புப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து 1999ம் ஆண்டும் எமது பாடசாலை நடிப்புப் போட்டியில் முதலாம் இடத்தையே பெற்றுக் கொண்டது. 2000ம் ஆண்டுக்கான உலக சாரணர்கள் போட்டியில் சிகரம் அமைத்தலில் எமது அணி முதலாம் இடத்தைப்பெற்று பலரின் பாராட்டையும் பெற்றது. சாரணத் தலைவர்களுக்கான (ஆசிரியர்) கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தை திரு. சி. சிவராஜன் ஆசிரியர் பெற்று அதற்கான சான்றிதழையும் கேடயத்தையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இதேபோல் சாரணச் சிறார்களும் வினாடிவினாப் போட்டி யில் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். தனித்தனியாகவும் கட்டுரை, பேச்சுப்போட்டிகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங் களைத் தமதாக்கி பாடசாலை அணிக்கு பெருமை சேர்த்துத் தருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## பயிற்சியும் விருதுகளும்

எமது சாரணச் சிறார்களுக்கு காங் கேசன்துறை மாவட்ட சாரண ஆணை யாளர் திரு. செ. சௌந்தரராஜன், உதவி மாவட்ட ஆணையாளர் திரு. ந. சற்குண ராஜா பயிற்றுநர் தலைவர் திரு நா. போஜன் ஆகியோர் பயிற்சி வழங்கலில் பெரிதும் உதவுகின்றனர். காலத்துக்குக்காலம் அணித் தலைவர் பயிற்சிக்கும், சின்னங்களைப் பெறும் பயிற்சிகட்கும் சாரணர்கள் சென்று உயர் வடைகின்றனர். பாடசாலை மட்டத்தில் வேண்டிய பயிற்சிகள் சாரணத் தலைவர் (ஆசிரியரால்) அணித் தலைவர்களினால் வழங்கப்படுகின்றது. சாரணர்களை அணி களாகப் பிரித்து அணித் தலைவர்களால் பயிற்சி வழங்கப்படுகின்றது. 1997ம் ஆண்டுக் குப் பின்பு இதுவரை பிரதம ஆணையாளர் விருதினைச் செல்வன். சி. கேதீஸ்வரன், செல்வன் ஜெ. பரணீதர் சர்மா ஆகியோர் பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் தற் போது வேறு பாடசாலைகட்குச் சென்றுள்ள னர். மாவட்ட ஆணையாளர் கட்டிழையை செல்வன்கள். சுவர்ணன், ஞா. ஐங்கரன், இராஜேஸ்கண்ணா, யோ.தனுஜன், செ.புஸ்ப ராஜா, இ. ஐங்கரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். ஏனையவர்களில் பலர் சாரணர் விருது பெற்றுள்ளனர்.

## நிதி

வேலைவார அட்டை சாரணியர் கூட் டங்களின்போது பெறப்படும் நிதி அன்பளிப்பு கள் மூலம் ஓரளவு நிதியை எமது அணி வங்கியில் வைப்புச்செய்து வைத்துள்ளது. சாரணர் செயற்பாடுகட்கு இந்நிதி பயன்படுத் தப்படுகிறது. சாரண தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் இந்நிதிச் செயற்பாடு இருப் பதனால் நல்லமுறையில் பயன்படுத்தப்படுகி றது. இதற்காக 22.07.1999இல் இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் சேமிப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கு இல/14792 என்ற கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அந்தக் கணக்கின் ஊடாக சாரணர் நிதி நடைமுறைப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



மெமோறியலில் சாரணர் சாதனைக்கு சான்று பகர 1964 இல் ஒரு பார்வை (ஆவணப்படுத்தலில் ஒரு பணி)

## சேவை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், சீரணி நாகம்மாள் கோவில், நுணசை முருகன் ஆலயம், துர்க்கையம்மன் ஆலய உற்சவ காலங்களில் கணிசமான சாரணர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அதேபோல் பொது நிறுவனங்கள் அழைக்கும்போது சென்று தமது பணிகளை ஆற்றி வருகின்றனர்.

சாரணர் செயற்பாடுகட்கு பாடசாலை அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்களும் உபஅதிபர், ஏனைய ஆசிரியர்கள் பெற்றோர்கள் காட்டிவரும் ஆதரவிற்கும் உதவிக்கும் எமது நன்றி எமது சாரணர்கள் ஜனாதிபதி விருதுவரை பெற்றுச் சிறந்தோங்க வேண்டுமென்று வாழ்த்துவதோடு இவ் ஆண்டு ஜனாதிபதி விருது பெறுவதற்கு சாரணர்கள் பயிற்றப்படுவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*சி. சிவராஜன்*
*குழு சாரணர் தலைவர்*
*(ஆசிரியர்)*

# J/ Manipay Memorial English school Guides Association

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# சாரணிய இயக்கம்

**காப்பாளர்** : திரு. அ.மு. அருணாசலம் (அதிபர்)

**வழிகாட்டுநர்கள்** : திருமதி. ய. சுந்தரலிங்கம் (ஆசிரியை)
திருமதி. வி.ஜெ.பை. மூர்த்தி (ஆசிரியை)

**குழாம் தலைவர்கள்** : அ. சிந்துஜா, சி. சிவசிறி
கி. விக்கினேஸ்வரி, ப. வினோபா
ஜெ.பை.மு. வைஸ்ணவி

இவ் இயக்கமானது கல்வி பெறும் மாணவர்களது அறிவு, திறன், மனப்பாங்கு, தலைமைத்துவம் ஆகியவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் நன்கு திட்டமிட்டு செயற்பட்டுவரும் ஒரு மன்றமாகும்.

இப்பணியானது மாணவர்களது திறன்களை விருத்தி செய்யும் வகைகளில் பாடசாலை மட்டத்தில் சாரணிய ஸ்தாபகரின் நினைவுநாளை கொண்டாடும் முகமாக பல போட்டிகளை நடாத்தி ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளது.

யாழ் மாவட்ட சாரணிய மன்றம் நினைவு நாளைக் கொண்டாடும் முகமாக நடாத்தப்பட்ட வாழ்த்துமடல் தயாரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி வளர்ச்சிக்கு வளமூட்டும்

மெமோறியல் மலரே வருக! வருக!

பேபி சூட், பேபி புறக், சேட்ஸ், ஸ்கேட் அன்
பிளவுஸ், பலவண்ண சாறி வகைகள்
ஆண்களுக்கான சேட்டிங் சூட்டிங் அன்ட்
ரெடிமேட் ரவுசர்கள் அத்துடன் திருமணப்
பட்டுப் புடவைகள் பட்டு வேட்டிகள் . . . .





பல்வேறு வண்ணங்களில் தரமானதாக
மலிவாகப் பெற்றுக் கொள்ள
கைராசியான ஸ்தாபனங்கள்

ராசி சில்க்ஸ்

70, 71 A நவீன சந்தை
(உட்புறம்)
யாழ்ப்பாணம்

நல்லி சில்க்ஸ்

121/1 மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்


ராசி சில்க்ஸ்

237, மெயின் வீதி
கொழும்பு – 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் சுடர்விட்டு

பிரகாசிக்க வாழ்த்துகின்றோம்



# New Pragas Fancy Palace




மங்கையர் மனம் கவர் அழகுசாதனப்
பொருட்கள், அன்பளிப்புகள், மற்றும்
அனைத்து வகையான பான்சிப்
பொருட்களுக்கு நாட வேண்டிய
ஒரே இடம்

# நியூ பிரகாஸ் பான்சி பலஸ்


நியூ பிரகாஸ் பான்சி பலஸ்





63 A, நவீன சந்தை
யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருளைச் சாரணர் தலைவி திருமதி பு. சண்முகராஜா (ஆசிரியை) குருளைச் சாரணன் சி. சிவராகவனுக்கு சின்னம் சூட்டுகிறார்.



காங்கேசன்துறை சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. செ. சற்குணராஜா அவர்கள் சாரணர் விருது வழங்கும் காட்சி



பெண் சாரணியர் செ. அர்ஜாவுக்கு உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் சான்றிதழ் வழங்குகிறார். அருகில் பெண் சாரணிய வழிகாட்டுநர் திருமதி வி. ஜெ. வை. மூர்த்தி அவர்கள்.



காங்கேசன்துறை சாரண மாவட்ட ஆணையாளர் திரு. ந. சௌந்தரராஜன் சாரணர் தலைவர் திரு. சி. சிவராஜன் அவர்கட்கு (ஆசிரியர்) நியமனப் பத்திரம் வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியில் எமது மாணவர்கள் கலந்து கொண்டு பரிசில்களையும் பெற்றுள்ளார்கள்.

தலைவர்களுக்கான பயிற்சி பாசறையில் பங்குபற்றி பல சான்றிதழ்களை பெற்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சிரேஷ்ட சாரணியர்கள் எமது பாடசாலையிலிருந்து யாழ் மாவட்ட சாரணிய மன்றத்தில் இணைந்து பல துறைகளிலும் பயிற்சிகளை பெற்று பல சேவைகளை ஆற்றி வருகின்றார்கள்.

பாடசாலையில் நடைபெறும் அனைத்து விழாக்களுக்கும் எமது சாரணியர்கள் சேவையாற்றிவருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். எமது கல்விவலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட சிந்தனைநாள் விழாவினை எமது பாடசாலையில் நடாத்துவதற்கான முழு ஒத்தழைப்பையும் கொடுத்து எமது மாணவர்கள் உதவி செய்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வாறு எமது மன்றம் யாழ் மாவட்டம் நிகழ்த்தும் Rill, Camp, Rally போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி பல பயிற்சிகளையும் பண்புகளையும் பெற்று வருபவை சிறப்பாக குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்த வகையில் மன்றம் வளர்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்களாக விளங்குபவர்கள் எமது அதிபர். யாழ் மாவட்ட சாரணிய ஆணையாளர் திருமதி கி. சிவராஜா, எமது மாணவ உறுப்பினர்கள் அனைவருக்கும் இம்மன்றம் நன்றியைத் தெரிவித்து, இப்பணியின் ஊடாக எதிர்காலத்தில் சிறந்த சாரணியர்களை உருவாக்கி நாட்டின் நற்பிரஜைகளாக வாழ வழிவகுக்கமுடியும் என்ற நம்பிக்கையை தெரிவிக்கிறோம்.

*திருமதி. ய. சுந்தரலிங்கம்*
*(வழிகாட்டுநர்)*

# J/ Manipay Memorial English school Tamil Union

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# முத்தமிழ் மன்றம்

| | | |
|---|---|---|
| **அதிபர்/காப்பாளர்** | : | திரு. அ.மு. அருணாசலம் |
| **உப காப்பாளர்** | : | திரு. நா. பாலகிருஷ்ணன் |
| **தலைவர்** | : | செல்வன். து. சற்குணராஜா |
| **உப தலைவர்** | : | செல்வி. செ. தனேஸ்வரி |
| **செயலாளர்** | : | செல்வி. கி றாஜினி |
| **பொருளாளர்** | : | செல்வன். கு. தெய்வீகன் |

மாணவர்கள் மத்தியில் மறைந்து கிடக்கும் மொழிசார் திறன்களை வெளிக்கொணரும் நோக்குடன் எமது முத்தமிழ் மன்றம் செயற்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் எமது முத்தமிழ் மன்றம் பெரியார்கள் தினம் பேரறிஞர்களுக்கான விழா போன்றவற்றைச் சிறப்பாக நடாத்தியதன் மூலம் இலைமறை காயாக இருந்த அவர்களது திறன்களை மாணவர்கள் அறிய வாய்ப்பளித்திருக்கின்றது. மேலும் பேச்சுத் திறன் போன்றவற்றையும் தலைமைதாங்கும் பண்புகளையும் வளர்க்கும் நோக்கில் எமது மன்றச்செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. உலக மகளிர்தினம் போன்ற சிறப்பு நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நடாத்தியும் அதன்மூலம் அரியபல கருத்துக்கள் மாணவர்களுக்குச் சென்றடையும் வகையில் பல நிகழ்வுகளை நடாத்தி வருகின்றன.

1999ம்—2000ம் ஆண்டுக்கான பெரு விழாவாக முத்தமிழ்விழா ஒன்றை மிகச் சிறப்பான முறையில் நடாத்தி முடித்திருக்கின்றது. இவ்விழாவின்போது பேராசிரியர்களின் உரைகள் போன்றனவும் இயல், இசை, நாடக நிகழ்வுகளையும் நடாத்தி முத்தமிழின் பொருளை மாணவர்கள் உணரவகை செய்திருக்கின்றது. இவ்வாறான நிகழ்வுகளை மேற்கொள்ளுவதன் மூலம் மாணவர்களை கலைநிகழ்வுகளில் ஈடுபட ஆர்வத்தை தூண்டுவதான செயல்பாடாக அமைந்திருக்கின்றது. இத்தகைய செயற்பாடுகளை எமது மன்றம் தொடர்ந்தும் செயற்படுத்துவதில் அயராது உழைத்து வருவதையே தமது நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

மேலும் கடந்த ஆண்டு தனிநாயகம் அடிகள் தினம், ஞானப்பிரகாசர் தினம், காந்தி தினம், விவேகானந்தர் தினம், கம்பர், வள்ளுவர் தினம், பாரதி தினம் போன்றவற்றையும் நினைவுகூர்ந்து அவ்வறிஞர்கள் மகாத்மாக்களினதும், கவிஞர்களதும் அரும்பெரும் பணிகள் தமிழுக்கும் மக்களுக்கும் பல்வேறு வகையில் உதவியிருக்கின்றது என்பது பற்றிய கருத்துக்களை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நன்மையடையும் பல நிகழ்வுகளை எமது மன்றம் செயற்படுத்தி வருகின்றது. இத்தகைய நிகழ்வுகள் தொடர்வதன் மூலம் மேலும் பல அரிய கருத்துக்களை அறிந்து கொள்ளும் வகையில் எமது மன்றம் எதிர்காலத்திலும் செயற்பட்டு எமது சக மாணவர்கள் பலன் அடையும் வகையில் எமது மாணவர்கள் மன்றம் தம் பணி தொடரும் என்பதில் ஐயமில்லை.

*செயலாளர்*
*முத்தமிழ் மன்றம்*

## J/ Manipay Memorial English school Hindu's Union

## யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# இந்துமா மன்றம்

| | | |
|---|---|---|
| **காப்பாளர்** | : | திரு. அ.மு. அருணாசலம் |
| **உபகாப்பாளர்** | : | திருமதி. வி.ஜே.பை. மூர்த்தி |
| | : | திரு. சி. இராசரத்தினம் |
| **தலைவர்** | : | செல்வன். க. முருகதாஸ் |
| **செயலாளர்** | : | செல்வி. தி. சுலோஜனா |
| **பொருளாளர்** | : | செல்வன். செ. சிவரூபன் |

1994, 1995ஆம் ஆண்டுகளில் இந்து மாமன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திரு.சி.இராசரத்தினம், திருமதி. வி.ஜெ.பை. மூர்த்தி ஆகியோர் கடமை ஆற்றினர். 1994ஆம் ஆண்டு இந்து மாமன்றத்தின் தலைவராக செல்வன். செ. சத்தியரூபனும் கடமையாற்றினர். அக்காலத்தில் நடேசர் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. அத்திருப்பணிக்குரிய செலவினங்களுக்கு பாடசாலை அதிபர், ஆசிரியர் அனைவரும் பண உதவி வழங்கினர். சகல சமய நிகழ்வுகளும் நடேசர் ஆலயத்தில் இந்து மாமன்றத்தின் சார்பாக சிறப்பாக நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ஆம் ஆண்டு இந்து மாமன்றத்தின் தலைவராக செல்வன். சி.சதீஸ்குமாரும் செயலாளராக செல்வன். செ.சத்தியரூபனும் கடமையாற்றினர். இவ் ஆண்டில் தை மாதம் முதல் புரட்டாதி மாதம் வரை சகல சமய நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன. 1995 நவம்பர் முதல் 1996 ஏப்ரல் மாதம் வரை இடப்பெயர்வு காரணமாக நித்திய, நைமித்தியக் கிரியைகள் நடைபெறவில்லை. இடப்பெயர்வுக்கு முந்திய காலங்களில் மூன்று வருடங்கள் சிவஸ்ரீ. வே. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் நித்திய, நைமித்தியக் கிரியைகள் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1996 வைகாசி மாதம் பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்பட்டு நித்திய பூசை ஆரம்பிக்கப்பட்டது. 1996, 97ஆம் ஆண்டுகளில் மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திருமதி. வி. ஜெ. மூர்த்தி, திரு. நா. பாலகிருஷ்ணன், திருமதி. சி. சோமநாதன், செல்வி.சு.முருகேசு ஆகியோர் கடமையாற்றினர். மன்றத்தின் தலைவராக செல்வன். த. மகாதேவனும் செயலாளராக செல்வன். த.பாலகிருஷ்ணனும் கடமை ஆற்றினர். வழமைபோல் சமய நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நடைபெற்றன. நவராத்திரி காலத்தில் தினமும் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

1998ஆம் ஆண்டு இந்து மாமன்றத்தின் தலைவராக செல்வன். நி.சுகிதரனும், செயலாளராக செல்வி. வ.கிரிஜாவும் கடமையாற்றினர். இவ் வருடமும் வழமைபோல் நித்திய, நைமித்தியக் கிரியைகள் நடேசர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. நவராத்திரி காலத்தில் சைவப்பெரியார்களை அழைத்து சிறப்புறச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1999ஆம் ஆண்டு இந்து மாமன்றப் பொறுப்பாசிரியர்களாக பின்வருவோர் கடமையாற்றுகின்றனர். திருமதி.வி.ஜே.பை.மூர்த்தி, திரு. கு. சோமாஸ்கந்தமூர்த்தி, திரு. நா. பாலகிருஷ்ணன், திருமதி. சி. சோமநாதன், திரு. க. கனகேஸ்வரன், திருமதி. ப. முருகதாஸ், திருமதி. பி. சபாநாதன், திரு. து. சிவஞானம், திருமதி. ச. சத்தியபாலன், திரு. பா. பிறேமரஞ்சித், திரு. க. சதீஸ், செல்வி. வினுத்தா — மன்றத்தின் தலைவராக செல்வன் மிகுந்தனும், செயலாளராக செல்வி. ஜெ. அர்ஜனாவும் கடமையாற்றுகின்றனர்.

பாடசாலை நடேசர் ஆலயத்தில் மட்டுமன்றி மருதடி விநாயகர் ஆலயத்திலும் இந்து மாமன்றத்தின் சார்பில் உற்சவ காலங்களில் சிரமதானப் பணி, தொண்டர் பணிகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடப்பட வேண்டியதாகும். மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய் சோதி வேம்படி காளி கோயில் ஆகிய ஆலயங்களில் பாடசாலை மாணவர் பஞ்ச புராணம் ஓதல், பஜனை பாடுதல் போன்ற நிகழ்வுகளிலும் பங்குகொள்வதும் குறிப்பிடப்பட வேண்டியவையாகும்.

2000ஆம் வருடம் இந்து மன்றம் தமது செயற் திட்டங்களாக மாணவர்களிடம் சமய அறிவூட்டும் விதமாக விரிவுபடுத்தியது. பண்ணிசை, தேவாரம் மற்றும் திருக்குறள் மனனம், சமய அறிவுத் தேர்ச்சி ஆகிய விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தியது. 1964ஆம் வருடம் குடமுழுக்குச் செய்யப்பட்ட எமது நடேசர் ஆலயத்தை மீளவும் புனருத்தாரணம் செய்து திருக்குடமுழுக்குச் செய்ய ஆவலுடையோமே ஆயினும் நடேசப்பெருமானின் திருவருளையும் அடியார்களின் கருணையையும் வேண்டி நிற்கிறோம்.

*செயலாளர்*
*இந்து மன்றம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ Manipay Memorial English school Christians Union

## யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# கிறிஸ்தவ மன்றம்

| | | |
|---|---|---|
| **அதிபர்/காப்பாளர்** | : | திரு. அ.மு. அருணாசலம் |
| **உபகாப்பாளர்** | : | செல்வி. செ. றஜனி |
| | : | திரு. இ.ஜே. லெஸ்லி |
| **தலைவர்** | : | செல்வன். அ. அற்புதராஜா |
| **உப தலைவர்** | : | செல்வன். சி. தேவகுமார் |
| **செயலாளர்** | : | செல்வி. ஜெ. யூடிற் |

1964ம் ஆண்டு உத்தியோக பூர்வமாக இம்மன்றம் அமைக்கப்பட்டது. ஆயினும் பாடசாலையின் ஆரம்பகாலந்தொட்டே எமது கல்லூரி முழுமையாக கிறீஸ்தவ நெறிகளைத் தழுவி வளர்ந்தது என்பதையும் கருத்தில் கொள்வது பொருத்தம். அன்பு, அகிம்ஷை, இரக்கம், ஈகை ஆகிய கிறீஸ்தவ நெறிப்பண்புகள் இம்மன்றத்தின் மூலநாதமாக மன்ற மாணவச் செல்வங்களுக் கூடாகச் சமுதாயத்தைச் சென்றடைந்திருப்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றோம். கிறிஸ்தவ சமய அறிவை விருத்திசெய்வதற்காக வருடந்தோறும் எழுத்துப்பரீட்சைகள் நடாத்தி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கிவருகிறது. கிறிஸ்துவின் ஞான அருள்பரப்பும் நிகழ்வாக பாடசாலையில் பிரதிவருடமும் ஒளிவிழா மிகச்சிறந்த முறையில் நடைபெற்று வருவது சிறப்பம்சமாகும். 1995ல் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக ஒளிவிழா நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடைபெறவில்லை. 96, 97, 98 ல் ஒளிவிழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. ஏறக்குறைய 300 கிறீஸ்தவ மாணவர்களைக் கொண்ட இம்மன்றம் ஏனைய சகோதரசமய மன்றங்களுடன் அன்னியோன்னியமாக செயல்பட்டு வளர்ந்து வருவது ஒரு சிறப்பம்சமாகும். எமது மன்ற வளர்ச்சி கருதி இதுவரைகாலமும் உளமார்ந்த ஆசிகளை வழங்கிய அனைத்து கிறிஸ்தவ மதகுருமார்களுக்கும் விசேடமாக இம்மன்ற வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் பெரும் உதவிகளை வழங்கிய மானிப்பாய் ஏலிம் சிறுவர் இல்லப் பணிப்பாளர் செல்வி அனிற்றா வோர்ட், மானிப்பாய் அருள் மனைச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த திரு. மகிழ்ராஜ் தற்போதைய முகாமையாளரும் 96,97ல் இருந்தவருமான திரு. மோகன் ஆகியோருக்கும் இவ் இல்லப் பிள்ளைகளுக்கும் எம்மன்றத்தின் நன்றிகள்.

ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை இம்மன்ற வளர்ச்சிக்கு வழிகாட்டிய அதிபர்கள், அசிரியர்கள் மாணவர்கள், நிர்வாக சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் எம் மன்றத்தின் சார்பில் நன்றிகள்.

*செயலாளர்*
*கிறிஸ்தவ மன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CADATE'S GROUP - J/M.M.E.S

## பாடசாலை இளம் பொலீஸ் பயிலுநர் குழு



இடமிருந்து வலம் : (முன்வரிசையில் அமர்ந்து இருப்பவர்கள்) லெப்ரினனன்ட் என். செபமாலை, கோப்ரல் செ. சிவபாதம், அதிபர் திருமதி ந. சிவானந்தராஜன், கோப்ரல் எஸ். சேக்ஸ்பியர், பொறுப்பதிகாரி திரு. வே. சுந்தரதாஸ் அவர்கள் (முன்னாள் அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ Manipay Memorial English school Etchics

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# ஒழுக்காற்றுத்துறை

**அதிபர்/காப்பாளர்** : திரு. அ.மு. அருணாசலம்

**பொறுப்பாசிரியர்கள்** : திரு. சி. சிவராஜன்

: திருமதி. வி.ஜே.பை. மூர்த்தி

**சிரேஷ்ட மாணவத்தலைவன்** : செல்வன். சி. மயூரன்

**சிரேஷ்ட மாணவத் தலைவி** : செல்வி. செ. ரூபினி

வடபுலத்தில் ஏட்டுக் கல்வியுடன் பண்பாட்டு ஒழுக்கக்கல்வியும் மாணவர்களுக்கு வழங்கிய முன்னணிப் பாடசாலைகளில் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும் ஒன்றாகும். விசேடமாக ஒழுங்காற்றுத்துறைச் செயற்பாடுகளில், மெமோறியலுக்கு என வேறுபட்ட, தனித்துவமான பண்பாட்டுத் துறைகள் உண்டு. நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலேய நாட்டுக் கல்வியதிகாரி ஸ்கொட் ஒழுங்காற்றுத்துறை மேம்பாடு சார்பாக பாராட்டிப் பரிந்துரைக்கப்பட்ட பாடசாலை இது.

கோட்ட, வலய, மாவட்ட மாகாண மட்ட உயர் கல்வியதிகாரிகளினால், செயற்பாடுகளுக்காக விதந்து பாராட்டுப்பெற்ற பெருமையுண்டு. ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் செல்வி. தி. பெரியதம்பி திரு.க.கந்தசாமி ஆகியோர் பாராட்டி எழுதிய வரலாற்றுக் குறிப்புகள் எமது ஒழுங்காற்றுத் துறையை மேலும் வளம்படுத்த உதவின.

வருடாவருடம் ஒழுங்காற்றுத்துறையை மேம்படுத்தவென பெப்ரவரி 10ம் நாள் மாணவத் தலைவர் தினமாக (Prefect Day) உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்படுகிறது. வருடந்தோறும் திட்டமிட்டு பயிற்சி அளிக்கப்படும். சுமார் 30ற்கு மேற்பட்ட மாணவத் தலைவர்கட்கு இத்தினத்தில் மாணவத் தலைவர் சின்னம் கல்விப்பணிப்பாளர்கள், மதகுருமார்கள், நல்லாசான்கள் ஆகியோர் கூடியசபையில் சத்தியப்பிரமாணம் செய்து சூட்டப்படும். மேற்படிநிகழ்வு எமக்கே உரிய ஒரு தனிப்பண்பாகும். எமது ஒழுங்காற்றுத் துறை வளர்ச்சிக்கு அயராது உழைத்த அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியப் பெருந்தகைகள், பெற்றோர்கள் ஆகியோரை நன்றியுடன் நினைக்கின்றோம். விசேடமாக 1991ம் வருடம் தொடக்கம் 1995ம் வருடம் வரை எமது ஒழுங்காற்றுத்துறை வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றி வளப்படுத்திய நல்லாசான்கள் திரு. ச.விமலராஜன் அவர்கள் மெமோறியல் சமூகம் என்றும் மறக்காது.

எதிர்காலத் தலைமுறைக்கும் முயற்சியோடும் மாணவர்களாகிய நாம் எம்மைப் புடம்போட்டு வளர்க்க, மெமோறியல் ஒழுங்காற்றுத்துறை வழிகாட்டல்களை ஏற்று நடக்க வேண்டியது மிக அவசியமாகும்.

*சி.மயூரன், செ.ரூபினி*
*சிரேஷ்ட மாணவத் தலைவர்கள்*
*ஒழுங்காற்றுத்துறை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## J/ Manipay Memorial English school Science & Mathematics Association

## யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# விஞ்ஞான கணித மன்றம்

| | |
|---|---|
| காப்பாளர் | : திரு. அ.மு. அருணாசலம் (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்கள் | : திரு. க. கனகேஸ்வரன் — திருமதி. ப. முருகதாஸ் |
| | திரு. கு. சோமாஸ்கந்தமூர்த்தி — செல்வி. சி. சிற்றம்பலம் |
| | செல்வி. தா. சிறீகாந்தன் — திருமதி. பா. சிவகுமாரன் |
| | செல்வி. மு. ராஜிதபாமினி — திருமதி. சுதா ரமேஸ் |
| தலைவர் | : செல்வி. க. பிரதீபா |
| உபதலைவர் | : செல்வன். வி. யேசுதாசன் |
| செயலாளர் | : செல்வி. ச. விஜிதா |
| உபசெயலாளர் | : செல்வன். கை. சுபாகர் |
| பொருளாளர் | : செல்வன். ச. சுவர்ணன் |
| பத்திராதிபர் | : செல்வி. ஜி. விக்னேஸ்வரி |

எமது விஞ்ஞான கணித மன்றம் மாணவர்களின் விஞ்ஞான கணித அறிவை மேம்படுத்த பாடுபட்டு வருகின்றத. 1996 ஆம் ஆண்டு முதல் கடந்த வருடம் வரை இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்த திருமதி.ச.இரத்தினசிங்கம் அவர்களின் வழி காட்டலில் இம்மன்றம் பாராட்டக்கூடிய வகை யில் செயற்பட்டு வந்துள்ளது.

வருடாவருடம் மாணவர்களிடையே "வினாடிவினா" போட்டி நடாத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் பட்டு வருகின்றது. எமது மாணவர்கள் கோட்ட, வலய மட்ட விஞ்ஞான கணித பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றி சான் றிதழ்கள் பெற்றுள்ளனர். 1999அம் ஆண்டு கணித விஞ்ஞான கண்காட்சி நடாத்தப் பட்டது. இதில் காட்சிக்கு வைக்கப்பட்ட காட் சிப்பொருட்கள் கோட்ட மட்ட கண்காட்சிக்கு தெரிவு செய்யப்பட்டன. வானியல் தொடர் பான அறிவை விருத்தி செய்யுமகமாக தரம் 7, 9 மாணவர்களுக்கு 'வானியல் பாசறை' நிகழ்வு ஒழுங்கபடுத்தி திறம்பட நடாத்தப்பட்டது. அத்துடன் அறிவியல் வீடியோ படங்களும் அன்று காண்பிக்கப்பட்டன.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தி னால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விஞ்ஞான கண்காட்சிக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.மாணவர்களிடையே கணித விஞ்ஞான அறிவை வளர்க்கும் முகமாக "சஞ்சிகை" ஆக்கம் செயற்படுத்தப்பட்டது.

இம் மன்றத்தின் செயற்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து வழிகாட்டிவரும் அதிபர், பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

ச. விஜித்தா
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ Manipay Memorial English school Advanced Level Union

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# உயர்தர மாணவர்மன்றம்

**அதிபர்/காப்பாளர்** : திரு. அ.மு. அருணாசலம்

**உபகாப்பாளர்** : திரு. சொ. ஜெயவீரசிங்கம்

**தலைவர்** : செல்வன். கு. சசிக்குமார்

**உப தலைவர்** : செல்வன். து. சற்குணராஜா

**செயலாளர்** : செல்வி. செ. தனேஸ்வரி

**பொருளாளர்** : செல்வி. ம. தமயந்தினி

1977ம் வருடம் முதன்முதலாக ஏழு அங்கத்தவர்களுடன் அமைக்கப்பட்ட எமது மன்றம் 23 வருடங்களின் பின்னர், 190ற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் பல சாதனை களைப்புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. 1981ம் வருடம் முதன்முதல் பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் புகுந்து வரலாறு படைத்தவர் எமது மன்ற உறுப்பினர் செல்வி பத்மாவதி சுப்பிரமணியம் ஆவார். இவரைத் தொடர்ந்து வருடாவருடம் பலர் பல்கலைக் கழகம் சென்று பட்டதாரிகள் ஆகின்றனர். இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல 2000ம் வருடம் க.பொ.த. உயர்தர பரீட்சையில் புதியபாடத்திட்டப்படி மூன்றுபாடங்களிலும் A பெறுபேறு பெற்று 285 புள்ளிகள்— 81.66 சராசரியைப்பெற்று எமது கலைத்துறை மாணவன் செல்வன் குணம் சசிக்குமார் யாழ் மாவட்டத்திலேயே முதனிலையில் (District Level) சித்திபெற்றமையும் அதே பிரிவில் செல்வன் துரைராசா சற்குணம் மாவட்டத்தில் 11ம் நிலையில் சித்தியடைந்ததும் மிக்கமகிழ்ச்சி தருகிறது. 1999ம் வருடம் பரீட்சையில் செல்வி ந. குமுதா மாவட்டத்தில் 11ம் நிலையில் சித்தியடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

*செயலாளர்*

## யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
## பாடசாலைக் கூட்டுறவு விநியோகச் சங்கம்
## School Co-operative Supply Society – Regd.No J/1568

1964ம் ஆண்டு எமது பாடசாலையில் திரு. W.G. அன்னப்பா ஆசிரியர் அவர்களது முயற்சியால் மாணவர்களது தேவைகளை நிறைவு செய்ய வேண்டி ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் இன்றுவரை தனது செயற்பாட்டைத் திறம்பட செய்துவருகிறது. மாணவரது கற்றல் உபகரணங்களை தனியார் விற்பனை நிலையங்களைவிட மிகக் குறைந்த விலையில் வழங்கி சேவையாற்றுகிறது. பாடசாலை அலுவலகத்துக்குத் தேவையான காகிதாதிகளையும் இச்சங்கமே வழங்கி வருகிறது. 1995 இடப்பெயர்வின்போது, இச்சங்கச் சொத்துக்கள் யாவும் இழக்கப்பட்டது. ஆயினும் ஆசிரியர், மாணவரது பெருமுயற்சியால் இழப்புகள் ஈடுசெய்யப்பட்டு செயற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998, 1999, 2000 காலப்பகுதிகளில் ஆசிரியர்கள் திரு. சொ. ஜெயவீரசிங்கம், திரு. சி. இராசரட்ணம் அகியோர் காப்பாளர்களாகவும் இருந்து வழிநடாத்தினர். 10 மாணவ அங்கத்தவர்கள் வருடந்தோறும் இச் சங்கத்தை நிருவகித்தனர். திரு. க. விஸ்வநாதன் (பழைய மாணவன்) கூட்டுறவுப் பணியாளராகப் பணியாற்றி, சங்கத்தை நடாத்திவருவதும் மேலும் அங்கத்தவர்களது ஆதரவும், சரியான வழிகாட்டலும் கிடைக்கும் பட்சத்தில், சங்கத்தை விருத்தி செய்யவும், அங்கத்தவர்களுக்குக்கூட உதவி வழங்கவும் வாய்ப்பு உண்டு.

காப்பாளர் - திரு. அ.மு. அருணாசலம்
ஆசிரிய ஆலோசகர்கள் - திரு. க. சிவநேசன்
திருமதி. யோ. கமலசிங்கம்

திரு. செ. கணேந்திரன்
செயலாளர்

# J/ Manipay Memorial English school Agriculture Union

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# விவசாய மன்றம்

| | | |
|---|---|---|
| **அதிபர்/காப்பாளர்** | : | திரு. அ.மு. அருணாசலம் |
| **பொறுப்பாசிரியர்** | : | திரு. சி. சிவராஜன் |
| **தலைவர்** | : | செல்வன். சி. சுதாகர் |
| **உப தலைவர்** | : | செல்வன். செ. பிரகாஷ் |
| **செயலாளர்** | : | செல்வன். ம. புஸ்பரூபன் |
| **பொருளாளர்** | : | செல்வன். தி. நிறோஜன் |

எமது மன்றத்தின் 1995ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தின் செயற்பாட்ட அறிக்கையைத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். விவசாய, விஞ்ஞான பாடப் புலத்துடன் தொடர்பான இம்மன்றத்தின் ஊடாக மாணவர் பாடசாலையை அழகுற வைத்திருப்பதற்கு பூந்தோட்டத்தை அழகுசெய்வதில் முன்னின்று பணியாற்றுகின்றது. பூச்சட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு பூமரங்கள் நாட்டப்பட்டுள்ளன. நாற்றுச் சாடிகளில் குரோட்டன், செவ்வரத்தை, நிழல்மரங்கள் போன்ற மரங்கள் பராமரிக்கப்பட்டு உரிய இடங்களில் நாட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு கல்விச் சுற்றுலா மூலம் மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு விவசாய அறிவு விருத்தி செய்யப்பட்டது. பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட விவசாய வினாடிவினாப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் கோட்ட, வலய மட்ட விவசாய அறிவுப் போட்டியில் பங்குகொண்டு வெற்றிபெற்றன. 1997ம் ஆண்டு கோட்ட மட்டத்தில் செல்வன் ம.பிரதீபனும், 2000தட ஆண்டு செல்வன். ம.புஸ்பரூபனும் தெரிவு செய்யப்பட்டது வலய மட்டப் போட்டியில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பாடசாலை மைதான சுற்றுப்புறத்தில் உள்ள விருட்சங்கள் அனைத்தையும் மாணவர்கள் பராமரிக்கின்றனர். எதிர்காலத்திலும் இப்பணி தொடர உள்ளதை மகிழ்வுடன் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

*- Plant A Tree For Posterity -*

ம. புஸ்ப ரூபன்
செயலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரி ஆசிரியர்களும் அலுவலக பணியாளர்களும் 2001



## ஒழுக்காற்றுத்துறை ஆசிரியர்களும், மாணவர்களும் 2001




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ Manipay Memorial English school

# ENGLISH UNION

| Year | 1999 | 2000 |
|---|---|---|
| Parton | Mr. A.M. Arunasalam | Mrs. C. Yogeswaran |
| Teacher's In Charge | Mr. R. Rajakulasuriyar | Mr. R. Rajakulasuriyar |
| | Mrs. P. Shanmugarajah | Mr. E. J. Leslie |
| President | Miss. V. Thanusa | Miss. J. Nilani |
| Vice President | Mas. J. Paranetharasarma | Mas. J. Paranethrasarma |
| Secretary | Miss.S.Arjana | Miss. S. Kajenthini |
| Assistant Secretary | Mas. K. Sasikumar | Miss. S. Thaneswary |
| Treasurer | Miss. J. Jenitha | Miss. P. Vinitha |

It gives me great pleasure to submit the annual report of the Union for the year 1999 and 2000.

Due to the unstable political situation over the years, we were constantly disturbed in having the English activities on time. However, we conducted all such activities though a little late.

Our objective is to popularise the study and use of English through Music, Drama and Speech. Our executive committee organises competitions in singing, copy writing, reading, drama, dictation, creative writing, speech and oratory.

Our English celebrations are conducted each year in all its fervour and our children fair well on average. In the English Day Competition Divisional level, our students have faired creditably well and even at the zonal level, have clinched commendable places. True honours goes to our student Mas.Y. Thivahar for winning a third place in the all Island "Help Age SriLanka" senior Essay competition.

Our English Union is deeply indebted to our former Patron Mrs. C. Yogeswaran and our present Patron Mr. A. M. Arunasalam and our Vice Patrons Mr. R. Rajakulsuriar and Mr. E. Leslie for giving us all the guidance and encouragement which really contributed a great deal in making the English activities a success. Finally, I wish to thank our staff and students for their kind support given at all times.

*S. Gobinath*
*Secretary*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# St. John Ambulance Association and Brigade Sri Lanka
## Jaffna Rural District

# புனித யோன் அம்புலன்ஸ் சங்கமும் படையும்

**போஷகர்** : திரு. அ.மு. அருணாசலம் (அதிபர்)

**பொறுப்பாசிரியர்** : திரு. சி. சிவராஜன்

எமது பாடசாலையில் 1998ம் ஆண்டு முதல் புனித ஜோன் அம்புலன்ஸ் சங்கமும், படையும் சிறப்பாக இயங்கிவருகின்றது. எமது அணியில் 36 மாணவிகளும் 41 மாணவர்களும் அங்கத்தவர்களாக இருந்து பணியாற்றுகின்றனர். இவர்களுக்கான முதலுதவிப் பயிற்சியை எமது பகுதிக்குரிய மாவட்ட ஆணையாளர் திரு நா. போஜன் அவர்கள் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இங்கு பயிற்சிபெற்ற அணிகள் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்று தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுள்ளனர். மாணவர்கள் காலத்துக்குக் காலம் பல்வேறு தேவைகருதியும் விஞ்ஞான உயர் கல்விக்காகவும் வேறு பாடசாலைகட்கு சென்றதால் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துப் பயிற்சி கொடுக்கவேண்டிய தேவை உள்ளது.

எமது முதலுதவிப் பிரிவினர் மருதடி விநாயகர் ஆலயம், சீரணி நாகம்மாள் ஆலயம், நுணாசை முருகன் ஆலயம் ஆகியவற்றில் தமது சேவைகளைத் திறம்பட செய்து பலரின் பாராட்டுதல்களைப் பெற்றதுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகம் அவர்களிடம் பாராட்டு சான்றிதழும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளும் திறம்படக் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. தலைமைத்துவம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, கடமையைச் சரிவரச்செய்தல் போன்ற நற்பண்புகளை இம்மாணவர் இடையே காணமுடிகின்றது.

ஸ்ரீலங்கா புனித ஜோன் அம்புலன்ஸ் சங்கமும் படையும் — யாழ் கிராமிய மாவட்ட பத்தாவது ஆண்டு நிறைவு விழா 11,12/11/2001 மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் எமது அணியினர் பங்கு கொண்டு சண்டிலிப்பாய் பிரிவில் சிரேஷ்ட பிரிவு ஆண்களுக்கான முதலுதவிப் போட்டி முதல் இடம் பெற்று சான்றிதழைப் பெற்றுக் கொண்டு பாடசாலைக்கு பெருமை தேடித் தந்தது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவ் அமைப்புக்குப் பொதுவாக மாணவர்கள் ப. பத்மதீபன், சு. ஈஸ்வரகண்ணன், இ. ராதிகா ஆகியோர் திறம்பட செயற்படுகின்றனர்.

தொடர்ந்தும் இப்பணி சிறந்தோங்கும் என்ற நம்பிக்கையுடன் எமக்கு ஆதரவு வழங்கும் மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன், பாடசாலை அதிபர் திரு அ.மு. அருணாசலம் அவர்கட்கும் நன்றி தெரிவித்து நிறைவுசெய்கின்றேன்.

*சி. சிவராஜன்*
*பொறுப்பாசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலைக்குரிய மணியை அமரர் ஏகாம்பரம் நினைவாக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலர் திரு. ந. சீவரத்தினம் குடும்பம் அன்பளிப்பு செய்து வைத்த காட்சி - 2001



சேர். பேடன் பவுல் நினைவு தின உலக சாரணர் விழாவின் போது அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்கள் உரையாற்றுகின்றார் - 2001.



பாடசாலை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினர் முதலுதவி அளிக்கும் நிலை - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lanka First Aid Association

# இலங்கை முதலுதவிச் சங்கம்

**போஷகர்** : திரு. அ.மு. அருணாசலம்

**பொறுப்பாசிரியர்** : திரு. சி. சிவராஜன்

இலங்கை முதலுதவிச் சங்கம் யாழ்ப் பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகத் தைக் கொண்ட ஒரு சேவை மனப்பாங்கு கொண்ட அமைப்பு ஆகும். இவ் அமைப் பில் எமது பாடசாலையைச் சார்ந்த 13 மாணவிகளும் 14 மாணவர்களும் அங்கத் தவராகப் பணியாற்றுகின்றனர். இந்த அமைப்பு ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு ஆரோக்கிய மான சமுதாயம் உருவாக உதவுதல் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல், ஆன்மீகப் பாதையில் நம்பிக்கையூட்டல், பயிற்சி பெற்ற தொண்டர் ஊடாக பொதுப் பணி போன்ற நற்கருமங்களை ஆற்றி வருகின்றது.

எமது மாணவர்கள் நாட்டின் நற் பிரஜைகள் ஆகவேண்டும் என்ற நல்ல நோக்கில் இவ்வமைப்பில் பணியாற்ற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. இவர்கள் முதலுதவி, பாடசாலை வீதியில் மாணவர் கள் செல்லும் ஒழுங்கு முறைகளைக் கவனித்தல் போன்ற நற்கருமங்களை தற் போது ஆற்றி வருகின்றனர். இவ் அமைப் புக்கு தலைவராக அப்போது பணியில் உள்ள யாழ் அரச அதிபர் தலைமை வகிக்கின்றார். செயற்குழுவின் தலைவராக வும் தொண்டர் படை ஆணையாளராகப் பணியாற்றும் திரு. நா. போஜன் அவர்கட் கும் எமது நன்றிகள். எம்மை வழிப்படுத் தும் எமது அதிபர் திரு. அ.மு.அருணாசலம் அவர்களுக்கும் இவ்வமைப்பின் சண்டிலிப் பாய் பிரதேச பொறுப்பாளராக இருந்து மேலும் எமது செயற்பாட்டை வலுவடையச் செய்கின்ற இலங்கை முதலுதவிச் சங்க அமைப்புக்கு பாடசாலை மட்த்தில் செல் வன்கள் த. மயூரன், இ. கோகுலகுமார், செல்விகள் சுகந்தினி ம. விஜயகீதா ஆகி யோர் பொறுப்பாக இருந்து செயற்படுத்து கின்றனர்.

5,6—5—2001 மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்திலும் 7,8—5—2001 சண்டிலிப்பாய் சீரணி நாகபூசனி ஆலயத் திலும் தமது பணியை வெகு சிறப்பாக ஆற்றியுள்ளனர். தொடர்ந்தும் இவர்கள் பணி சிறப்பாக நடைபெறும் எனக்கூறி நிறைவு செய்கின்றேன்.

*சி. சிவராஜன்*
*பொறுப்பாசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ Manipay Memorial English school Interect Club

## யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# இன்ரறக்டகழகம்

| | | |
|---|---|---|
| **அதிபர்/காப்பாளர்** | : | திரு. அ.மு. அருணாசலம் |
| **துணைக்காப்பாளர்கள்** | : | திரு. க. கனகேஸ்வரன் |
| | : | செல்வி. ந. மங்கேளஸ்வரி |
| **தலைவர்** | : | செல்வன். பா. தினேஸ் |
| **செயலாளர்** | : | செல்வன். உ. சுரேஷ் |
| **பொருளாளர்** | : | செல்வி. பா. அருள்மதி |

இன்ரறக் கழகம் என்பது சர்வதேச ரீதியில் 14–18 வயதுக்கிடைக்கப்பட்ட இளைஞர்களை, இன்முகத்துடன் இணைத்து, இணைக்கப்பட்ட நட்புறவுடன், தான் வசிக்கும் சமூகத்திற்கும், நாட்டுக்கும் சேவை செய்து வாழும் ஒரு கூட்டுறவு வாழ்க்கையேயாகும்.

சகல இன்ரறக் கழகங்களுடன் றோட்டரிக் கழகங்களின் அனுசரணையுடனேயே இயங்கும். இலங்கையில் இத்தகைய இன்ரறக் கழகங்கள் மெமோறியல் இன்ரறக் கழகம் உட்பட 102 உண்டு. இதைவிட 150 நாடுகளில் 7500 இன்ரறக் கழகங்களூடாக 17500 உறுப்பினர்கள் இணைந்து சேவை செய்கிறார்கள்.

இந்த சேவையின் நற்பணிகளை எமது பாடசாலையும் பெற்றுக்கொள்ள விரும்பிய போது எனக்கு வழிகாட்டிய றோட்டரியன் V.T. சிவலிங்கம் அவர்கள் 1993ம் வருடம் ஜுன் மாதம் 23ம் திகதி யாழ் றோட்டரிக் கழகத் தலைவர் Rtn.PH.FE. சரவணபவன் , செயலர் Rtn.PH.S M. T. திருநந்தகுமார் ஆகியோர் தலைமையில் Rtn. அ. பஞ்சலிங்கம் (வடபுலக் கல்வி மாந்தருள் ஒருவர்) ஆசிகூற சம்பிரதாய பூர்வமாக அதிபர் அ.மு. அருணாசலம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மொமோறியலில் முதலாவதாக இன்ரறக் கழக ஆசிரிய ஆலோசகர்களாக திருவாளர்கள் ச. விமலராஜன், இ. இராஜகுல சூரியர் ஆகியோர் பொறுப்பேற்றமையும் முதலாவது தலைவராக, பா. அரிஹரனும், செயலாளராக க. பாலமுருகேசனும் கடமையேற்றமையும் வரலாற்றுக் குறிப்பு ஆகும்.

ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து எழுச்சி பெற்ற ஒரு சேவைக் கழகமானது 1995 காலப்பகுதியில் பதினான்கு ஆயிரம் ரூபா செலவில் விழா அலங்கரிக்கும் சரமாலையை பாடசாலைக்கு வழங்கி, அதனூடாக சேவையை ஆரம்பித்தது 1994ல் கொழும்பு மகரஹமவில் நடைபெற்ற அகில இலங்கை இன்ரறக் கழக சம்மேளனக் கூட்டத்தில், கழக ஆலோசக ஆசிரியர் திரு. சி. சிவராஜன் தலைமையில் ஆறு அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். 1995ல் மீண்டும் கொழும்பில் நடைபெற்ற சம்மேளனக் கூட்டத்தில் ஆலோசக ஆசிரியை செல்வி சி. சிற்றம்பலம் அவர்களது தலைமையில் 12 அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். 1995ல் சந்தித்த இடப்பெயர்வின் பின் எமது இன்ரறக் கழகம் தீவிரமாகச் செய்பட முடியாவிடிலும் தனது சேவையை மட்டுப்படுத்திய அந்நிலையிலும் சிறப்பாகச் செய்தது. 1998,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999, 2000 வருடங்களில், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவ காலப்பகுதியில் அடியார்களின் வசதி கருதி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புச் சேவையைச் செய்தது. இதனால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு அந்தந்த வருடங்களில் முறையே, பாடசாலையில் வேலிப் பாதுகாப்பு, மேடையின் வடிவமைப்பு, றோனியோ இயந்திரக் கொள்வனவு ஆகியவற்றிற்கு உதவப்பட்டது. 2000ம் வருடம் ஏற்பட்ட இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்டு எமது பாடசாலையில் தங்கிய மக்களுக்கு உணவு, உடை, சவர்க்காரம் போன்றவற்றை வழங்கி உதவிசெய்தது.

எமது சேவை வளரவும், சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் கிடைக்கவும் நாம் எம்மைச் சேவைக்கு அர்ப்பணிக்கவேண்டும். We Serve எனும் மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இன்றைய அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்களாலும், இன்றறிக் கழக ஆலோசக ஆசிரியர்கள் திரு. க. கனகேஸ்வரன், செல்வி. ந. மங்களேஸ்வரி திரு. இ. வூாசு தேவன் ஆகியோரினதும் வழிகாட்டலில் 2001ம் வருடம் மே மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை மீண்டும் எமது கழகம் பலப்படுத்தப்பட்டு, 34 கழக அங்கத்தவர்களுக்கு சின்னஞ் சூட்டப் பட்டது. யாழ் றோட்டரிக்கழகத் தலைவர் Rtn. M.பஞ்சலிங்கம் அவர்களும் பிராந்திய ஆலோசகர் Rtn. R. வாமதேவன் அவர்களும் இவ் விழாவில் கலந்து சிறப்பித்தனர். இவ்வருடம் எம்மால் சேகரிக்கப்பட்ட நிதியில் 20,000/= ரூபாவை பாடசாலைக்கென்று ஒலிபெருக்கிச் சாதனம் ஒன்றை வாங்குவதற்காக வழங்கத் தீர்மானித்துள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றோம்.

*உ. சுரேஷ்*
*செயலாளர்*

## J/ Manipay Memorial English school Fellowship Organisation

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை நல்லுறவு மன்றம்

**தலைவர்** : திரு. க. கனகேஸ்வரன்
**செயலாளர்** : திரு. இ.ஜே. லெஸ்லி
**பொருளாளர்** : செல்வி. ந. மங்களேஸ்வரி

எமது கல்லூரியில் கடமைபுரியும் சகல நிரந்தர ஆசிரியர்களை நிரந்தர அங்கத்தவர்களாகவும், ஏனைய ஆசிரியர்கள் கல்வி சார் ஊழியர்கள் அனைவரையும் கௌரவ அங்கத்தவர்களாகவும் கொண்டு அமைந்ததே எமது மன்றம்.

இடமாற்றம், சேவையில் ஓய்வு, பதவி உயர்வு, கல்விசார் முன்னேற்றம் போன்றவற்றிற்குட்படும் மன்ற அங்கத்தவர் அனைவரையும் பாராட்டிக் கௌரவப்படுத்தல் எமது வழமையான செயற்பாடு. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவச் செல்வங்களைப் பாராட்டிக் கௌரவித்தல் நிகழ்வும் நடைபெறுகின்றது.

மன்ற உறுப்பினர்களின் மங்கள நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பித்து, வாழ்த்துப்பா வழங்கி ஆசிர்வதிக்கும் வேளையில் அமங்கல நிகழ்வில் கலந்து கண்ணீர் அஞ்சலி பிரசுரித்து அனுதாபங்களைத் தெரிவித்தும் வருகின்றது.

வலய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவச் செல்வங்களையும் அதற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பொறுப்பாக நின்று பயிற்றுவித்த ஆசிரியர்களையும் வாழ்த்தும் நிகழ்வும் இடம் பெற்று வருகின்றது.

புதிய கல்விச் சீர்திருத்த செயற்பாடுகள். அடங்கிய எமது பாடசாலை மட்டக் கருத்துரைகளில் மன்ற அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து தம் வாண்மை விருத்தியைப் பெருக்குவது குறிப்பிடத்தக்கது.

*செயலர்*

*ஆசிரியர் நல்லுறவு மன்றம்*

# J/ Manipay Memorial English school Home Science Union

## யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# மனைப்பொருளியல் மன்றம்

| | | |
|---|---|---|
| **அதிபர்/காப்பாளர்** | : | திரு. அ.மு. அருணாசலம் |
| **துணைக்காப்பாளர்கள்** | : | திருமதி. பி. சபாநாதன், செல்வி. சு. முருகேசு |
| **தலைவர்** | : | செல்வி. சா. தாட்சாயினி |
| **செயலாளர்** | : | செல்வி. செ. நேசமலர் |
| **பொருளாளர்** | : | செல்வி. மு. கோமதி |

தொழில்நுட்பப் பாடங்களில் ஒன்றான மனைப்பொருளியலைக் கற்கும் மாணவர்களது திறன்களையும் ஆற்றல்களையும் விருத்திசெய்யும் வகையில் இம்மன்றம் இயங்குகின்றது.

இதன்பயனாக பல மாணவர்கள் சிற்றுண்டிகள் தயாரித்தல், தையல், மலர் அலங்காரம், மலர் அலங்காரம், பன்னை வேலை. நெசவின் விளக்கம் என்பவற்றைத் திறம்படக்கற்று, அவற்றைக் கொண்டே சுயதொழில் செய்து வாழும் அளவுக்கு முன்னேறியுள்ளார்கள் இதன் பயனாக 1997ம் ஆண்டு மனைப்பொருளியல்கூடம் சிறுசிறு திருத்தங்களுடன் புனரமைக்கப் பட்டது.

இவற்றைவிட வாழ்க்கைக்குப் பயன் படக்கூடிய வகையில் வரவு செலவுகளை ஈடுசெய்யும் முறைகளையும், குழந்தைகளையும் நல்லமுறையில் வளர்க்கவும், மனையைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் சமுதாயத்துடன் இணைந்து வாழ்க்கையைக் கொண்டு செல்லவும் இம்மாற்றம் வழிகாட்டியுள்ளது.

பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் சுயதொழில் வாய்ப்பைப் பெறுவதற்கும் வருவாய் போதாத நிலையில் பக்கவருவாய் மூலம் முன்னேறுவதற்கும் இம்மன்றம் அறிவூட்டுகின்றது.

இம்மன்றம் சிறப்புற ஒத்துழைத்த அதிபர் அவர்கட்கும், ஆசிரியர்கட்கும் ஏனைய சேவைக்கால ஆலோசகர்களுக்கும் எமது நன்றிகள்.

*செயலாளர்*

*மனைப்பொருளியல் மன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ Manipay Memorial English school Old Students Association

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# பழைய மாணவர் சங்கம்

| | | |
|---|---|---|
| **காப்பாளர்** | : | திரு. இ. வசந்தசேனன் |
| **தலைவர்** | : | திரு. அ.மு. அருணாசலம் |
| **உபதலைவர்கள்** | : | திரு. க. திருநாவுக்கரசு |
| | : | திரு. ம. யேசுரட்ணம் |
| **செயலாளர்** | : | திரு. இ. ராஜயோகன் |
| **பொருளாளர்** | : | திருமதி. யோ. கமலசிங்கம் |

1964ஆம் வருடம் ஆரம்பித்து வைக்கப்பட்ட மொமோறியல் ஆங்கில பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மூன்றரை தசாப்தங்களாகப் பாடசாலை வளர்ச்சியில் அரும்பணியாற்றி வருவது சிறப்பம்சமாகும். ஆரம்ப காலங்களிலிருந்து தலைவர்களாக, அரும்பணியாற்றிய ஓய்வுபெற்ற அதிபர், பல்கலைமணி க. தம்பிராசா, திருவாளர்கள் சு. தருமசீலன், ஓய்வுபெற்ற அரச அதிபர் திரு. ஏ. ஜி. செபநாயகம், திரு. இரா. வசந்தசேனன் ஆகியோர் சங்கத்தை செழுமையாக வழிநடத்தியவர்கள். இவர்களோடு இணைந்து திருவாளர்கள் ம. யேசுரட்ணம், க. கமலசேகரம், க. திருநாவுக்கரசு, வ. திருநாவுக்கரசு, க. ம. இராஜேந்திரம், க. தெய்வேந்திரம், திருமதி. சி. சிவகுரு, செல்வி. பு. கெலக் குமாரசாமி, திரு. இரா.செல்வராசா போன்றோரும் தோளோடு தோள் நின்று பணி செய்தார்கள்.

மானிப்பாயின் மூத்த குடிமகனும், சட்டத்தரணியுமான அமரர் சிவா இராஜேந்திரன் பெருங் காப்பாளராக இருந்து வழிநடத்தினார்கள். க.பொ.த உ/த வகுப்பு அமைக்கப்பட்டமை தொடக்கம் இன்றுள்ள பேஜ் மண்டபம் அமைக்கும் வரையான பணி இவர்களுடையதே.

இன்று, தலைவராகக் கடமையாற்றும் பழைய மாணவனும் அதிபரும் ஆகிய திரு. அ.மு. அருணாசலம் தலைமையின் திருவாளர்கள் க. திருநாவுக்கரசு, சிவா இராஜயோகன், க. துரைசிங்கம், க. கெங்காதரன், க. நகுலேஸ்வரன், ச. சிவகுமாரன், ம. யேசுரட்ணம், த. ஆனந்தரூபன், திருமதி. த. பம்மாசனி, திருமதி. ச. இரத்தினசிங்கம், த. குணராசா போன்றோர் செயற்பட்டு வருகின்றனர். இவர்களை வழிநடத்தும் பெருங்காப்பாளராக, சட்டத்தரணி இரா. வசந்தசேனன் அவர்கள் பணியாற்றி வருகிறார். பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளில் அவ்வப்போது தேவைப்பட்ட பங்களிப்பை நல்கி வரும் இச்சங்கம் எதிர்வரும் காலத்திலும் பல அபிவிருத்திப் பங்களிப்புகளை நல்க விரும்புகிறது.

*செயலர்*
*பழைய மாணவர் சங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# அபிவிருத்திச் சங்கம்

**தலைவர்** : திரு. அ.மு. அருணாசலம்

**செயலாளர்** : திரு. த. சிவரட்ணம்


**பொருளாளர்** : திரு. இ. வாசுதேவன்

மெமோறியல் அன்னையின் வளர்ச்சியில் கூடுதலான பங்களிப்பைச் செய்த பெருமிதத்தோடு பா.அ.வி. சங்க அறிக்கையை ஆரம்பிப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. 1994ம் டிசம்பர் 31 வரை எண்ணிலடங்காப் பணிகளை பெரும் நிதிச்செலவுடன் செய்துமுடித்த வரலாறு "மெமோறியல் மலர் 5ல்" அடங்குகிறது. 1995ம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை நிச்சயம் பாடசாலை வளர்ச்சிப் பணிகளில் ஆற்றியபங்கை விரிவாக்கி முழுமையாகக் குறிப்பிட முடியவில்லை. ஆயினும் 1995ம் வருடம் 60 அங்குல நீளமான தற்காலிக கொட்டகையை நிரந்தரக்கட்டடமாக்குவதற்கு ஏற்பட்ட ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபா செலவில், 65 ஆயிரம் ரூபாவையும், பாடசாலையில் மாணவர்களது தளபாட வசதிகளுக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாவையும் சுந்தரதாஸ் மண்டபப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு 20 ஆயிரம் ரூபாயும் அதே ஆண்டில் செலவிட்டது. இப்பணிக்கு எமது சங்க உறுப்பினர்களில் பெரும் பகுதியினர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவராக இருந்தும், குடும்பத்திற்குத் தலா 100 ரூபா வீதம் அன்பளிப்புச் செய்து உதவியமை மெமோறியல் வளர்ச்சி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. 1995 ஒக்டோபரில் சந்தித்த இடப்பெயர்வுத் துன்ப அலைகள் எமது பலமான சங்க அங்கத்தவர்களை பல திசைகளுக்கும் அடித்துச்சென்றமை வருந்தத்தக்கது. இந்தக்காலம் வரை, பா.அ.வி.சங்கம் மிகச் சிறப்பாகச் செயற்பட காரணகர்த்தாக்களாக இருந்த பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். விசேடமாக, செயலாளர் பதவியை மிகச் சிறப்பாகச் செய்த, திரு. எஸ்.வீ. பரமேஸ்வரன், திரு. பொ. வரதராஜா ஆகியோரின் தன்னலங்கருதாப் பணிகள் மெமோறியல் அன்னையின் வரலாற்றுக்குள் அடங்கும். விசேடமாக 1980 தொடக்கம் 1995 வரை நான்கு அதிபர்களுடன் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், பா.அ.வி.சங்க செயலாளர் பதவியை வகித்து, மெமோறியன்னையின் புகழ் பல திக்கும் பரவ அயராது உழைத்த முன்னாள் செயலர் அமரர் பொன்னையா வரதராசா அவர்களின் பணி கல்வித்தாகம் கொண்ட சமூகத்துக்கு ஒரு முன்னுதாரணமாகும். அவர் அமரராகும்வரை அவரது பேச்சும் மூச்சும் மெமோறியல் பற்றியே இருந்தது. இரவுபகல் என்று பாராது எளிமையாக, பொறுமையோடு கருமமாற்றியவர். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். 1998ம் ஆண்டு தொடக்கம் திரு. செ. செல்வநேசன் அவர்கள் 2000ஆம் ஆண்டுவரை செயலாளராக மிகச் சிறப்பாகக் கடமையாற்றியவர். இவர் அளவெட்டியூரிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் இணைந்திருந்தாலும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட செயலர் பதவியை புனிதமாக்கியவர். முன்னைய செயலர் திரு. பொ. வரதராஜாவின் இழப்பை ஈடுசெய்து எமது சங்கத்தைச் செம்மையாக வழிநடத்தியவர். அழகரட்ணம் மண்டப கலையரங்கு முன்பு இருந்ததைவிட ஒரு அடி உயரத்துக்குப் புனரமைக்க பா.அ.வி. சங்கம் சுமார் 10,000 ரூபாவைச் செலவு செய்தது. இக்காலத்தில் பாடசாலையில் சேதமாக்கப்பட்ட முன்புற சுற்றுமதில் 25 அடி நீளம் 10,000ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. மிக முக்கிய திருத்த வேலைகளுக்கென 10,000ரூபா செலவளிக்கப்பட்டது. Action Farm நிறுவனம், மலசலகூட அமைப்பு, தண்ணீர்த் தாங்கி மறு சீரமைப்பு வேலைகளைச் செய்தபோது, அவர்களது பங்களிப்பாக ரூபா 18,000




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை
உறுப்பினர்கள் - 1999



ஒழுக்காற்றுத்துறை ஆசிரியர்களும், மாணவ
தலைவர்களும் 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் வழங்கியது. திருகோணமலைக்கு மெய்வல்லுநர் போட்டிக்குச் சென்ற மாணவர்களுக்கு பிரயாணச்செலவாக ரூபா 10,000 வழங்கியது. 2000 வருடம் புதிய செயலாளராக திரு. த. சிவரத்தினம் பதவியேற்றார். அன்றிலிருந்து இன்றுவரை பா.அ.வி. சங்க கணணிப்பொறி திருத்த வேலைக்கு 12,500 ரூபாவைும், பாடசாலை பாண்ட் வாத்திய அணிக்கான சீருடைச் செலவு 12,500 ரூபாவும், சுந்தரதாஸ் மண்டபம், சங்கீத பாடம், அலுவலகம் போன்றவற்றுக்கான மீள் மின்னிணைப்புச் செய்ய 12,880 ரூபாவும் பாண்ட் வாத்திய அணிக்கு மெலோடிக்கல் கொள்வனவு செய்ய ரூபா 1600ம் முதலாந் தவணையில் ஐந்து தொண்டராசிரியர்களுக்கு கொடுப்பனவு 4000 ரூபாவும் மைதான வேலிப்பாதுகாப்புச் செய்ய 1033 ரூபாவும் ஆக மொத்தம் 44613 ரூபாவைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் செலவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலைக்கு உடனடித்தேவையாக வகுப்பறை, தளபாட வசதிகளை ஓரளவு என்றாலும் நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் எமது சங்கம் தற்போது முழுமுயற்சி எடுத்து வருகிறது. கல்வித் திணைக்கள எமது பாடசாலையில் தேவைகள் பற்றி எடுத்துக் கூறியுள்ளோம். ஏழைப் பெற்றோர்களில் பெருந் தொகையான மாணவர்களைக் கொண்டுள்ள எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தம்மாலியன்ற சகல ஒத்துழைப்புக்களாலும் இதுவரை வழங்கி வந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

*த. சிவரத்தினம்*
*செயலர்*

## J/ Manipay Memorial English school Fine Arts Organisation

## யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

# நுண்கலை மன்றம்

| | |
|---|---|
| **காப்பாளர்** | : திரு. அ.மு. அருணாசலம் |
| **பொறுப்பாசிரியர்கள்** | : திருமதி. வி.ஜே.பை. மூர்த்தி |
| | : செல்வி. சு. கந்தையா |
| **தலைவர்** | : செல்வி. செ. ரூபினி |
| **செயலாளர்** | : செல்வி. சி. சிறீஜனனி |
| **பொருளாளர்** | : திருமதி. வை. கமலசிங்கம் |

1995ஆம் ஆண்டிற்குப் பின் நுண்கலை மன்றத்தினூடாக, சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய துறைகளில் மாணவர் பல சாதனைகளை ஈட்டியுள்ளனர். சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய மூன்று துறைகளிலும் மாணவரிடையே ஆர்வத்தை ஏற்படுத்தவும் திறமையை வெளிப்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் இல்ல ரீதியாக போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

மேற்கூறிய மூன்று துறைகளிலும் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டங்களில் நடாத்தப்பட்ட பல போட்டிகளில் பங்குகொண்டு மாணவர் வெற்றியீட்டி பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்தமை குறிப்பிடத்தக்கது. 1997ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம் நடாத்திய பண்ணிசைப் போட்டியில் செல்வி. ஜெ. வைஷ்ணவி தங்கப் பதக்கப் பரிசைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1999ம், 2000ம் வருடங்களிலும் பல்வேறுபட்ட கலை இலக்கிய அம்சங்களில் மாணவரது திறமைகளை வெளிக்கொணரும் செயற்பாடுகளில் எமது மன்றம் ஈடுபட்டு பல சாதனைகளை நிலைநாட்டியது.

*சி. சிறீஜனனி*
*செயலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிஷ்டபிரிவு பரிசுபெறும் மாணவர்கள் - 2001

## தரம் 1 - 2000

1. சி. கௌரிசங்கர் – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
2. ர. கயூர்ணா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
3. க. விந்துஜா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
4. இ. கீர்த்திகா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
5. பா. பார்த்தி – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
6. மு. தனுஜா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
7. சி. தர்சிகா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
8. ஜெ. சிந்துஜா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
9. இ. லக்சன் – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
10. மோ. மதுஜா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
11. வி. லூட்ஸ்ஜெனிற்றா – கணிதம் , சுற்றாடல் , சமயம் (R.C)
12. த. டிலானி – சமயம் (N.R.C)

## தரம் 2 - 2000

1. சி. சிவராகவன் – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
2. ரா. வினோத் – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
3. ச. குலவேனி – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
4. க. றுஜானா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
5. ச. சாஜ்பிரகாஸ் – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
6. சி. நிவேத் – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
7. ம. பிரவீனா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
8. து. ஜெசிந்தா – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
9. பா. சாயினி – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
10. சு. ஜெயவாகினி – மொழி, கணிதம் , சுற்றாடல் , சமயம்,
11. ர. றெஜினோல்ட் – சமயம் (R.C)
12. தீபன் – சமயம் (N.R.C)
13. பெ. டிலான்மைக்கல் – சமயம் (N.R.C)
14. றஞ்சித் – சமயம் (N.R.C)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 3 - 2000

1. ச. யதுலகுன் – சைவசமயம், கணிதம், தமிழ்மொழி, உடற்கல்வி, சித்திரம் ஆகிய பாடசங்களில் முதலாம் இடம், ஆக்கம் 2ம் இடம்
2. ஜெ. மாதங்கி – அழகியல், ஆக்கம் 1ம் இடம்
   – சைவசமயம், ஆங்கிலம் 2ம் இடம்
   – தமிழ்மொழி, கணிதம், உடற்கல்வி, சித்திரம் 3ம் இடம்
3. கோபிகா. சே – சைவசமயம் 3ம் இடம், அழகியல் 2ம் இடம்
4. வ. நிசாயினி – சுற்றாடல் 3ம் இடம், தமிழ் மொழி 2ம் இடம், ஆங்கிலம் 3ம் இடம்
5. மதனீசன். ந – ஆங்கிலம் 1ம் இடம் , சித்திரம், கணிதம், உடற்கல்வி 2ம் இடம்
6. து. சாரங்கன், இ. சுரேஸ்குமார் } சுற்றாடல் 3ம் இடம்
7. இ. டர்சன் – ஆக்கம் 3ம்இடம்
   கு. கிமோசன் – ஆக்கம் 2ம் இடம், கிறிஸ்தவம் 1ம் இடம்
8. க. உஷாயினி – அழகியல் 3ம் இடம்
   எ. எட்வினா – றோமன் கத்தோலிக்கம் 1ம் இடம்
   பெ. டிசான்பிலிப் – கிறிஸ்தவம் 2ம் இடம்
   க. தினேஷ் – கிறிஸ்தவம் 3ம் இடம்

## தரம் 4 - 2000

பா. துஸ்யந்தன் – சைவசமயம், கணிதம், சுற்றாடல் 1ம் இடம்
தமிழ்மொழி 2ம் இடம், விஞ்ஞானம், சித்திரம் 3ம் இடம்

மு. துளசி – தமிழ் மொழி, ஆங்கிலம், 1ம் இடம்
வைசமயம், கணிதம், சுற்றாடல் 2ம் இடம்
விஞ்ஞானம், சித்திரம் 3ம் இடம்

சி. பிரணவன் – தமிழ், கணிதம், ஆங்கிலம் 3ம் இடம்
சி.நிரோஜா – சைவம் 3ம் இடம்
சி. ரகுராஜ் – ஆங்கிலம் 2ம் இடம்
சோ. ஜெனனி – ஆரம்ப விஞ்ஞானம் 1ம் இடம்
செ. நிதர்சன் – ஆரம்ப விஞ்ஞானம் 2ம் இடம்
சி. வனுசன் – சித்திரம் 1ம் இடம்
ப. நிமாலினி – சித்திரம் 2ம் இடம
கு. கோபிகா – சுற்றாடல் 3ம் இடம்

## தரம் 5 - 2000

ச. துஸ்யந்தன் – சைவசமயம், ஆங்கிலம், சுற்றாடல் 1ம் இடம்
கணிதம், ஆரம்ப விஞ்ஞானம் 1ம் இடம்
அழகியல், தமிழ்மொழி 2ம் இடம்

பா. யாழினி – சைவசமயம், ஆங்கிலம், கணிதம் 2ம் இடம்
தமிழ் 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வி. சுஜந்தினி | – | ஆங்கிலம், கணிதம் 3ம் இடம் |
| ப. கோபிகா | – | சுற்றாடல் 3ம் இடம் |
| கு. டர்சியா | – | ஆரம்ப விஞ்ஞானம் 3ம் இடம் |
| தெ. திசாந்தன் | – | அழகியல் 3ம் இடம் |

## புலமைப்பரிசில் பெறுபேறு

### 1998

| | | |
|---|---|---|
| 1. செல்வி வி. நிமலதர்சினி | – | 114 புள்ளிகள் |
| 2. செல்வி ரி. மயூரதி | – | 111 புள்ளிகள் |

### 1999

| | | |
|---|---|---|
| 1. செல்வி ஜே. காயத்திரி | – | 146 புள்ளிகள் |
| 2. செல்வன் எஸ். ஆதித்தன் | – | 140 புள்ளிகள் |
| 3. செல்வன் கே. பிரதீபன் | – | 140 புள்ளிகள் |
| 4. செல்வன் வி. நிக்சன் | – | 137 புள்ளிகள் |
| 5. செல்வி வி. விஜயகுமாரி | – | 122 புள்ளிகள் |

### 2000

| | | |
|---|---|---|
| 1. செல்வன் எஸ். துஷந்தன் | – | 175 புள்ளிகள் |
| 2. செல்வி பி. யாழினி | – | 167 புள்ளிகள் |
| 3. செல்வன் பி. சபேசன் | – | 152 புள்ளிகள் |
| 4. செல்வி ஜே. ரதீஷா | – | 149 புள்ளிகள் |
| 5. செல்வி வி. சுஜந்தினி | – | 143 புள்ளிகள் |
| 6. செல்வன் எஸ். தினேஷ் | – | 140 புள்ளிகள் |

### தரம் 6 - 2000

| | | | |
|---|---|---|---|
| 1. | கி. பிரதீபன் | – | சைவம், கணிதம், சுகாதாரமும் உடற்கல்வியும், சுற்றாடல் – 1ம் இடங்கள், ஆங்கிலம் – 2ம் இடம், பொதுத்தகைமை |
| 2. | சி. திலீஸ்குமார் | – | கிறிஸ்தவம், தமிழ் – 1ம் இடம், அழகியல் – 3ம் இடம் |
| 3. | யோ. கார்த்திகாயினி | – | ஆங்கிலம் – 1ம் இடம், அழகியல், சைவம் – 2ம் இடங்கள் பொதுத்தகைமை |
| 4. | வி. விஜயகுமாரி | – | றோமன் கத்தோலிக்கம் – 1ம் இடம், கணிதம், சுகாதாரமும் உடற்கல்வியும், சுற்றாடல் – 2ம் இடங்கள், தமிழ் – 3ம் இடம் பொதுத்தகைமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சி. சிவதாரணி – அழகியல் – 1ம் இடம்

6. ம. எடின் றொக்கின் – றோமன் கத்தோலிக்கம் – 2ம் இடம்

7. றெ. றோய் டிலக்சன் – கிறிஸ்தவம் – 2ம் இடம்

8. எ. எடின் அறிக்சன் – தமிழ் – 2ம் இடம்

9. இ. பிரியதர்சினி – சைவம், ஆங்கிலம் – 3ம் இடங்கள், பொதுத்தகைமை

10. செ. வின்சன்ஜக்சன் – றோமன் கத்தோலிக்கம் – 3ம் இடம்

11. இ. கமில்ரன் – கிறிஸ்தவம் – 3ம் இடம்

12. செ. திலக்ஷன் – கணிதம் – 3ம் இடம்

13. சி. சிவகுமார் – சுகாதாரமும் உடற்கல்வியும் – 3ம் இடம்

14. செ. பர்மிலன் – சுற்றாடல் – 3ம் இடம்

## தரம் 7 - 2000

1. நா. கௌசல்யா – தமிழ், கணிதம், வரலாறும் சமூகக்கலவியும் – 1ம் இடங்கள்
விஞ்ஞானம், ஆங்கிலம் – 2ம் இடங்கள்
சங்கீதம், சைவம் – 3ம் இடங்கள், பொதுத்தகைமை

2. து. ரேமினா – கணிதம், வரலாறும் சமூகக்கல்வியும் – 2ம் இடங்கள்
தமிழ், சுகாதாரம், ஆங்கிலம் – 3ம் இடங்கள், பொதுத்தகைமை

3. தெ. பிரசாந்தன் – சைவம் – 1ம் இடம், தமிழ் – 2ம் இடம்

4. சி. மெடிஸ்ரன் – ஆங்கிலம் – 1ம் இடம், கிறிஸ்தவம் – 2ம் இடம்

5. ப. ஜசிந்தன் – விஞ்ஞானம் – 1ம் இடம், கணிதம் – 3ம் இடம்

6. ஜெ. வைஷ்ணவி – சங்கீதம் – 1ம் இடம்

7. ச. சோபனா – நடனம் – 1ம் இடம்

8. அ. விசித்திரன் – சித்திரம் – 1ம் இடம்

9. து. சுதன் – சைவம் – 2ம் இடம்

10. சி. மதுனியா – கிறிஸ்தவம் – 1ம் இடம்

11. பெ. சதீஸ்குமார் – றோ.க. – 1ம் இடம்

12. சி. நிரோஜன் – சுகாதாரம் – 2ம் இடம், விஞ்ஞானம் – 3ம் இடம்

13. நா. கோபினா – வரலாறும் சமூகக்கல்வியும், நடனம் – 2ம் இடங்கள்

14. சி. சுதர்சன் – கிறிஸ்தவம் – 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இ. உஷாயினி – நடனம் – 2ம் இடம்

16. ப. நிசாளினி – சங்கீதம் – 2ம் இடம்

17. சி. விமல்ராஜ் – சித்திரம் – 2ம் இடம்

18. பா. நிதர்சன் – சித்திரம் – 3ம் இடம்

## தரம் 8 - 2000

1. வே. கஜேந்திரன் : தமிழ், சுகாதாரம், விஞ்ஞானம், கிறிஸ்தவம், வாழ்க்கைத் திறன், சித்திரம் – 1ம் இடங்கள், சமூகக்கல்வி, கணிதம் – 3ம் இடங்கள் பொதுத்தகைமை

2. செ. கோபிநாத் : சைவம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சங்கீதம் – 2ம் இடங்கள், சுகாதாரம் – 3ம் இடம், பொதுத்தகைமை

3. பா. அஜந்தன் : சமூகக்கல்வி – 1ம் இடம், கணிதம், சுகாதாரம், சித்திரம், வாழ்க்கைத் திறன் – 2ம் இடங்கள், விஞ்ஞானம், தமிழ் – 3ம் இடங்கள், பொதுத்தகைமை

4. கி. விக்கினேஸ்வரி : சைவம் – 1ம் இடம், தமிழ் – 2ம் இடம், சுகாதாரம் – 3ம் இடம்

5. வி. ஞானசிங்கம் : றோமன் கத்தோலிக்கம், சங்கீதம் – 1ம் இடங்கள் வாழ்க்கைத் திறன் – 3ம் இடம்

6. கை. சுபாகர் : கணிதம் – 1ம் இடம்

7. ற. சியாமளா : ஆங்கிலம், நடனம் – 1ம் இடங்கள்

8. இ. சிந்துஜா : நடனம் – 1ம் இடம்

9. வி. மயூரா : றோமன் கத்தோலிக்கம் – 2ம் இடம்

10. இ. ரஜிந்தன் : கிறிஸ்தவம் – 2ம் இடம்

11. அ. அன்ரனிராஜ் : கிறிஸ்தவம் – 3ம் இடம்

12. ந. உஷாலினி : சைவம், சங்கீதம் – 3ம் இடங்கள்

13. பா. யூட்டனிசியன் : றோமன் கத்தோலிக்க – 3ம் இடம்

14. யோ. கீர்த்திகா : ஆங்கிலம், நடனம் – 3ம் இடம்

15. ச. திலகப்பிரகாஷ் : சித்திரம் – 3ம் இடம்

16. சோ. கார்த்திகா : நடனம் – 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 9 - 2000

1. அ. சிந்துஜா : சைவம், ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ், கணிதம், சித்திரம்–1ம் இடங்கள், சுகாதாரமும் உடற்கல்வியும் – 2ம் இடம்
2. நி. பகீரதன் : வரலாறும் சமூகக்கல்வியும் – 1ம் இடம், கணிதம் – 2ம் இடம் சுகாதாரமும் உடற்கல்வியும் – 3ம் இடம்
3. சி. சிவஸ்ரீ : சுகாதாரமும் உடற்கல்வியும் – 1ம் இடம், தமிழ் – 2ம் இடம் வரலாறும் சமூகக்கல்வியும், கணிதம் – 3ம் இடங்கள்
4. இ. நிர்மலா : சங்கீதம் – 1ம் இடம், வரலாறும் சமூகக்கல்வியும், சைவம் – 2ம் இடங்கள், விஞ்ஞானம் – 3ம் இடம்
5. க. ஜெலினா : நடனம், றோமன் கத்தோலிக்கம் – 1ம் இடங்கள் தமிழ் – 3ம் இடம்
6. க. கொன்சலா : கிறிஸ்தவம் – 1ம் இடம், சங்கீதம் – 2ம் இடம்
7. இ. கஸ்தூாரி : நடனம் – 2ம் இடம், சைவம் – 3ம் இடம்
8. ச. சர்மிலா : சித்திரம் – 2ம் இடம், கிறிஸ்தவம் – 3ம் இடம்
9. மு. தர்சினி : கிறிஸ்தவம் – 2ம் இடம்
10. ச. றுஜித்தா : விஞ்ஞானம் – 2ம் இடம்
11. இ. பிரதீபன் : சித்திரம் – 3ம் இடம்
12. ப. யூட்ஜோண்சன் : றோமன் கத்தோலிக்கம் – 2ம் இடம்

## தரம் 10 - 2000

1. ஜெ. ஜெனித்தா : சைவம், தமிழ், சங்கீதம், வணிகக்கல்வியும் கணக்கீடும், சமூகக்கல்வி, புவியியல், ஆங்கிலம் – 1ம் இடம் கணிதம், விஞ்ஞானம், தமிழ் இலக்கியம் – 2ம் இடங்கள்
2. வி. யேசுதாசன் : கணிதம், றோமன் கத்தோலிக்கம், விஞ்ஞானம் – 1ம் இடங்கள் சித்திரம்–2ம் இடம் புவியியல், வணிகக்கல்வியும் கணக்கீடும் – 3ம் இடங்கள்
3. ஜெ. மிரோஜினி : ஆங்கிலம், வணிகக்கல்வியும் கணக்கீடும், தமிழ் – 2ம் இடங்கள் கணிதம், புவியில், சங்கீதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி – 3ம் இடங்கள்
4. க. பிரதீபா : வரலாறு, தமிழ் இலக்கியம் – 1ம் இடங்கள் சைவம், சங்கீதம், சமூகக்கல்வி – 2ம் இடங்கள்
5. ச. சுவர்ணன் : புவியியல் – 2ம் இடம், சைவம், சித்திரம் – 3ம் இடங்கள்
6. க. அருள்மொழி : றோமன் கத்தோலிக்கம் – 1ம் இடம், விவசாயம் – 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அ. மனோகரன் : கிறிஸ்தவம், சித்திரம் – 1ம் இடங்கள்

8. செ. பிரகாஷ் : விவசாயம் – 1ம் இடம்

9. மு. கோமதி : மனையியல் – 1ம் இடம்

10. இ. துனுஜா : நடனம் – 1ம் இடம், தமிழ் – 3ம் இடம்

11. த. கஸ்ரோ : சுகாதாரமும் உடற்கல்வியும் – 1ம் இடம், கிறிஸ்தவம் – 3ம் இடம்

12. இ. யோகராசா : சுகாதாரமும் உடற்கல்வியும் – 2ம் இடம்

13. த. ரஞ்சித்குமார் : சுகாதாரமும் உடற்கல்வியும் – 3ம் இடம்

14. ஆ. டொறின் : கிறிஸ்தவம் – 2ம் இடம்

15. ஜெ. விஜிதா : வரலாறு – 2ம் இடம்

16. தி. நிரோஜன் : வரலாறு – 3ம் இடம்

17. சி. லயின்ரா : நடனம் – 2ம் இடம்

18. பே. ஜெனிற் எமில்டா : நடனம் – 3ம் இடம்

19. மு. லலிதா : விவசாயம் – 2ம் இடம்

20. அ. சர்மிளா : மனையியல் – 2ம் இடம்

## 1998 க.பொ.த [சா.த]

1. யோகேஸ்வரன் திவாகர் — 8D மேலதிக பாடம் ஆங்கில இலக்கியம் C
2. கமலசிங்கம் குயிலினி — 6D, 2 C
3. நடராசா மயூரன் — 6D, 1C
4. செல்லத்துரை பிரதீபன் — 5D, 1C, 1S
5. சுப்ரமணியம் சுவேந்திரன் — 5D, 2C
6. ஜோன் நிலானி — 4D, 4C
7. கணேசு மீனலோஜினி — 3D, 3C, 1S
8. தேவராஜா அன்ரனிராஜ் — 3D, 3C, 1S

## 1999 க.பொ.த [சா.த]

1. சின்னத்துரை சுதாகரன் — 8D, 1C
2. செல்வநேசன் அர்ஜனா — 6D, 4C
3. இரத்தினசிங்கம் ஐங்கரன் — 6D, 3C,,1S
4. நித்தியானந்தன் தனுஷா — 6D, 3C, 1S
5. சண்முகலிங்கம் கனேசியா — 5D, 3C, 1S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அந்தோனிப்பிள்ளை ஜெகதீபன் 4D, 5C, 1S
7. கயிலைநாதன் ராஜினி 4D, 4C, 2S
8. சிவரத்தினம் ஸ்ரீஜெனனி 4D, 4C, 2S
9. அழகராசா உமாகரன் 4D, 4C 1S
10. செல்வராசா கணேந்திரன் 3D, 4C, 2S
11. ஐயாத்துரை மன்சியா 3D, 3C, 2S

## 2000 க.பொ.த [சா.த]

1. ஜெயச்சந்திர பைரவமூர்த்தி பரணீதரசர்மா 7D, 3C
2. புஸ்பராசா நாகரஞ்சன் 4D, 4C, 2S
3. நாகராசா பிரபாகரன் 3D, 7C
4. கிருஷ்ணபிள்ளை பிரதீபன் 3D, 6C
5. மரியதாஸ் புஸ்பரூபன் 3D, 6C
6. குணராஜா நிந்துணா 3D, 6C, 2S
7. கணபதிப்பிள்ளை சுபாஜினி 3D, 6C, 1S
8. சுந்தரலிங்கம் சுஜீவன் 3D, 5C
9. செல்லத்துரை ரவீந்திரராசா 3D, 5C, 2S
10. சின்னத்துரை லதீபன் 3D, 4C, 3S
11. பஞ்சலிங்கம் பகீரதி 3D, 3C, 4S

## தரம் 12 - 2000

1. யோ. நிலானி : தமிழ், அளவையியல்– 1ம் இடம், கிறிஸ்தவ நாகரிகம் – 2ம் இடம்
2. சு. சுவேந்திரன் : இந்துநாகரிகம் – 1ம் இடம், அளவையியல் – 2ம் இடம்
3. சி. ஸ்ரீஜெனனி : கணக்கீடு, அளவையியல் – 1ம் இடங்கள், பொருளியல் – 2ம் இடம்
4. அ. அற்புதராசா : கிறிஸ்தவ நாகரிகம் – 1ம் இடம்
5. ச. சுகந்தினி : வணிகக்கல்வி – 1ம் இடம், பொருளியல் – 3ம் இடம்
6. ச. கனேசியா : பொருளியல் – 1ம் இடம், அளவையியல் – 2ம் இடம்
7. செ. கணேந்திரன் : வணிகக்கல்வி – 2ம் இடம், கணக்கீடு – 3ம் இடம்
8. செ. தனேஸ்வரி : தமிழ் – 2ம் இடம்
9. க. நவநீதன் : இந்துநாகரீகம் – 2ம் இடம், தமிழ் – 3ம் இடம்
10. ஐ. மன்சியா : கணக்கீடு – 2ம் இடம்
11. ந. சுபிதா : வணிகக்கல்வி – 3ம் இடம்
12. நா. பிரபாகரன் : அளவையியல் – 3ம் இடம்
13. ஜெ. யூடிற் : கிறிஸ்தநாகரிகம் – 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1997 க.பொ.த [உ.த]

| | | | |
|---|---|---|---|
| 1. | சுப்ரமணியம் துரைரெட்ணம் * | A, B, C, S, | – கலை |
| 2. | தெய்வேந்திரராஜா விஜயரூபன் | A, B, C, S | – வர்த்தகம் |
| 3. | இராஜதுரை கனிமொழி | 2B, 2S | – கலை |
| 4. | கணேசு ஆதித்தன் | A, B, 2C | – கலை |
| 5. | பாலசுப்ரமணியம் சிவாஜினி | 2B, 2S | – கலை |
| 6. | முருகதாஸ் கேசவன் | A, 2B, C | – கலை |
| 7. | நடேசு குலேந்திரன் | 2B, 2C | – கலை |

## 1998 க.பொ.த [உ.த]

| | | | |
|---|---|---|---|
| 1. | பாலசிங்கம் பாலசுப்ரமணிம் * | 3B, C | – கலை |
| 2. | துரைராசா சுதர்சினி | A, 3C | – கலை |
| 3. | கருணாநிதி கவிதா | A, 3S | – வர்த்தகம் |
| 4. | இன்னாசிமுத்து அன்ரன் விமலதாஸ் | B, 2C | – கலை |

## 1999 க.பொ.த [உ.த]

| | | | |
|---|---|---|---|
| 1. | நடேசன் குமுதா * | 3A, B | – கலை (மாவட்டமட்டம் 11) |
| 2. | தர்மராஜா விஜிகலா | A, 3C | – கலை |
| 3. | விஜயசிங்கம் சுபாஜினி | B, 3C | – கலை |

## 2000 க.பொ.த [உ.த]

| | | | |
|---|---|---|---|
| 1. | குணம் சசிக்குமார் * | 3A (மாவட்டம் 1ம் இடம்) | – கலை |
| 2. | துரைராஜா சற்குணராஜா * | 2A, B (மாவட்டம் 11ம் இடம்) | – கலை |
| 3. | கந்தசாமி ஜெயா * | 2A, C (மாவட்டம் 109ம் இடம்) | – கலை |
| 4. | துரைராசா றஞ்சித்குமார் | A, B, S | – கலை |
| 5. | கனகரத்தினம் தெய்வீகன் | 2A, S | – கலை |
| 6. | சிவரத்தினம் சுபாகரன் | A, 3B | – கலை |
| 7. | ஞானசிங்கம் கதறின் றொசாந்தி | A, 2C, S | – கலை |
| 8. | வரதராஜா கிரிஜா * | 2 A, 2B (மாவட்டம் 58) | |
| 9. | தெய்வேந்திரம் பிரபாலினி | A, 3C | – வர்த்தகம் |
| 10. | தேசிங்கராஜா சுதர்சினி | A, C, 2S | – கலை |
| 11. | இராசையா விஜயகலா | A, B, 2C | – கலை |

* அடையாளம் இடப்பட்டோர் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். அவர்கட்கு மட்டும் விசேட பரிசு வழங்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2001 க.பொ.த [உ.த]

1. க. மீனலோஜினி – கணக்கீடு, வணிகக்கல்வி 1ம் இடங்கள் பொருளியல் 2ம் இடம்
2. செ. பிரதீபன் – பொருளியல் 1ம் இடம், வணிகக்கல்வி 2ம் இடம்
3. சி. மயூரன் – கணக்கீடு, வணிகக்கல்வி 3ம் இடங்கள்
4. அ. ரேனுகா – கணக்கீடு 2ம் இடம், பொருளியல் 3ம் இடம்
5. செ. ரூபினி – நடனம் 1ம் இடம்

## 2002 க.பொ.த [உ.த]

1. ஞா. ஐங்கரன் – தமிழ் 1ம் இடம், இந்து நாகரீகம், அளவையியல் 2ம் இடங்கள்
2. கை. ராஜனி – இந்து நாகரீகம் 1ம் இடம், தமிழ் 2ம் இடம்
3. தி. முகுந்தன் – புவியியல் 1ம் இடம்
4. இ. யசோதா – கிறிஸ்தவம் 2ம் இடம், அளவையியல் 3ம் இடம்
5. ந. சுகந்தி – அளவையியல் 3ம் இடம்
6. வே. விஜிதா – தமிழ் 3ம் இடம்
7. ஸ்ரீ உமாஸ்ரீ – நாடகமும் அரங்கியலும் 1ம் இடம்
8. ஞா. நிர்மலா – நாடகமும் அரங்கியலும் 2ம் இடம்
9. செ. தேவராஜ் – கிறிஸ்தவம் 3ம் இடம்
10. இ. சுபாநிதி – நாடகமும் அரங்கியலும் 2ம் இடம்
11. மு. ரமேஷ் – கிறிஸ்தவம் 1ம் இடம்
12. ந. ஜெகதீபன் – தமிழ் 3ம் இடம்
13. பா. தேவராணி – இந்து நாகரீகம் 3ம் இடம்
14. க. பிரமிளா – அளவையியல் 1ம் இடம்

# வடக்கு கிழக்கு மாகாண மட்டம்

### 1999

1. ஏ. மனோகரன் – சித்திரப் போட்டி 2ம் இடம்
2. ஏ. அருள்தாஸ் – சித்திரப் போட்டி 3ம் இடம்

# அகில இலங்கை

### 1999

1. கா. கவிதா : கட்டுரை – தரமான கட்டுரைக்கான சான்றிதழ் கிடைத்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்டம்

## 1998

செல்வி இ. தனுஜா : சைவபரிபாலன சபையால் நடாத்தப்பட்ட தரம் 8 சைவசமய பாடப் பரீட்சையில் – 3ம் இடம் வெண்கலப் பதக்கம்

செல்வி செ. அர்ஜனா : ஆறுமுகநாவலர் பேச்சுப் போட்டி – 1ம் இடம் தங்கப் பதக்கம்

## 1999

செல்வன் வி. கஜேந்திரன் : பொதுஅறிவுப் போட்டி – 1ம் இடம்

## 2000

1. ச. துஷந்தன் : தமிழ்த்தின எழுத்து ஆக்கம் – 3ம் இடம்
2. ஜே. நிலானி : லயன்ஸ் கழகத்தினால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி (ஆங்கிலம்) – 3ம் இடம், வெண்கலப் பதக்கம்
3. கி. விக்கினேஸ்வரி : தமிழ் மொழித் தின கட்டுரை – 2ம் இடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலினால் நடாத்தப்பட்ட சைவசமய அறிவுப் போட்டி – 1ம் இடம் தங்கப் பதக்கம் இணுவில் இளந்தொண்டர் சபை சமய அறிவுப் போட்டி – 3ம் இடம் வெண்கலப் பதக்கம்
4. பு. நாகரஞ்சன் : பண்ணிசைப் போட்டி – 3ம் இடம் வெண்கலப் பதக்கம்
5. கு. சசிக்குமார் : குறுநாடக வர்க்கம் – 1ம் இடம் – தமிழ்த்தினப் போட்டி, யுனெஸ்கோ நாடகப்போட்டி 1ம் இடம்
6. ஜெ. வைஷ்ணவி : யாழ். மறைக்கல்வி சைவ விவாகாரக் குழு பண்ணிசைப் போட்டி – 1ம் இடம் தங்கப் பதக்கம் இணுவில் திருநெறிய தமிழ் மன்றம் நடாத்திய பண்ணிசைப் போட்டி – 2ம் இடம் வெள்ளிப் பதக்கம்
7. சி. சிவதாரணி : யுனெஸ்கோ நிறுவன நாடகப்போட்டி – 1ம் இடம்

# 2000ஆம் ஆண்டு கோட்ட மட்டத்திலான பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மு. துளசி | நடனம் (தனி) | 1ம் இடம் |
| 2. | இ. சிந்துஜா | நடனம் (தனி) | 3ம் இடம் |
| 3. | கை. சுபாகர் | கணிதவிஞ்ஞான விநாடி வினா | 1ம் இடம் |
| 4. | ஜே. யூடித் | Dictation | 2ம் இடம் |
| 5. | வி. சுகந்தினி | Reading | 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 6. | வி. வினோபா | பாவோதல் | 1ம் இடம் |
| 7. | ஞா. ஐங்கரன் | Copy writing | 3ம் இடம் |
| | | Dictation | 3ம் இடம் |
| | | சாரணீயம் பேச்சு | 2ம் இடம் |
| 8. | எஸ். சிவதாரணி | Recitation | 1ம் இடம் |
| 9. | ஜெ. ஜெனித்தா | Creative writing | 1ம் இடம் |
| 10. | க. பிரதீபா | Dictation | 1ம் இடம் |
| 11. | என். உஷாளினி | Copy writing | 3ம் இடம் |
| 12. | கே. முருதாஸ் | ஜவலின் எறிதல் | 2ம் இடம் |
| 13. | ஜெ. பரணீதரசர்மா | மகளிர்தின கட்டுரை | 1ம் இடம் |
| | | தமிழ்மொழித் தின கட்டுரை | 2ம் இடம் |
| | | Recitation | 2ம் இடம் |
| | | சாரணீயக் கட்டுரை | 2ம் இடம் |
| | | சகலகலாவல்லி மாலை ஒதல் | 3ம் இடம் |
| 14. | எஸ். விஜிதா | குண்டு எறிதல் | 1ம் இடம் |
| | | தட்டெறிதல் | 2ம் இடம் |
| 15. | ஆர். பிரியதர்ஷினி | Dictation | 3ம் இடம் |
| 16. | கி. விக்கினேஸ்வரி | தமிழ் மொழித்தின கட்டுரை | 1ம் இடம் |
| | | மகளிர்தினக் கட்டுரை | 2ம் இடம் |
| 17. | ஜெ. மிரோஜினி | Recitation | 2ம் இடம் |
| 18. | எஸ். சர்வானந்தன் | நீளம் பாய்தல் | 3ம் இடம் |
| 19. | வி. விஜயகுமாரி | Copy writing | 1ம் இடம் |
| | | Creative writing | 1ம் இடம் |
| 20. | வி. கஜேந்திரன் | Creative writing | 1ம் இடம் |
| | | கணிதவிஞ்ஞான புதிர்ப் போட்டி | 2ம் இடம் |
| 21. | எஸ். கோபிநாத் | Dictation | 1ம் இடம் |
| 22. | ஜே. நிலானி | Copy writing | 1ம் இடம் |
| | | Oratory | 2ம் இடம் |
| 23. | எஸ். கார்த்திகா | Creative writing | 3ம் இடம் |
| | | 3000m ஓட்டம் | 2ம் இடம் |
| 24. | கே. பிரதீபன் | Reading | 3ம் இடம் |
| 25. | தெ.ராஜேஸ்கண்ணன் | சகலகலாவல்லி மாலை ஒதல் | 2ம் இடம் |
| 26. | பு. நாகரஞ்சன் | இசை (தனி) | 3ம் இடம் |
| | | சகலகலாவல்லி மாலை ஒதல் | 1ம் இடம் |
| 27. | அ. மனோகரன் | வலுவிழந்தோர் தின சித்திரப் போட்டி | 1ம் இடம் |
| | | யுனெஸ்கோ சித்திரப் போட்டி | 1ம் இடம் |
| 28. | சி. கேதீஸ்வரன் | வலுவிழந்தோர் தின சித்திரப் போட்டி | 2ம் இடம் |
| 29. | ப. கிருத்திகன் | 800m ஓட்டம் | 3ம் இடம் |
| 30. | எஸ். சுஜீவன் | குண்டு, ஈட்டி | 1ம் இடங்கள் |
| 31. | வி. சுஜந்தினி | வாசிப்பு | 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 32. ச. துஷந்தன் | ஆக்கம் எழுத்து | 1ம் இடம் |
| 33. கு. சசிக்குமார் | குறுநாடகவாக்கம் | 1ம் இடம் |
| 34. ப. கமிலஸ் | சிறுகதை ஆக்கம் | 1ம் இடம் |
| 35. ஞா. ஞானகலா | பாவோதல் | 3ம் இடம் |
| 36. ஸ்ரீ. சுலமோனராஜ் | இசை (தனி) | 3ம் இடம் |
| 37. யோ. கார்த்திகாயினி | நடனம் (தனி) | 2ம் இடம் |
| 38. ப. பகீரதி | நடனம் (தனி) | 2ம் இடம் |
| 39. செ. கஜேந்தினி | நடனம் (தனி) | 2ம் இடம் |
| 40. ஆ. நிமலா | இசை (தனி) | 1ம் இடம் |
| 41. ம. புஸ்பரூபன் | விவசாய அறிவுப் போட்டி | விசேட பரிசு |

## 1999ஆம் ஆண்டு வலய மட்டத்திலான பரிசுகள்

| | | |
|---|---|---|
| 1. எஸ். தனேஸ்வரி | Oratory | 1ம் இடம் |
| 2. ப. வினோபா | பேச்சு | 3ம் இடம் |
| 3. ஞா. ஐங்கரன் | இசைநாடகம் (குழு) | 2ம் இடம் |
| 4. எஸ். சிவதாரணி | பாவோதல் | 3ம் இடம் |
| 5. எஸ். சிவதாரணி<br>6. ஆர். பிரியதர்சினி<br>7. ஜெ. காயத்திரி<br>8. எஸ். திலீஸ்குமார்<br>9. எஸ். சுர்வானந்தன்<br>10. யோ. கார்த்திகாயினி | ஆங்கில தின நாடகம் சிறுவர் பிரிவு | 3ம் இடம் |
| 11. பு. நாகரஞ்சன் | பாவோதல் | 3ம் இடம் |
| 12. கி. விக்கினேஸ்வரி | தமிழ்மொழித்தின கட்டுரை | 2ம் இடம் |
| | போசாக்கு வார கட்டுரை | 2ம் இடம் |
| | யுனெஸ்கோ கட்டுரை | 3ம் இடம் |
| | மகளிர்தின கட்டுரை | 1ம் இடம் |
| 13. தெ.இராஜேஸ்கண்ணா | ஜவலின் எறிதல் | 3ம் இடம் |
| 14. நா. கௌசல்யா | பாவோதல் | 1ம் இடம் |
| 15. ஜெ. வைஷ்ணவி | இசை (தனி) | 1ம் இடம் |
| 16. ஆ. நிமலா | சகலகலாவல்லி மாலை | 1ம் இடம் |
| 17. செ. அர்ஜனா | Poem | 1ம் இடம் |
| | இசை நாடகம் | 2ம் இடம் |
| 18. நி. தனுஜா | அனைத்துலக மகளிர்தின கட்டுரை | 2ம் இடம் |
| 19. அ. மனோகரன் | ஓவியப்போட்டி | 3ம் இடம் |
| 20. றெ. றோய்டிலக்சன் | ஓவியப்போட்டி | 3ம் இடம் |
| 21. கு. சசிகுமார்<br>22. து. சற்குணராஜா | கையெழுத்து சஞ்சிகை தேடல் | 1ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2000ஆம் ஆண்டு வலய மட்டத்திலான பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கை. சுபாகர் | கணித விஞ்ஞான போட்டி | 2ம் இடம் |
| 2. | எஸ். விஜிதா | தட்டெறிதல் | 1ம் இடம் |
| 3. | சி. விக்னேஸ்வரி | தமிழ் மொழித் தின கட்டுரை | 1ம் இடம் |
| | | மகளிர் தினக் கட்டுரை | 1ம் இடம் |
| 4. | ஜே. நிலானி | Copy writing | 1ம் இடம் |
| 5. | பு. நாகரஞ்சன் | சகலகலாவல்லி மாலை ஓதல் | 2ம் இடம் |
| 6. | சி. சிவதாரணி | Recitation | 3ம் இடம் |
| 7. | ச. துஷந்தன் | ஆக்கம் எழுத்து | 1ம் இடம் |
| 8. | கு. சசிக்குமார் | குறுநாடகவாக்கம் | 1ம் இடம் |
| 9. | ப. கமிலஸ் | சிறுகதை ஆக்கம் | 1ம் இடம் |
| 10. | ஜெ. மாதங்கி | Copy writing | 2ம் இடம் |
| 11. | ஆ. நிமலா | இசை (தனி) | 1ம் இடம் |
| 12. | அ. மனோகரன் | சித்திரம் | 1ம் இடம் |
| | | சுவரொட்டிப் போட்டி | 3ம் இடம் |
| 13. | யோ. கார்த்திகாயினி | அனைத்துலக மகளிர்தினக் கட்டுரை | 3ம் இடம் |
| 14. | ஜெ. பரணீதரசர்மா | அனைத்துலக மகளிர்தினக் கட்டுரை | 1ம் இடம் |

## 1998ஆம் ஆண்டு கோட்ட, வலய மட்ட பரிசில்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | யோ. தனுஜன் | Recitation | 2ம் இடம் வலயம் |
| | | உலக மகளிர்தினக் கட்டுரை | 1ம் இடம் கோட்டம் |
| 2. | ஜெ. மாதங்கி | பண்ணிசை | 1ம் இடம் கோட்டம் |
| 3. | ஜெ. காயத்திரி | தனி நடனம் | 1ம் இடம் கோட்டம் |
| | | Recitation | 2ம் இடம் கோட்டம் |
| 4. | பு. நாகரஞ்சன் | பாவோதல் | 1ம் இடம் கோட்டம், வலயம் |
| 5. | யோ. திவாகர் | உலக மகளிர்தினக் கட்டுரை | 1ம் இடம் கோட்டம் |
| 6. | செ. பிரதீபன் | விவசாய விநாடிவினா | 2ம் இடம் கோட்டம் |
| 7. | க. குயிலின் | வணிக விநாடி வினா | 2ம் இடம் கோட்டம் |
| 8. | து. நிசாந்தன் | சர்வதேச சிறுவர் தின சித்திரம் | 2ம் இடம் கோட்டம் |
| 9. | செ. அர்ஜனா | பாவோதல் | 1ம் இடம் கோட்டம், வலயம், மாவட்டம் |
| | | குழுப்பாடல் | 1ம் இடம் கோட்டம், வலயம் |
| | | Poem | 1ம் இடம் வலயம் |
| | | நாடகம் | 2ம் இடம் கோட்டம், வலயம் |
| | | தூண்டில் பத்திரிகை பாட்டுப் போட்டி | 2ம் இடம |
| | | மானிப்பாய் இந்து இளைஞர் சங்கப் பண்ணிசை | 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1999ஆம் ஆண்டு கோட்ட மட்டத்திலான பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மு. துளசி | Hand writing | 3ம் இடம் |
| 2. | சி. சிவதாரணி | பாவோதல் | 1ம் இடம் |
| | | ஆங்கிலதின நாடகம் (குழு) | 1ம் இடம் |
| 3. | ஆர். பிரியதர்சினி | ஆங்கிலதின நாடகம் (குழு) | 1ம் இடம் |
| 4. | எஸ். திலீஸ்குமார் | ஆங்கிலதின நாடகம் (குழு) | 1ம் இடம் |
| 5. | எஸ். சர்வானந்தன் | ஆங்கிலதின நாடகம் (குழு) | 1ம் இடம் |
| 6. | ஜெ. காயத்திரி | ஆங்கிலதின நாடகம் (குழு) | 1ம் இடம் |
| 7. | யோ. கார்த்திகாயினி | ஆங்கிலதின நாடகம் (குழு) | 1ம் இடம் |
| | | Copy writing | 3ம் இடம் |
| | | Recitation | 3ம் இடம் |
| 8. | நா. கௌசல்யா | பாவோதல் | 1ம் இடம் |
| 9. | ஜெ. வைஷ்ணவி | தனி இசை | 1ம் இடம் |
| 10. | ப. வினோபா | பேச்சு | 1ம் இடம். |
| 11. | எஸ். தனேஸ்வரி | Oratory | 1ம் இடம் |
| | | Recitation | 3ம் இடம் |
| 12. | ஜெ. ஜெனித்தா | Copy writing | 3ம் இடம் |
| | | Dictation | 3ம் இடம் |
| 13. | பு. நாகரஞ்சன் | பாவோதல் | 1ம் இடம் |
| | | சகலகலாவல்லி மாலை ஓதற் போட்டி | 2ம் இடம் |
| 14. | எஸ். விஜிதா | Creative writing | 3ம் இடம் |
| 15. | கி. விக்னேஸ்வரி | கட்டுரைப் போட்டி | 1ம் இடம் |
| 16. | ஜெ. மிரோஜினி | Creative writing | 2ம் இடம் |
| 17. | எஸ். கோபிநாத் | Dictation | 1ம் இடம் |
| 18. | ஜே. நிலானி | Poetory | 2ம் இடம் |
| | | Recitation | 1ம் இடம் |
| 19. | எஸ். கார்த்திகா | Copy wriiting | 1ம் இடம் |
| 20. | பி. வினிதா | Dictation | 3ம் இடம் |
| 21. | ரி. ராஜேஸ்கண்ணன் | ஜவலின் எறிதல் | 1ம் இடம் |
| 22. | ஜெ. பரணீதரசர்மா | விநாடி வினா | 2ம் இடம் |
| 23. | எஸ். பத்ம எழிலாலோஜினி | சட்டவேலி 400m | 3ம் இடம் |
| | | உயரம் பாய்தல் | 1ம் இடம் |
| 24. | ஆ. நிமலா | சகலகலாவல்லி மாலை ஓதல் | 1ம் இடம் |
| 25. | செ. அர்ஜனா | Poem | 1ம் இடம் |
| | | இசைநாடகம் | 1ம் இடம் |
| | | சாரணிய பாட்டுப் போட்டி | 1ம் இடம் |
| | | பேச்சு | 2ம் இடம் |
| | | ஆவண பாதுகாப்பு | 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 26. சே. கோபிகா | Poem | 1ம் இடம் |
| 27. ச. துஷந்தன் | Recitation | 1ம் இடம் |
| 28. நி. தனுஜா | சர்வதேச மகளிர் தினக் கட்டுரை | 3ம் இடம் |
| 29. சி. சுதாகர் | விவசாய அறிவுப் போட்டி | 1ம் இடம் |

## *பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானோர்*
## *1995 – 2000 வரை*

**1995** தேவராஜா பிரதீபன்
கிருஷ்ணகுமார் தவனேசன்
சுப்பிரமணியம் உதயபாலன்

**1996** கருப்பையா கிறிஸ்தோபர்
பொன்னுத்தரரை அருமைத்துரை
தம்பித்துரை சந்திரகாந்

**1997** திருநாவுக்கரசு திருமாறன்
தெட்சணாமூர்த்தி நீலாம்பரன்

**1998** பாலசிங்கம் பாலசுப்பிரமணியம்
சுப்பிரமணியம் துரைரத்தினம்


**1999** நடேசன் குமுதா

**2000** குணம் சசிக்குமார்
துரைராஜா சற்குணம்
கந்தசாமி ஜெயா
வரதராஜா கிரிஜா
திருநாவுக்கரசு நிலாஜினி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1995-2000 வரை க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்




## 1995-2000 வரை க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசிற் பரீட்சைச் சித்தி விபரம் 1995–2000 வரை




## 1995–2000 வரை மாணவர் தொகை

| வருடம் | தரம் 1 – 5 | தரம் 6 – 11 | தரம் 12 – 13 | மொத்த மாணவர் |
|---|---|---|---|---|
| 1995 | 784 | 504 | 186 | 1474 |
| 1996 | 390 | 219 | 68 | 677 |
| 1997 | 246 | 694 | 124 | 996 |
| 1998 | 286 | 666 | 134 | 1086 |
| 1999 | 294 | 574 | 136 | 1011 |
| 2000 | 368 | 867 | 154 | 1389 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் மலர் பிரகாசிக்க
வாழ்த்துகின்றோம்

இ. ச. பேரம்பலம்
சக நிறுவனம்

கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்



மெமோறியல் மலர் சிறக்க
வாழ்த்துகின்றோம்

இளவரசி



ரெக்ஸ்ரைல்ஸ்

57, நவீன சந்தை
யாழ்ப்பாணம்

மெமோறியல் மலர்
ஒளிவிட்டு பிரகாசிக்க
எமது வாழ்த்துக்கள்



பெரிய கடை
யாழ்ப்பாணம்

குகன்
ஸ்ரோர்ஸ்

மெமோறியல் மலர் பொலிவுடன் மலர
வாழ்த்துகின்றோம்

SEEMATI

சீமாட்டி



122, Power House Road,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் மலர் பொலிவுடன் மலர

வாழ்த்துகின்றோம்

SARANGA SARANGA

உறுதியும் உத்தரவாதமும்
உள்ள 22 கரட் தங்க வைர
நகைகளை பெற்றுக்
கொள்ள சிறந்த ஸ்தாபனம்



# சாரங்கா நகைமாடம்

177/4 கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்


☎ 2480



நம்பிக்கை நாணயம்
உள்ள ஸ்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் மலர் சிறப்புற நல் வாழ்த்துக்கள்



# வே. சி. ம. களஞ்சியம்




யாழ் வீதி,
மானிப்பாய்.

மெமோறியல் மலர் சிறப்புற எம் நல் வாழ்த்துக்கள்



# காவேரி

பெரிய கடை யாழ்ப்பாணம்

# ரம்மியாஸ் சில்க்

181, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் மலர் தொடர்ந்து

பிரகாசிக்க எமது வாழ்த்துக்கள்

நவீன டிசைன்களில்
கண்கவர் 22 கரட் தங்க
நகைகளை தர உறுதியுடன்
செய்து பெற்றிட யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்

# நியூ சோபிகா நகைமாடம்

74/1 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

---

மெமோறியல் மலருக்கு எங்கள்

வாழ்த்துக்கள்

மங்கள வைபவங்களுக்கேற்ற
பட்டுப் புடவைகள், ஆடவர்களுக்கேற்ற
சேட்டிங், சூட்டிங், றெடிமேட் ஆடைகள்
தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்

# G.S. லிங்கநாதன் அன் கோ


13, 14 பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்

---

மெமோறியல் மலர் சிறப்புடன் வெளிவர

எமது வாழ்த்துக்கள்

# வேணி களஞ்சியம்



கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் மலர் சிறப்புற

வெளிவர வாழ்த்துகிறோம்




**இரவு பகல் சேவைகள்**

| | |
|---|---|
| உள்நாடு | — 021 3201 |
| வெளிநாடு | — 0094 213201 |
| பக்ஸ் | — 0094 213201 |

# தர்ம ரூபன்

# தொலைத் தொடர்பு சேவை

- அடையாள அட்டை கவரிடுதல்
- வர்ணத் தீந்தைகள் (பெயின்ற்), சீமெந்து முதலான கட்டிடப் பொருட்கள்






- வானொலிப் பெட்டிகள், கைக் கடிகாரங்கள், பாடசாலை உபகரணப் பொருட்கள் யாவற்றையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

# தர்மரூபன் பல்பொருள் வாணிபம்

*யாழ் வீதி* *மானிப்பாய்*

*(இலங்கை வங்கி கட்டிடம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் மலர் மணம் வீச
எமது மனம் கனிந்த
வாழ்த்துக்கள்

# சுந்தர்ஸன்


Importers & Distributors of
Electrical items and Agents for
Tenby Accessories S. Lon Pipes
& Fittings Etc . . .





# SUNDHARSON






Market View

Manipay



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பாடசாலை மெமோறியல் மலர் 6 சிறப்புடன் வெளிவந்து

ஒளிபரப்ப எமது நல் வாழ்த்துக்கள்



எம்மிடம் பாடசாலை
மாணவர்களுக்கான அனைத்துப்
பொருட்களையும் மலிவாகப்
பெற்றுக் கொள்ள முடியும்



# பாடசாலை கூட்டுறவு விநியோகச் சங்கம்

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பார்டசாலை

பதிவு இலக்கம் — J/1568

*பாடசாலை கூட்டுறவுச் சங்கம்*

---

மெமோறியல் மலர் மலர்க மலர்க என

வாழ்த்துகின்றோம்

## ராம்ஸ் பல்பொருள்

## வாணிபம்

**மொத்த சில்லறை**
**பலசரக்கு வியாபாரம்**

5, கூட்டுறவுச்சங்க கட்டிடம்

திருநெல்வேலிச் சந்தி

---

மெமோறியல் மலர் பொலிவுடன்

நறுமணம் வீச வாழ்த்துகிறோம்





## Chandran
## Fancy Palace


Navaly Road

Annaicoddai

மெமோறியல் மலர் மலர

வாழ்த்துகின்றோம்

## நிதுஸ் ஜீவலறிஸ்




பிரதான வீதி

மானிப்பாய்

மெமோறியல் மலர் சிறக்க

எமது வாழ்த்துக்கள்



## யோய்ஸ் மருந்தகம் வாணிபம்

யாழ் வீதி மானிப்பாய்

மெமோறியல் மலர் நறுமணம்

வீச வாழ்த்துகிறோம்




## மானிப்பாய் ஸ்ரோர்ஸ்

**(சந்திரன் கடை)**

சந்தையடி

மானிப்பாய்

மெமோறியல் மலர் சிறப்புடன் ஒளிவீச

எமது வாழ்த்துக்கள்

## பிறேம் நகைமாடம்

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

உங்களது நயம், நம்பிக்கை,
நாணயமுள்ள தங்க வைர
நகைகளுக்கு தவறாது
நாட வேண்டிய
சிறந்த ஸ்தாபனம்

யாழ் வீதி சந்தையடி

மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெமோறியல் மலர் நறுமணம் வீச

எமது வாழ்த்துக்கள்

இதோ உங்களுக்குத் தேவையான

சகல பொருட்களையும்

ஒரே இடத்தில் பெறுவதற்கு

# வே. சி. கணபதிப்பிள்ளை பல்பொருள் வாணிபம்

மானிப்பாய்

மெமோறியல் மலர்



எழுச்சி பெற எமது

நல்லாசிகள்

# துர்க்கா மில்



பொன்னாலை வீதி

மானிப்பாய்

மெமோறியல் மலருக்கு எங்கள்

வாழ்த்துக்கள்



# இந்திரா ஜுவல்லறி



181, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

மெமோறியல் மலரே வ்ருக! வருக!

# வினோ நகைப் பூங்கா



185, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேஜ் மண்டபம் ~ 1974

பாவலராய் நாவலராய்
பாரினிலே மேலவராய்
பண்பும் கலையமுதும் என்றும் எமக்களிக்கும்
இன்பத் தாயின் பாதமே என்றும் மனதுள் வைத்து
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்

Offset Printing at: St.Joseph's Catholic Press,Jaffna,Sri Lanka-2001, T.P. 021- 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org